பக்கங்கள்: இருபத்துநான்கு

Registered as a Newspaper

# சஞ்சீவி

விலை ரூபா 10-00

மலை 9 : வள்ளுவர் ஆண்டு 2030 ஆடி 08 சனிக்கிழமை (24-07-1999) SANJEAVY -Regenerative Tamil Weekly சிகரம்:8

# துணுக்காய் ஊடாகப் பாதை திறக்கும் யோசனைக்கு புலிகள் இணங்கவில்லை!

## இராணுவப் பேச்சாளர் கூறுகிறார்

கொழும்பு,ஜூலை24

**"வன்னியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும், இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கும் இடையே மாங்குளம் - துணுக்காய் வீதி ஊடாகப் பாதை ஒன்றைத் திறக்கலாம் என்று அரசாங்கம் தெரிவித்த புதிய யோசனைக்கு விடுதலைப்புலிகளிடம் இருந்து சாதகமான பதில் கிடைக்கவில்லை."**

**- இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுனில் தென்னக்கோன் இவ்வாறு நேற்றுத் தகவல் வெளியிட்டார்.**

பாதை திறப்புத் தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாட்டை விளக்குவதற்காக மக்கள் வங்கி கேட்போர் கூடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"விடுதலைப்புலிகள் எந்தவொரு உடன்படிக்கைக்கும் வராத காரணத்தால் வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை அனுப்ப ஒரு பாதையைத் திறக்க முடியாதுள்ளது.

"அந்தப் பிரதேச மக்களுக்கு அனுப்பவென கொழும்பிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட ஆயிரத்து நூறு மெற்றிக்தொன் உணவுப் பொருள்கள் வவுனியாவில் தேங்கிக் கிடக்கின்றன" - என்று அவர் சொன்னார்.

"கண்டி - யாழ்ப்பாணம் வீதியில் பாதை திறப்பதற்காக மாங்குளம பகுதியில் விடுதலைப் புலிகளை அவர்களது நிலைகளில் இருந்து ஐந்து கிலோமீற்றர் பின்வாங்குமாறு அரசாங்கம் கோரியதா?" - என்று செய்தியாளர் ஒருவர் அவரிடம் கேள்வி எழுப்பியபோது, பதிலளிக்கமுடியாது அவர் திணறினார் என்று கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

"அரசாங்கம் முன்வைத்த அந்தத் திட்டத்தைப் பரிசீலனை செய்து அதற்கு மாற்றான திட்டம் ஒன்றை விடுதலைப்புலிகள் முன்வைக்கவில்லை" என்று அவர் பதிலளித்தார்.

செய்தியாளர்கள் மாநாட்டில் கலந்து கொண்ட இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுனில் தென்னக்கோன், தகவல்துறைப் பணிப்பாளர் ஆரிய ரூபசிங்க, வெளிவிவகார அமைச்சுப் பேச்சாளர் ரவிநாத் ஆரியசிங்க, அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அலுவலக பிரதிநிதி உபாலி சொய்ஸா ஆகியோரிடம செய்தியாளர்கள் சரமாரியாகக கேள்விக் கணைகளைத் தொடுத்தனர். (உ-3)

வன்னியில் பாதை திறக்கக்கோரி

## கிழக்குப் பல்கலை மாணவர் நேற்று மறியல் போராட்டம்!

மட்டக்களப்பு,ஜூலை24

வன்னியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கும் இடையில் பாதை ஒன்றைத் திறக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசாங்கத்தைக் கோரி கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று மறியற் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

நேற்றுக்காலை வகுப்புக்களைப் பகிஷ்கரித்த மாணவர்கள் கறுப்புக் கொடிகளை ஏந்தியவாறு பல்கலைக்கழக வாசலில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர்.

இலங்கை அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் 3ஆம் தரப்பின் உதவியுடன் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்று இருதரப்பையும் கோரும் கோரிக்கையையும் முன்வைத்தே இந்த மறியல் போராட்டம் இடம்பெற்றது என்று மாணவர் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (உ-3)

## புளொட் கிருபைராஜா நேற்றிரவு காலமானார்

யாழ்ப்பாணம்,ஜூலை24

புளொட் அமைப்பின் மூத்த உறுப்பினர்களுள் ஒருவரும் அந்த அமைப்பின் யாழ்.மாவட்ட அமைப்பாளரும் யாழ்.மாநகரசபை உறுப்பினருமான செல்லையா கிருபைராஜா (வயது 48) நேற்று இரவு 9.50 மணியளவில் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் காலமானார்.

நீரிழிவு, இரத்தஅழுத்தம், இருதய நோய் ஆகியவற்றால் கடந்த சில வருடங்களாகப் பாதிக்கப்பட்டிருந்த அவர் நேற்றுக் காலை கொழும்பிலிருந்து யாழ். வருவதற்காகப் புறப்பட்டுக்கொண்டிருந்தபோது மயங்கி விழுந்ததாகவும் -

அதையடுத்து கொழும்பு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லப்பட்ட அவர் நேற்று இரவு அங்கு உயிரிழந்ததாகவும் -

புளொட் வட்டாரங்கள் தெரிவித்

(8ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியிலிருந்து எந்த வழியாலும் நோயாளரை அழைத்து வரலாம்

### செஞ்சிலுவைக்கு அரசு அனுமதி

கொழும்பு,ஜூலை24

வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் உள்ள - அவசர சிகிச்சை வழங்கப்படவேண்டிய - நோயாளர்களை மேலதிக சிகிச்சைக்காக வவுனியா, அனுராதபுரம் வைத்தியசாலைகளுக்கு எடுத்துச் செல்வதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

அவசர சிகிச்சை பெறவேண்டிய நோயாளர்களை வவுனியா, அனுராதபுரம் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லவும் -

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு எடுத்துச் செல்லவும் -

விடத்தல்தீவு ஊடான கடற்பாதையைப் பயன்படுத்த அனுமதிக்குமாறு செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு அரசாங்கத்தைக் கேட்டிருந்தது.

அவசர நோயளர்களை முன் அறிவிப்புடன் எந்தப் பாதையூடாவது எடுத்துச் செல்லலாம் என்று அரசாங்கம் அந்த அமைப்புக்கு அறிவித்துள்ளது என்றும் -

நிரந்தரமான பாதை ஒன்று திறக்கப்பட்ட பின்பே உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை எடுத்துச் செல்ல அனுமதிக்க முடியும் என்றும்-

அந்த அமைப்புக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுனில் தென்னக்கோன் தெரிவித்துள்ளார். (உ-3)

## ஆஸி. கடலில் உயிரிழந்த 15 பேரும் ஈழத்தமிழரே!

கொழும்பு,ஜூலை24

ஆஸ்திரேலியாவின் கரைக்குச் சமீபமாகக் கடந்த செவ்வாய்க்கிழமை மூழ்கிய படகில் பயணம் செய்து உயிரிழந்த 15பேரும் இலங்கைத் தமிழர்களே என்று தற்போது தெரியவந்திருப்பதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது.

இலங்கையிலிருந்து ஒரு முகவர் ஊடாக விமானம் மூலம் சிங்கப்பூருக்கு அழைத்துச் செல்லப்பட்ட 20 தமிழர்கள் சிங்கப்பூரில் தங்கவைக்கப்பட்டனர் என்றும் -

பின்னர் அவர்கள் ஜகார்த்தாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்றும்-

கடந்த 16ஆம் திகதி ஜகார்த்தாவில் இருந்து இவர்கள் இரு படகுகள் மூலம் ஆஸ்திரேலியா நோக்கி அழைத்துச் செல்லப்பட்டனர் என்றும்-

மேலும் தெரிவிக்கப்பட்டது.

ஆஸ்திரேலியக் கரையைப் படகுகள் அண்மித்தவுடன் படகுகளின் மாலுமிகள் இருவரும் 20 தமிழர்களையும் ஒரு படகில் ஏற்றினர் என்றும்-

அந்தப்படகை அப்படியே விட்டுவிட்டு மாலுமிகள் சென்றுவிட்டனர் என்றும் -

சொல்லப்பட்டது.

பிறரின் உதவியில்லாத நிலையில் அந்தப்படகு பின்னர் கடலில் மூழ்கியது என்றும் -

படகில் இருந்த ஐவர் காப்பாற்றப்பட்டனர் என்றும் -

இதுவரை ஒருவரின்சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## வன்னி மக்களின் ஜீவாதாரப் பிரச்சினையை குறுகிய நோக்கத்துக்கு அரசு பாவிக்கின்றது

### புலிகள் குற்றச்சாட்டு

வவுனியா,ஜூலை24

மனிதாபிமானத்துடன் அணுக வேண்டிய வன்னிமக்களின் ஜீவாதாரப் பிரச்சினையை அரசாங்கம் தனது குறுகிய அரசியல், இராணுவ நலன்களுக்காகப் பயன்படுத்துவது மிகவும் அநாகரிகமானதும் சர்வதேச மனித உரிமைப் பிரமாணங்களை மீறுகின்றதுமான செயலாகும்.

விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு சர்வதேச தொண்டு அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்குத் தெரிவித்துள்ளார்.

வன்னியில் பணிபுரியும் சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் கடந்த புதன்கிழமை இடம் பெற்ற சந்திப்பிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

போக்குவரத்துப் பாதை விடயம் வன்னி மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினையாக உள்ளது.

பாதை திறப்பது தொடர்பாக ஸ்ரீலங்கா அரசினால் சிபார்சு செய்யப்பட்ட யாழ். - கண்டி வீதிப் பாதையை அல்லது ஏற்கனவே நீண்டகாலம் போக்குவரத்துப் பாதையாக விளங்கிய மன்னார் - உயிலங்குளம், பள்ளமடு வீதியைத் திறப்பதற்கு எமது சம்மதத்தை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் தெரியப்படுத்தியிருந்தோம்.

ஸ்ரீலங்கா அரசு கபடத்தனமான- எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாத - முன்நிபந்தனைகளை விதித்து, திட்டமிட்டு இந்தப் பாதைத்திறப்பை இழுத்தடித்து மக்களைப் பட்டினிச் சாவின் விளிம்புக்குத் தள்ளுவதற்கு விரும்புகின்றது.

அத்துடன் போக்குவரத்துப்பாதை திறப்பது தொடர்பாக விடுதலைப் புலிகள் புதியபுதிய நிபந்தனைகளை விதிப்பதாக முற்றிலும் உண்மைக்குப் புறம்பான - விசமத்தனமான - பொய்ப் பிரசாரங்களை தனது செய்தி ஊடகங்கள் ஊடாகப் பரப்பி வருகின்றது.

உண்மையில் நாம் யாழ். - கண்டி வீதி அல்லது மன்னார் - உயிலங்குளம், பள்ளமடு வீதியை வன்னிக்கான போக்குவரத்துப் பாதையாகத் திறப்பதற்கு இன்னமும் தயாராகவே இருக்கின்றோம்.

திறக்கப்படும் பாதையில் உள்ள எமது முன்னணி அரண்களுக்கும் இராணுவத்தின் காவலரண்களுக்கும் இடைப்பட்ட பிரதேசத்தை பாதுகாப்புப் பிரதேசமாக இராணுவம் ஏற்று அதனை நடைமுறைப்படுத்தும் பட்சத்தில் அதனூடாக வன்னிக்கான போக்குவரத்துப்

(8ஆம் பக்கம் பார்க்க)

யாழ். ஆஸ்பத்திரியின்

## ஆய்வுகூட, இரத்த வங்கி ஊழியர்கள் வெளிநடப்பு

### சடலங்களிலிருந்து துர்நாற்றமாம்!

யாழ்ப்பாணம், ஜூலை24

யாழ். போதனா வைத்தியசாலை உள்ளக ஆய்வுகூடம் மற்றும் இரத்த வங்கி ஆகியவற்றில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள், ஊழியர்க்ள் நேற்று அங்கிருந்து வெளியேறி வெளிநடப்புச் செய்தனர்.

இந்தப் பிரிவுகள் இயங்கும் கட்டடத்தின் ஒரு பகுதியில் வைக்கப்பட்டுள்ள சடலங்களில் இருந்து துர்நாற்றம் வீசுவதாகவும் -

இதன்காரணமாக அங்கே இருந்து பணியாற்ற முடியாதுள்ளது என்றும் - தெரிவித்தே அவர்கள் வெளிநடப்பில் ஈடுபட்டனர்.

இதைத்தொடர்ந்து வைத்தியசாலைப் பொலீஸ்பிரிவுப் பொறுப்பதிகாரி எடுத்த நடவடிக்கையின் பயனாக துர்நாற்றம் வீசிய சடலங்கள் பிரேத அறையில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டதாகத் தெரியவந்தது.

ஆய்வுகூட, இரத்தவங்கி ஆகியவற்றின் செயற்பாடுகள் இன்று வழமைக்குத் திரும்பும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-3)

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 ஆயிரம் விண்ணப்பதாரிகளுக்கு அ.அட்டைகள் கிடைக்கவில்லை

### பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை24

யாழ். மாவட்டத்திலிருந்து கடந்த ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களில் தேசிய அடையாள அட்டைகள் பெறுவதற்காக விண்ணப்பித்த 3 ஆயிரம் விண்ணப்பதாரிகளுக்கு இதுவரை அடையாள அட்டைகள் அனுப்பி வைக்கப்படவில்லை என்று தெரிவிக்கப் படுகிறது.

தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு விண்ணப்பித்தவர்களில் ஓகஸ்ட்டில் நடைபெறவிருக்கும் ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களும் அடங்குகின்றார்கள்.

பரீட்சை நெருங்கிக் கொண்டிருப்பதால் அடையாள அட்டையில்லாமல் பரீட்சை எழுத அனுமதிப்பார்களா என்ற குழப்பநிலை இந்த மாணவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

அடையாளஅட்டை இல்லாததால் சோதனைச்சாவடிகளில் இவர்கள் அசௌகரியங்களையும் அனுபவிக்க வேண்டியுள்ளது.

(ஐ-5)

# வன்னிக்கு உணவுப்பொருள் அனுப்பக் கோரித் தீர்மானம்

### வலிமேற்கு பிரதேசசபை நிறைவேற்றியது

யாழ்ப்பாணம், ஜூலை24

வன்னிப்பகுதி மக்களின் இன்னல்களை நீக்கும் பொருட்டு அப்பகுதிக்கு அரசாங்கம் உடனடியாக உணவுப் பொருள்களை அனுப்பிவைக்க வேண்டும் என்று வலிகாமம் மேற்கு பிரதேசசபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேச சபையின் தலைவர் திரிலோகநாதன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட மேலும் சில தீர்மானங்கள் வருமாறு:-

வன்னிக்கான போக்குவரத்துப் பாதை ஒன்றினை திறப்பதற்கு ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா ஊடாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவைக் கோருதல்.

மக்கள் நடமாடும் இடங்களில் விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்துவதைக் கண்டிப்பதுடன் உடனடியாக அதை நிறுத்தவேண்டும் எனவும் –

பிரதேச சபை உறுப்பினர்கள் மனிதாபிமான நிலைக்கு அப்பாற்பட்ட முறையில் கண்மூடித் தனமாக தொடர்ச்சியாக கொலை செய்யப்பட்டு வருவது தொடர்பாக சர்வதேச மன்னிப்புச் சபைக்கும் ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனானுக்கும் பக்ஸ் செய்தி ஒன்றினை அனுப்பி வைப்பதென்றும் –

இக் கூட்டத்தில் தீர்மானிக் கப்பட்டது.

(ஐ-5)

### பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை24

யாழ். மத்திய கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் நடைபெறும்.

### பாலர் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 24.

நல்லை ஆதின ஞானசம்பந்தர் பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி, இன்று காலை 9.00 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதினத்தில் நடைபெறும்.

### வன்னி நோயாளர் அவலம்:

# செஞ்சிலுவைக் குழு பாராமுகமாக செயற்படுவதாகக் குற்றச்சாட்டு!

வவுனியா,ஜூலை 24

வன்னியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் கட்டுப்பாடற்ற பகுதிக்கும் இடையிலான போக்குவரத்துப் பதை ஒன்று திறக்கப்படாமையினால் அவசர நோயாளர்கள் பலர் மேலதி சிகிச்சை பெறமுடியாது உயிர் இழந்துள்ள நிலையிலும் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு பாராமுகமாகச் செயற்பட்டு வருகிறது.

புதுக்குடியிருப்பு வைத்தியசாலை ஊழியர் நலன்புரிச் சங்கம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் புதுக்குடியிருப்பு இணைப்பாளரிடம் கையளித்த மகஜரில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் வவுனியாவுக்கு மேலதிக சிகிச்சைக்காகக் கொண்டு செல்லவேண்டிய அவசர நோயளர்களை அம்புலன்சில் ஏற்றிக்கொண்டு சென்ற மாவட்ட வைத்திய அதிகாரி, வைத்திய அதிகாரிகள், ஊழியர்கள் ஆகியோர் அடங்கிய குழுவே இந்த மகஜரை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் இணைப்பதிகாரியிடம் கையளித்தது. மகஜருக்கான பதிலை [illegible]டனடியாகத் தருமாறும் அக்குழு இணை[illegible]திகாரியை வற்புறுத்தியதாகத் [illegible]விக்கப்படுகிறது.

[illegible]த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்[illegible]தாவது:-

ஆயுத மோதல்களாலும் உள்நாட்டுக் கலவரங்களாலும் பாதிக்கப்பட்ட உலக மக்களுக்கு பாதுகாப்பும் உதவியும் வழங்க உலக சமூகங்களால் பணிக்கப்பட்ட செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு பக்கச்சார்பின்மை, நடுநிலைமை, கேந்திரமான செயற்பாடு என்னும் கொள்கைகளையுடைய மனிதாபிமான ஸ்தாபனம் என உலகெங்கும் பறைசாற்றிவரும் வேளையில்–

இன்று வன்னி நிலப்பரப்பின் பெரும் பகுதி மக்களுக்கு மேலதிக சிகிச்சை பெறமுடியாது - சுதந்திரமான சிகிச்சைபெறும் நிலை மறுக்கப்பட்டு-தினம்தினம் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் முன்னாலேயே பல நோயாளிகள் உயிரிழக்கும் நிலையையும் அங்கவீனர்களாகும் நிலையையும் அடைந்துள்ளார்கள்.

முல்லைமாவட்ட வைத்தியசாலையில் மட்டும் 3 நோயாளிகள் அநியாயமாக உயிரிழக்கும் நிலையிலும் பலர் அங்கவீனர்களாகும் நிலையிலும் உள்ளனர்.

1989ஆம் ஆண்டு முதல் இலங்கையின் பல பாகங்களிலும் தமது சுதந்திரமான செயற்பாடு மூலம் சேவை செய்துவந்த செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு இன்று முதன்முறையாக வன்னி நிலப்பரப்பு நோயாளிகளுக்கு தனது சுதந்திரமான செயற்பாடு

(8ஆம் பக்கம் பார்க்க)

### இலக்கிய கட்டுரை

இந்தவார சஞ்சிகையின் XII ஆம் பக்கத்தில் வெளியாகியுள்ள 'பாவினால் பாவலர்கள் சமர் புரிந்ததாகக் கூறுவது தகுமா?' என்ற தலைப் பிலான இலக்கியக் கட்டுரையை வரைந்தவர் புலவர் **ம.பார்வதிநாதசிவம்** அதில் தவறுதலாக அவரது பெயர் இடம் பெறவில்லை.

(ஆ-ர்)

# 100 வீடுகள் அமைக்கத்திட்டம்

யாழ். மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு தேர்தல் தொகுதிகள் தோறும் நூறு வீடுகள் அமைப்பதற்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி சபை முன் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. பிரதேச செயலர் பிரிவுகளில் கடமைபுரியும் வீடமைப்பு உத்தியோகத்தர்கள் இதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ-13)


**உள்நாட்டு வெளிநாட்டு தொலைத் தொடர்பு சேவையில்**

என்றும் முன்னணி.

- இலவச தங்குமிட வசதி
- துரித செய்திப் பரிமாற்றங்கள் (இலவசம்)
- இரவு பகல் 24 மணி நேர சேவை

**தம்பி தொலைத் தொடர்பகம்,**
**90, கந்தப்பசேகரம் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(சாந்தி தியேட்டர் முன்பாக)

தொலைபேசி - 0094 21 2040 - தொலைநகல்-0094 21 2040
2504
2823

தலைமையகம்:-
THAMPI HOLDINGS (PTE) LTD.
THAMPI BUILDING
177, OLD MOOR ST,
COLOMBO 12.

TEL - 343125 (Auto Lines)
FAX-337465
E-MAIL: thampi @ sltnet lk.

(67661)


### 7ஆம் ஆண்டுநினைவஞ்சலி



மலர்வு 14-09-1916 — உதிர்வு 10-07-1992

அமரர்

**தம்பிப்பிள்ளை வீரசிங்கம்**

திதி: 24-07-1999

ஏழு ஆண்டுகள் கடந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மைவிட்டு
என்றென்றும் அகலாது ஐயா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்:
**மனைவி, மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

அரசடி வீதி,
இருபாலை கிழக்கு,
கோப்பாய்.

(67673)


### நாகம்ஸ
சுன்னாகம்

ரஜனி, குஷ்பு, ஜனகராஜ்
நடித்த
**பாண்டியன்**
காட்சிகள் – 11.00 – 2.00
(புதிய நேரம்) (67659)



### ராஜா
யாழ்ப்பாணம்

பிரபுதேவா–கஜோல்
மற்றும் பலர் நடித்த
**மின்சாரக் கனவு**
10.30, 2.00, 5.00
(சி-8281)


### கண்ணீர் அஞ்சலி

**எம் எல்லோரது இதயத்திலும்**
**நீங்காதிருக்கும்**
கலாசாலையின் முன்னாள் நூலகர்
**செல்வி மல்லிகாராணி கந்தசாமி**
அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த
இரங்கலைத் தெரிவிக்கின்றோம்.

(67666) **பலாலி ஆசிரிய கலாசாலை சமூகம்.**

# மரண அறிவித்தல்கள்

### திருமதி சண்முகம் கணேஸ்வரி

தொட்டிலடி சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சண்முகம் கணேஸ்வரி அவர்கள் 22.-07-99 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னத்தம்பி கனகம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், திருமதி பாலேந்திரா, திருமதி இராசரத்தினம், காலஞ்சென்ற இராஜேஸ்வரி, காலஞ்சென்ற ஜெயரத்தினம், காலஞ்சென்ற நவரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பாலேந்திரா, இராசரத்தினம், தருமவதி காலஞ் சென்ற கண்மணி, நாகலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (23-07-99) வெள்ளிக்கிழமை விளாவெளி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
**சகோதரங்கள்.**
திருமதி பாலேந்திரா
திருமதி இராசரத்தினம்

தொட்டிலடி,
சங்கானை.

(67664)

### கார்த்திகேசு துரைசாமி

வறுத்தலைவிளான், தெல்லிப்பளை தேங்கிரானை வதிவிடமாகக் கொண்ட கா.துரைசாமி நீர்கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அழகம்மாவின் அன்புக் கணவரும் திரு.துரைராசசிங்கம்(பொருளியலாளர், லங்கா சிமெந்து கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை.); Dr.துளசிதாசன் (நீர்கொழும்பு, அரசினர் வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் நாளை (25-07-1999) ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு நீர்கொழும்பு இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
**து.துரைராசசிங்கம்**
(லங்கா சிமெந்து கூட்டுத்தாபனம்)

வறுத்தலைவிளான்,
தெல்லிப்பளை.

(67689)


ஒரு சில நாள்கள் தடங்கலின் பின் மீண்டும் புதிய வேகத்துடன் உங்கள் சேவையில்

**வேல்ட் லிங் கொமினிகேசன்** (V.M.K.)
(WORLD LINK COMMUNICATION)

**முன்னெப்போதும் இல்லாதவாறு மிகவும் துரிதகதியில் உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத் தொடர்புகளை இன்று முதல் பெற்றுக் கொள்ள நாடுங்கள்.**

**வேல்ட் லிங் கொமினிகேசன்**
(WORLD LINK COMMUNICATION)
**52, டச்சுவீதி, சாவகச்சேரி.**

குறிப்பு: இத்துடன் கேபிள் தொலை இணைப்பும் உண்டு No: 2207,
FAX வசதியும் உண்டு 070-212263

(67494)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 90 முதல் சம்பள நிலுவை தர கோருகின்றனர் சிமெந்து ஊழியர்

## ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஜுலை 24.

1990 முதல் வழங்கப்படவேண்டிய சம்பளப் நிலுவையை வழங்குமாறு கோரி காங்கேசன்துறை லங்கா சிமெந்து நிறுவன ஊழியர்கள் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை கடந்த மாத இறுதியில் அனுப்பி வைத்துள்ளனர்.

மூன்று முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து சுமார் 150 ஊழியர்கள் கையொப்பமிட்டு அம்மகஜரை அனுப்பி உள்ளனர்.

கோரிக்கைகளின் விவரம் வருமாறு:-

* தற்போதைய சம்பள கணிப்பீட்டின்படி மாதாமாதம் சம்பளம் வழங்கப்படவேண்டும்.

* 1990 முதல் வழங்கப்பட வேண்டிய சம்பள நிலுவையை வழங்க உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

* உரிய காலத்தில் ஊழியர் சேமலாபநிதி கிடைக்க வகைசெய்யப்படவேண்டும்.

- மேற்படி கோரிக்கைகள் தொடர்பாக முன்னரும் ஒருதடவை இந்த ஊழியர்கள் ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பி இருந்தனர்.

இந்த விடயம் தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி கைத்தொழில் அமைச்சருக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் ஊழியர்களுக்குத் தெரியப்படுத்தி உள்ளார். (ஐ-86)

# இலங்கை இராணுவத்தின் பொன் விழா கொண்டாட்டம்

### இந்திய, பாகிஸ்தான் தளபதிகள் அழைப்பு

கொழும்பு, ஜுலை 24.

"1980 ஆம் ஆண்டில் 9 ஆயிரம் பேரைக் கொண்டதாக இருந்த இராணுவப்படை வடக்கு - கிழக்கு யுத்தம் காரணமாக ஒரு லட்சத்து 20 ஆயிரம் பேரைக் கொண்ட தொழில்சார் ஆற்றல் உள்ளதாக மாறியுள்ளது"

இப்படி இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஸ்ரீலால வீரசூரிய தெரிவித்தார்.

இராணுவத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவுதினம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 10ஆம் திகதி கொண்டாடப்படுவதையொட்டி நேற்று முன்தினம் அவர் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே இதைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இராணுவத்தின் நிறைவுவிழாவில் பங்குபற்ற இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் இராணுவத்தளபதிகள அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நாடுகளின் இராணுவத்தினர் இலங்கைப்படையினருக்கு அளப்பரிய பயிற்சி வாய்ப்புக்களை வழங்கியுள்ளனர். எனவேதான் இராணுவத்தின் பொன்விழாக கொண்டாட்டங்களில கலந்து கொள்வதற்கு இந்த நாடுகளின் இராணுவத் தளபதிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் புலிகளுடன் போரிடும படையினர் இந்த வைபவங்களுக்காக அந்தப்பகுதிகளில் இருந்து வாபஸ் பெறப்பட மாட்டார்கள். (ஐ-3-6)

# வீடியோ நாடா ஏற்பது தற்காலிகமாக நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜுலை 24

கொழும்பு மற்றும் வெளியிடங்களுக்கு தபாலில் அனுப்புவதற்காக யாழ். பிரதம தபாலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள வீடியோ நாடாக்களின் தொகை அதிகரித்துள்ளதால் வீடியோ நாடாக்களைப் பெற்றுக்கொள்வது தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக யாழ். பிரதம தபாலதிபர் சு.கோடீஸ்வரன் தெரிவித்தார்.

வெளியிடங்களுக்கு அனுப்புவதற்காக யாழ்.தபாலகத்தில் ஒப்படைக்கப்படும் வீடியோ நாடாக்கள் யாழ்.சிவில் நிர்வாக அலுவலகத்துக்கு அனுப்பப்பட்டு அவர்களின் சோதனைகளின பின்னர் யாழ்.பொலீஸ் நிலையத்துக்கு கொண்டுசெல்லப்பட்ட பின்னரே வெளியிடங்களுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன என்றும் -

இவ்வாறு ஒவ்வொரு வாரமும் 50 வீடியோ நாடாக்கள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில அனுப்பி வைக்கப்படுகின்றன என்றும் - அவர் கூறினார்.

தற்பொழுது 150 வீடியோ நாடாக்கள் யாழ்.தபாலகத்தில் தேக்கமடைந்துள்ளதால் அவற்றை அனுப்பிவைத்த பின்னரே புதிய வீடியோ நாடாக்கள் ஏற்கப்படும் என்றும் அவர் கூறினார். (இ-ரீ-5)

## நூல் வெளியீட்டு விழா

சண்டிலிப்பாய், ஜுலை24

தி.மதிவதனன் எழுதிய "த்மிழ் இலக்கிய வரலாற்றுச் சுருக்கம்" என்ற நூல் வெளியீட்டுவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9மணிக்கு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் கல்லூரிஅதிபா திருமதி அ.வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெறும். இவ்விழாவில் வரவேற்புரையை மதுரகவி காரை-எம்.பி.அருளானந்தன் நிகழ்த்துவார். வாழ்த்துரையை தீவக வலயக கல்விப் பணிப்பாளா ப.விக்னேஸ்வரனும் வெளியீட்டுரையை யாழ்.மாவட்ட கல்வி நிர்வாக இணைப்பாளர் கலாநிதி ச.நா. தணிகாசலம்பிள்ளையும் நிகழ்த்துவர். அறிமுக உரையை யாழ் பல்கலைக் கழக சிரேஷ்டவிரிவுரையாளர் கி.விசாகருபன் நிகழ்த்துவார். (ஐ-135)

## பரிசோதனை முகாம்

தென்மராட்சி,ஜுலை 24

சாவகச்சேரி லயன்ஸ் கழக சீமாட்டிகளும் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரும் இணைந்து நடத்தும் சாவகச்சோ வடக்குப் பகுதி பெண்களுக்கான சுக வனிதையர் பரிசோதனை முகாம் இன்று சனிக்கிழமை காலை 9.00மணி தொடக்கம் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் லயன்சீமாட்டி திருமதி முகுந்தினி சிவபாதம் தலைமையில் நடைபெறும்.

முகாமில் இரத்த அமுக்கம், நீரிழிவு, புற்றுநோய் ஆகியவை பரிசோதனை செய்யப்படுமெனவும், 35 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் பரிசோதனையில் கலந்துகொள்ளலாம் எனவும கழகச் செயலாளர் லயன் வி. வி.மகாலிங்கம் தெரிவித்தார், (ஐ-117)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜுலை24

யாழ். பல்கலைக்கழக வெள்ளி விழா ஆண்டையொட்டி நடத்தப்படும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆண்கள் பிரிவு ஆட்டத்தில் அண்ணா வி.க அணியை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக உடற்பயிற்சி அணி மோதும். (ஐ-3)

* * *


யாழ். பல்கலைக்கழக வெள்ளி விழா ஆண்டையொட்டி நடத்தப்படும் ஹொக்கிச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து யாழ்ப்பாணக் கல்லூரி 'பி' அணி மோதும். (ஐ-3)

## குடிதண்ணீர் விநியோகம்

சண்டிலிப்பாய்,ஜுலை24

காக்கைதீவு குடியேற்றத் திட்டத்திலுள்ள மக்களுக்கு அகதிகளுக்கான ஐ.நா. தூரகத்தின் நுண் கருத்த்திட்டத்தின் கீழ் குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்கும் திட்டமொன்று விரைவில் செயற்படுத்தப்படவுள்ளது.

இதற்கான திட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகவும், இத்திட்டத்தின் பிரகாரம் ஆனைக்கோட்டை கரைப்பிரான் பகுதியிலுள்ள நல்லதண்ணீக் கிணறு ஒன்றிலிருந்து குழாய் மூலம் குடிநீர் காக்கைதீவுக்கு எடுத்துச செல்லப்படும் என்றும்,இவ்வளியிலுள்ள 3ஆம் கட்டையடி, பழம்றோட் ஆகிய புகுதிகளிலுள்ள மக்களுக்கும் குடிநீர் விநியோகிக்கப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (உ-135)



தவத்திரு சிவயோக சுவாமிகளின் சிலைத்திறப்பு விழா அண்மையில் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் அதிபர் சி.ஆ.சோதிலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

யாழ்.மாநகரசபை ஆணையாளர் வெ.பொ.பாலசிங்கம் சுவாமிகளின் புதிய சிலையைத் திறந்துவைத்தார். இந்த வைபவத்தில் கலந்துகொண்ட நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், சிலையை வடிவமைத்த சிற்பக் கலாநிதி செ.சிவப்பிரகாசம், சமூகஜோதி கா.கணேசதாஸன், உபஅதிபர் திருமதி த.ஞானப்பிரகாசம், பிரம்மஸ்ரீ சோ.லோகேஸ்வர சர்மா, எஸ்.எஸ்.வரதராசா ஆகியோர் சிலைக்கு அருகில் நிற்பதைப் படத்தில் காணலாம். (ஐ-17)

### வலி கிழக்குப் பிரதேசத்தில்

# பாடசாலைகளில் இருந்து அலுவலக பொருள்கள் திருட்டு

வலி.கிழக்கு,ஜுலை24

வலி. கிழக்குப் பகுதியில் பாடசாலைகளில் அலுவலகப் பொருள்கள் திருடப்படும் சம்பவங்கள அதிகரித்துள்ளன.

அண்மையில் இப்பகுதியில் ஐந்து பாடசாலைகளில் இரவு வேளையில் பொருள்கள் திருடப்பட்டுள்ளன. அலுவலகங்கள் உடைக்கப்பட்டு காகிதங்கள், காபன்சீற்றுகள், கோவைமட்டைகள், மணிக்கூடுகள் என்பன தொகையாகக் களவாடப்பட்டுள்ளன.

இச்சம்பவங்கள் தொடர்பாக கோப்பாய் பொலீஸாரிடம் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

காகிதாதிகள் மற்றும் அலுவலகப் பொருள்களை விற்பனை செய்வதற்காகக் கொண்டு வருவோரிடம் எச்சரிக்கையாக இருக்குமாறும் -

திருட்டுப் பொருள்களை விற்பனை செய்ய முயல்வோரைப் பிடிக்கத் தகவல் தந்து உதவுமாறும் -

கோப்பாய் பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி வர்த்தகர்களிடம கோரியுள்ளார். (ஐ-180)

# வன்னி ஆஸ்பத்திரிகளில் எரிபொருள் பற்றாக்குறை

வவுனியா,ஜுலை24

போக்குவரத்தப் பாதை தடை காரணமாக இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் இயங்கி வரும் மருத்துவ மனைகளின் அவசர சிகிச்சை பிரிவுகள் ஸ்தம்பிக்கும நிலையை அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மல்லாவி மருத்துவமனையின் ஜெனரேட்டருக்கான எரிபொருள்கள் முடிவுறும் தறுவாயில் இருப்பதாகவும்-

ஜெனரேட்டர் இயங்கவில்லையாயின் சத்திர சிகிச்சைப் பிரிவு முற்றாகப் பாதிக்கப்படும் என்றும் -

குளிர்சாதனப் பெட்டிகள் இயங்க முடியாத நிலை தோன்றினால் அவற்றில் வைத்துப் பாதுகாக்க வேண்டிய மருந்து வகைகள் பழுத்தடைந்துவிடும் என்றும் -

மருத்துவமனை வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன.

இதேவேளை -

ஏனைய மருத்துவமனைகளிலும் இதே நிலை தோன்றியிருப்பதாகவும்-

மருத்துவ மனைகளின் கையிருப்பில் இருந்த மருந்துகள் முடிவடைந்து வருவதால் மக்கள் தனியார் கடைகளிலேயே மருந்துகளைப் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது என்றும் - தெரிவிக்கப்பட்டது. (ஐ-6)

## பாலர் பாடசாலை திறப்புவிழா

சுன்னாகம், ஜுலை24

சுன்னாகம் கிழக்கு சிவன் பாலர் பாடசாலைத்திறப்பு விழாவும், விளையாட்டு விழாவும் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளன.

நிலையத் தலைவர் சி.சவுந்தரநாயகம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் சர்வோதைய செயற்றிட்ட நிறைவேற்றுனர் வி.சங்கரப்பிள்ளை பிரதம்விருந்தினராகவும் -

உடுவில் பிரதேச செயலக நிர்வாக அலுவலர் ஜெயப்பிரகாசம்-

கிராமஅலுவலர் மா.இராமலிங்கம்,

சமூக அபிவிருத்தி அலுவலர் செல்வி இ.சிவயோகம் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் -

கலந்து கொள்வர். (ஐ-27)


## ACTIVE MULTI-ANTENNA

EUROMIND™

பூஸ்ரர் தேவையில்லை!




உங்கள் டிவியில் அனைத்து அலைவரிசைகளையும் பல்தொழில் திறனுடைய தனியொரு அன்டெனா மூலம் தெளிவாக தங்குதடையின்றிக் கண்டுகளிக்கலாம்!

* VHF/UHF டிவி அலைவரிசைகள்
* FM ரேடியோ அலைவரிசைகள்
* மின்சாரத்தாலும் பற்றரியாலும் இயங்கக்கூடியது

யாழ்ப்பாணத்திற்கான மொத்த வியாபாரிகள் தேவை

மொத்த வியாபாரிகளுக்கு விஷேட விலைக்கழிவு உண்டு

UKAAYE

169, BODHIRAJA MAWATHA, COLOMBO -11.
(Gaswork Street, Pettah)
TEL : 075-370019 FAX : 075-370018



## வேல் மிக்ஸர் விலை குறைப்பு

இருபத்தைந்து வருட கால அனுபவம் வாய்ந்தவர்களின் கைவண்ணத்தில் இந்திய முறைப்படி தயாரிக்கப்பட்ட விசேட வேல் மிக்ஸர் வியாபாரிகளுக்கு விலை குறைப்புடன் மொத்தமாகவும் வழங்கப்படும்.

உங்களின் திருமணம், பிறந்தநாள் போன்ற ஏனைய வைபவங்களுக்குத் தேவையான

* லட்டு * மைசூர்பாகு * பகோடா

* நெய்பூந்தி * பூந்திலட்டு

போன்றவற்றினை ஓடர் செய்து குறித்த தவணையில் பெற்றுக்கொள்ளலாம்.

**வேல்மிக்ஸர் விற்பனை நிலையம்**

கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

(சீ-8284)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## வீடு விற்பனைக்கு

34,3ஆம் குறுக்குத்தெருவில், 2 பரப்பும் 121/2 குழியுடன கொண்ட ஒரு பகுதி சேதமடைந்த நிலையில் உள்ள வீடு விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிட்டபின் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- S. சண்முகராஜா, மதிப்பாளர், 387, கோவில்வீதி,நல்லூர். சந்திக்கும் நேரம் காலை 9.00க்கு முன்பும் மாலை 3.00க்கு பின்பும். (67537)

இல. 272, ஆனந்தன வடலி வீதியில் உள்ள 8 பரப்பு வீட்டுடன் சேர்ந்த காணியும் செம்மணி வீதியில் 8 பரப்பு காணியும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- சோ.சிற்றம்பலம், 272, ஆனந்தனவடலிவீதி (A.V.Road) அரியாலை, யாழ்ப்பாணம். (67634)

## விற்பனைக்கு

அல்சேசன் ஆண், பெண் கறுப்பு நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- பரமநாதன், இராசவீதி, நீர்வேலி. (4ஆவது மைல்கல் அருகில்). (67506)

நல்ல நிலையில் உள்ள லிஸ்ரர் (England-10 K.V.) செல்வ்ஸ்ராட் மொடல் எஞ்சினும், றொபின் (Japan-1100) எஞ்சினும் உடன் விற்பனைக்கு உண்டு.தொடர்பு:- ராஜன், பஸ்நிலையம், அச்சுவேலி. (67596)

நல்ல நிலையில் உள்ள ரெமிங்டன், கல்டா தமிழ் தட்டெழுத்து இயந்திரங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: R. இராமச்சந்திரன், இல.78, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (67612)

## மணமகள் தேவை

யர்ழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த நகைக்கடை உரிமையாளர், 30 வயது, கிரகபாவமுடைய 5'5" உயரமுடைய மணமகனுக்கு மணமகள் தேவை. விளம்பர இலக்கம்: 902, மே/பா. உதயன். 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். (67068)

1970 இல் பிறந்த புனர்பூசம் 4 ஆம் கால், லண்டன் பல்கலைக்கழகத்தில் M.Sc பொறியியலாளர் பட்டம் பெற்று சிங்கப்பூரில் பொறியியலாளராக வேலை செய்யும் மணமகனுக்கு அழகான, நன்கு படித்த மணமகளை பெற்றோர் தேடுகின்றனர். இல. 916, மே/பா. உதயன். 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (67615)

## MATHS, ENGLISH

O/L பரீட்சையில் Distinction, Credit பெறுபேறடைய ஆரம்பத்திலிருந்து இதுவரை சித்தியடையாதவர்களுக்கும், முதல் முறை தோற்றுபவர்களுக்கும் கற்பிக்கப்படும். அனுபவமுள்ள ஆசிரியர். 85, சிவன்கோயிலடி, சிவன்கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (67619)

## பொருளியல்

1999 A/L பரீட்சைக்கான நடைமுறைவிடயங்கள், அபிவிருத்திக் கொள்கைகள், பேரினப்பொருளாதாரம், வெளிவாரி விளைவுகள், சர்வதேச வர்த்தகம், வர்த்தக மாற்றுவீதம் ஆகிய[illegible]ுகள் யாழ்ப்பாண நகர புச்[illegible]ாலைகளில் விற்பனையா[illegible]ுன. ஆசிரியர் வே. கருணாகரன். (67632)

## இன்றைய கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 24

இலங்கை நிர்வாகசேவை மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்கான முழுநாள் கருத்தரங்கொன்று இன்று சனிக்கிழமை காலை9.00மணிக்கு இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ்.கிளை மண்டபத்தில் நடைபெறும்.

இக்கருத்தரங்கில் கருத்திட்ட முகாமையாளா தி.திருலிங்கநாதன், பிரதேச செயலாளர் கனகரத்தினம், வித்துவான் க.சொக்கலிங்கம், முகாமைத்துவபீட விரிவுரையாளர் செல்வி. தேவரஞ்சினி கிருஷ்ணன் ஆகியோர் உரையாற்றுவர். (-ரி)

## யாழ்.பல்கலையில் வீடியோப்படக்காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை24

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் "ரைட்ரானிக்" (TAITANIC) எனும் ஆங்கில வீடியோத்திரைப்படம் இன்று சனிக்கிழமை காலை10மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் காண்பிக்கப் படவுள்ளது. இதற்கு ஆர்வமுள்ள எவரும் வருகைதரமுடியுயும் என புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார். (-3)

---

இறைபணியில்

# 25 ஆம் ஆண்டின் நிறைவு

குருத்துவ ஆரம்பம் 24-07-1974



25ஆம் ஆண்டின் நிறைவில் 24-07-1999

## வண. பிதா அல்பன் இராஜசிங்கம்

அ.ம.தி.

"மரியே உன் மைந்தனை வழிநடத்து"
"இறைபணியில்"

குருத்துவ வாழ்வில் இறைபணியாற்றி தனது 25 ஆவது ஆண்டை நிறைவு செய்யும் குருநகர் புனித யாகப்பர் ஆலயப்பங்கின் குருமகனை எங்கள் குலமகனை நிறைவாக வாழ்த்துகின்றோம்.

சந்தியாப்பிள்ளை யஸ்ரின்,
ய. மேரி அனற்றா,
ய. கனிசியஸ் – குடும்பத்தினர்,
வி. நிவோஜினி.

24, புதுமை மாதா கிழ. வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.

(67620)

---

# ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் 45ஆம் நாள் நினைவு அஞ்சலியும்

தோற்றம் 21 - 06 - 1934



மறைவு 10 - 06 - 1999

## செல்வி சிவபாக்கியம் சின்னத்தம்பி B.Sc.

(இராசாத்தி)

(ஓய்வுபெற்ற விஞ்ஞான பட்டதாரி ஆசிரியை)

நாற்பத்தைந்து தினங்கள் சென்றாலும் உங்கள் நினைவு எம்மை விட்டு அகலாதக்கா. அன்பின் பிறப்பிடமே அறிவின் ஒளிவிளக்கே எமக்கெல்லாம் நல்வழிகாட்டிய அக்காவே! உமது அன்பையும் ஆதரவையும் தேடிவந்தோம். எம்மை இடைவழியில் விட்டுச் சென்றதேனோ? தீராத வேதனையைத் தந்து விட்டுச் சென்றீரே! ஆறாத சோகத்தால் அறிவொழிந்து வாடுகிறோம்.

இன்று (24-07-99) சனிக்கிழமை எமது வீட்டில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சகோதரிமார், மைத்துனர்.

கற்பகப்பிள்ளையார் கோயிலடி,
இருபாலை.

(67600)

---

# முதலாம் ஆண்டு நெஞ்சகலா நினைவுகள்

அன்னையின் மடியில் 1975-01-18



இறைவன் அடியில் 1998-07-17

காங்கேசன்துறை தையிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட

## திருமதி ஜெயக்குமார் சதீஷா

எத்தனை எத்தனை நினைவுகள் கொண்டு அங்கு சென்றாயம்மா
அத்தனையும் அழிய, நீ அநியாயமாய் உயிர் துறந்தாயம்மா.
சத்தியம் தவறிய ச்திகாரர் கூட்டமோ!
"சதீஷா" உன்னை சாகடித்தனர் - நாம்
கத்தினாலும் எம் துயரம் ஆறாது
இப்புவியில் நாம் வாழும் வரை....!

உன் பிரிவால் துயருறும்
தகப்பன், தாய், சகோதரர்கள்,
உறவினர்கள்.

M.S. லேன்,
கோண்டாவில் கிழக்கு.

(சி-8260)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 12 - 01 - 1931



மறைவு 23 - 06 - 1999

## திருமதி இராசலட்சுமி சிவபெருமான்

23-06-99இல் இறைவனடி சேர்ந்த எமது தாயாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், பலவழிகளிலும் உதவிபுரிந்தவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும் அவரின் நினைவாக இன்று (24-07-99) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். வீட்டுக்கிருத்தியத்திலும் அதன்பின்பு இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அம்மாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


ஞானியார் வளவு,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.

(67575)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 02-03-1917

மறைவு 24-06-1999

## அமரர் நல்லதம்பி காசிப்பிள்ளை

(பிரபல வர்த்தகர், சங்கானை)

24-06-99 அன்று சிவபதமடைந்த எம் அன்புத் தெய்வத்தின் இறுதிச் சடங்குகளில் பங்குபற்றி எமது துயரில் பங்கு கொண்ட உற்றார், உறவினர்கள், வர்த்தகர்கள், நண்பர்கள், மலர்வளையங்கள் வைத்தும் கண்ணீர் அஞ்சலிகள் பிரசுரித்தோருக்கும் எமது உளம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் இல்லத்தில் இன்று (24-07-99) சனிக்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் பங்குகொண்டு சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

அராலி றோட்,
சங்கரத்தை.

(67601)

---


# வாடிக்கையாளர்களுக்கு ஒரு நற்செய்தி

எமது ஆலையில் கொப்பறா கொள்வனவு செய்கிறோம். கூலிக்கும் அரைத்துக் கொடுக்கின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

விக்னேஸ்வரா அரிசி ஆலை
தேங்காய் எண்ணெய் ஆலை

மருதடி சந்தி,
டச்சு வீதி, சாவகச்சேரி.

(சி-8236)

# யாழ்ப்பாணத்துக்கான கப்பற் சேவை விடயம்

# இரண்டு மாதங்களாக அமைச்சரவையின் கிடப்பில்!

இலங்கையில் தமிழர்களாகப் பிறந்துவிட்ட ஒரேகாரணத்திற்காக அவர்கள் அனுபவிக்கும் இன்னல்களும் இடர்களும் தொல்லைகளும் வேண்டாத தொந்தரவுகளும் அனந்தம். அன்றாட வாழ்க்கை என்பது புராணங்களில் வர்ணிக்கப்படும நரகலோக வாழ்க்கையை விடவும்கேவலமாகி விட்டது.

உலகின் ஏனைய மக்களைப்போல சுதந்திரமாகவும் சுயகௌரவத்துடனும் வாழவேண்டும் என்று கருதி தமக்கு வழங்க மறுக்கப்பட்ட உரிமைகளை - அரசியல் உரிமைகளை - கேட்கத் துணிந்தார்கள் என்பதற்காக, அதற்குப் பழிவாங்கும் தோரணையில் அடக்குமுறைக்கும் அடிமை நிலைக்கும் ஆட்படுத்தப்பட்டு வருகிறார்கள். பல வகைகளில் மனிதாபிமானம் அற்ற முறையில் இம்சிக்கப்பட்டும் மனித உரிமைகள் பறிக்கப்பட்டும் ஒடுக்கப்படுகிறார்கள்.

நாட்டின் ஏனைய இனத்தவர்களுக்கு இல்லாத பல தொல்லைகள் வெவ்வேறு காரண காரியங்களைக் காட்டி தமிழர்கள மீது திணிக்கப்படுகின்றன.அவற்றில அடையாள அட்டைத் தொல்லையும் ஒன்று. வீட்டில் இருந்தால் என்ன, வீதியில் நடந்தால் என்ன, வெளியிடம் செல்வதாக இருந்தால் என்ன அடையாள அட்டைகள் உள்ளனவா என்று தம்மைத்தாமே தட்டிப்பார்த்து உறுதி செய்யவேண்டிய தொல்லை அது. தமிழர்களின் அன்றாட வாழ்க்கையில் அடையாள அட்டை "ஒட்டிக் கொண்ட" ஒன்றாகிவிட்டது.

யாழ்ப்பாணத்தில் ஒருவர் தாம் பாதுகாப்பு ரீதியாகச் சந்தேகத்துக்கு உரியவா அல்லர் என்று படையினருக்கு நிரூபிக்க வேண்டியது சட்டப்படியான தேவையாக்கப்பட்டிருக்கிறது. அதன்பொருட்டு பலவகை அடையாள அட்டைகளை தனக்கு 'ஒட்டிக்கொள்ளும்' கட்டாயம் உருவாக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் வாழ்வதற்கு அடையாள அட்டைகள் இன்றியமையாத 'லைசென்ஸ்"கள்' ஆகிவிட்டன. தேசிய அடையாளஅட்டை, இராணுவத்தினரின் விசேட பாதுகாப்பு அடையாள அட்டை, தொழில் அடையாள அட்டை, மாணவர் அடையாள அட்டை, கமக்காரர் அடையாள அட்டை என்று ஒருவர் வைத்திருக்க வேண்டிய அட்டைகளின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கிறது. மூச்சு விடுவதற்கும் அடையாள அட்டை ஒன்று பெற்றுத்தான் ஆகவேண்டும் என்ற கட்டாயம் வந்தாலும் ஒன்றும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

தென்னாபிரிக்காவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த தூதுக்குழுவினர் குடாநாட்டு மக்கள் காவித்திரிய வேண்டிய அட்டைகளைப் பார்த்து ஆச்சரியப்பட்டமை குறித்து இந்தப் பத்தியில் முன்னர் ஒரு தடவை குறிப்பிட்டிருந்தோம். அவர்களுக்கு இவற்றைப் பார்ப்பதற்குப் பெரும் விநோதமாகத் தெரிந்தது.

தமிழ் மக்களை இந்த நாட்டு அரசாங்கம் தனது குடிமக்களாகக் கருதாமல் சந்தேகப பேர்வழிகளாகக் கருதுகிறதா என்று யாழ்ப்பாணத்தின் உயர் அதிகாரி ஒருவரைப் பார்த்து தென்னாபிரிக்கப் பிரதிநிதி ஒருவர் கேட்டார். ஆனால் அதுதான் உண்மைநிலை என்பது குடாநாட்டுக்கு நேரில்வராத வேறு மக்களுக்கு எப்படித் தெரியும்?

சந்தேக அத்தியாயத்தின் விறுவிறுப்பான வரிகளாக இப்போது எழுதப்பட்டிருக்கும் விடயம் ஒன்று குறித்து இங்கு பார்ப்போம். இராணுவம் வழங்கிய விசேட அடையாள அட்டையைத் தொலைத்தவர்கள், தாம் அப்பாவிக் குடிமக்கள் தான் என்று நிரூபித்தாலும், மீண்டும் புதிதாக எந்த வகையிலும அதனைப் பெறமுடியாத இறுக்கமான விதி ஒன்று கடந்த சில மாதங்களாகக் குடாநாட்டில் நடைமுறைக்கு வந்திருக்கிறது.

## உள்ளும் புறமும்

குறுமுனி

மக்களில் சிலரிடமிருந்து விசேட அடையாள அட்டைகளை விடுதலைப்புலிகள் பறித்துச் சென்றிருக்கிறார்கள் என்று காரணத்தைக்காட்டி விசேட அடையாள அட்டையைத தொலைத்தவர்களுக்கு அவை புதிதாக வழங்கப்படுவது நிறுத்தப்பட்டிருக்கிறது. திருட்டைத் தடுக்க முடியாத நிலையில் திருட்டுக் கொடுத்தவனை, பொருளை இழந்தவனைத் தண்டிக்கும் புதிய விதி இது. உலகில் வேறு எந்த நாட்டிலும் இப்படி ஒரு நவீன தண்டனை இல்லை எனலாம்.

ஈழத்தமிழர்களை மறைமுகமான அடக்குமுறைக்கு உட்படுத்துவதற்கு பாதுகாப்புக் காரனம் என்ற ஒன்றே இப்போது பெரிதாகத் தலையெடுத்து நிற்கிறது என்பதற்கு இதுவும ஓர் உதாரணம். சட்டங்களும், விதிமுறைகளும் மனித நீதிக்கும் உலக நீதிக்கும் அப்பாற்பட்ட கொடுந்தன்மையானவையாக மாறிவருவதையே பார்க்கிறோம்.

தமிழ்ப் பிரதேசங்களில் வாழும் மக்கள் கடந்த இருபது வருடங்களாக - யாழ்ப்பாணத்தில் பயங்கரவாதத்தை அடக்குவதற்காக, அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தமது உறவினரான படைஅதிகாரி பிரிகேடியர் திஸ்ஸ வீரதுங்காவை 1979ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் அனுப்பியதிலிருந்து எந்த இடைவெளியும் இல்லாமல் - தமிழர்களின் பாரம்பரிய பூமியாகிய வடக்கு - கிழக்குப் பிரதேச மக்கள அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஆளப்படுகிறார்கள்.

வேறு எந்த நாட்டிலும் இவ்வாறு ஒரே தொடர்ச்சியாக பாதுகாப்புக் காரணம் என்ற போர்வையில் அவசரகாலச் சட்டத்தின் கீழ் மக்களது அடிப்படை வாழ்வியக்கத்துக்குக் கட்டுப்பாடு போட்டதாக அறிய முடியவில்லை. கொழும்பு அரசாங்கங்கள் தமிழர்களை ஒடுக்குவதில் இவ்வாறு இன்னும் எத்தனையோ கொடுமையான 'சாதனைகளை' நிலைநாட்டியிருப்பதைச் சரித்திரம் சொல்லும். அந்த வரிசையில் திருட்டுக் கொடுத்தவனுக்கே கடுந்தண்டனை வழங்கும் புதிய நீதியும் இப்போது குடாநாட்டில் எழுதப்படுகிறது.

இந்த லட்சணத்தில் இப்போது குடும்பப் புகைப்படம் எடுத்து படைத்தரப்பினருக்கு காட்டுவதற்காக வீடுகளில் ஒட்டப்படவேண்டும் என்றும் ஒரு விதி. அடையாள அட்டைகள் போன்றே அவற்றையும் எங்கும் எப்போதும் எடுத்துச்செல்ல வேண்டும் என்ற கட்டாயம் வந்து விழுந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று மக்கள் விமர்சிக்கத் தொடங்கி உள்ளனர். அரசாங்கம் நினைத்ததைச் செய்யலாம் என்பது எவ்வாறு நியதியோ அதே போன்று தமிழ் மக்கள் சட்டத்திற்கு உட்பட்டு நடக்கும் நல்ல குடிமக்களாக அவற்றைக் கைக் கொண்டு வாழ்வதும் நியதியாகிவிட்டது!

யாழ்ப்பாண மாவட்டத்தில், வலிகாமம் மக்கள் மீளக் குடியமரத் தொடங்கிய 1996 ஏப்ரல், மே மாதங்களிலேயே பாதுகாப்புப் படையினரின் விசேட அடையாள அட்டைத் திட்டம் நடைமுறைக்கு வந்துவிட்டது. கடந்த மே மாதம் வரையான மூன்று வருட காலத்தில் மொத்தம் 3லட்சத்து 70 ஆயிரம் விசேட அடையாள அட்டைகள் குடாநாட்டில் வழங்கப்பட்டதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இவற்றில் தொலைந்துபோன விசேட அடையாள அட்டைகளுக்குப பதிலாக 1998 நவம்பர் மாதம் வரை 915 விசேட அடையாள அட்டைகள் மீள வழங்கப்பட்டன. அதன் பின்னர் தவறுதலாக தமக்குரிய அடையாள அட்டைகளைத் தொலைத்தவர்களுக்கு மீள்வும் அது வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது.

தற்செயலாக, தம்வசம் இருந்த விசேட அடையாள அட்டையைத் தொலைத்த 300க்கும் மேற்பட்டோர் மீண்டும் அவற்றை வழங்குமாறு யாழ். விசேட அடையாள அட்டைப் பிரிவுக்கு விண்ணப்பித்துள்ளனர். இவற்றைவிட குடாநாட்டில் மொத்தமுள்ள 15 பிரதேச செயலகங்களுக்கும் தொலைந்துபோன தமது அடையாள அட்டைகளுக்குப் பதிலாக புதியனவற்றை வழங்குமாறு நூற்றுக்கணக்கானவர்கள் விண்ணபித்துள்ளதாக அறியப்படுகிறது.

தற்செயலாகவே தமது விசேட அடையாள அட்டைகளைத் தொலைத்த சில இளைஞர்கள், அவற்றுக்குப் பதிலாக புதியனவற்றைப் பெற முடியாது என்ற காரணத்தினால், அவை இல்லாவிடில் படையினரால் இம்சிக்கப்படக்கூடும் என்ற அச்சத்தினால், விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சேர்ந்திருக்கிறார்கள்.

அரசாங்கம் தமிழ்ப் பகுதிகளில் நடைமுறைப் படுத்தும் கட்டுப்பாடுகள், தடைகள் அனேகமாக எதிர்மாறான விளைவுகளை (Counter productive) உண்டாக்கியதையே காண்கிறோம்; அனுபவமும் அதுவே.

எழுபதுகளில் தமிழ் இளைஞருக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட நேரடியானதும் மறைமுகமானதுமான இராணுவ அடக்குமுறைகளும் அவர்கள் ஆயுதம் ஏந்திப் போராடுவதற்குத் திட சங்கற்பம் பூண்டமைக்கான காரணிகளில் (ஏன் அதனை ஓர் உந்து சக்தி என்று கூடக் கருதலாம்) ஒன்றாகும்.

அதேபோல விசேட அடையாள அட்டை வழங்குவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடையும் எதிர்மாறான விளைவைத் தரத்தொடங்கியுள்ளது.

பல்வேறு உண்மையான காரணங்களால் தமது விசேட அடையாள அட்டையைத் தவற விட்டவர்கள், தொலைத்தவர்கள் அவற்றை மீளப் பெறமுடியாது தவிக்கிறார்கள் - அச்சத்துடன் உலாவுகிறார்கள் - இராணுவக் காவல் அரண்களில் தேவையற்ற முறையில் இம்சைப்படுகிறார்கள். உரிய விசாரணைகளை மேற்கொண்டேனும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமளிக்க, ஆறுதல் தர, படைத்தரப்பினர் தமது இப்போதைய முடிவை மீள் பரிசீலனை செய்வரா?

* * *

### பழைய கதையாகும் கப்பற்சேவை

தமிழீழ விடுதலைப் புலிகளின் வசம் உள்ள பகுதிகளை இராணுவம் கைப்பற்றியதும் குறிப்பிட்ட பகுதிகளை அரசாங்கம் விடுவித்துவிட்டதாக அரசாங்கம் வர்ணிக்கிறது. தமிழ் மக்களுக்கு விடுதலை வழங்கிவிட்டதான தொனியில் அந்த மினுக்கான சொற்பதம் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் பல விடயங்களில் போர் நடைபெற்றபோது இருந்த தளைகள் இன்னும் கழன்றதாக அல்லது கட்டு அவிழ்த்துவிடப்பட்டதாக இல்லை. அத்தகைய பலவற்றில் யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களுக்கான வெளிமாவட்ட போக்குவரத்துவசதி ஓர் சிறந்த உதாரணம். உகந்த, சீரிய, ஒழுங்கான போக்குவரத்து வசதி செய்யப்படாததால் மக்கள் கஷ்டங்களையும் சிரமங்களையும் அனுபவிப்பது குறித்து இப்பத்தியில் ஏற்கனவே அவ்வப்போது பல தடவைகள் எழுதிவிட்டோம். எனினும் யார் சொல்லியும், எழுதியும், கேட்டும் இன்னும் நிரந்தரமான பயணிகள் கப்பற் சேவை நடைபெறுவதற்கான எந்த அறிகுறியும் இன்னும் தென்படவில்லை.

1996 இறுதிப் பகுதியில் தனியார் கப்பல் ஒன்று காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையில் சேவையில் ஈடுபட்டது. அது சேவையில் தொடர்ந்து ஈடுபடுவதற்கான அனுமதியைப் பாதுகாப்பு அமைச்சு மறுத்தது. பின்னர் "லங்கா முடித்த" சரக்குக் கப்பலே குடாநாட்டு மக்களை கால்நடைகள் போல ஏற்றி இறக்குகிறது. என்ன செய்வது? இதுவே எமது தலைவிதி என்று யாழ்ப்பாணத்தவர்களும் அதில் 'பயணம்' செய்கிறார்கள்; பயணம் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள்.

வலிகாமம் மக்கள் மீளக்குடியமர்ந்து மூன்று வருடங்கள் உருண்டோடிவிட்டன. நிரந்தரக் கப்பற சேவை - பயணிகள் கப்பற் சேவை - இந்தா நடக்கப்போகிறது, அந்தா நடக்கப்போகிறது என்று செய்திகள் வந்து கொண்டிருக்கின்றனவே அன்றி கப்பலையும் காணோம்; பயணத்தையும் காணோம் என்ற நிலையே தொடருகிறது.

பயணிகள் கப்பற்சேவை மக்கள் வசதிக்கேற்பக் கைகூடும் நிலை தள்ளிப் போவதற்கு அவ்வப்போது ஒவ்வொரு தடங்கலும் தடையும் தோற்றுவிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. மாதத்துக்கு மாதம் ஏதோ ஒரு காரணம் கூறப்படுகிறது.

தனியார் துறையினரின் பயணிகள் கப்பலைச் சேவையில் ஈடுபட அனுமதிக்கலாமா இல்லையா என்பதனை முடிவுசெய்வதில் தொடங்கிய இழுத்தடிப்பு, வடக்கு மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபை - கப்பல் ஒன்றைக் கொள்வனவு செய்து சேவையை நடத்துவது என்ற முடிவுஎடுக்கப்பட்ட பின்னரும் நின்றதாக இல்லை. காரியத்தை இன்னும் காணமுடியவில்லை.

தனியார்துறைக்கு அனுமதி வழங்குவதில்லை அரசாங்கமே இக்கப்பற் சேவையை நடத்துவது என்று முடிவு செய்வதற்கு மாதங்கள் பலவும் கரைந்தன. முதலில் தனியார்துறைக்கு வழங்குவதற்கு முடிவுசெய்து பின்னர் அதிலிருந்து பின்வாங்கி யாரிடம் பொறுப்பை ஒப்படைப்பது என்பதனை ஆராய்ந்து முடிவு எடுப்பதில் ஒரு பகுதிக் காலம் கடந்து போயிற்று.

திறந்த பொருளாதாரம் என்ற பெயரில், அரசுடைமைகளாக இருந்த நிறுவனங்கள், சேவைகள் எல்லாம் ஏவுகணை வேகத்தில் மடமடவெனத் தனியார் வசம் ஒப்படைக்கப்படும் வேளையில் —

## வன்னிக்கான புதிய பாதையை விரைந்து திறந்து மக்களைக் காப்பாற்றுவது அவசியம்

குடாநாட்டு மக்களுக்குச் சீரான வசதியான கப்பற்சேவையை நடத்தும் விடயத்தில மட்டும் பொருளாதாரக் கொள்கை சரிக்கப்பட்டுவிட்டது. பாதுகாப்புக் காரணம் என்ற முத்திரை குத்தி தனியார் கப்பற் சேவைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. இது விடயத்தில் உள்ளுக்குள்ளாகப் பல குத்துவெட்டுகளும் குளறுபடிகளும் நடைபெற்றமை பழைய கதையாகிவிட்டது.

அரசாங்கமே நடத்துவது என்று முடிவுசெய்த பின்னர் கப்பற்சேவையை கப்பற் கூட்டுத்தாபனம் நடத்துவதா, அத்தியாவசிய சேவைகள் திணைக்களம் நடத்துவதா, 'றான்' எனப்படும் வடபகுதி மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபை நடத்துவதா என்பதில் தீர்மானம் எடுக்க முடியாதநிலை. அதிலும் சில மாதங்கள் கரைந்தன.

காங்கேசன்துறை - திருகோணமலை கப்பற் சேவையை அரசாங்கம் நடத்துவதானால் எவ்வாறு விடுதலைப்புலிகளின் தாக்குதல்களைத் தவிர்த்து அச்சமின்றி நடத்த முடியும் என்று ஆராய்வதற்கு ஒன்றுக்குப் பத்துத் தடவைகள் மாநாடுகள் நடத்தி தீர்க்கமான முடிவு காண்பதற்கு மேலும் பல வாரங்கள் போயின.

குடாநாட்டு மக்களின் நலன் கருதி, மனிதாபிமான நோக்கத்துடன் பயணிகள் கப்பற் சேவைக்கும் வழித்துணை வழங்குவதற்குச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு முன்வந்தது. எனினும் அதனை ஏற்றுக் கொள்வதா இல்லையா என்பதனை முடிவுசெய்வதற்கு மற்றொரு இழுத்தடிப்பு. புண்ணுக்கு வலியா மருந்துக்கு வலியா என்ற நிலை நீண்டு சென்றது. தமது இயலாமையை வெளிப்படுத்துவது சரியா, வழித்துணையோடு கப்பற் சேவை நடத்துவது பாதுகாப்புத் தரப்பின் கௌரவத்தைக் குறைக்காதா என்ற பல வினாக்களும் விடைகளும் ஆராயப்பட்டு செஞ்சிலுவை வழித்துணையை ஏற்பதற்கு ஒருவாறு முடிவு செய்யப்பட்டது. அதிலும் பறந்தன பல மாதங்கள்!

அந்த இழுத்தடிப்புக்கட்டம் முடிவுற்றதும் பயணிகள் கப்பற் சேவையை நடத்தும் பொறுப்பையும் "றானி"டமே ஒப்படைப்பது என முடிவு செய்யப்பட்டது. பயணிகள் கப்பல் ஒன்றை குத்தகைக்கு அமர்த்துவதா, அல்லது சொந்தமாகக் கொள்வனவு செய்வதா என்ற சாதக பாதகங்களை ஆராய்ந்து முடிவுக்கு வர மேலும் ஒரு கால இடைவெளி.

இதன் பின்னர் தனக்கு ஒதுக்கிய பணத்தில் கப்பலைக் கொள்வனவு செய்வதானால் ஏனைய தனது புனர்வாழ்வு, புனரமைப்பு சக அபிவிருத்தி வேலைகளைச் செய்ய முடியாது என்று அதிகாரசபை சிவப்புக்கொடி காட்டியது. மேலும் சிலகாலம் கரைந்தது. கப்பல் வாங்குவதற்குப் புறம்பாகப் பணம் வழங்க முடிவானதும் எந்தக் கப்பலை எந்த நாட்டிடம் இருந்து வாங்குவது என்பதனை முடிவு செய்யவும் சுணக்கமே ஆயிற்று.

இப்போதைய சுணக்கம் அமைச்சரவை மட்டத்தில். குடாநாட்டு மக்களின் போக்குவரத்துக்கு வசதி செய்யாது இருப்பது அவர்களின் அடிப்படை உரிமைகளைப் பறிப்பது மட்டுமல்ல, அவர்களை குடாநாட்டுக்குள்ளேயே சிறை பிடித்து வைத்திருப்பதாகும் என்பதனை அமைச்சர்களே உணரவில்லை என்றால் –

அதன் அவசரத்தையும் அவசியத்தையும் அமைச்சரவையே புரிந்து கொள்ளவில்லை என்றால் –

இது சம்பந்தமான பத்திரம் மேசைக்கு வந்து இரண்டு மாதம் கழிந்துவிட்ட போதிலும், அதனைக் கையில் எடுத்துப் பார்க்க அமைச்சரவை அக்கறை கொள்ளவில்லை என்றால் –

தமிழர்களின் நலன்களை அதிகாரிகள் சுணக்காமல், இழுத்தடிக்காமல், தாமதிக்காமல் அவசரம் உணர்ந்து செயலாற்றுவார்கள் என்று எவ்வாறு எதிர்பார்ப்பது?

ஆம். குடாநாட்டுக்கான பயணிகள் கப்பற் சேவைக்கு புதிய கப்பல் ஒன்றை வாங்குவது தொடர்பாக, வெளிநாடு சென்ற குழுக்கள் மேற்கொண்ட முடிவுகள் அடங்கிய அறிக்கையை அமைச்சரவை அங்கீகாரத்துக்காக வ.மீ.பு.பு அதிகாரசபை அனுப்பி இரண்டு மாதங்கள் கழிந்து போயின. ஆனால் அமைச்சரவை அதனை இன்னும் பரிசீலனை செய்யவும் இல்லை; முடிவு சொல்லவும் இல்லை.

ஆடம்பரமான குளிரூட்டப்பட்ட வாகனங்களிலும் விரைவு விமானங்களிலும் பயணம் செய்யும் அமைச்சர்களுக்கு, சரக்குக் கப்பல் ஒன்றில் போதிய சுகாதார வசதியும் இல்லாமல் உடலை முறித்தெடுக்கும் 10 மணி நேரம் கடற் பயணம் செய்யும் எங்கள் மக்களின் கஷ்டம் எங்கே புரியப்போகிறது?

லட்சக் கணக்கான மக்களின் போக்குவரத்துக் குறித்து அக்கறையுடன் கவனம் எடுக்க வேண்டிய அமைச்சர்களே இதனை ஆறப் போட்டால், சீரான, நிரந்தரமான கப்பற் சேவை. இப்போதைக்குக் குடாநாட்டு மக்களுக்குஇல்லை என்பதே அர்த்தம். ஆறின கஞ்சி பழங்கஞ்சியே.

அதிகாரிகள் மட்டத்திலான இத்தனை கால இழுபறிகள், இழுத்தடிப்புகள், தாமதங்களின் பின்னர், மூன்று வருட காலத்தை விழுங்கிய பின்னர் - இறுதிக் கட்டத்தை அடைந்த பின்னர்- போக்குவரத்து விடயம் அமைச்சரவையின் கிடப்பில் இரண்டு மாதங்களாகத் தொங்குகிறது என்றால் தமிழர் நலனில் அவர்களுக்கு உள்ள அக்கறையை இலகுவில் கணிப்பிட்டு விடலாம்!

இனப்பிரச்சினை விவகாரத்தை மிக வெற்றிகரமாக ஐந்து ஆண்டுகளாக இழுத்தடித்து வந்துள்ள அமைச்சரவைக்கு, குடாநாட்டு மக்களின் போக்குவரத்து விவகாரத்தை மூன்று வருடங்களாக தாமதப்படுத்திய அமைச்சரவைக்கு, மேலும் ஒரு வருடம் கடத்துவதுஒன்றும் கடினமான காரியமல்லவே!

குடாநாட்டில் இயல்பு நிலை வந்துவிட்டதாக வெளிநாடுகளுக்கு அழகான ஓவியம் வரைந்து காட்டும் அரசாங்கத்துக்கு இப்பிரதேச மக்களின் போக்குவரத்து வசதி இவ்வளவுக்கு திருப்பதியானதே என்ற கருத்துப் போலும்!

இல்லையெனில் தரை வழிப்பாதையை இந்த வருட இறுதிக்குள் திறந்து விடுவோம், அதற்கு முன்னர் அவசரப்பட்டு கோடிக்கணக்கான பணத்தைச் செலவிட்டு ஒரு கப்பலை வாங்குவதா என்று எண்ணினரோ என்னவோ! யாரறிவார் பராபரமே!!

எப்படியோ 'லங்கா முடித்த' சரக்குக் கப்பல் மாதத்தில் ஒரு தடவை காங்கேசன் - திருமலை கப்பற் சேவைக்கு ஒதுக்கப்படும். அது இரண்டு சேவைகளை அங்கிருந்தும் இங்கிருந்தும் நடத்தும். அப்போது பயணம் செய்ய விரும்பினால் போகலாம். இல்லையேல் கப்பற்பயணத்தை நினைத்தும் பார்க்கக் கூடாது. காலுக்கு அளவாகச் சப்பாத்தைத் தைக்காமல் சப்பாத்தின் அளவுக்கு காலை வெட்டும் கன்றாவி இது!

இதுவே குடாநாட்டு மக்களுக்குக் கிடைத்திருக்கும் போக்குவரத்துப் பரிசு!

* * *

### வன்னிச் சாவுகளைத் தடுக்குக

யாழ்ப்பாண மக்களின் போக்குவரத்துப் பிரச்சினை - குறிப்பாக கப்பல் போக்குவரத்து- இவ்வாறு நீர் மேல் எழுத்துப் போல குமிழி பட்டுக்கொண்டிருக்க –

இப்போது இப்பிரதேச மக்களின் மனதை உருக்கிக் கொண்டிருக்கும் விடயம் கடந்த 27 நாள்களாக போக்குவரத்து வசதி இல்லாததால் பட்டினிச் சாவையும் நோய்க்குச் சிகிச்சை பெற முடியாததால் உயிர் ஆபத்தையும் கண்டு கொண்டிருக்கும் வன்னி மக்களின் நிலையே ஆகும்.

இராணுவம் வன்னிப்பிரதேசத்தில் அடிக்கடி "தாறுக்கும் மாறுக்கும்" இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதால், விடுதலைப் புலிகளின் வசம் உள்ள பிரதேசத்திற்கும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்திற்கும் இடையிலான போக்குவரத்துப் பாதைகள்அடிக்கடி மூடப்பட்டு புதிதுபுதிதாக வேறுபாதைகள் புழக்கத்துக்குக் கொண்டு வரப்படுகின்றன.

கடந்த மாத இறுதியில் பள்ளமடுவைக் கைப்பற்ற நடத்தப்பட்ட தாக்குதலின் பின்னர் சில

(6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
20-11-1946

அம்மன் திருப்பாதத்தில்
14-07-1997

அமரர்

**இராசகுமாரியம்மா சிவலிங்கம்**

(இராசாத்தி, அண்ணி)
(முன்னாள் ஆசிரியை, புடைவைக் கைத்தொழில்)

இரண்டு திங்கள் ஆனாலும் – எங்கள்
இதயத்தில ஏற்றி வைத்த
இராச குமாரியம்மா என்ற அன்புச் சுடரை
ஈரேழு பிறப்பிலும் மறக்க மாட்டோம்.

நீங்காத நினைவுகளுடன்
**குடும்பத்தினர்.**

"ஜனனோதயம்"
செல்வராசா அவெனியூ,
அம்மன் வீதி,
திருநெல்வேலி.

(சி-8263)

# யாழ்.தபால் ஊழியர்களுக்கு சீருடை, மழை அங்கி இல்லை

யாழ்ப்பாணம்,ஜூலை24

யாழ். மாவட்டத்திலுள்ள தபாலகங்களில் கடமையாற்றும் தபால் ஊழியர்களுக்கு கடந்த பல வருடங்களாக சீருடைத்துணிகள் மற்றும் மழை அங்கிகள், சப்பாத்துக்கள் போன்றவை வழங்கப்படவில்லை.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் 1990ஆம் ஆண்டு தொடக்கம் இந்தச் சீருடை விநியோகம் நிறுத்தப்பட்டது. விடுதலைப் புலிகள் இந்தச் சீருடைகளை தமது தேவைகளுக்குப் பயன்படுத்துவார்கள் என்று காரணம் காட்டப்பட்டே இந்தச் சீருடை விநியோகம் அப்பொழுது நிறுத்திவைக்கப்பட்டது.

தற்பொழுது படைகளின் கட்டுப்பாட்டிலுள்ள யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகம் இயங்கத் தொடங்கி மூன்று வருடங்கள் கடந்துவிட்டபோதும தபால் ஊழியர்களுக்கு சீருடைகளை அனுப்பி வைப்பதில் தபால் திணைக்களத்தின் கொழும்புத் தலைமையகம் இழுத்தடிப்புச் செய்து வருவதாக ஊழியர்கள் விசனம் தெரிவித்தனர்.

தபால் ஊழியர்கள் சீருடையில் கடமையாற்ற முடியாத நிலை ஏற்படடுள்ளதால் சுற்றி வளைப்புகள் மற்றும் தேடுதல்களின்போது பெரும் சிரமத்தை அனுபவித்துவருகின்றனர். (ஐ-5-ரி-9)

## அல்லைப்பிட்டியில் மருத்துவமுகாம்

நெடுந்தீவு, ஜூலை24

தீவக லயன்ஸ் கழகம் நாளை ஞாயிற்றுக்கிழமை அல்லைப்பிட்டியில் இலவச மருத்துவ முகாம் ஒன்றை நடத்தவுள்ளது.

அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாசாலையில் இடம்பெறும். மேற்படி சிகிச்சை முகாமில் ஐந்தாம் ஆண்டு மாணவர்களுக்கான மருத்துவ சோதனையும் இடம்பெறும்.

நீரிழிவு, இதைய இரத்த அழுத்தம், வாய்ப்புற்றுநோய் பொதுமருத்துவம், கண்பரிசோதனை என்பன லயன் டாக்டர் நா.வேதநாயகம் தலைமையிலும் பொதுமருத்துவ பரிசோதனை லயன் டாக்டர் வை.தியாகராசா தலைமையிலும் நடைபெறும்.

இலவசத் திருமணப்பதிவும் இடம் பெறும். (ஐ-111)

## யாழ்ப்பாணத்துக்கான கப்பற்.....

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலமாகப் பயன்படுத்தப்பட்ட பாப்பா மோட்டை பாதையும் மூடப்பட்டு விட்டது. அதனால் புதிய பாதை ஒன்றைத் திறக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது தெரிந்ததே.

புதியபாதை ஒன்றைத் திறப்பதற்கு இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஊடாகத் தொடர்புகள் உண்டாகிய போதிலும், இக்கட்டுரை எழுதப்படும் வரை சாதகமான முறையில் இணக்கம் எதுவும் உண்டாகவில்லை.

கண்டி வீதியில் மாங்குளத்தினூடாக புதிய போக்குவரத்துப் பாதையைத் திறக்கும் யோசனை முன்வைக்கப்பட்டாலுங்கூட இரா்ணுவத்தினர் தெரிவித்தயோசனையை - நிபந்தனைகளை - விடுதலைப்புலிகள் ஏற்கவில்லை. இதுவிடயத்தில் சம்பந்தப்பட்ட இரண்டு தரப்புகளும் விட்டுக் கொடுப்பதாக இல்லை.

இதனால் வன்னி மக்களுக்கு உணவு மற்றும் மருந்து வகைகளை எடுத்துச் செல்லும் பணி, வெளிமாவட்டத்தில் மேலதிக அல்லது அவசர சிகிச்சை பெறவேண்டிய நோயாளரை எடுத்துச் செல்லும் பணி, போக்குவரத்துத் தடைப்பட்டதால் அப்பாலும் இப்பாலும் பயணம் செய்யமுடியாது சிக்கித் தவிக்கும் பொது மக்கள் தமக்கு வேண்டிய இடத்துக்குப் போய்ச் சேருதல் ஆகியன முற்றாகத் தடைப்பட்டுள்ளன.

27 நாள்களாக போக்குவரத்து தடைப்பட்டுள்ளதால் - புதிய பாதை ஒன்றைத திறப்பதில் இழுபறி நிலைமை தொடர்வதால் - வன்னியில் உணவுப் பொருள்கள் தீர்ந்து மக்கள் பட்டினிச் சாவின் விளிம்பிற்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். நோயாளர்கள் செத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த ஆபத்தான நிலையைக் கருத்திற்கொண்டு இருதரப்பினரும் மக்கள் நலனை முன்னிறுத்தி விரைவில் இணக்கத்துக்கு வந்து புதிய பாதை ஒன்றைத் திறக்கவேண்டும் என்பதே மனிதாபிமானமும், மனித நேயம் உள்ளவர்களினதும், வன்னியில் வாழும் மக்களின் இங்குள்ள உறவினர்கள் எல்லோரினதும் வேண்டுதலும் விருப்பமுமாகும்.

வன்னியில் போர் தொடங்கிய கடந்த மூன்றரை ஆண்டு காலத்தில் இப்போது தோன்றியுள்ள நெருக்கடி முன்னர் எப்போதையும் விட மிகமிக ஆபத்தான நிலையை எட்டியுள்ளது. ஆகையால் இராணுவ நலன்களைவிட மக்கள் நலனுக்கு முன்னுரிமை கொடுத்துச் செயற்பட வேண்டிய வேளை இது.

இக்கட்டுரை எழுதப்பட்ட வேளை, புதிய பாதை திறப்புச் சம்பந்தமாகப் பிந்திக் கிடைத்த தகவலின் பிரகாரம் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு, அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம், எம்.எஸ்.எவ். வைத்தியசேவை ஆகியவற்றைச் சேர்ந்த அதிகாரிகளும் வவுனியா அரசாங்க அதிபரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனுடன் பேசியுள்ளனர். அந்தப் பேச்சுக்களின் பெறுபேறுகள் உடனடியாகத் தெரியவரவில்லை.

இதற்கு முன்னர், இராணுவத்தரப்பிலிருந்து இரண்டாவது தடவையாக (மாங்குளம் ஊடான பாதை குறித்து) விடுதலைப் புலிகளுக்கு அனுப்பப்பட்ட கடிதத்துக்கு புதன்கிழமை மாலையில் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு ஊடாக பதில் அனுப்பப்பட்டது.

இராணுவத் தரப்பில் முதலாவது கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட யோசனையே - நிபந்தனையே - இரண்டாவது கடிதத்திலும் இருந்ததாகத் தெரிவித்து அதனை ஏற்கமுடியாது என்றவாறாகவே விடுதலைப் புலிகளின பதில் அமைந்திருந்ததாக நம்பகமாக அறிய வந்தது.

இக்கட்டுரையை நீங்கள் வாசிக்கும் போது பாதை திறப்புச் சம்பந்தமான நிலையும் நிலைப்பாடுகளும் மாறவும் கூடும். அவ்வாறு மாற்றம் வருமாயின் ஆக்கபூர்வமாக அமைய வேண்டும் என்றே மக்கள் எல்லோரும் விரும்புவர்.

இதேவேளை மனிதாபிமான சேவைகளை கடல்வழி மூலம் செய்ய முடியுமா என்பது குறித்தும் சர்வதேச தொண்டர் அமைப்புகள் சில ஆலோசித்து வருவதாகத் தெரியவருகிறது. வன்னியில் இருந்து மன்னார் சென்று சிக்கியுள்ள 200க்கும் மேற்பட்ட பொது மக்களை வள்ளங்களில் ஓட்டுத்திடல் என்ற இடத்துக்கு வெள்ளைக்கொடியுடன் அழைத்துச் செல்வது குறித்துப் பிரஜைகள்குழு வட்டாரங்கள் வியாழன் காலை ஆராய்ந்து கொண்டிருந்ததாக இன்னொரு தகவல் தெரிவித்தது.

ஜி.சி.ஈ. உயர்தர பரீட்சை அடுத்த மாதம் இரண்டாம் திகதி (இன்னும் ஒன்பது நாள்களில்) ஆரம்பமாகிறது. அதற்கு முன்னர் தரைவழிப் பாதையைத் திறக்க வேண்டும். கடல் மூலம் வினாத்தாள்களை எடுத்துச் செல்வதும் திரும்புவதும் கஷ்டமான காரியமாக இருக்கும். இதனை மனதிற்கொண்டும் பாதை திறப்பு விரைவுபடுத்தப்பட வேண்டும் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

பரீட்சைக்கு முதல் பட்டினியால் மக்கள் சாகாமல் காக்கப்பட வேண்டும் என்ற இலக்குடன் எல்லாத் தரப்புகளும் முனைப்புடன் செயற்பட வேண்டும். இப்போதைய நெருக்கடியைத் தீர்ப்பதற்கு மனிதாபிமான, மனித நேய அணுகுமுறை அவசியம். சகல தரப்புகளும் அதனை உணர்ந்து செயற்படும் என நம்புகிறோம். இப்போதுள்ள முட்டுக்கட்டை தற்காலிகமானதாகத் தளர்ந்து, கழன்று போகட்டும் மக்கள் காப்பாற்றப்படட்டும்.

## முக்கிய அறிவித்தல்

வலி. கிழக்கு தென்பகுதி ப.நோ. கூ. சங்கம், நீர்வேலி.

### கிராமிய வங்கி மீதிகளை உறுதிப்படுத்தல்

மேற்படி சங்கத்தில் 31-05-1999 இற்கான கிராமிய வங்கிகளின் கணக்கு மீதிகள் கணக்காய்வாளர்களினால் உறுதிப்படுத்தப்பட இருப்பதனால், குறிப்பிடப்பட்ட கிராமிய வங்கிகளில் கணக்குகளை வைத்திருப்போர் பின்வரும் திகதிகளில், தங்களது கையேடுகளை சமர்ப்பித்து கணக்கு மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றீர்கள்.

| காலம் | நேரம் | இடம் |
|---|---|---|
| 26-07-1999 திங்கள் | 9.00-4.30 | நீர்வேலி கிராமிய வங்கி |
| 27-07-1999 செவ்வாய் | 9.00-4.30 | ,, |
| 29-07-1999 வியாழன் | 9.00-4.30 | ,, |
| 30-07-1999 வெள்ளி | 9.00-4.30 | உரும்பிராய் கிராமிய வங்கி |
| 02-08-1999 திங்கள் | 9.00-4.30 | ,, |
| 03-08-1999 செவ்வாய் | 9.00-4.30 | ,, |
| 04-08-1999 புதன் | 9.00-4.30 | கோப்பாய் கிராமிய வங்கி |
| 05-08-1999 வியாழன் | 9.00-4.30 | ,, |
| 06-08-1999 வெள்ளி | 9.00-4.30 | ,, |

பொது முகாமையாளர்

நீர்வேலி,
1999.07.20

(சி-8259)

## நினைவஞ்சலி

31 ஆம் நாள்



**திருமதி மாரிமுத்து இராசம்மா**

மலர்வு 09-05-1909
உதிர்வு 24-06-1999

39 ஆம் நாள்



**அமரர் மாரிமுத்து சத்தியநாதன்**

(ஓய்வு பெற்ற பெருந்திணைக்கள உத்தியோகத்தர்)

மலர்வு 15-11-1929
உதிர்வு 17-06-1999


எங்கள் அம்மாவினதும் சகோதரனதும் மரணச் சடங்கிகில் கலந்து கொண்டவர்களுக்கும் நேரில் வந்து எமக்கு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் நன்றி தெரிவிப்பதோடு இன்று (24-07-99) நடைபெறும் 31 ஆம் நாள் ஆத்ம சாந்திப் பூசையிலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், சகோதரர்,
மா. நற்குணம்.

உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

(67657)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
02-03-1917

உதிர்வு
24-06-1999

**அமரர் நல்லதம்பி காசிப்பிள்ளை**

(உரிமையாளர், காசிப்பிள்ளை அன்சன்ஸ், மார்க்கட், சங்கானை.)

சங்கானை மாவடி ஆலய வீதியைச் சேர்ந்த அமரர் நல்லதம்பி காசிப்பிள்ளை அவர்களின் 31ஆம் நினைவுநாளாகிய இன்று அவரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

வி.கே.பி. சோதி,
தயாரிப்பாளர்.

உடுவில்,
சுன்னாகம்.

(67638)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிரடி அரங்கு

'வரணிப் பொது மக்கள்' என்ற பெயரில் சுமார் இருபத்தியைந்து பேர் ஒப்பமிட்டு அண்மையில் மனித உரிமைகள ஆணைக் குழுவின் யாழ் அலுவலகத்துக்குக கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறார் கள்.

சில இராணுவத்தினரின் பெயர்களைக் குறிப்பிட்டு அவர்கள் வரணிப் பகுதியில் அட்டகாசம் புரிவதாகத் தெரிவித்து அவர்களின் அடாத செயல்களை விலாவாரியாக விவரித்து அக்கடிதம் வரையப்பட்டிருக்கின்றது. இளம்பெண்கள் மற்றும் ஆண்களுக்கு கொடுக்கும் தொல்லைகள் பற்றியும் அதில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இத்தகையோரை வரணியிலிருந்து இடம்மாற்றி - வடமராட்சிக்கோ, தென்மராட்சிக்கோ அனுப்பாமல் - வன்னிக்கு அனுப்பும்படியும் அவர்கள் கோரியிருக்கின்றார்கள்.

இந்த இராணுவத்தினரின் கெடுபிடிகளால் மாணவர்கள் பள்ளிக்குச் செல்ல அஞ்சி வீட்டில் நிற்பதாகவும் விடுதலைப்புலிகள் அமைப்பில் சேர்ந்து வருவதாகவும் கூட அதில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது.

கடிதத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களில் உண்மை எவ்வளவு தூரம் என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை. என்றாலும் மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் இந்த விவகாரம் குறித்து ஏற்கனவே படை அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்திருப்பதாகத் தெரிகின்றது.

இந்தக் கடிதம் மூலம் ஒன்று மட்டும் நிச்சயமாகத் தெரிகின்றது. புலிகளுக்கு ஆள்திரட்டுவதற்கு எதிர்த்தரப்பிலிருந்தும் மறைமுகமாக ஒத்தாசை கிடைத்து வருகின்றது என்பதுதான் அது!

* * *

சமூகச் சீரழிவுகள் குறித்து பல தடவைகள் இப்பத்தி மூலம் எடுத்துக் கூறியாகிவிட்டது. அந்த வரிசையில் இது மற்றொரு திடுக்கிடும் தகவல். யாழ்ப்பாணம் உணவு, மருந்துப் பரிசோதகர் மகாதேவா இது குறித்து விவரித்தார்.

அங்கீகரிக்கப்படாத - தடைசெய்யப்பட்ட - சுகாதாரக்கேடான - மருந்துகள் யாழ்ப்பாணத்தில் விற்கப்படுகின்றனவா என்பதைக் கண்டறிவதற்காக அவர் யாழ்ப்பாணத்திலுள்ள பாமசிகளுக்கு அடிக்கடி விஜயம் செய்து சோதனைகளில் ஈடுபடுவது வழக்கம். கடந்த வாரம் நகரின் மத்தியிலுள்ள இரண்டு பாமசிகளுக்கு அவர் சென்ற போது பகிரங்கமாக - பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு - விற்பனைக்கு விடப்பட்டிருந்த இரு பொருள்களைக் கண்டு அதிர்ச்சியடைந்தார்.

'வயக்ரா' போன்ற கிளுகிளுப்பூட்டும் விவகாரங்களுடன் தொடர்புடைய - ஒருவகை மாத்திரைகள் (பொதுநலன் கருதி பெயர், விவரம் தவிர்க்கப்பட்டுள்ளது) மற்றும் அதே விடயத்துக்குப் பயன்படுத்தப்படும் "ஸ்பிறே" என்பனவே Open Market இல் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன.

அவை உணவு, மருந்துப் பரிசோதகரால் 'பறிமுதல்' செய்யப்பட்டு சுகாதாரத் திணைக்களத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளன.

"இந்தப் பொருள்களை இலங்கையில் விற்பனை செய்ய சட்ட அனுமதி இல்லை. இதுவரை காலமும் வெளிநாட்டுத் தொடர்புள்ள - மேல்தட்டு வர்க்க மக்களிடையே - அரசல் புரசலாக பாவனையிலிருந்த இந்தப் பொருள்கள் குடாநாட்டில் தற்போது சட்டம், ஒழுங்கை நிலைநாட்டும் போக்கு சீர்குலைந்திருப்பதால், சாதாரண மக்களின் கைகளுக்கும் கிடைக்கக் கூடியதாக பகிரங்க விற்பனைக்கும் வந்துவிட்டன. இவை அவ்வப்போது கூடிய நேரத்துக்கு இன்பத்தையும், கிளர்ச்சியையும் தருவனவாகத் தோற்றினாலும் காலப்போக்கில் அவற்றின் பாவனையாளர்கள் அவற்றுக்கு அடிமையாகி உடல் நலச் சீர்கேட்டிற்கும், பெரும் பாதிப்புக்கும் ஆளாகும ஆபத்து உண்டு. சட்ட அனுமதி இல்லாத இத்தகைய பொருள்களின் விற்பனை மற்றும் எமது இனத்தின் சமூக நலனுக்கே கேடு விளைவிக்கக் கூடிய இத்தகைய ஆபத்தான வேலைகளுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்க முடியாத நாட்டுச் சூழ்நிலை என்பன பெரும் சமூகச் சீரழிவிற்கு வித்திடப்போகின்றன".- என்று வேதனையுடன் குறிப்பிட்டார். உணவு, மருந்துக் கட்டுப்பாட்டு அதிகாரி மகாதேவா.

வர்த்தகர்கள் இத்தகைய பொருள்களின் விற்பனையைத் தவிர்ப்பதன் மூலம் இன்றைய சூழ்நிலையில் சீரழிவு ஏற்படுவதைத் தடுத்து நிறுத்துவதற்கு உதவ வேண்டும்.

* * *

வடமராட்சி, வலிகாமம் கிழக்கு எல்லையில் உள்ள ஒரு பாடசாலையில் கலை நிகழ்ச்சி என்ற பெயரில் நடைபெற்ற 'பிறேக் டான்ஸ்' குறித்து 10 ஆம் திகதிய சஞ்சீவியிலும் –

இது குறித்து அந்தக் கலை நிகழ்ச்சியை தாமே நடத்தியதாகத் தெரிவித்தது அச்சுவேலி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்க ஊழியர் நலன்புரிச் சங்கம் கடிதம் எழுதியிருப்பது குறித்து கடந்த வார சஞ்சீவியிலும் -

இதே பத்தியில் பிரஸ்தாபித்திருந்தோம்.

தமது பாடசாலையிலேயே இந்த நிகழ்ச்சித் நடைபெற்றதாக அச்சுவேலி மகாவித்தியாலய அதிபர் திருமதி ச.கனகராசா இப்பொழுது கடிதம் எழுதியிருக்கின்றார்.

இனி விடயத்துக்கு வருவோம்.

அச்சுவேலி பனை தென்னை வள அ.கூ.ச. ஊழியர் நலன்புரிச் சங்கம் தனது கடிதத்தில் மேற்படி தகவலைத் தெரிவித்த பிரமுகர் யார்? என்று கேள்வி எழுப்பி அவரை விமர்சிக்க முற்பட்டுள்ளது. அது விவகாரம அல்ல. அந்தப் பிரமுகர் குறிப்பிட்ட விடயம்தான் இங்கு விவகாரம்.

'பிறேக் டான்ஸ்' நடந்ததை சங்கம் ஒப்புக்கொண்டுள்ளது. அதை பகிரங்கமாக ஒப்புக்கொண்டது பாராட்டுக்குரியது. ஆனால் அந்த டான்ஸில் கலாச்சாரச் சீர்கேட்டையோ, சமூகச் சீர்கேட்டையோ ஏற்படுத்தக் கூடிய எந்த அம்சமும் இல்லை என்று சங்கம் கூறுவது ஏற்கமுடியாதது. அங்கு இசைக்கப்பட்ட பாடல்களே அதனை எடைபோடப் போதுமானவை. நாகரிகமும் இடமும் கருதி பாடல்களின் விவரத்தை பிரசுரிக்க விரும்பவில்லை. மொத்தத்தில் ஆபாசமான சினிமாப் பாடல்களை இசைக்கவிட்டு, மேடையில் 'பிறேக் டான்ஸ்' ஆடுவதும் சபையோரையும் சேர்ந்து ஆடவைப்பதும் எமது கலாச்சாரத்துக்கு ஒவ்வாதது என்பதை சம்பந்தப்பட்டோர் புரிந்துகொள்ள முன்வர வேண்டும்.

பிறேக் டான்ஸ் ஆக 45 நிமிடமே நடைபெற்றது. ஆனால் சம்பந்தப்பட்ட பிரமுகர் நான்கு மணித்தியாலம் என்று குறிப்பிட்டிருக்கின்றாரே என்றும் சங்கம் அதிருப்தி தெரிவித்திருக்கின்றது.

நமது விசாரணையில் ஒன்றரை மணி நேரத்துக்குக் குறையாமல் இரண்டு மணி நேரம் வரை பிறேக் டான்ஸ் நடந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

மிகப் பிரபலமான குழுவினரின் பட்டிமன்ற நிகழ்ச்சி கூட கலை நிகழ்ச்சியில் இடம்பெற்றதாகவும் அதை அந்தப் பிரமுகர் சுட்டிக்காட்டவில்லையே என்றும் சங்கம் கவலைதெரிவித்திருக்கின்றது.

பிரமுகர் அதை எமக்குத் தெரிவித்திருந்தார். பொதுவாக குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுவதே எமது நோக்கம் என்பதால் அவற்றைச் சுட்டிக்காட்டுகின்றோம். பல்வேறு கலை நிகழ்ச்சிகளிலும் இடம்பெறும் எல்லா சிறப்பு நிகழ்ச்சிகளையும் கட்டாயம் இப்பத்தியில் பாராட்ட வேண்டும் என்பதல்ல.

கராட்டி தற்பாதுகாப்பு நிகழ்ச்சியின் நேரத்தைச் சுருக்குமாறு நாம் கேட்கவில்லை என்று சங்கம் தனது கடிதத்தில் தெரிவித்திருக்கின்றது. ஆனால் அத்தகைய அழுத்தம் தங்களுக்குத் தரப்பட்டதாக அந்தக கராட்டி நிகழ்ச்சியில் பங்கு கொண்டவர்களுள் ஒருவரான எம்.எஸ்.சந்திரபோஸ் எமக்கு நேரில் தெரிவித்துள்ளார்.

அத்தோடு சம்பந்தப்பட்ட கல்லூரி அதிபரோ அவரது குடும்பத்தவரோ நிகழ்ச்சியில் பங்குபற்றவில்லை என்று சங்கம் தெரிவித்துள்ளது. கல்லூரி அதிபரும் தமது கடிதத்தில் அதைக் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

கல்லூரி முதல்வர் என்று தாம் அடையாளம் கண்ட விடயத்தில் தாம் தவறாக வழிநடத்தப்பட்டிருக்கலாம் எனச் சம்பந்தப்பட்ட பிரமுகர் தெரிவிக்கின்றார்.

கல்லூரி அதிபரின் கடிதத்தில் உதயனுக்கு எதிராக இந்த விவகாரத்துடன் தொடர்பற்ற வேறு பல குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. அவை குறித்தும் உரிய விசாரணைகள் நடத்தி சரியான பதில் அதிபருக்கு வழங்கப்படும். தேவையேற்படின் அவற்றின் விவரமும் பிரசுரிக்கப்படும்.

கல்லூரி மண்டபத்தில் 'பிறேக் டான்ஸ்' நடத்திய விவகாரம் இவ்வளவு சர்ச்சைக்கு உள்ளாகியபின், அது பற்றிய முழு விவரங்களையும் வெளியிட வேண்டிய அதிபர் -

தமது கல்லூரி மண்டபத்தில் ஏன் அந்நிகழ்ச்சியை நடத்த அனுமதித்தார் என்பதை பொதுமக்களுக்கு அம்பலப்படுத்த வேண்டிய கடப்பாடு உடைய அதிபர் -

'மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது போல' இதனுடன் தொடர்பற்ற – தமது கல்லூரியின் ஜி.சீ.ஈ. பரீட்சை முடிவுகளை உதயன் பிரசுரிக்கவில்லை என்பது போன்ற குற்றச்சாட்டுகளை – இந்தக் கடிதத்தில் விலாவாரியாக எழுதும் அதிபர் -

'இந்நிகழ்வு பல்வேறு அழுத்தங்களின் பின்புதான் எமது கலையரங்கில் வைக்க ஒப்புக் கொள்ளப்பட்டது' என்று மொட்டையாக விவரத்தைக் குறிப்பிட்டு நாசூக்காக நழுவும் போக்கை பின்பற்றியிருக்கின்றார்.

இதன் மூலம் அவர் யாரைக் காப்பாற்ற முயல்கிறார்? இது பற்றிய முழு விவரத்தையும் வெளியிட அவர் தயாரா?

மொத்தத்தில் 'பிறேக் டான்ஸ்' குறித்து நமது சமூகம் திட்டவட்டமான ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்பதுதான் இப்போதைய அவசர விடயமாகும்.

–மின்னல்

---

குடாநாட்டு மக்கள் குற்றப்பணம் செலுத்தாமலேயே

# தொலைக்காட்சி, வானொலி அனுமதிப்பத்திரம் பெற ஏற்பாடு

கொழும்பு, ஜூலை24

யாழ் குடாநாட்டில் வானொலி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகளைப் பாவிப்பவர்கள் குற்றப்பணம் எதுவுமின்றி இவ்வாண்டுக்கான அனுமதிப் பத்திரங்களைப் பெறலாம என்று தபால் தொலைத்தொடர்பு அமைச்சின் செயலாளர் கே.ஸி.லோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

குடாநாட்டில் 90ஆம் ஆண்டுமுதல் 95ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மின்சாரவசதி இருக்கவில்லை என்றும் –

அந்தக்காலப்பகுதியில் வானொலி தொலைக்காட்சிப்பெட்டிகளை பொது மக்கள பாவிக்கவில்லை என்றும் –

எனவே அந்தக்காலப்பகுதிக்கு அனுமதிப்பத்திரம் பெறுவதில் விதிவிலக்கு அளிக்கவேண்டும என்றும் –

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தபால், தொலைத்தொடர்பு அமைச்சர் மங்கள சமரவீரவைக் கேட்டிருந்தார்.

இதற்குப் பதில் அளித்துள்ள கே.ஸி.லோகேஸ்வரன் மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளார்.

கடந்த வருடங்களில் வானொலி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கான அனுமதிப்பத்திரங்களை குறிப்பிட்ட ஆண்டில் பெறாவிட்டால் குற்றப்பணம் செலுத்தவேண்டும். ஆனால் யாழ்ப்பாணத்தில் குற்றப்பணம் எதுவும் இன்றி இந்த ஆண்டுக்கான அனுமதிப்பத்திரத்தைப் பெற முடியும். இது தொடர்பாக இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம், ரூபவாஹினி கூட்டுத்தாபனம் ஆகியவற்றுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது - என்று அவர் தெரிவித்துள்ளார். (ஐ-3)

# உலக உணவுத் திட்ட அதிகாரிகள் விஜயம்

யாழ்ப்பாணம்,ஜூலை24

உலக உணவுத்திட்டத்தைச் சேர்ந்த மூன்று பிரதிநிதிகள் ஒருவார கால விஜயத்தை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளனர்.

உலக உணவுத்திட்ட சிரேஷ்ட ஆலோசகர் ஈபோறம்கீன்ஸ மற்றும் இத்திட்ட அதிகாரிகளான மார்லோன் வன்ர்சேனற், பொலிஸி அனலஸ் ஆகிய மூவரும் கடந்த 21ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்தடைந்துள்ளனர்.

இவர்கள் மூவரும் பலாலி இராணுவ முகாமில் வைத்து வட பிராந்திய கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் லொஹான் குணவர்த்தனவை சந்தித்ததுடன் யாழ்.அரச அதிபர், மற்றும் திணைக்களத்தலைவர்களையும் சந்திந்து கலந்துரையாடினர்.

இடம்பெயர்ந்த குடும்பங்கள் மற்றும் மீளக் குடியமர்ந்த மக்களையும் இவர்கள் சந்தித்துள்ளனர்.

இம்மாதம் 27ஆம் திகதிவரை யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து உலக உணவுத்திட்டத்தினால் நடைமுறைப் படுத்தப்படும் திட்டங்களையும் இவர்கள் பார்வையிடவுள்ளனர். (ஐ-5)

# மூன்று இளைஞர்கள் கைது!

யாழ்ப்பாணம்,ஜூலை 24

தொலைக்காட்டி வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் தாவடியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மூன்று இளைஞர்கள் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கொக்குவிலைச் சேர்ந்த என். பிரசாந்தன் (வயது 20), எஸ். பத்மரூபன் (வயது 19) எம். ஜெயந்தன் (வயது19) ஆகியோரே கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

விசாரணைகளின் பின்னர் தாவடி இராணுவ முகாமைச் சேர்ந்த கப்டன் விஜயானந்தாவினால் மேற்படி மூன்று இளைஞர்களும் விடுவிக்கப்பட்டனர். (ஐ-5)

## சுழற்சி முறைக் கடன்

அளவெட்டி,ஜூலை24

அளவெட்டி முற்போக்கு வாலிபர் சனசமூகநிலையம் தனது அங்கத்தவர்களுக்கு சுழற்சி முறையில் கடன்களை வழங்கிவருகிறது.

அவசர மருத்துவத்துக்கான கடன் (பிரசவம் உட்பட) விவசாயத் தேவைக்கான கடன், கல்வி வளர்ச்சிக்கான கடன், வீடுகள் புனரமைப்புக் கடன், போன்ற கடன் திட்டங்களை அங்கத்தவர்களுக்கு வழங்கி வருவதாக நிலையச் செயலாளர் செ.பிறேமன் தெரிவித்தார். (ஐ-13)

## கருத்தரங்கு

வலி.தென்மேற்கு, ஜூலை24

யாழ். அரங்க செயற்பாட்டு குழு நிறுவனத்தினால் நடத்தப்படும் சிறுவர் நாடக விழாக் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் இடம்பெறும் என இணைப்பாளர் தே.தேவானந்த் அறிவித்துள்ளார். (உ-185)

# தவறான சாட்சியம் வழங்கிய சிப்பாயை விசாரிக்க உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூலை24

திருநெல்வேலி இராணுவ முகாமில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த குருநகர் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டது தொடர்பாக நீதிமன்றத்தில் முரண்பாடான சாட்சியங்களை வழங்கிய இராணுவச் சிப்பாய் ஒருவரை புலனாய்வுப் பிரிவின் விசாரணைக்குள்ளாக்கப்பட வேண்டும என்று யாழ் மேலதிக நீதிவான் எஸ்.ஏ.ஈ.ஏகநாதன் உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி இராணுவ முகாமில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த போது 1998 செப்ரெம்பர் 11ஆம் திகதி குருநகரைச் சேர்ந்த [illegible] குணசேகரம் என்பவர் உயிரிழந்தார். இவரது கொலை தொடர்பாக அந்த முகாமில் கடமையாற்றிய கப்டன் றொமி பெத்லோமியஸ், லெப்டினன்ட் டிக்சன்ராஜமந்திர ஆகியோர் கைதுசெய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் இக்கொலை தொடர்பான வழக்கு யாழ் நீதிமன்றத்தில்எடுக்கப்பட்டபோது சந்தேகநபர்கள் இருவரும் சாட்சி ஒருவரும் ஆஜராகினார்கள்.

இவ் வழக்கின் சாட்சியான இராணுவத்தைச் சேர்ந்த உபாலி இரத்நாயக்காவின் முரண்பாட்டான சாட்சியத்தை அடுத்து அவரை இந்த வழக்கில் மூன்றாவது சந்தேகநபராக சந்தேகிக்கப்பட்டு 15 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் 25ஆயிரம் ரூபா சரீரப் பிணையிலும் விடுவிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-5-ரி)

## கலைஞர் வரலாற்று நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 24.

செ.மெற்றாஸ்மயில் எழுதிய 'இசைநாடக் - கூத்து மூத்த கலைஞர் வரலாறு' நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த விழாவுக்கு சங்கீத பூஷணம் சு.கணபதிப்பிள்ளை தலைமை வகிப்பார்.

அரச அதிபர் க.சண்முகநாதன், மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம், யாழ்.கல்விப்பணிப்பாளர் ச.நா. தணிகாசலம்பிள்ளை, ஆணையாளர் பொ.பாலசிங்கம், தீவகக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், பேராசிரியர் சு.மோகனதாஸ் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

வெளியீட்டுரையை பேராசிரியர் செ.பாலச்சந்திரன் வழங்குவார். பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் முதற்பிரதி பெறுவார். பேராசிரியர் அ்.சண்முகதாஸ் நூல் ஆய்வுரை வழங்குவார். (ஐ)

## கற்கைநெறி சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 24.

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் கடந்த இரண்டு மாதகாலமாக இடம்பெற்று வந்த நிர்வாக முகாமைத்துவம் எனும் அடிப்படைக் கற்கை நெறியின் நிறைவு நாளும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் இன்று சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளும் கலைப் பீடாதிபதி பேராசிரியர் பொ.பாலச்சந்திரன் கற்கை நெறி பயின்றோருக்கு சான்றிதழ்களை வழங்கவுள்ளார்.

இன்றைய தினம் மு.ப 9 மணிக்கு நிர்வாக முகாமைத்துவம் அடிப்படைக் கற்ஜகைநெறி தொகுதி II இன் ஆரம்ப விழாவும் இடம்பெறவுள்ளது. (ஐ)

## நாளை

யாழ்ப்பாணம், ஜூலை24

அண்மையில் கலாபூஷண விருது பெற்ற எல்.திலகநாயகம்போலை பாராட்டி கௌரவிக்கும் முகமாக யாழ் வலய இசை ஆசிரியர்கள் ஏற்பாடு செய்துள்ள வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு வேம்படி மகளிா கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளை வாழ்த்துரை வழங்குவார்.

❖ ❖ ❖

சண்டிலிப்பாய்,ஜூலை24

மானிப்பாயிலுள்ள "வாழ்வகம்" விழிப்புலன் வலு இழந்தோர் இல்லத்தின் பொதுச்சபைக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் பத்து மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-135)

❖ ❖ ❖

யாழ்ப்பாணம்,ஜூலை24

ஜி.சி.ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான பொருளியல் கருத்தரங்கு ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் நடைபெறும். இக்கருத்தரங்கில் ஆசிரியர் வே.கருணாகரன் கருத்துரை வழங்குவார். (உ)

❖ ❖ ❖

வலிதென்மேற்கு, ஜூலை24.

யாழ் - சுகவாழ்வு நிறுவனம் குழந்தைகள் உளநலமேம்பாட்டை உயர்த்தும் நோக்குடன் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7மணிக்கு உள மேம்பாட்டு சுற்றுலாவை மேற்கொள்ளுகின்றது.

இதில் நவாலி, சண்டிலிப்பாய், சிறுவர் சுகவாழ்வு பிள்ளைகள் கலந்து கொள்வர். (உ-185)

❖ ❖ ❖

யாழ்ப்பாணம்,ஜூலை 24

திருநெல்வேலி கலாமன்ற சனசமூக நிலையத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நிலைய மைதானத்தில் மன்ற விளையாட்டுக் கழகத் தலைவர் அ.ஸ்ரீஸ்காந்தா தலைமையில் நடைபெறும்.

நல்லூர் பிரதேச செயலாளர் பா. செந்தில்நந்தனன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

நல்லூர் உதவிப் பிரதேச செயலர் சி.வேல்முருகோன்பிள்ளை சிறப்பு விருந்தினராகவும், சனசமூக மேற்பார்வை உத்தியோகத்தர் திருமதி சி.மன்மதராஜன், முத்துத்தம்பி மகாவித்தியாலய அதிபர் த.சிவராசா, நல்லூர் ப.நோ.கூ.ச. தலைவர் பெ.கனகசபாபதி ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் பங்குபற்றுவர். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெலிஓயா நிலைகள் மீது புலிகள் ஆர்.பி.ஜி. தாக்கு!

## 3 படையினர் பலி; மூவர் காயம்

மட்டக்களப்பு,ஜூலை24

வெலிஓயா இராணுவப் பாதுகாப்பு வலயம் மீது நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் விடுதலைப்புலிகள் ஆர்.பி.ஜி. தாக்குதலை மேற்கொண்டதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதலில் மூன்று படையினர் உயிரிழந்தனர்; மேலும் மூன்று படையினர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதல் 30 நிமிடங்கள் நீடித்தது என்றும் -

படையினர் பதில் தாக்குதல் நடத்தினர் என்றும் -

மேலும் தெரிவிக்கப்பட்டது.

(உ-3-21-164)

# சிப்பாயும் மனைவியும் கிரனேட்டுக்குப் பலி

மட்டக்களப்பு,ஜூலை24

பொலன்னறுவை மாவட்டத்தில் லங்காபுரவில் உள்ள இராணுவச் சிப்பாய் ஒருவரின் வீட்டில் நேற்று அதிகாலை 3 மணிக்கு இடம்பெற்ற கிரனேட் வெடிப்பில் அந்தச் சிப்பாயும் அவரது மனைவியும் உயிரிழந்தனர்.

அந்தச் சிப்பாய் வைத்திருந்த கிரனேட் வெடித்ததா? அல்லது வேறு எவராவது கிரனேட் வீசினார்களா?- என்பது குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.(உ-3-21)

# வெடிப் பொருள்களை கையாள வேண்டாம்!

## மக்களுக்கு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம்,ஜூலை24

இனந்தெரியாத, அடையாளம் காணப்படாத மர்மப் பொருள் ஏதேனும் காணப்பட்டால் அவற்றைக் கையாளாதீர்கள். அவை குறித்துப் பொலீஸாருக்கோ அல்லது படையினருக்கோ உடன் அறிவியுங்கள். தவறாக இத்தகைய பொருள்களைக் கையாண்டால் அவை வெடித்துப் படுகாயங்களையோ அல்லது உயிரிழப்பையோ ஏற்படுத்திவிடலாம். எனவே அவதானமாகச் செயற்படுங்கள்.

இவ்வாறு குடாநாட்டுப் பொதுமக்களுக்கு முன்னெச்சரிக்கை அறிவிப்பு ஒன்றை விடுத்திருக்கின்றார் வடபகுதி படைத்தளபதி மேஜர் ஜெனரல் லொஹான் குணவர்த்தனா.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

வெடிக்கும் பொருள்களால் பொதுமக்கள் காயமடையும் பல சம்பவங்கள் கடந்த சில நாள்களாக இடம்பெற்றுள்ளன.

மது அருந்தியிருந்த ஒருவர், தாம் நீண்டகாலமாக நினைவுப் பொருளாக வைத்திருந்த - வெடிக்காத - மோட்டார் குண்டு ஒன்றை கடந்த 10ஆம் திகதி கடினமுறையில் கையாண்டதால் அது வெடித்து உயிரிழந்தார்.

வெடிக்கக்கூடிய பொருள்களை பொதுமக்கள் கையாள்வதும் -

அத்தகைய பொருள்களைப்பொதுமக்கள் நினைவுப் பொருள்களாகப் பேணி வைத்திருக்க அவை பின்னர் வெடித்துப் படுகாயம் மற்றும் உயிரிழப்பை ஏற்படுத்துவதும் - அவதானிக்கப்பட்டு வந்துள்ளது.

இந்த விவகாரத்தின் முக்கியத்துவம் குறித்து பிரசாரப்படுத்தப்பட்டும் மக்கள் விழிப்புணர்வு அடையாமல் இருந்து வருகின்றார்கள் - என்று தெரிவித்துள்ளார். (உ)

## புளொட்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தன.

கீழே விழுந்ததில் அவரது தலையில் உள்காயங்கள் ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்டது.

மேலதிக விவரங்கள் இன்று தெரியவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழரசுக்கட்சி மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றில் தனது அரசியல் வாழ்வை ஆரம்பித்த கிருபைராஜா எண்பதுகளின் தொடக்கத்திலேயே புளொட் அமைப்புடன் இணைந்து கொண்டார்.

சிறந்த தொழிற்சங்கவாதியான அவர் புளொட் அமைப்பின் ஒரு மிதவாதியாகவும் கருதப்பட்டார். யாழ்ப்பாணத்தில் பொதுமக்கள் மற்றும் அமைப்புகளுடன் நல்லுறவைப் பேண முயன்றவர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வவுனியா நகரசபையின் உறுப்பினராகவும் இவர் பணியாற்றியுள்ளார்.


சிந்து ...ரையரங்கம்
உரும்பிராய்.
காட்சிகள்:
10.30 - 3.30
உங்கள் மனதில்
இடம்பிடித்த
நடிகர்கள் பலர் நடித்த
சுயம்வரம்
(சி-8291)

றீகல் மினி
ஸ்ரான்லி வீதி.
சுயம்வரம்
10.30, 2.30
மாலை 5.00 மணி
ஆங்கிலதிரைப்படம்
றீகல் டாக்கீஸ்
ஈச்சமோட்டை.
10.30, 2.30
சுயம்வரம்
(67688)


## துப்பாக்கி மீட்பு

பொலன்னறுவை மாவட்டத்தில் ஊர்காவலர் ஒருவரின் வீட்டிலிருந்து காணாமற்போன ரி-56 ரகத் துப்பாக்கி ஒன்று விகாரை ஒன்றிலிருந்து பொலீஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

மெதிரிகிரியவில் உள்ள பௌத்த வழிபாட்டுத் தலம் ஒன்றில் புத்தர் சிலைக்குப் பின்னால் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் அந்தத் துப்பாக்கி மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## தொலைபேசி இணைப்பு பெறுவோர்

யாழ்ப்பாணம்,ஜூலை24

குடாநாட்டில் புதிதாகத் தொலைபேசி இணைப்புப் பெறுவதற்காக வடமாகாண மீள்குடியமர்வு புனர்வாழ்வு அதிகாரசபையினால் புதிதாக அனுமதி வழங்கப்பட்டுள்ள 284 பேரின் விவரங்கள் அடங்கிய பட்டியல் நேற்று யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்துள்ளது

இந்தப்பட்டியலை அலுவலக நேரங்களில் 'உதயன்' அலுவலகத்தில் பார்வையிடலாம். (உ-3)

## வன்னி மக்க......

(முதலாம் பக்கத் தொடர்)

பாதையைத் திறப்பதற்கு நாம் ஆர்வமாக உள்ளோம் என்பதைத் தெரியப்படுத்துகின்றோம்.

இதுவரைகாலமும் பாதை திறப்பு விடயத்தில் ஸ்ரீலங்கா அரசாங்கமும் இராணுவமும் நிபந்தனைகளை விதித்தனவே தவிர விடுதலைப்புலிகள் எவ்வித முன்நிபந்தனைகளையும் விதிக்கவில்லை என்பது அனைவரும் அறிந்த விடயமாகும்.

வன்னி மக்களின் வாழ்வுநிலை மிகவும் சீரழிந்துள்ளதோடு நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே செல்கின்றது. அத்துடன் மக்கள் பட்டினி நிலைக்குள் வாழவேண்டி இருப்பதுடன் அவசர சிகிச்சை பெறவேண்டிய நோயாளர்கள போக்குவரத்துத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டதால் மரணத்தை எதிர்நோக்கிய வண்ணமும் உள்ளனர்.

இந்தச்சூழ்நிலையில் அப்பாவி மக்களைத் தனது அரசியல், இராணுவ நலன்களுக்காக பலிக்கடாக்களாக்க முயற்சிக்கும் ஸ்ரீலங்கா அரசின் மிகவும் கொடூரமான மனித உரிமை மீறல் செயற்பாடுகளை சர்வதேச சமூகமும் சர்வதேச தொண்டர் நிறுவனங்களும் கண்டித்து சர்வதேச ரீதியாக அழுத்தங்களையும் நெருக்கடிகளையும் ஸ்ரீலங்கா அரசு மீது பிரயோகித்து இம்மக்களின் ஜீவனோபாயப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காண்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் - இப்படி அவர் தெரிவித்தார். (உ-3)

# உள்ளூரில் பொருள்களை வாங்கி வன்னியில் நிவாரணம் வழங்குங்கள்!

## அந்தப் பிரதேச அரச அதிபர்களுக்கு பணிப்புரை

கொழும்பு,ஜூலை24

வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் கிடைக்கும் உள்ளூர்ப் பொருள்களைக் கொள்வனவு செய்து அகதிகளுக்கு நிவாரணம் வழங்குமாறு அந்தப்பிரதேச அரச அதிபர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று அத்தியாவசிய சேவைகள் திணைக்கள அதிகாரியான உபாலி சொய்ஸா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடந்த செய்தியாளர்கள் மாநாட்டில் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

வன்னியில் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுக்கு நிலவும் தட்டுப்பாடு குறித்து அந்தப்பிரதேச அரச அதிபர்கள் எமக்கு அறிவித்துள்ளனர்.

இதையடுத்து அங்குள்ள அகதிகளுக்கு நிவாரணம் வழங்கத் தேவையான உணவுப் பொருள்களை உள்ளூரிலேயே கொள்வனவு செய்து விநியோகிக்கும்படி உத்தரவிட்டுள்ளோம்.

முல்லைத்தீவு அரச அதிபர் இரண்டு கோடியே முப்பத்தேழு லட்சம் ரூபாவைக் கோரியிருந்தார். தற்சமயம் ஒரு கோடியே இருபது லட்சம் ரூபாவை அவருக்கு வழங்கியுள்ளோம்.

கிளிநொச்சி அரச அதிபர் ஒரு கோடியே ஐம்பது லட்சம் ரூபாவைக் கோரினார். 60 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளோம்.

மன்னார் அரச அதிபர் 1 கோடியே 35 லட்சம் ரூபாவைக் கோரினார். அவருக்கு 27 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதியிலிருந்து அகதிகளுக்கு உணவு நிவாரணம் வழங்க வேண்டுமென்று தெரிவித்துள்ளோம்.

அந்தந்த மாவட்டங்களில் நிரந்தரமாக வாழும் மக்களுக்கு நாம் உணவு நிவாரணம் வழங்க மாட்டோம். அவர்களுக்கான உணவு வழங்குமபொறுப்பு உணவுத் திணைக்களத்தையே சார்ந்தது. - இப்படி அவர் கூறினார். (உ-3)

## மடுவில் 3 சிப்பாய்கள் பலி!

வவுனியா,ஜூலை24

மடுத் தேவாலயத்திற்குச் சமீபமாக உள்ள கிணற்றுக்கு நேற்றுக்காலை 11.00 மணியளவில் தண்ணீர் எடுக்கச் சென்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டதில் மூன்று படையினர் உயிரிழந்தனர் என்று படைவட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதலை அடுத்து அந்தப் பகுதியில் தேடுதல் நடத்திய படையினர் 7 பேரைக் கைது செய்ததாகக் கூறப்பட்டது. (உ-3-164)

## மாவை உற்சவத்தில் பக்தர் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை24

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தை ஒட்டி தற்சமயம் நடைபெறும் விசேட உற்சவத்தில் தினமும் ஏராளமான பக்தர்கள் பங்குபற்றுகின்றனர்.

தினமும் காலை 8மணி முதல் பிற்பகல் 3மணி வரை பக்தர்கள் ஆலய வழிபாடுகளில் பங்குபற்ற வசதி செய்யப்பட்டுள்ளது என்றும் -

தெல்லிப்பளை பாதுகாப்பு அரண் ஊடாக பக்தர்கள் தினமும் ஆலயத்துக்குச் செல்ல படையினரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் -

ஆலய தர்மகர்த்தா மஹாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்கள் தெரிவித்தார்.

அதேநேரம் வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் தொழிலாளர்கள் கோவிலின் உள்வீதி, வெளிவீதி, ஆலய சுற்றுப்புறம், பூந்தோட்டம் ஆகியவற்றை துப்புரவு செய்துள்ளனர்.

## நாடகப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை24

உலக சிறுவர் தினத்தை ஒட்டி அரங்கச் செயற்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில் சிறுவர்களின் உளநல மேம்பாடு தொடர்பாக போட்டிகள் நடத்தப்பட உள்ளன. வெற்றி பெறுவோருக்குப் பெறுமதியான பரிசுகளும் வழங்கப்படவுள்ளன.

சிறுவர்களுக்கான நாடகப் போட்டி, நாடக எழுத்துருவாக்கப் போட்டி மற்றும் சிறுவர் நாடகத் தயாரிப்புத் தொடர்பான களப்பயிற்சி, கருத்தரங்கு ஆகியன எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ள விரும்புபவர்கள் அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் அரங்கச் செயற்பாட்டுக் குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-3)

## செஞ்சிலுவைக்.......

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்னும் வரையறைக்குள் தமது கடமையைச் செய்ய முடியாத நிலையை அடைந்துள்ளது என்பது மிகவும் மனவேதனைக்குரியதாகும்.

கடந்த காலங்களிலும் வன்னிப் பிரதேச மக்களுக்கு வைத்திய சேவைக்கென நான்கு லான்ஸ் குருஸர் வாகனங்களை பிரதியீட்டு அடிப்படையில் வழங்கியுள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு இன்று நோயாளிகள் உயிரிழந்துள்ள நிலையிலும் பாராமுகமாகச் செயற்பட்டு வருவதாக நாம் கருதுகின்றோம்.

நான்கு லான்ஸ் குருஸர் வாகனங்களுக்கு ஓ உயிர் சமனாகுமா? எனவே நாம் எதிர்பார்ப்பது உயிருக்காகப் போராடும் எமது அவசர நோயாளர்களை கொழும்பு தேசிய வைத்திய சாலைக்கு எடுத்துச்செல்ல நடவடிக்கை எடுங்கள் என்பதுதான்.

பல லட்சம் சேவைகளை நீங்கள் உலகெங்கும் வழங்கியதாகப் பறைசாற்றிக்கொள்ளலாம். ஆனால் இன்று வன்னிப் பிரதேசத்தில் அநியாயமாகச் சிகிச்சைபெறும் உரிமையை இழந்து உயிரிழக்கும் நோயாளர்களின் உயிர்கள் தங்கள் சேவையின் கறைபடிந்த அத்தியாயங்களாக மாறப்போகின்றன [illegible] றோம்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-6)

# வந்தாறுமூலையில் தாக்குதல் சம்பவம்

மட்டக்களப்பு,ஜூலை24

மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதியில் வந்தாறுமூலையில் நேற்றுக் காலை வீதிக் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினர் மீது விடுதலைப்புலிகள் கிரனேட் வீசியதில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றும் ஒரு சிப்பாய் காயமடைந்தார்.

இந்தத் தாக்குதலை அடுத்து அப்பகுதியில் கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

இதனால் அந்தப் பகுதியிலுள்ள சந்தையில் கூடியிருந்த பொதுமக்கள் சிதறி ஓடினர் என்றும் -

அந்தப் பகுதியில் பொதுமக்கள் நையப்புடைக்கப்பட்டனர் என்றும் -

இதனால் ஓட்டோ சாரதி ஒருவர் உட்பட ஐந்து பொதுமக்கள் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-3-21)

### கல்வி ஊழியர்களுக்கான

# இடர்காலக் கொடுப்பனவு நடவடிக்கை இடைநிறுத்தம்

திருகோணமலை,ஜூலை24

வடக்கு - கிழக்கு மாகாண ஆசிரியர், அதிபர்களுக்கான இடர்காலக் கொடுப்பனவு மற்றும் அதிபர்களின் சம்பள நிலுவை ஆகியவற்றை வழங்கும் பணிகளை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனா மாகாண திறைசேரிக்கு நேற்று பணிப்புரை விடுத்தார்.

கல்வி, உயர்கல்வி பிரதி அமைச்சர் ரெஜினோல்ட் கூரேயுடன் தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக்குழு நடத்திய பேச்சுக்களின் பலனாக இந்தக் கொடுப்பனவுகளுக்காக 15 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது.

இந்தக் கொடுப்பனவுக்கான காசோலையை மாகாணத் திறைசேரி மாகாண கல்வி அமைச்சுக்கு நேற்றுக் காலை வழங்கியிருந்தது.

ஆனால் மாகாண ஆளுநரின் பணிப்புரையை அடுத்து மாகாணத் திறைசேரி அந்தக் காசோலையை மீளப்பெற்றுள்ளது.

தற்சமயம் ஒதுக்கப்பட்ட இடர்காலக் கொடுப்பனவு நிதியிலிருந்து ஒரு பகுதியை தமக்கு வழங்கும்படி கல்வி அமைச்சுடன் சாராத வேறு அமைச்சுக்கள் கோரியிருந்தமையும் -

வடக்கு - கிழக்கில் ஏனைய பகுதிகளை விடுத்து அம்பாறை மாவட்ட ஆசிரியர்கள், அதிபர்களுக்கான கொடுப்பனவு முதல் கட்டத்தில் முழுமையாக வழங்க எடுக்கப்பட்ட முடிவுக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளமையும் -

இந்தப்பணி இடைநிறுத்தப்பட்டமைக்கான காரணங்கள் எனக் கூறப்பட்டது. (உ-3)

### இடர்காலக் கொடுப்பனவு விடயம்

# தமிழர் ஆசிரியர் சங்கம் நீதிமன்று செல்லும்?

திருகோணமலை,ஜூலை24

வடக்கு - கிழக்கு மாகாண ஆசிரியர், அதிபர்களுக்கான இடர் காலக் கொடுப்பனவை வழங்கும் விடயத்தில் தமிழ் - முஸ்லிம் சமூகங்களுக்கு எதிராகக் காட்டப்படும் பாரபட்சத்தை ஆட்சேபித்து இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம் நீதிமன்றத்துக்குப் போகத் தயாராகி வருவதாகத் தெரியவருகிறது.

இதுவிடயமாக சட்ட ஆலோசனை பெறப்படுவதாகவும் -

அடுத்தவார ஆரம்பத்தில் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்படலாம் என்றும் -

தமிழர் ஆசிரியர் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விவகாரத்தில் ஜனாதிபதி தலையிட்டு உடன் நிவாரணம் வழங்க வேண்டும் என்று கோரி தமிழர் ஆசிரியர் சங்கம் ஜனாதிபதிக்கு அவசரத் தந்தி ஒன்றை நேற்று அனுப்பியுள்ளது.

இடர்காலக் கொடுப்பனவு வழங்கும் விடயத்தில் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிராக - சிங்களவர்களுக்கு ஆதரவாக - மேற்கொள்ளப்படும் பாரபட்சமான இந்த நடவடிக்கையை உடன் நிறுத்தவேண்டும் என்று அந்தத் தந்தியில் கேட்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் சரியான பதில் கிடைக்காவிட்டால் எதிர்வரும் 2ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி.சீ.ஈ. உயர்தர பரீட்சைக்கான மேற்பார்வைப் பணியை பகிஷ்கரிக்கப் போவதாக தமிழர் ஆசிரியர் சங்கம் ஜனாதிபதி, கல்வி, உயர்கல்வி அமைச்சர், வடக்குக் கிழக்கு ஆளுநர்,பரீட்சை ஆணையாளர் ஆகியோருக்கு உத்தியோகபூர்வமாக நேற்று அறிவித்துள்ளது.

அதேநேரம் - இந்த விவகாரத்தில் நாளை மறுதினத்துக்குள் முடிவு ஒன்று கிடைக்காத பட்சத்தில் எதிர்வரும் செவ்வாய் அல்லது வியாழக்கிழமையில் மீண்டும் ஒருநாள் சுகவீன லீவுப் போராட்டத்தை நடத்தவும் நடவடிக்கை எடுக்கப்படுவதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

அண்மையில் நடத்தப்பட்ட சுகவீன லீவுப் போராட்டத்தை அடுத்து வடக்கு - கிழக்கு ஆசிரியர்கள், அதிபர்களின் இடர்காலக்கொடுப்பனவு மற்றும் சம்பள நிலுவைகளை வழங்குவற்கு என ஒதுக்கப்பட்ட 15 கோடி ரூபா நிதியில் -

அம்பாறை மாவட்ட அதிபர், ஆசிரியர்களுக்கான முழு நிலுவைகளையும் வழங்கும்படியும் -

எஞ்சியதில் ஏனையபகுதி அதிபர், ஆசிரியர்களுக்கு பகுதி நிலுவையை வழங்கும்படியும் -

கல்வி அமைச்சு பணிப்புரை வழங்கியுள்ளது தெரிந்ததே. இதற்கு எதிராகவே தமிழர் ஆசிரியர் சங்கம் தற்போது போர்க்கொடி தூக்கியுள்ளது.

## குண்டு மீட்பு

மட்டக்களப்பு வாழைச்சேனை வீதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த அதிசக்தி வாய்ந்த கிளைமோர் குண்டு ஒன்று நேற்றுக்காலை படையினரால் மீட்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பிற்கும் பொலன்னறுவைக்கும் இடையில் நேற்று செல்லவிருந்த இராணுவ வாகன அணித் தொடரை இலக்குவைத்து இந்தக் குண்டு வைக்கப்பட்டிருக்கலாம் என்று கூறப்பட்டது.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியர் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24-07-1999இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
# சஞ்சிகை
சஞ்சீவி 24-07-1999


புதுமையும்,
எழிலும், பொலிவும்
கொண்ட
பட்டு, பருத்தி, ஜவுளி
ரகங்களின சங்கமம்.
சிவகணேசன் ஸ்ரோர்ஸ்
இல. 41, பெரியகடை, யாழ்ப்பாணம்.

## கருத்துக் கலசம்

மயூரா

### செருக்கு ஏற்றாதீர்!

பெருத்திடு செல்வமாம் பிணிவந் துற்றிடில்
உருத்தெரி யாமலே யொளிம ழுங்கிடும்
மருத்துள தோவெனில் வாகட த்திலை
தரித்திர மென்னுமோர் மருந்திற் றீருமே

*- விவேக சிந்தாமணி -*

ஆணவம், மமதை, செருக்கு என்பன ஒரே வகுப்பைச் சேர்ந்தவை. ஆயினும் அவற்றிற்கிடையே வித்தியாசம் உண்டு. இவை மூன்றும் ஒருவனது மன இயல்பைப் பிரதிபலிப்பனவே. தீயவர்களின குணவியல்புகளே இவை. நல்லவர்களைப் போன்று நடிப்பவர்களிடமும் உள்ளே ஒளிந்திருக்க கூடியவை இந்த மூன்றும்.

ஆணவம் உள்ளவன் எவ்வளவு 'கொம்பனாக' இருந்தாலும் வாழ்க்கையின் ஒருகட்டத்தில் அவன் வீழ்வான்; உழல்வான்; அழிவான். ஆணவம் அகங்காரத்திற்கு இட்டுச்செல்லும். இந்த அகங்காரத்தின் ஒரு வடிவமே அல்லது ஓர் அம்சமே செருக்கு.

தன்னை எவனாலும் விஞ்சிவிட முடியாது; தன்னால் எதனையும் செய்ய முடியும் - வானத்தையும் வில்லாக வளைக்க முடியும் - என்ற நினைப்பே செருக்குக்கு அத்திவாரமான மனநிலை.

தன்னிடம் செல்வம் அதிகமாக உள்ளதால் எவரையும் எதனையும் செய்யலாம்; தான் வென்று விடலாம்; மற்றவர்களை வீழ்த்திவிடலாம் என்று தனது இயல்புக்கு அப்பாலும் சிந்திக்கவைப்பது செருக்கு.ஏனையோரை மதிக்காது எல்லோரும் தனது காலடிக்கு வரவேண்டும் என்று எண்ணச் செய்வதும் செருக்குத்தான்.

பொருள் எனும் செல்வம் இருந்தவனுக்கு மட்டும்தான் செருக்கு உண்டாகும் என்பது இல்லை. கல்வி மிகுந்தவர்களிடம் செருக்குவந்து குடிகொள்வது உண்டு. ஆனால் கல்வியினால் செருக்கு கொள்பவன் உண்மையான அறிஞன் அல்லன். கல்வி ஒருவனுக்கு செயலில் அடக்கத்தையும் சிந்தனையில் ஆழத்தையும் நல்கும். அத்தகையவன் செருக்கினால் சிக்குண்டால் அந்த கல்வியால் அவனுக்கும் பயன் இல்லை;ஏனையோர்க்கும்பயனில்லை என்றாகிவிடும்.

வீரம் மிகுந்தவனுக்கும் தன்னை விட வல்லவன் இல்லை என்ற செருக்குத் தானாகவே வளர்ந்து விடுகிறது. விவேகம் இல்லாத வீரம் எவரையும தோல்வியைத் தழுவச்செய்யும். எதிரியின் பலத்தை தக்கவாறு அறியாமல் வீரச்செருக்கினால் வீழ்ந்தவர்கள் பலர்.

செல்வனோ,அறிஞனோ, வீரனோ கலைஞனோ எவனுக்கும் செருக்கு வரினும் அதனை அவனிடம் இருந்து நீக்குவது கடினம் - அவன் அதனால் வீழும்வரை. இதனைத்தான் விவேக சிந்தாமணிச் செய்யுள் சொல்கிறது.

ஒருவனுக்குப் பெருத்த செல்வச் செருக்கெனும் வியாதி வந்து கூடினால், உருவம் தெரியாமல் கண்ணொளி மங்கிவிடும். இதற்கு மருந்து உண்டோ என்று ஆராய்ந்தால், வைத்தியர்களின் வாகடங்களில் இல்லை. தரித்திரம் எனப்படும மருந்தினாலேயே செருக்கெனும் வியாதி தீரும் என்பது மேலே உள்ள செய்யுளின் கருத்து.

செருக்கு - அது எதனால் உண்டானது ஆயினும் ஈற்றில் தரித்திரத்திலேயே, வீழ்ச்சியிலேயே முடியும் என்று எச்சரிப்பதாக உள்ளது இந்தச் செய்யுள். செருக்குக் கொள்பவனுக்கு நல்ல பயன் கிடைக்காது; அதற்குப் பதிலாக பல பக்க ஆபத்தும் வீழ்ச்சியுமே விளையும் என்பதனை எல்லோரும் உணரவேண்டும்.

ஆகையால் உங்களைப்பற்றி நீங்கள் எவ்வளவு பெரிதாகக் கற்பனை செய்தாலும் செய்யுங்கள்; அதன் காரணமாக செருக்கேற்றி விடாதீர்கள். செருக்கும் ஒரு போதையே. போதை மேலிட்டால் அது மதியைக கெடுக்கும்; உடலைக் கெடுக்கும்; வாழ்க்கையை கெடுத்துவிடும்; கௌரவத்துக்கும் ஊறு செய்யும்.

# விரைவில் மூன்றாம் உலகப் போர்?

**சுமார் நானூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன் பிரான்ஸ் நாட்டில் பிறந்தவர் நாஸ்டராடாமஸ். டாக்டருக்குப் படித்தவர். ஓய்வு நேரங்களில் கவிதைகளும் எழுதுவார்.**

**அவருடைய முப்பதாவது வயதில் மனைவியும் இரு குழந்தைகளும் ப்ளேக் நோய்க்குப் பலியானார்கள். வாழ்க்கை வெறுத்துப்போய் ஒரு நாடோடி போல திரிந்து கொண்டிருந்த நாஸ்டராடமாஸுக்கு எதிர்காலத்தைப் பற்றி முன் கூட்டியே சொல்லக்கூடிய திறமை திடீரென்று வந்து சேர்ந்தது. இத்தாலியில் பயணித்துக் கொண்டிருந்தபோது எதிரில் வந்த ஒரு சிறுவன் முன் மண்டியிட்டு அவர் வணங்கியதைப் பார்த்துக் கூடியிருந்தவர்கள் தலையைச் சொறிந்து கொண்டனர். ஐம்பது ஆண்டுகளுக்குப் பின் அந்தச் சிறுவன் போப்பாண்டவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்!**

**உலகமெங்கும் எதிர்காலத்தில் நடக்கப் போவதையெல்லாம் நாஸ்டராடாமஸ் கவிதை வடிவில் எழுதி வைத்திருந்ததைத் தான் நாம் Nostradamus's Prophecies' என்கிறோம். எல்லாமே மர்மம் பொதிந்த கவிதைகள். பல விஷயங்கள் 'நடந்த பிறகுதான்' (தேவைக் கேற்ப) அர்த்தம் புரிந்து கொள்ள முடிகிறது. சிக்கலே அதுதான்! 'உலகில் கடல் சூழ்ந்த பகுதியில், தெற்கே, வழுக்கைத் தலையுடன் கூடிய ஒருவர் வந்து புகழ்பெற்று விளங்குவார்...' என்பார். தென்னிந்தியாவா? வழுக்கைத் தலை என்றால்? - தேவ கௌடா? கருணாநிதி? ஒரு வேளை மறுபடியும் நரசிம்மராவ்? அல்லது சோ? தலைசுற்றும்!**

**இப்போதைக்கு எல்லோரும் எதிர்பார்க்கும் நாஸ்டராடாமஸின் கணிப்பு என்ன தெரியுமா? - '1999 முடிந்து ஏழு மாதங்களில் உலகம் அழிந்துவிடும்...!' என்பதே.**

*-நாஸ்டராம்ஸ் குறித்து மதன்.*

நாஸ்ராடாமஸ்... இவரைத் தெரியாதவர்கள் யாரும் இருக்கமுடியாது. பதினாறாம் நூற்றாண்டில் பிரெஞ்சு தேசத்தில் வாழ்ந்த ஞானி அல்லது தீர்க்கதரிசி. எப்படி வேண்டுமானாலும் சொல்லலாம்.

எதிர்காலத்தில் உலகத்தில் நடக்கப் போகும் ஒவ்வொரு நிகழ்வையும் மிகத் துல்லியமாய் தனது 'சென்ட்சுரி' (Century) என்ற புத்தகத்தில் எழுதி வைத்துவிட்டுச் சென்றுள்ளார்.

பத்து அத்தியாயங்களையும் ஆயிரம் பந்திகளையும் கொண்ட இந்தப்புத்தகத்தை, எளிதில் புரிந்து கொள்ளமுடியாத ஜோதிட வார்த்தைகளால் எழுதியுள்ளார்.(அன்றைய ஆட்சிப் பொறுப்பிலிருந்த அரசிடமிருந்து பிரச்சினை எதுவும் வந்துவிடக்கூடாது என்பதற்காகப் புரியாமல் எழுதியிருக்கலாம் என்று தோன்றுகின்றது.)

நாஸ்டராடாமஸ் கூறியிருக்கிற ஒவ்வொரு விடயமும், இதுவரை சரியாகவே நடந்துவந்துள்ளது. ஹிட்லரின் நாஸிஸம் தலைதூக்கியதையும், லண்டன் எரிந்ததையும், லூயி பாஸ்டர் பற்றியும் சரியாக முன்கூட்டியே கணித்திருக்கிறார். இந்திய அரசியல் மாற்றங்களையும், இந்திரா, ராஜீவ் மரணத்தையும் சரியாகக் கணித்தவர் இதே நாஸ்டராடாமஸ்தான்.

இப்போதுள்ள உலகம், கி.பி.7000 ஆண்டு வரை நிலைத்து நிற்கும். ஆனால் கி.பி.2000 இறுதிக்குள் மூன்றாவது உலகப்போர் மூளும் என்று கூறியிருப்பது நாஸ்டராடாமஸ் மட்டுமல்ல; அவரோடு உலகப் புகழ்பெற்ற ஜோதிட வல்லுநர்களான எட்கர் கெய்சியும், மாக்ஸ் டோத்தும் இதில் ஒத்துப் போகின்றனர்.

நாஸ்டராடாமஸ் தன் புத்தகத்தின் 5ஆவது அத்தியாயத்தில், 'இஸ்லாம் மதத்திற்கும், கிறிஸ்தவ மதத்திற்கும் போர்மூளும். ஆயிரமாயிரம் மக்கள் பெர்சியா (பாரசீகப் பகுதி) வில் கூடுவார்கள். இது மதவாதிகளால் நடத்தப்படும் புனிதப்போர் என்று கூறப்படும்' என்று குறிப்பிடுகின்றார்.

அவரின் கூற்றுப்படி '1999 - ஒரு திருப்பு முனையான ஆண்டு'. அதுவும் 1999 ஆவது வருடத்தின் 7 ஆவது மாதம் உலக அளவில் அரசியல் மாற்றத்தைக் கொண்டுவரும் என்கிறார்.

அதன் விளைவாக ஆசிய நாடுகள் வலிமை பெறும். குறிப்பாக மங்கோலியர்கள் கவனிக்கத்தக்க வளர்ச்சி பெறுவார்கள். இந்த ஆண்டின் இறுதியிலோ, அல்லது அடுத்த ஆண்டின் தொடக்கத்திலோ ஆரம்பிக்கும் உலகப்போருக்கு மங்கோலியாவோ அல்லது வடமேற்கு சீனாவோ முக்கிய காரணமாக இருக்கும்.

இந்தச் சண்டை கடவுளின் பெயரால் மதச் சண்டையாக மாறும். கலாசாரங்கள் அனைத்தும் சிதைந்து போகும். இது ஆசியாவின் அடிப்பாகத்திலிருந்து தோன்றி ஐரோப்பாவின் இருதயத்தைத் தாக்கும். மூன்றாம் உலகப் போரின் தன்மை இரண்டாம் உலகப்போரை விட மிகக்கொடூரமானதாக இருக்கும் என்கிறார்கள் இந்த ஜோதிட வல்லுநர்கள்.

இந்த நூற்றாண்டின் கடைசியில் அதாவது ஆகஸ்ட் 11, 1999ஆம் ஆண்டு சூரிய கிரகணமும், அதனுடன் வால்நட்சத்திரம் போன்ற ஒன்றும் தோன்றும். இதன் மூலமாக வானத்திலிருந்தும் சில அழிவுகள், பூமியை நோக்கி ஏற்படலாம்.

மறைந்த ஜோதிட வல்லுநர் பி.வி.ராமன், தனது 'கோள்களும் உலகப் போரும்' என்ற புத்தகத்தில், '1999ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் புளூட்டோவும் ஏழாம் வீட்டில் சந்திக்கின்றன. இது அமெரிக்காவுடன் உலக நாடுகள் கருத்து வேற்றுமை ஏற்பட்டுப் பிரச்சினையை உருவாக்கும். மே 2000இல் ஜூபிடரும், சனியும் சந்திப்பதால் இது உலகப்போராக மாறும். கோள்களின் அமைப்புப்படி பார்த்தால் அமெரிக்கா அணு ஆயுதத்தைப் பயன்படுத்தத் தயங்காது' என்கிறார்.

இன்றைய ஜோதிடர்களின் கணிப்பின்படி 'இந்தப்போர் மேற்கத்தைய நாடுகளுக்கும் இஸ்லாமிய நாடுகளுக்கும் இடையே நடக்கும்.' என்றும் 'இதில் இந்தியா மறைமுகமாகவே ஈடுபடும்' என்றும் கூறுகின்றனர்.

'இந்தப்போரில் ஜேர்மனி, கனடா, சிரியா, லெபனான், அமெரிக்கா, அரேபியா மற்றும் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர்கள் ஆயிரக் கணக்கில் இறக்க நேரிடும். இஸ்ரேல் மட்டும் ஒரு மாதிரி சமாளித்துக் கொள்ளும்' - என்று கூறுகின்றனர்.

மே 2000 வாக்கில் உலகில் பல பகுதிகளில் வன்முறை தலைவிரித்து ஆடும். உலக வரலாற்றில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் ஆண்டாக 1999 - 2000 இருக்கும்! உலகில் உள்ள அனைத்து சமாதான அமைப்புக்களும் ஏதும் செய்ய முடியாமல் கையைக் கட்டிக் கொண்டு பரிதாபமாய் விழிக்கும்.

ஒஸாமா பின்லாடன் (சவுதி கோடீஸ்வரர்) கூற்றுப்படி அமெரிக்காவை எதிர்ப்பது என்பது மதத்தின் கடமையாக இருக்கும். உலகின் வல்லரசு என்று கூறிக் கொள்ளும் அமெரிக்காவை, முஸ்லிம்கள் வெற்றி கொள்வார்கள்.

பல முழுமையடையாத ஜோதிடக் குறிப்புக்கள் அடங்கிய 'Book of Revolutions'| என்ற பைபிளில் கூறியுள்ள விஷயத்துடன் நாஸ்டராடாமஸ் ஒத்துப் போகிறார்.

## எதிர்கால நிகழ்வுகளைத் துல்லியமாக கணித்த தீர்க்கதரிசி நாஸ்டராடாமஸ்

அதாவது ஈரான், ஈராக் பிரச்சினையும் மூன்றாவது உலகப்போர் தொடங்க ஓர் அடிப்படைக் காரணமாக இருக்கும் என்பதுதான் அது. சுமார் 200 கோடி மக்கள் இந்த மூன்றாம் உலகப் போரால் மரணமடைவார்கள். அதாவது உலகின் மூன்றில் ஒரு பகுதி மனித இனம் அழிந்து போகும்.

எகிப்து, சண்டையே போடாமல் சரணடையும். அடுத்த இலக்கு தான்தான் என்ற பயத்திலேயே பல நாடுகள் சரணடையும். வாடிகன் நகரம் மாற்றப்படும். போலந்தில் உள்ள தேவாலயம் சிதைக்கப்படும்.

நாஸ்டராடாமஸை ஆரம்ப காலத்தில் விமர்சித்த ஹென்றி ராபர்ட்ஸ், தனது புத்தகத்தில் -

'1999 நவம்பர் 23 இலிருந்து டிசம்பர் 21இற்குள் பழம்பெரும் நாடுகள் ஒரு முடிவுக்கு வரும். உருப் முகம்மதியர்கள், இத்தாலியைத் தாக்குவார்கள்.



நாஸ்டராடாமஸ்

2025 வாக்கில் சீனா, ரஷ்யாவின் பெரும் பகுதியையும், ஸ்காண்டிநேவியாவையும் கைப்பற்றி தனது பொருளாதார தொழில் வளர்ச்சி எல்லைகளை விரிவுபடுத்தும்' என்கிறார்.

எல்லாக் கணிப்புகளும் ஒரு மாதிரியான விஷயங்களைச் சொன்னாலும், நாகரிகம் என்பது ஒருபுறம் வளர்ந்து கொண்டுதானிருக்கும். 2025இல் ஏற்படும் கடைசி நேரக் குழப்பத்திற்குப் பின்னர் ஒரு புதிய சமுதாய மறுமலர்ச்சி ஏற்பட்டு, அதுவே உலகின் நியதியாக அமையும். அப்போதைய உலகம் இன்றைய உலகத்தைப்போல இருக்காது. புதிய கலாச்சாரம், மதம் என மாறி இருக்கும் என்கிறார்கள்.

நாஸ்டராடாமஸ் குறிப்புப்படி, "மூன்றாம் உலக யுத்தத்திற்கு விதை. போடக்கூடியவர் பெயர் 'M' என்று தொடங்கும்" என்கிறார் ஸ்டில்பாக் பல்கலைக்கழக அரசியல் பேராசிரியர் வில்லி பிரட்டன்பர்க்.

இதே பேராசிரியர், "இந்த உலகப்போரில் கிரீக் கலந்து கொள்ளும். துருக்கியில் உயிர் பலி அதிகம் இருக்கும். இத்தாலி இந்தப் போரில் முக்கிய பங்கு வகிக்கும். அல்பேனியா, பொஸ்னியா, செர்பியா போன்ற நாடுகள் அதிகம் அல்லல்படும். 7 மாதங்கள் மூன்றாம் உலக யுத்தம் நடக்கும் என நாஸ்டராடாமஸ் சொல்லியிருக்கிறார்!" என்றார்!

அடுத்த நூற்றாண்டை வரவேற்பதை விட்டுவிட்டு, 'உலகப்போரே போ....போ..' என நாம் புலம்புகிற நேரம் வந்துவிட்டதோ? தெரியவில்லை.

**- எஸ்.அழகானந்தம் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தால் சமாதானத்துக்கான வாய்ப்பு அதிகரிப்பு!

கடந்த மே மாதம் நடைபெற்ற இஸ்ரேல் நாடாளுமன்றத் தேர்தலில் தொழிற்கட்சி வெற்றி பெற்று எஹுட் பராக் (Ehud Barak) பிரதமரானதை அடுத்து மத்திய கிழக்கில் சமாதானத் துக்கான ஒளிக்கீற்றுக்கள் மீண்டும் தென்பட ஆரம்பித்துள்ளன.

இஸ்ரேலில் பல்வேறு சித்தாந்தங் களையும் சிந்தனைகளையும் கொண்ட பல்வேறு கட்சிகளையும் இணைத்து அமைக்கப்பட்ட கூட்டரசாங்கம் –

நாடாளுமன்றத்தில் இந்தக் கூட் டரசாங்கத்துக்கு இருந்து வரும் கூடுத லான பெரும்பான்மைப் பலம் –

புதிய பிரதமராகப் பதவி ஏற்ற கையோடு வெளிநாடுகளுக்குச் சென்று பராக் தேடிக் கொண்ட நல்லெண்ணம்- மத்திய கிழக்குப் பிரச்சினைக்கு இறு தித் தீர்வு காணும் வாய்ப்பை அதிகரிக் கச் செய்துள்ளன.

பிரதமராகப் பதவி ஏற்ற பின்னர் அமெரிக்காவுக்கும், காஸாவுக்கும் எகிப்துக்கும், ஜோர்தானுக்கும் பராக் மேற்கொண்ட விஜயங்கள் நல்ல பயனை அளித்துள்ளதாக அவதானி கள் கருதுகின்றனர்.

அமெரிக்காவுக்கு ஐந்து நாள் விஜயம் மேற்கொண்டு மேரிலாந்திலும், வாஷிங்டனிலும் கிளின்ரனுடனும் வெளிவிவகார அமைச்சர் மெடலின் ஆல்பிரைட்டுடனும் –

காஸா எல்லையில் உள்ள நகரம் ஒன்றில் வைத்து பலஸ்தீன தலைவர் அரபாத்துடனும் –

எகிப்தில் ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக்குடனும் --



அரபாத்

ஜோர்தானில் மன்னர் அப்துல்லா வுடனும் - அவர் வெற்றிகரமாக பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்.

காம்ப்டேவிட் ஒப்பந்தத்தினதும் ஒஸ்லோ ஒப்பந்தத்தினதும் வெற்றிக் காக உழைத்து சர்வதேச அரங்கில் புகழ் ஈட்டிய இஸ்ரேலின் முன்னாள் பிரதமர்கள் மெனாச்செம பெகின், ஜிட் ஷாத் ராபின் ஆகியோர் வரிசையில் பராக் சாதனைகள் புரியலாம் என்று நம்பிக்கை தெரிவிக்கப்படுகிறது.

15 மாத காலத்துக்குள் மத்திய கிழக்குச் சம்பந்தமான சகல பிரச் சினைகளுக்கும் அதாவது சிரியா, லெபனான், பலஸ்தீனம் ஆகிய நாடு கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும் என்று பராக் தெரி வித்திருக்கிறார். வைநதி ஒப்பந்தம் அமுல் [illegible] பலஸ்தீனம் சம்பந் த[illegible]ச்சினைகள் அத்தனையும் பலஸ்தீனம் தொடர்பான இறுதி அந் தஸ்து பற்றிய உடன்பாடு காணப் படும் போது தீர்ந்து விடும் என்றும் அவர் கூறுகிறார்.

கடந்த டிசெம்பரில் வைநதி ஒப் பந்தம் முறிவடைந்த பின்னர் பலஸ் தீனத்திற்கும் இஸ்ரேலுக்கும் இடை யில் துண்டிக்கப்பட்ட பேச்சு வார்த் தைகள் இந்த மாத இறுதியில் மீண் டும் ஆரம்பிக்கப்பட இருப்பது நல்ல அறிகுறியே. மேற்குக்கரையிலிருந்து மேலும் 13 சதவீத நிலப்பரப்பில் இருந்து தனது படைகளை வாபஸ் பெற இஸ்ரேல் பின்னடித்ததன் கார ணமாக வைநதி ஒப்பந்தம் முறி வடைந்தது.

## 7கட்சிகள் கூட்டரசு

இஸ்ரேலின் பிரதமராக மே மாதம் 17ஆம் திகதி தெரிவுசெய்யப்பட்ட பராக் பல வாரங்கள் பல்வேறு கட்சி களுடனும் தொடர்ந்து நடத்திய பேச்சு வார்த்தையின் பயனாக தற்பொழுது 7 கட்சிகள் கூட்டரசாங்கம் ஒன்று தொழிற்கட்சி தலைமையில் அமைக் கப்பட்டுள்ளது. மத்திய கிழக்குப் பிரச் சினைக்குத் நிரந்தரத் தீர்வு காண்ப தற்கு இஸ்ரேலில் பலமான ஓர் அர சாங்கம் இருக்க வேண்டும் என்று பராக் கருதுகிறார். முன்னைய அனுப வங்களின் அடிப்படையில் சகல கட்சி களையும் இணைத்து கூட்டரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

பென்ஜமின் நத்தன்யாகுவின் லிகுட் கட்சியின் கூட்டரசில் இடம் பெற்றிருந்த எட்டுக கட்சிகளில் 5 கட் சிகளும் லிகுட்கட்சி கூட்டரசில் இருந்த அமைச்சர்களில் 6 அமைச் சர்களும் பராக் தற்பொழுது அமைத் துள்ள 7கட்சிகள் கூட்டரசில் இணைந் திருப்பது பராக்குக்கு பெரும் வெற்றி என்றே கருதப்படுகிறது.

120 ஆசனங்களைக் கொண்ட இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் இந்தக் கூட்டணி 77 ஆசனங்களைக் கொண்ட தாக இருக்கும். தீவர மத அடிப்படை வாதக் கட்சியான ஷாஸ், கைப்பற்றப் பட்ட பிரதேசங்களில் யூதக் குடியேற் றங்களை நிறுவும்படி கடந்த காலங் களில் ஓயாமல் குரல் கொடுத்து வந்த தேசிய மதவாதக் கட்சி, இடது சாரிக் கொள்கைகளைக் கொண்ட மெரேட் கட்சி ஆகியவை தொழிற்கட்சி தலை மையிலான கூட்டரசாங்கத்தில் இடம் பெற்றுள்ள கட்சிகளில் முக்கியமா னவை.

கடந்த தேர்தலில் தொழிற் கட்சிக் கும் லிகுட் கட்சிக்கும் அடுத்ததாக 17 ஆசனங்களைக் கைப்பற்றி மூன் றாவது பெரிய கட்சியாக உள்ள ஷாஸ் கட்சிக்கு 5 அமைச்சர் பதவி கள் வழங்கப்பட்டுள்ளன. முன்னர் 18 ஆக இருந்த இஸ்ரேல் அமைச்சரவை தற்பொழுது 24 ஆக விஸ்தரிக்கப் பட்டுள்ளது.

## 4 அம்சங்களை முன்வைத்து பிரசாரம்

கடந்த தேர்தலின் போது நான்கு அம்சங்களை முன்வைத்து தொழிற் கட்சி பிரசாரங்களை நடத்தியது.

* இஸ்ரேலின் இறைமையின் கீழ் ஜெரூஸலம் ஒன்றுபட்ட நகரமாக இருக்கும். அதனைப் பிரிப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

* மேற்குக் கரையில் தற்பொழுது நிலைகொண்டிருக்கும் இஸ்ரேல் படைகளுக்குப் பதிலாக அமெரிக்கப் படைகளையோ அல்லது சர்வதேசப் படைகளையோ அனுமதிப்பதில்லை.

* மேற்குக்கரையில் உள்ள பெரும்பாலான யூதக் குடியிருப்புக்கள் இஸ்ரேலின் அதிகார வரம்புக்குள் உட்பட்டவையாக இருக்கும்.

* 1967 எல்லைக்கு இஸ்ரேல் படைகளை வாபஸ் பெறுவதில்லை.

இந்தக் கொள்கைகளை முன் வைத்து கடந்த தேர்தலில் பென் ஜமின் நத்தன்யாகுவை சுலபமாகத் தோற்கடித்தார் பராக்.

## சிரியா பிரச்சினை

1967 ஜூன் யுத்தத்தில் இஸ்ரேலி னால் சிரியாவிடமிருந்து கைப்பற்றப் பட்ட கோலன் குன்றுகள் இன்றும் இஸ்ரேல் வசமே தொடர்ந்து இருந்து வருகின்றன. 30 ஆண்டுகள் கழிந்த நிலையிலும் இந்தப் பிரச்சினை தொடர்பாக இஸ்ரேலுக்கும் சிரியா

உலக உலா
என்.பி.சீலன்

வுக்குமிடையில் இதுவரை உருப்படி யான பேச்சுக்கள் நடைபெறவில்லை.

பலஸ்தீனப் பிரச்சினையில் தீர்வு ஏற்பட வகித்த பங்கைவிட கூடுதல் பங்கை கோலன் குன்றுகள் பிரச்சி னையில் அமெரிக்கா வகிக்க வேண் டும் என்று பராக் கருதுகிறார்.

இன்னும் ஒருவருட காலத்தில் தென் லெபனாலில் இருந்து இஸ்ரேல் தனது படைகளை வாபஸ் பெற்று விடும். இந்த படை வாபஸ் இஸ்ரே லுக்கும் சிரியாவுக்குமிடையில் சுமுக மான சூழ்நிலை உருவாகி பேச்சு வார்த்தைக்கு இட்டுச் செல்லும் என் றும் கருதப்படுகிறது.

லெபனானில் சிரியா தனது படை களில் ஒரு பிரிவை வைத்திருக்கிறது. தற்போதைய லெபனான் அரசு சிரியா வின் ஆதிக்கத்துக்கு உட்பட்டதாக இருந்து வருகிறது. லெபனான் சம் பந்தமான எந்தவொரு தீர்வையும் சிரியாவின் சம்மதம் இன்றி கொண்டு வரமுடியாது.

மேற்குக் கரையில் உள்ளது போன்ற கோலான் குன்றுகளிலும் யூதக் குடியிருப்புகள் உள்ளன. கோலான் குன்றுக் குடியிருப்புக்களில் 17 ஆயிரம் யூதர்கள் வாழ்கின்றனர். பராக்கின் சமாதானக் கோஷம் யூதக் குடியிருப்புகளில் விரக்தி நிலையை உருவாக்கி வருகிறது.

இஸ்ரேலைப் பொறுத்தவரை கோலான் குன்றுகள் [illegible] திர முக்கியத்துவம் வாய்ந்தவையா கும். கோலான் குன்றுகளை மீண்டும் சிரியாவிடம் கையளிப்பது இஸ்ரே லின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விளை விக்கக்கூடியது என்ற கருத்து இஸ்ரேலில் மேலோங்கி நிற்கிறது. தற்பொழுது இஸ்ரேலுக்கான குடிதண் ணீரில் கணிசமான அளவு கோலான் குன்றுகளில் இருந்தே கிடைக்கின் றது. கோலான் குன்றுகள் மீண்டும் சிரியாவிடம் கையளிக்கப்பட்டால் இந்த குடிதண்ணீர் பாதைகளை சிரி யா துண்டித்து விடலாம். அல்லது குடி தண்ணீரை சிரியா அசுத்தமாக்கி விடலாம். அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் மெடலின் ஆல்பிரைட் எதிர் வரும் ஓகஸ்ட் மாதம் மத்திய கிழக்கு நாடுகளுக்கு விஜயம் செய்கிறார். அப் பொழுது சிரியப் பிரச்சினை குறித்து அவர் ஆராய்வார் என்று எதிர்பார்க் கப்படுகிறது. சிரிய ஜனாதிபதி ஹபேஸ்அல்அஸாத் கோலான் குன் றுகளில் இருந்து இஸ்ரேல் படைகள் நிபந்தனை இன்றி வாபஸ் பெற வேண்டும் என்று கோரி வருகிறார்.

எனினும் சிரியாவின் சமீபத்திய அறிவிப்பு சமாதானத்தில் அதிக நம் பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. சிரி யாவின் உதவி ஜனாதிபதி அப்தெல் ஹலீம் இஸ்ரேலுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்த விருப்பம் தெரி வித்துள்ளார். யுத்த நிறுத்தம் செய் யுமாறு டமாஸ்கஸிலுள்ள நான்கு தீவிரவாத அமைப்புகளுக்கும் அவர் அழைப்பு விடுத்துள்ளார். அவரது அழைப்பை பிரதான தீவிரவாத இயக் கமாக ஹிஸ்புல்லா நிராகரித்த



இஸ்ரேலின் புதிய பிரதமராகத் தெரிவுசெய்யப்பட்ட எஹுட் பராக் தமது ஆதரவாளர்களுடன் காணப்படுகின்றார்.

யில் இன்னும் தீர்வு காணப்பட வில்லை. கடைசியாகச் செய்து கொள்ளப்பட்ட வைநதி ஒப்பந்தம் மூலம் தீர்வு காணலாம் என்று அமெ ரிக்கா நம்பியது. ஆனால் அதுவும் கைகூடவில்லை.

வைநதி ஒப்பந்தத்தை அமுல் செய்ய இணங்கினால் இஸ்ரேலுக்கு 120 கோடி டொலர் தருவதாக அமெ ரிக்கா வாக்குறுதி அளித்திருந்தது. ஆனால் அப்போதைய இஸ்ரேல் பிர தமர் பென்ஜமின் நத்தன்யாகு இணக்

ளினாலும் காலனித்துவவாதிகளினா லும் விட்டுச் செல்லப்பட்ட பிரச்சினை களில் மத்திய கிழக்குப் பிரச்சினை யும் ஒன்றாகும்.

உலகெங்கும் சிதறி வாழ்ந்த யூதர்களை பலஸ்தீனத்தில் சிறிது சிறிதாக குடியேற்றும் நடவடிக்கை கள் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி யில் ஆரம்பிக்கப்பட்டன.

1897 ஆம் ஆண்டு தியோடர் ஹெஸ்ல் என்பவர் பிரிட்டிஷ் யூத சமூகத்தினதும் பிரிட்டிஷ் ஆட்சியாளர்

## மத்திய கிழக்கின் சகல பிரச்சினைகளுக்கும் 15 மாத காலத்தில் தீர்வு என்கிறார் பராக்

போதிலும் சிரியாவின் மனமாற்றம் மத்திய கிழக்கு சமாதான முயற்சிக ளில் பெரும் திருப்பமாகக் கருதப்படு கிறது.

## லெபனான்

1982 ஆம் ஆண்டு இஸ்ரேல் படைகள் தென் லெபனானுக்குள் ஊடுருவி ஒரு பகுதியை கைப்பற் றின. படைகளை வாபஸ் பெறும்படி லெபனான் இஸ்ரேலை நீண்டகால மாகக் கோரி வருகிறது. ஆனால் லெபனானில் இருந்து இஸ்ரேலுக் குள் கெரில்லாக்களினால் நடத்தப்ப டும் ரொக்கட் தாக்குதல் நிறுத்தப்படும் வரை படை வாபஸ் சாத்தியப்பட மாட்டாது என்று இஸ்ரேல் திட்டவட்ட மாக அறிவித்துவிட்டது.



பென்ஜமின் நத்தன்ஜாகு மேற்குக்கரையில் உள்ள யூதக் குடியிருப்பு ஒன்றுக்கு விஜயம் செய்தபோது எடுக்கப்பட்ட படம்.

தற்பொழுது ஒரு வருட காலத் தில் தென் லெபனானில் இருந்து ப[illegible] வாபஸ் பெறப்போவதாக பராக் அறிவித்துள்ளார்.

## பலஸ்தீனம்

பல ஒப்பந்தங்கள் கைச்சாத்தான நிலையிலும் பலஸ்தீனப் பிரச்சினை

கத்துக்கு வர மறுத்துவிட்டார்.

மேற்கு கரையில் மேலும் 13 சத வீத நிலப்பரப்பில் இருந்து இஸ்ரேல் படைகளை வாபஸ் பெற வழிவகுப் பதே வைநதி ஒப்பந்தம் ஆகும்.

1993 இல் கைச்சாத்திடப்பட்ட ஒஸ்லோ ஒப்பந்தம் கடந்த மே மாதம் 4 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட் டிருக்க வேண்டும். ஒப்பந்தம் அமு லில் ஏற்பட்ட முட்டுக்கட்டை காரண மாக 1999 மே 4ஆம் திகதி பலஸ் தீனத்தை சுதந்திர நாடகப் பிரகடனம் செய்யப் போவதாக அரபாத் மிரட்டி வந்தார். எனினும் அமெரிக்காவின் தலையீடு காரணமாக அரபாத் தனது விஷப்பரீட்சையைக் கைவிட்டார்.

## காலனித்துவ வாதம்

## விட்டுச் சென்ற பிரச்சினை

19 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் ஆசியாவையும் ஆபிரிக் காவையும் லத்தீன் அமெரிக்க நாடு களையும் தமது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்த ஏகாதிபத்திய வாதிக

களினதும் ஆசியுடன் சியோனிஸ இயக்கத்தை ஆரம்பித்தார். அதன் பின்னரே பலஸ்தீனத்தில் யூத நாடு ஒன்றை அமைப்பதற்கான கோரிக்கை கள் எழுப்பப்பட்டன.

1923 ஆம் ஆண்டு பலஸ்தீனம் சர்வதேச சங்கத்தினால் பிரிட்டனின் ஆட்சிக்கு உட்பட்ட நாடாக விடப் பட்டது.

பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் பலஸ் தீனத்தில் யூதகுடியேற்றம் தொடர்ந்து நடைபெற்றது. அமெரிக்காவும் பிரிட் டனும் பலஸ்தீனத்தை துண்டாடு வதற்கு இரகசியத் திட்டம் வகுத்து 1947 ஆம் ஆண்டு ஐ.நா. பாதுகாப்புச் சபையிலும் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்து நிறைவேற்றின.

பலஸ்தீனத்தில் அப்பொழுது குடி யேறிருந்த 6 லட்சம் யூதர்களு[illegible] 54 சதவீதமான நிலப்பரப்பும் ச[illegible] தொகையில் கூடுதலாக இருந்த 12 லட்சத்து 50 ஆயிரம் யூதர்களுக்கு மிகுதி நிலப்பரப்பும் வழங்க ஐ.நா தீர்மானம் மூலம் வழிவகுக்கப்பட்டது.

1947 ஆம் ஆண்டுக்குப்பின் யூதர் கள் நடத்திய தாக்குதல்கள் காரண மாக 524 அரபு நகரங்களில் இருந்தும் கிராமங்களில் இருந்தும் பலஸ் தீனர்கள் வெளியேறினர். பெரும்பாலா னவர்கள் ஜோர்தானுக்கும் லெபனா னுக்கும் சென்றனர். 1948 மே 14 ஆம் திகதி யூத தேசிய கவுன்சில் இஸ்ரேல் என்ற பெயரில் யூத நாட் டைப் பிரகடனம் செய்தது. டேவிட் பென்குரியன் இஸ்ரேலின் முதலாவது பிரதமரானார்.

இஸ்ரேலில் இருந்து வெளியே றிய பலஸ்தீனர்கள் இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதல்களை சிறிதுசிறி தாக ஆரம்பித்தனர். 1964 இல் அல் பதாஹ் இயக்கம் அரபாத்தினால் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் சகல இயக்கங்களும் ஒன்றிணைந்து பலஸ் தீன விடுதலை ஸ்தாபனம் (P.L.O) என்ற பெயரில் அரபாத்தின் கீழ் இயங்கின. இந்த பலஸ்தீன விடு தலை ஸ்தாபனம் கடந்த பல வரு டங்களாக நடத்திய போராட்டமே தற் பொழுது பலஸ்தீன அதிகாரசபை வரை கொண்டு வந்து விட்டுள்ளது. மத்திய கிழக்கு பிரச்சினை ஓர் எல் லைப் பிரச்சினையோ அல்லது இரு நாடுகள் சம்பந்தப்பட்ட பிரச்சினையோ அல்ல. முழு மத்திய கிழக்குமே சம்பந்தப்பட்டது. இரு தரப்பினரும் தமது நிலைப்பாட்டை காலத்துக்குக் காலம் கடினமாக்கிக் கொண்டதினா லேயே இந்தப் பிரச்சினை தீர்க்க முடியாததொன்றாகி விஸ்வரூபம் எடுத்தது. அரபாத்தை பொறுத்தவரை வைநதி ஒப்பந்தத்தை உடனடியாக அமுல் செய்வதிலேயே கூடுதல் கவனம் செலுத்தி வருகிறார். இஸ்ரே லின் புதிய பிரதமர் பராக் இதற்கு முன்னுரிமை கொடுப்பதிலேயே எதிர் காலப் பேச்சுகளின் வெற்றி தங்கியி ருக்கப் போகிறது.

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாடு: நவீன தகவல் தொடர்புகளுக்கு மறைமுகத் தடைவிதிப்பா?

பிரமிக்க வைக்கும் அளவுக்கு வளர்ச்சி கண்டுள்ள நவீன தகவல் தொழில் நுட்பம் எல்லைகளை - கட்டுப்பாடுகளைத் - தாண்டி உலகெங்கும் மனிதர்களைப் பின்னிப்பிணைத்துள்ளது.

தொலைபேசி முதல் இன்ரநெற் வரையான தகவல் தொழில் நுட்ப சாதனங்களின் வளர்ச்சி இந்த நூற்றாண்டில் மனிதன் முத்திரை பதித்த சாதனை எனலாம்.

ஒரு பிரதேசத்தின் - நாட்டின்- அபிவிருத்தி அல்லது இயல்பு நிலை என்பவற்றை மதிப்பிடுவதில் தகவல் தொழில் நுட்பமும் ஓர் அளவுகோலாக மாறிவருகிறது.

எனினும் யுத்தம் நடைபெறும் பகுதிகளில் அமுல் செய்யப்படும் பல்வேறு தடைகளுக்குள் இந்தத் தகவல் தொடர்புத் தொழில் நுட்பமும் தப்புவதில்லை.

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கூறப்படும் யாழ். குடாநாட்டுக்கு கணனி மற்றும் அதனுடன் தொடர்புடைய சாதனங்களை எடுத்துவர பாதுகாப்பு அமைச்சு விதிக்கும் கட்டுப்பாடுகள் இங்குள்ள கல்விப் புலங்களில் பல சந்தேகங்களை எழுப்பியுள்ளன.

யாழ்.வலயக் கல்வித்திணைக்களத்துக்காக எடுத்து வரப்பட்ட சில கணனிகள் பல மாதங்களாக செயற்பாடின்றி முடங்கிக்கிடக்கின்றன. இந்தக் கணனிகளுக்கான 'கோட் வயர்கள்' இன்னமும் கொழும்பிலேயே உள்ளன. அவற்றை இங்கு எடுத்துவர எம்.ஓ.டி. எனச் சுருக்கமாகக் கூறப்படும் பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கப் பின்னடிப்பதாக கல்வித் திணைக்கள வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன. இதுமட்டுமன்றி கல்வி அலுவலகத்துக்கு 'இன்ரநெற்' இணைப்பைப் பெறுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளும் இதே காரணங்களால் இழுத்தடிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. 'ஈ-மெயில்' மற்றும் இன்ரநெற் இணைப்பை ஏற்படுத்திக்கொள்ள கணனியுடன் இணைக்கப்பட வேண்டிய 'மொடம்' (MODEM) என்னும் சாதனத்தை எடுத்துவர கொழும்பில் அனுமதி வழங்கப்படவில்லை.

குடாநாட்டில் இதுபோன்று பல நிறுவனங்கள் கணனிகளை வாங்கி கொழும்பில் வைத்துக் கொண்டு அவற்றை யாழ்ப்பாணம் எடுத்து வருவதற்கான அனுமதிக்காக காத்து இருக்கும் நிலை உள்ளது.

'ஈ-மெயில்', 'இன்ரநெற்' இணைப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பித்த பலருக்கும் இதுவே நிலை.

நாடெங்கும 'இன்ரநெற்' சேவை களை விஸ்தரிக்கப் போவதாகக் கூறிக்கொள்ளும் அரசு தனது கட் டுப்பாட்டில் உள்ள குடாநாட்டை மட்டும் புறக்கணிப்பது ஏன்?

குடாநாட்டுக்கு தொலைபேசி இணைப்புக்கள் தாராளமாக வழங்கப்பட்டுள்ளன. சுமார் ஒரு தசாப்த காலத்துக்குப் பின்னர் தொலைபேசி மூலமான வெளியுலகத் தொடர்பு யாழ்ப்பாணத்துக்குக் கிடைத்துள்ளது. ஆனால் நவீன தகவல் தொடர்புத் தொழில் நுட்பம் பெரிதும் கணனி மயப்பட்டதாகவே இருக்கிறது.

இன்ரநெற் மற்றும் ஈ-மெயில் மூலமாக வெளியுலகுடன் குடாநாட்டைத் தொடர்புபடுத்துவது பாதுகாப்பு நலனுக்கு உகந்ததல்ல என அரசு கருதலாம். யுத்தம் தொடர்பான உண்மைத் தகவல்கள் இந்த சாதனங்கள் ஊடாக அம்பலமாகுவது தனக்குப் பாதகமானது என அது நினைக்கலாம்.

இவற்றைக கருத்திற கொண்டே கணனிகளை யாழ்ப்பாணத்துக்கு தாராளமாக எடுத்துச் செல்லமுடியாபடி பல கட்டுப்பாடுகளை அரசு விதிக்கின்றதா என்ற கேள்வி எழுகிறது.

இயல்பு நிலையைத் தோற்றுவிக்கும் அவசரத்தில் யாழ்ப்பாணத்துக்கு தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்பட்டன. தற்பொழுது இணைப்புக்களின் எண்ணிக்கையை ரெலிகொம் நிறுவனம் படிப்படியாக அதிகரித்து வருகிறது.

யாழ்ப்பாணத்தில் இவ்வாறு தாராளமாக தொலைபேசி வசதிகளை விஸ்தரிப்பது இராணுவ நலங்களுக்குப் பாதகமானது என்று படை உயர்மட்டத்தில் ஒருசாரார் கருதுகின்றனராம். ஆனால் இன்றைய நிலையில் குறைந்தது தொலைபேசி இணைப்புக்களை யாவது வழங்காமல் குடாநாட்டில் இயல்புநிலை ஏற்பட்டுவிட்டது என்று எப்படிக் கூறிக்கொள்ளமுடியும் என மறுசாரார் கேள்வி எழுப்புகின்றனராம்.

வன்னியில் செய்மதித் தொலைபேசி வசதிகளை ஏற்படுத்திஉள்ள விடுதலைப்புலிகள் குடாநாட்டில் உள்ள தொலைபேசி இணைப்புக்களையும் தமது நலன்களுக்குப் பயன்படுத்துகின்றனரா என்பது குறித்து பாதுகாப்பு வட்டாரங்களில் சந்தேகம் நிலவுகிறது. இந்நிலையில் ஈ-மெயில் மற்றும் இன்ரநெற் தொடர்புகள் அதிகரிக்குமிடத்து அவற்றையும் புலிகள் பயன்படுத்தக்கூடும் என்ற ஐயம் பாதுகாப்புத்தரப்புக்கு ஏற்படலாம்.

ஆனால் குடாநாட்டு மக்களின் நவீன தகவல் தொடர்புத் தொழில் நுட்ப சுதந்திரத்தை கட்டுப்படுத்திக்கொண்டு இங்கு இயல்புநிலை திரும்பிவிட்டதாக அரசு ஒருபோதும் கூறிக்கொள்ளமுடியாது. ஏற்கனவே பாதுகாப்பு நிலைவரமும் இங்கு சீர்கெட்டு வருகிறது.

# பாதுகாப்பு விவகாரங்களில் நெருங்கிவரும் அமெரிக்கா

கடந்த சில தினங்களாக கொழும்பு தாஜ் சமுத்திரா ஹொட்டேல் அமைந்துள்ள பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் அதி தீவிரமாக இருந்தன.

கொழும்பில் இராணுவத் தலைமையகம் மற்றும் கேந்திர முக்கியத்துவம வாய்ந்த படைத்துறை அலுவலகங்களும் கூட வழமைக்கு மாறான பாதுகாப்பு ஏற்பாடுகளால் பரபரப்படைந்திருந்தன.

அமெரிக்க இராணுவத்தின அதிஉயர் படைத் தளபதி உள்ளிட்ட அதிகாரிகள் குழு ஒன்று தலைநகரில் தங்கி இருந்ததே இந்த விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளுக்குக் காரணமாகும்.

இதனை எழுதிக்கொண்டிருந்த சமயம் அந்த உயர்படைத் தளபதிகள் தமது கொழும்பு விஜயத்தை முடித்துக்கொண்டு புறப்பட்டிருந்தனர்.

அமெரிக்க இராணுவத்தின் பசுபிக் பிராந்தியத்துக்குப் பொறுப்பான கட்டளைத் தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் எட்வின ஸிமித்தும் அவரது படை அதிகாரிகள் குழாமுமே கடந்த புதன், வியாழன், வெள்ளி ஆகிய மூன்று தினங்கள் கொழும்பில் தங்கியிருந்தனர்.

அமெரிக்கப் பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள், நிபுணர்கள் கொழும்புக்கு விஜயம் செய்வது அண்மைக்காலத்தில் வழமையான நிகழ்ச்சியாக இருந்து வருகின்றபோதிலும் லெப்டினன்ட் ஜெனரல் எட்வின ஸிமித்தின் விஜயத்தை பத்தோடு பதினொன்றாக எடுத்துக் கொள்ள முடியாது. கொழும்பில் உள்ள வெளிநாட்டு ராஜதந்திரிகளும், பாதுகாப்புத்துறை ஆய்வாளர்களும் இந்த விஜயத்தை மிக உன்னிப்பாக அவதானித்துள்ளனர்.

அமெரிக்கப் பாதுகாப்புத்துறையில் அதி உயர்தரத்தில் உள்ள ஒரு தளபதி கொழும்புக்கு விஜயம் செய்திருப்பது இதுவே முதல் முறை என்பதாலும் –

அண்மைக்காலமாக இலங்கையின் உள்நாட்டுப் பாதுகாப்பு விடயங்களில் அமெரிக்கா காட்டிவரும் கவனத்துக்குரிய 'ஈடுபாடு' காரணமாகவும் –

கொழும்பில் உள்ள இந்தியத் தூதரக பாதுகாப்பு அதிகாரிகளும் இந்த விஜயம் தொடர்பாக விழிப்புடன் இருந்து தகவல்களைச் சேகரித்துள்ளதாகத் தெரியவருகிறது.

அமெரிக்க இராணுவத்தின் மிகப் பெரும் பாதுகாப்புக் கட்டமைப்பு பசுபிக் பிராந்தியத்துக்கான கட்டமைப்பே ஆகும். லெப்டினன்ட் ஜெனரல் எட்வின் ஸிமித்தே அதற்குப் பொறுப்பான கட்டளைத் தளபதி. சுமார் 100 மில்லியன் சதுரமைல் பரப்பையும் தாண்டிய பெரும் பிரதேசத்தின் (கிட்டத்தட்ட பூமியின் அரைவாசி மேற்பரப்பு) பாதுகாப்பைக் கண்காணிப்பது இவரது பொறுப்பு.

அமெரிக்காவின் மேற்குக் கரையோரம் முதல் ஆபிரிக்காவின் கிழக்குக் கரையோரம் வரையும், ஆட்டிக் முதல் அந்தாட்டிக்கா வரையான பிரதேசமும் இந்தக் கட்டளைப் பீடத்தின் கீழேயே அடக்கம். அத்துடன் இந்தப் பசுபிக் பிராந்தியப் படையணியே வடகிழக்கு ஆசியா, தென்கிழக்கு ஆசியா, தென்னாசியா மற்றும் இந்து சமுத்திரப் பிராந்தியம் உள்ளிட்ட 43 நாடுகளையும் கண்காணிக்கிறது.

இத்தனை பாரிய பாதுகாப்புப் பொறுப்பை வகிக்கும் தளபதியே கொழும்புக்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டிருக்கிறார் என்றால் அதன் முக்கியத்துவம் எத்தகையது என்பது விளங்கிக் கொள்ளக்கூடியதே.

தளபதி ஸிமித்தின் கொழும்பு விஜயம் முன்கூட்டியே திட்டமிடப்பட்டது ஆகும்.

அவரது விஜயம் தொடர்பான ஏற்பாடுகளை கொழும்பில் செய்வதற்காக அமெரிக்க இராணுவத்தின் கேணல் தரத்திலான அதிகாரி தலைமையில் குழு ஒன்று அண்மையில் இலங்கைக்கு வருகை தந்தது. பாதுகாப்பு மற்றும் நிகழ்ச்சி ஏற்பாடுகள் தொடர்பாக இலங்கைப் படை அதிகாரிகளுடன் இக்குழுவினர் கலந்துரையாடிச் சென்ற பின்னரே பசுபிக்பிராந்தியத் தளபதியின் விஜயம் இடம்பெற்றது.

இந்த விஜயத்தின் போது அமெரிக்கத் தளபதிகள் குழுவுக்கு இலங்கை இராணுவத்தின் விசேட கொமாண்டோப் பிரிவினர் பாதுகாப்பு அளித்தனர். இவர்கள் தங்கியிருந்த தாஜசமுத்திரா ஹெட்டேலுக்கும் கொமாண்டோ அணியின் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

இந்த விஜயத்தின் போது அமெரிக்கத் தளபதி கணேமுல்லவில் உள்ள இராணுவத்தின் விசேட கொமாண்டோ பிரிவுத் தலைமையகத்துக்கும், கொமாண்டோ பயிற்சிக் கல்லூரிக்கும் சென்றிருந்தார். அத்துடன் இராணுவத்தின் அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரிக்கும் விஜயம் செய்தார்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் முப்படைத் தளபதிகள் ஆகியோரையும், புதிதாக நிறுவப்பட்ட கூட்டுப்படை நடவடிக்கை சபையின் கட்டளைத் தளபதியையும் சந்தித்து வடக்கு - கிழக்கு யுத்தம் தொடர்பாக விரிவாகப் பேசியுள்ளார்.

இவை எல்லாவற்றையும் விட முக்கியமான விடயம் எதுவென்றால் வடக்கு-கிழக்கில் சண்டைக் களத்தில் படைகளை வழிநடத்தும் கள அதிகாரிகளையும் அமெரிக்கத் தளபதி சந்தித்து உரையாடி உள்ளார்.

வெளிநாட்டுப் படைத் தளபதி ஒருவர் களத்தில் உள்ள படை அதிகாரிகளைச் சந்தித்திருப்பது இதுவே முதல்முறை என்ற வகையிலும் அமெரிக்கத் தளபதியின் இந்த விஜயம் முக்கியத்துவம் பெறுகிறது.

ஆனையிறவு, பலாலி, வன்னி ஆகிய படைத் தலைமையகங்களைச் சேர்ந்த படைஅதிகாரிகளும் வன்னியில் சண்டைக்களத்தில் பணிபுரியும் சிரேஷ்ட படைஅதிகாரிகளும் பங்குபற்றிய மாநாடு ஒன்றில் அமெரிக்கத தளபதி உரையாற்றியிருக்கிறார்.

உளவுத் தகவல்களைச சேகரிப்பதில் உள்ள பலவீனம், விடுதலைப்புலிகளின் பிரச்சாரங்களை முறியடிக்கும் பதில் பிரச்சாரங்களில் உத்வேகம் இன்மை போன்றவற்றை இலங்கை இராணுவத்தில் உள்ள குறைபாடுகளாக அமெரிக்கத் தளபதி அப்போது சுட்டிக்காட்டியதாகத் தெரியவருகிறது.

இப்பத்தியை எழுதும்போது அமெரிக்கத் தளபதியின் விஜயம் தொடர்பான பின்னணித் தகவல்களை முழுவதுமாகப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. அவை இனிமேல்தான் வெளியாகலாம்.

• • •

மட்டக்களப்பு நகரில் அதி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அடுத்தடுத்துப் பல தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. கடைசியாக கடந்தவாரம் சைக்கிள் குண்டு வெடிப்புகளும் பொலீசார் மீதான தாக்குதல்களும் இடம்பெற்றிருக்கின்றன.

## மறுபக்கம் ஃகக்பறுவ — வார விமர்சனம் — நல்லூர் தாஸ்

யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலிப் பகுதியில் ஈ.பி.டி.பி பிரமுகர் ஒருவர் சந்தைக்குள் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார். அதற்கு முன்னர் பல கிளைமோர் கண்ணிவெடிப்புச் சம்பவங்களும் குடாநாட்டில் இடம்பெற்றுள்ளன. புதனன்று வளலாய் இராணுவ முகாமுக்கு அருகே குண்டு ஒன்றை மீட்க முயன்ற முகாம் பொறுப்பதிகாரியும் மற்றொரு சிப்பாயும் அது வெடித்ததில் உடல் சிதறிப்பலியாகினர். குண்டு ஒன்று வைக்கப்பட்டிருப்பதாக முதலில தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை மீட்கச் சென்ற சமயம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வடக்கிலும் கிழக்கிலும் படையினரின்

## தோற்றுப்போகும் யுத்தக்கொள்கை

கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் விடுதலைப் புலிகள் பரவலாகத் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். பாதுகாப்பு வலயங்களுக்குள் பொலீசாரையும் படையினரையும் தாக்கி அதன் மூலம் அவர்களுக்கு நெருக்கடி கொடுப்பதில் புலிகள் வெற்றி கண்டுவருகின்றனர்.

இந்தத் தாக்குதல்களும் அதன் மூலம் எழுந்துள்ள பாதுகாப்பு நெருக்கடிகளும் ஒரு கேள்வியையும் கூடவே எழுப்புகின்றன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் அடிப்படை யுத்தக் கொள்கை ஈழ யுத்தத்தில் எந்தஅளவிற்கு வெற்றி கண்டிருக்கிறது என்ற கேள்வியே அது.

வடக்கை விட்டுக் கொடுத்து கிழக்கை முழுக்கட்டுப்பாட்டில் வைத்திருப்பது ஐக்கிய தேசியக்கட்சியின் யுத்தக் கொள்கையாக இருந்தது. இதனைக் கண்டித்து வந்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணி 'வடக்கை வெல்வதன் மூலம் யுத்தத்தில் வெல்வது' என்ற அடிப்படைக் கொள்கையை வகுத்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் யுத்தக் கொள்கையின் படி வடக்கில் புலிகளை தொடர்ந்து நிலைகொள்ள வைப்பது நாட்டின் தேசிய வளங்களை யுத்தத்துக்குத் தாரைவார்க்கும் நிலையையே உருவாக்கும் என்று கூறியது பொதுமக்கள் ஐக்கிய முன்னணி.

ஆனால் - கடந்த ஐந்து ஆண்டுகளில் அதன் யுத்தக்கொள்கை உருவாக்கியுள்ள நிலைமை எப்படி உள்ளது?

யுத்தத்துக்கான நிதிச்செலவு பல மடங்கு அதிகரித்துச் செல்கிறது. ஐக்கிய தேசியக் கட்சியின் யுத்தக் கொள்கை ஏற்படுத்திய நிதி இழப்பைவிட தற்போதைய யுத்தம் தேசிய பொருளாதாரத்துக்கு பலத்த சேதத்தை உண்டு பண்ணியுள்ளது. இக்காலப்பகுதியில் ஆச்சரியப்படத்தக்க வகையில் புலிகள் பலம் பெற்றும் உள்ளனர்.

கிழக்கின் நிலைமை என்ன?

கிழக்கில் ஒரு பிரதேசத்தை தங்களின் முழுக்கட்டுப்பாட்டில் வைத்திருக்க புலிகளால் முடிந்துள்ளது. 90களின் முற்பகுதியில் குடாநாட்டில் அமைக்கப்பட்டது போன்ற தமது நிர்வாக அமைப்பை அங்கு புலிகள் கட்டி எழுப்பி உள்ளனர். தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளிலும் ஏனைய இடங்களிலும் பெருமளவு நிதியை வரியாகச் சேகரிக்க புலிகளால் முடிகிறது. நகரப்பகுதிகளில் தாக்குதல்களை முடுக்கிவிட்டு நெருக்கடியை எற்படுத்தி பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்தவேண்டிய அவசியத்தைப் புலிகள் உருவாக்கி உள்ளனர். வன்னியில் யுத்தமுனையில் இருந்து படையினரை கிழக்கே நகர்த்த வேண்டிய அவசியம் இதன் மூலம் ஏற்படலாம். இதை நோக்கமாகக் கொண்டே கிழக்கில் புலிகள் தாக்குதல்களை தீவிரப்படுத்தி வருகின்றனர். படிப்படியாகத் தமது நடவடிக்கைகளைத் தீவிரமாக்கி அரச நிர்வாகத்தை அங்கு செயலிழக்கச் செய்வது புலிகளின் அடுத்த திட்டம்.

கிழக்கிலும் உள்ளூராட்சி நிர்வாகங்களை செயலற்றுப் போகச் செய்வதும் தமிழ் அரசியல் குழுக்களின் செயற்பாடுகளை முடக்குவதும் புலிகளின் மூன்றாவது திட்டம்.

வடக்கின் நிலைமை என்ன?

புலிகளின் கோட்டை எனக் கருதப்பட்ட யாழ்.குடாநாட்டை படைகள் கைப்பற்றி மூன்றரை ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்டது. இங்கு இயல்பு நிலையை ஏற்படுத்துவதில் அரசு தீவிர கவனம் செலுத்தியது.

வெளிநாடுகளில் இருந்து வரும் பிரதிநிதிகளுக்கும் மனித உரிமைகள் ஆர்வலர்களுக்கும் இன்று 'ஒரு காட்சிப் பொருளாக' குடாநாட்டை மாற்றியுள்ளது அரசு.

எல்லாம் இயல்பாக நடக்கிறது; பாதுகாப்புப் படையினருக்கும் பொதுமக்களுக்குமிடையே நல்லுறவு வளர்கிறது; அத்தியாவசிய சேவைகள் அனைத்தும் மக்களுக்கு கிடைக்க வழி ஏற்படுத்தப்பட்டுள்ளது; புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகள் துரிதகதியில் நடக்கின்றன என்றெல்லாம் அரசு பிரசாரம் செய்கிறது.

ஆனால் வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு அவர்களது ஒருநாள் விஜயங்களின் மூலம் காட்டப்படும் குடாநாட்டின் தோற்றம் வேறு அங்குள்ள யதார்த்த நிலைமை வேறு என்பது தற்பொழுது தெளிவாகிறது.

குடாநாட்டில் சிவில் நிர்வாகத்தை ஒரே நாளில் ஸ்தம்பிக்கச் செய்ய முடியும் என்பதைப் புலிகள் அண்மையில் நிரூபித்துக் காட்டியுள்ளனர். கிளைமோர் கண்ணிவெடித் தாக்குதல்கள் உட்பட தாக்குதல் சம்பவங்கள் இங்கு அதிகரித்து வருகின்றன.

குடாநாட்டைக் கைப்பற்றுவதன் மூலம் புலிகளின் முதுகெலும்பை ஒடிக்க முடியுமென அரசு நம்பியது; புலிகளின் நிதி வளங்களை கைப்பற்ற முடியும் என்று அரசு கருதியது. ஆனால் குடாநாட்டில் இருந்து நிதியைச் சேகரிக்கும் நடவடிக்கைகளை புலிகள் இன்றும் தொடர்ந்து மேற்கொள்வதை பாதுகாப்பு வட்டாரங்களே உறுதிப்படுத்தி உள்ளன.

வன்னியில் இருந்து தொலைபேசி மூலமாக புலிகள் குடாநாட்டில் தமது நிழல் நிர்வாகத்தையும், வரி சேகரிப்பையும் சுலபமாக மேற்கொள்வதாக தெற்கில் உள்ள பாதுகாப்பு விமர்சகர் ஒருவர் தனது கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் யுத்தக் கொள்கையின் பெறுபேறுகளில் ஒன்றாகக்கூட இது இருக்கலாம்.


வடக்கில் புலிகளுக்கு எதிரான சண்டையில் இராணுவத்தின் ஆறு டிவிசன்கள் இன்னமும் ஈடுபட்டுள்ளன.

குடாநாட்டுக்கு தரைப்பாதை ஒன்றைத் திறப்பதாகக் கூறி வன்னி ஊடாக ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கை ஒன்று ஏராளமான படையினரின் உயிர்களையும் உடைமைகளையும் மொத்தில் நாட்டின் தேசிய வளங்களையும் ஏப்பமிட்டிருக்கிறது. ஆனால் பாதை திறக்கப்படவே இல்லை. விடுவிக்கப்பட்ட பகுதிகளில் இயல்பு நிலையை உடனடியாக ஏற்படுத்துவதாகக் கூறி அவசரஅவசரமாக பொருள்களையும், மின்சாரம், தொலைபேசி போக்குவரத்து போன்ற வசதிகளையும் அப்பகுதிக்கு கொண்டு செல்கிறது அரசு.

முன்னர் அப்பகுதிகளில் தடைசெய்யப்பட்டிருந்த பொருள்கள் பின்னர் தாராளமாகப் புழக்கத்துக்கு வருகின்றன. இந்நிலைமை புலிகளுக்குச் சாதகமாகவே மாறிவருகிறது. தடைசெய்யப்பட்ட பொருள்கள் இப்பகுதிகளில் இருந்து புலிகளுக்கு இலகுவில் கிடைத்து விடுகின்றன. பொருளாதாரத்தடை விதிக்கப்பட்டதன் நோக்கத்தை இந்த நிலை தலை கீழாக்கி வருகிறது. பொதுமக்கள் ஐக்கியமுன்னணி அரசின் யுத்தக்கொள்கை வடக்கிலும் கிழக்கிலும் போரைத் தீவிரமாக்கியதுடன் நாடு முழுவதுவதையுமே நெருக்கடியான நிலையை நோக்கி இட்டுச்சென்றிருக்கின்றது. *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காகித டம்ளர் செய்வோம்



தண்ணீர் குடிக்க நாமே காகிதத்தில் ஒரு டம்ளர் தயாரிக்கலாமா?

ஒரு சதுர வடிவத் தாளை எடுத்துக் கொள்ளுங்கள். (காகிதத்தை மடிக்கும் போது தரையில் வைத்தோ அல்லது மேசையில் வைத்தோ மடிக்கவும். அப்போது தான் மடிப்பு சரியாக வரும்.)

1. படத்தில் காட்டியபடி தாளை வைத்துக் கொள்ளவும்.
2. கீழ் முனையை மேல் நோக்கி மடிக்கவும். இரு சமபக்க முக்கோணம் கிடைக்கும்.
3. முக்கோணத்தின் வலது பக்க முனையை எதிர்ப் பக்கத்தைத் தொடும்படி மடிக்கவும்.
4. மடித்தபின் படம் 4-ல் காட்டியபடி உருவம் கிடைத்திருக்கும்.
5. அதே போல் பின்புறம் திருப்பி இன்னொரு முனையையும் மடிக்க வேண்டும்.
6. இரண்டு பக்கமும் மடித்த பின் படம் 6 இல் உள்ள உருவம் கிடைக்கும். மேலே நீட்டிக் கொண்டிருக்கும் பகுதியை பக்கவாட்டில் மடித்த பகுதிக்குள் விட்டு மடிக்கவும்.
7. அதே போல் பின்புறமும் மடிக்கவும்.
8. இதோ டம்ளர் தயார்.

இந்த டம்ளருக்குள் தண்ணீர் ஊற்றிக் குடிக்கலாம். ஐந்து நிமிடம் வரை நீர் கசியாது. வண்ணக் காகிதத்தில் செய்து அலங்காரமாகவும் வைக்கலாம்.

# வித்தியாசம்



வெள்ளை முயல் வேக மாக
ஓட லானது.
வேட்டை நாயும் அதைத்து ரத்தி
விரட்ட லானது.
துள்ளித் துள்ளி அந்த முயல்
அதிக தூரத்தைத்
துரித மாகச் கடந்து சென்று
...ுய லானது.

முயலைத் தொடர்ந்த வேட்டை நாயும்
அயர்ந்து போனது:
மூச்சுத் திணற ஓரி டத்தில்
அமர்ந்து விட்டது.
வயலில் ஆடு மேய்த்த சிறுவன்
இதனைக் கண்டனன்:
வந்து வேட்டை நாயி டத்தில்
கேட்க லாயினன்:

'சின்னஞ் சிறிய முயலைப் பிடிக்க
முடிய வில்லையே!
'தீரன், வேட்டை வீரன்' என்று
பெருமை கொள்வதேன்?
என்ன கார ணத்தி னாலே
தோல்வி வந்ததோ?"
என்று கேட்க, வேட்டை நாயும்
பதிலு ரைத்தது.

"எனக்கும் அதற்கும் உள்ள தான
வித்தி யாசத்தை
எளிதில் அறிந்து கொள்ள லாமே!
தெரிய வில்லையா?
உணவுக் காகத் தொடர்ந்து சென்ற
எனது ஓட்டத்தால்,
உயிரைக் காக்க ஓடும் முயலை
வெல்ல முடியுமோ?"

- குழந்தைக் கவிஞர் -

# பாடல்

அம்மா தோசை சுடுகிறார்
அருகில் ஓடிச் செல்கிறோம்
'சும்மா இருங்கள்' என்கிறார்
சுட்டுச் சுளகில் எடுக்கிறார்

அடுப்பை நன்றாய் எரிக்கிறார்
அகப்பையில் மா எடுக்கிறார்
தடுக்கை நாங்கள் விரிக்கிறோம்
'தருவேன் பொறுங்கள்' என்கிறார்

தட்டைக்கரண்டி பிடிக்கிறார்
சரியாய் பெரியநிலவைப் போல்
வட்டத் தோசை சுடுகிறார்
'வடிவாய் தின்பீர்' என்கிறார்

'சம்பல் அரைத்துத் தாளித்து
சட்டி நிறைய இருக்கிறது
தம்பி உண்ணத் தொடங்க முன்
சாமியைக் கும்பிட்டு வா' என்கிறார்.

பெ.சசின்றி சாந்தி
(தரம் 3, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி)

# சிந்திப்போம் செயற்படுவோம்

தெய்வம் ஒன்று உண்டு!
தொழுது நாமும் வாழ்வோம்!
அன்பு இரக்கம் வளர்ப்போம்!
அன்னை பாதம் பணிவோம்!
சோம்பல் இன்றி உழைப்போம்!
சுய நலன்கள் தவிர்ப்போம்!
பாங்காய் கல்வி கற்போம்!
பகிர்ந்து உணவு உண்போம்!
உண்மை என்றும் உரைப்போம்!
உயர்ந்தோர் வழியில் நடப்போம்!

மா. தரணிதரன்
(தரம் 3, யாழ். இந்து ஆரம்ப பாடசாலை)

# எங்கள் அதிபர்

எங்கள் அதிபர் நல்லவரே
எங்களில் அன்பு உள்ளவரே
பள்ளிப் பிள்ளைகள் எங்களுக்கு
பரிவுடன் புத்தி சொல்பவரே

சிவனின் நாமம் கொண்டவரே
சிந்தையில் இரக்கம் உடையவரே
ஒழுக்க சீலராய் உள்ளவரே
ஒழுக்கத்தை பேணுக என்பாரே

உயர்ந்த நோக்கம் உடையவரே
எம்மை உயர்த்திட என்றும் விளைபவரே.
கடமையில் கண்ணாய் உள்ளவரே
கருத்துடன் கருமம் செய்பவரே

இந்துக் கல்லூரி அதிபர் ஐயா
இலங்குக நின் புகழ் என்றுமிங்கே
நின்பணி நன்று தொடர்க வென்று
நினைத்து நிமலனை வேண்டுகிறேன்

வி.தனராஜ்
(தரம் 6, மானிப்பாய் இந்துக் கல்லூரி)

# கப்பல்

கப்பல் நல்ல கப்பலாம்
கடலில் செல்லும் கப்பலாம்
அக்கரைக்குச் செல்லவே
ஆக்கள் ஏத்தும் கப்பலாம்

சண்டை செய்யும் கப்பலாம்
சாமானேத்தும் கப்பலாம்
கப்பல் தன்னில் பலவிதம்
கடலின் மீது திரியுமாம்

தூரதேசம் செல்லுமாம்
துறைமுகத்தில் தங்குமாம்
கலங்கரை விளக்கினால்
கரையைக் கண்டு சேருமாம்.

# நொடிப்பொழுது


1) கொண்டையில் அடிவாங்கி, கோட்டையைப் பிளந்து, கோயில் சிலை வடிக்கும்; கோடிக் கலை படைக்கும். அது என்ன?
2) முட்டையை தூக்கிவரும்; நத்தை அல்ல. தண்ணீரில் நீந்தி வரும்; தவளை அல்ல. அது என்ன?
3) தத்தித் தத்தி வருவான்; குழந்தை அல்ல. நீரிலும் இருப்பான்; நிலத்திலும் இருப்பான். அவன் யார்?
4) பார்க்கும் போது கருப்பு; பாடும் போது இனிமை. அது என்ன?
5) பூமியில் பிறந்தவள்; புகையாகிப் போவாள். அவள் யார்?

- அ.பேபிசாளினி -
(தரம் 7, சாவகச்சேரி இந்து)

விடைகள்

1) உளி 2) ஆமை 3) தவளை 4) குயில் 5) பெற்றோல்

# ஆசையால் நேர்ந்த அழிவு




ஒரு வேடன் காட்டுக்கு வேட்டைக்குப் போய், ஒன்றும் கிடைக்காமல் பல நாள்கள் அலைந்து திரிந்து கொண்டிருந்தான். ஒரு நாள் அவன் ஒரு மானைக் கண்டான். அதன் பின்னே விரட்டிக் கொண்டு ஓடி அம்பெய்து கொன்று அதைத் தூக்கிக் கொண்டு தன் சேரி நோக்கி நடந்தான். வழியில் ஒரு பெரிய பன்றியைக் கண்டான். உள்ள மான் போதாதென்று, இந்தப் பன்றியை எய்து கொன்றால் இரண்டு நாள் சாப்பாட்டுக்காகும் என்று அதன்மேல் அம்பெய்தான். அம்பு பட்ட அந்தப் பன்றி கோபம் கொண்டு அவன் மேல் பாய்ந்தது. அவனைக் கொன்று தானும் செத்து விழுந்தது.

அப்பொழுது அந்த வழியாக ஒரு நரி வந்தது. செத்துக் கிடக்கும் வேடனையும் மானையும் பன்றியையும் கண்டு, 'ஆகா! மூன்று நாளுக்குச் சாப்பாட்டுக்குப் பஞ்சமில்லை' என்று சொல்லிக்கொண்டே, வேடன் வைத்திருந்த வில்லின் நாணைப் போய் முதலில் கடித்தது. நாணறுந்தவுடன், வில்கம்பு சடக்கென்று விரிந்து நரியின் வயிற்றில் குத்தியது. உடனே அந்த நரியும் செத்து விழுந்தது.

ஆசை மிகுந்திருக்கக் கூடாது.

## சிறுவர் சுடர்

# பங்கு பிரியுங்கள்



ஒரு ஜமீந்தாருக்கு நான்கு பிள்ளைகள். அவருக்கு உள்ளதோ எக்கச்சக்கமான சொத்து. நில புலன்கள், பெரிய பண்ணை. வட்ட வடிமான தனது எஸ்டேட்டை நான்கு சம பாகங்களாகப் பிரித்து கொள்ளும்படி உயில் எழுதி இருந்தார். இங்கு குறிப்பிட்டுள்ளது அவரது வட்டவடிவ எஸ்டேட். அந்த எண்கள் ஒவ்வொரு துண்டுப் பகுதியிலும் கிடைக்கும் வருமானத்தை (லட்சங்களில்) குறிக்கிறது. ஒவ்வொரு பிள்ளைக்கும் 45 லட்சம் ரூபா வருமானம் கிடைக்கும்படி நான்கு பாகமாகப் பிரிக்க வேண்டும். ஜமீந்தாரின் சட்டத்தரணி வழி தெரியாமல் தடுமாறுகிறார். நீங்கள் உதவுங்களேன்.

(விடை XV ஆம் பக்கத்தில்)

# துண்டு போடுங்கள்!

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| W | X | X | Z | W | Y | Y | X |
| Y | W | Z | W | W | Y | X | Z |
| Z | Y | X | X | Y | Z | Z | W |


மேலே உள்ள படத்தைப் பாருங்கள். அங்கு W,X,Y,Z என்ற நான்கு வடிவங்கள் உள்ளன. இந்த வடிவத்தை ஆறு துண்டுகளாக்க வேண்டும். ஒவ்வொரு துண்டும் எந்த அமைப்பிலும் இருக்கலாம். ஆறு துண்டுகளிலும் W,X,Y,Z என்ற வடிவங்கள் இருக்க வேண்டும். எங்கே உங்கள் மூளைக்கு வேலை கொடுங்கள் பார்க்கலாம்.

(விடை XV ஆம் பக்கத்தில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனமொழி

## உங்கள் கவிதைகள்



மனிதனே!
மரணம் கண்டு மயங்காதே
பிறப்பு என்பது உனக்கு
நேர்ந்த முதல் சம்பவம்
இறப்பு என்பது உனக்கு
நேரும் முடிவுச் சம்பவம் - இடையில்
ஊனமானது உடல்மட்டுமா
ஊமையான உள்ளமும் கூடவா?
மரணக்கயிறு மாலையிட்ட பின்பு
மனக் கவலை மாற்றமடையுமெனில்
முடிவை எடு முடிவாய் எடு!

- மௌனிகா -

முழிச்சு மூண்டுவயசில் முற்றத்து.......
நிலாச்சோறு பெற்றவள் ஊட்டிவிட,
பக்கத்துப் பசங்களோடு கூடிவிளையாடி,
வெக்கத்து வயசும் இளமையும் மறைந்தோட,
துக்கத்து நிலையும் முதுமையும் ஓடிவர,
அக்கத்தில் அன்புடையர் யாருமின்றி.....
வேண்டாச்சமரில் துண்டுக்கையிழந்து,
தீண்டாத்தமிழினத்தில் பிறந்ததனால்....
அண்டத்தில் அடி மூலை சென்றாலும்
அன்பாக வரவேற்கும் கரம் 'தூக்குத்தடம்'!

- பரன் -

'தூக்க' முனைந்தால் சொல்லத் துணியும்
வெடித்துச் சிதறினால் வேதனை விஞ்சும்
உள்ளே இருப்பது உலகை உலுக்கும்
முண்டமாய், நிணமாய், முறிந்த எலும்பாய்.....
வெடிகுண் டல்ல, விரைவில்
தமிழன் தொலைதல் விழிகள் சொருகுண்டு!

- வ.சின்னப்பா -
தனங்கிளப்பு.

முன்னேறிப் பாய்ந்தபோது...
கை போனது ஷெல்லிற்கு
கைப்பிடித்தவள் போனது புக்காராவிற்கு.

இடம் பெயரமுன்..
இடக்கால் போனது மிதிவெடிக்கு...
இளையவன் போனது ஜெர்மனிக்கு....

வந்தபின்...
வலக்கால் போனது, கண்ணிக்கு
மூத்தவன் போனது செம்மணிக்கு......

இன்று
தமிழ்க் கட்சிகளின் நிலையில் நான்.

ஆண்டவா.....
ஆணையிறவிலிருந்தா வரவேண்டும்
ஆயுள் பறிக்க?

- எஸ்.என்.தலன் -
மானிப்பாய்.

கொடியவரால்
இழந்த உறவுகளை எண்ணி
நான் கவலை கொள்ளவில்லை...
இழந்த என் அங்கங்களை
எண்ணியே கவலைகொள்கிறேன்....
ஏனெனில்,
என்னால் சாவை எட்டமுடியவில்லை...
கருணையுள்ளங் கொண்டவரே!
உங்களிடம் - நான்
வேறொன்றும் கேட்கவில்லை....
என் கழுத்தில்
ஒரு மரணமாலையை
இடுவதற்கு
துணை நின்றால் போதும்!

- ச. தியானேஸ்வரசர்மா -
நுணாவில் மத்தி.

மனிதனே!
உன் மேனி சிதைக்கப்பட்டபோதும்;
உன் உணர்வுகள் மறுக்கப்பட்டபோதும்;
உன் மண் பறிக்கப்பட்ட போதும்;
உன் உறவுகள் பிரிக்கப்பட்ட போதும்;
நீ ..... பேசாதிருந்தாய்.......?
உன் கழுத்தைக் குறி வைக்கும்
அழுத்தக் கயிறு......
குரல் நாண்களை நசுக்கமுன்
ஒரு விநாடி......
நீயே எழுந்து...... பேசு!
உனக்காக......
நாம் ஒருபோதும்...பேசோம்!!!

- நா.சோபினி -

தமிழ் மைந்தனே!
வாழ்விற்கும் சாவிற்கும் இடையில்
நிகழும் உணர்ச்சிப் போராட்டம்
உன்னுடையது;
இங்கே! விரைவில்
தமிழ் இனம் சரித்திர நிமிடங்களை(ச்)
சந்திக்கப் போகின்றது!!
உன் ஆசைக் கனவுகள்
நனவாகப் போகின்றன;
அதுவரை சேமித்துவை
உன் உயிர்த் துளிகளை!!!

- நித்தியா யோகராஜா -
நல்லூர்.

காவலுக்கு வந்தவர்கள்
கைகளையே பறித்துவிட்டார்!
கால்கள் இருந்தென்ன
காவியமா படைத்துவிடும்?
காட்டிக் கொடுத்து வாழ்ந்த
கயவர் எம் எதிர்காலம்
கண் எதிரே தூக்குக் கயிறாக!

- திருமதி ச. சிவபாலன் -
வடலியடைப்பு.

ஊனம் என்றதும் கோழைத்தனமாய்
உன் வாழ்வை முடிக்காமல்
உடல் வலு இழந்திடினும் தம் மன வலுவால்
உன்னத வெற்றிகள் படைத்திடும்
உறவுடன் இணைய இன்றே புறப்படு!

- சிட்டு -
யாழ்ப்பாணம்.

மிதிவெடியில் போனகாலும்
ஒரு நொடியில் இழந்த கையும்
மீண்டும் வராதென்று
வாழ்வதற்கும் முடியலையே!
ஒற்றைக் கையை - இறுக்கி
நிலத்திலுன்றி எழுந்தாலும்
தலைக்கு மேலே - பாசக்
கயிறு! என் செய்வோம் -
யாழ்ப்பாணத்தில்?

- நல்லைக்கணபதி -

தூக்குமேடை மெத்தை என்றோர்
துரோகம் இழைத்து விட்டார்
துவக்குடன் துடிதுடித்தோர்
துவண்டு சரண் அடைந்து விட்டார்
துண்டித்த கைகால்கள் என்னை
துயருறவே வைப்பதனை
தூக்கிலே தொங்கி (உயிர்) விட
துன்பமது துரத்துவதை
துச்சமென நான் நினைத்து
துவளாமல் துயிலுவது
துணிந்து நிற்கும் தம்பியரின்
தூய செயற்பாடுகளால்....

- மதுரை -
பண்ணாகம்.

தூக்குக் கயிறே,
ஏன் தயங்குகிறாய்....
நீயாவது இரங்கு....
இறங்கு....இறங்கு.....
என் கழுத்தில் இறங்கு....
பரலோகத்தில் நான்
பறைசாற்ற வேண்டும்!
புத்த பூமி
யுத்த பூமி ஆனதை..!
சமாதானப் போர்
எனக்களித்த வாழ்வுதனை..!

- கலைநேசன்சிவம்-

மீண்டும் அமுலாம்.....
மரண தண்டனை
இது குற்றங்களை(க்)
குறைக்குமென்று
எதிர்பார்ப்பினும்...
நிச்சயம் மரணங்களை
நியாயப்படுத்தும்!

- க.நாகராசா -

சமாதானத்துக்கான
போர் தந்த
தரிசனங்களின்
யதார்த்த நிலையிது..!
இப்போரினால்
ஊனமானது
உடலங்கங்கள் மட்டுமல்ல
பல உள்ளங்களும்தான்.
இவற்றிற்கெல்லாம்
இதுதான் முடிவென்றால்???

- இனுவை றொட்றிக் -

அல்லற்பட்டு
அவதிப்பட்டு
அலைந்தழியும்
தமிழன் மேலே
தூக்குக் கயிறாய்
நிவாரண வெட்டு!

- இந்திராணி -
வலந்தலை.

மனிதனே...!
உடல் ஊனமானதால்
உயிரையும்
இழந்துவிட நினைக்கிறாயா?
உள்ளத்தால்
உயர்ந்து விடு!
முழு மனிதனாகிடுவாய்!
ஏனெனில்,
உடல் ஊனமுற்றோரல்ல;
உள்ளம் ஊனமானோரே
வாழத் தகுதியற்றவர்கள்......!

- சரோ.தம்பித்துரை -

சுகவாசம் தருவதாய்
சகவாசம் கொண்டவர்கள்!
வாசத்தில் தொலைந்ததெம்
வசந்த காலங்கள்..!
அதனால்
பிராணனை மட்டும் கொண்ட
பிணமாய் நாம்..!
நாளை
சுவாசத்தின் வாசத்தையும்
சுருக்கிட்டு விடுவிப்பர்
ஓர் அமைதிக்காக.....

- கிராஞ்சியூரான் -

ஏய் மனிதா....!
முடமாக்கப்பட்ட உனக்கு
முடிச்சுப் போட்ட கயிறு - என்றும்
எட்டாக் கனிதான்,
ஏங்காதே!
சுருக்குப் போட்டவனைக் கேட்டுப்பார் - என்னை
ஏன் தூக்கில் இடவில்லை என!

- சா.இரஞ்சினி -
மட்டுவில் வடக்கு.

அன்பான அப்பா...!
எட்டாத தீர்வுப்பொதியாய்
எட்டிப் பார்க்கிறீகளே?
இரு கால் ஒரு கைதானே
விட்டுவிடுங்கள் கவலையை
நானில்லை உங்களுக்கு

- அ. நிதர்சன் -

நிகழ்கால வாழ்விற்காய்
நான் எதிர்பார்த்திருந்ததோ
தாலிக்கயிறு
ஆனால்.....
விதியின் விளையாட்டோ...
சதியின் தொடர்வினையோ....
சுற்றத்தின், சொந்தத்தின் செயற்பாடோ
பரிசாகக் கிடைத்தது
தூக்குக் கயிறு
எதிர்காலம்?????
ஏய்மனிதா!.......
தெய்வத்தின் மாலை தெருவினிலே
வீழ்ந்தாலும்
வேறோர் கைபடுவதாயின் - அது
அந்தக் காலனால் மட்டும்தான்
முடியும். இது உறுதி!

- சுநந்திதா -
யாழ்ப்பாணம்.

தமிழ் மானத்துக்காய்
மரணித்த மன்னன்
கட்டப்பொம்மனுக்குக்கூட - தன்
கழுத்துக்கு கயிறுமாட்ட
இரு கைகளும் இருந்தது - ஆனால்
தமிழா உனக்கு???

- புரட்சி -
பூநகரி.

எம் அயலங்களை அறுக்கலாம்
ஆத்மாவை?
எம் கழுத்தை நெரிக்கலாம்
கருத்தை?

- செ.சசி -
நெல்லியடி.

உந்தி யெழுந்துன்
ஒருகையால் - அதைப்பற்றி
வெந்த உன் வாழ்வினிலே
விடியல் தேடு! - அப்போ(து)
தூக்குக் கயிறுதானும்
காக்கும் கயிறாகும் - ஏனெனில்
நீ ஒரு மறத் தமிழன்!

- அனலையூர்ச் சேந்தன் -

## மௌனமொழி - 44



உங்கள் [illegible] இதனை
வரைந்தவர் குருநகரைச் சேர்ந்த **வே.தமன்ராஜ்.**

இப்போது
அனுபவிக்கும்
ஆயுள் தண்டனையைவிட
இந்த மரணதண்டனை
மேலானது!

நித்தமும்
செத்துக் கொண்டிருப்பதை விட
மொத்தமாய்
ஒரே தடவையில் சாவது
நிம்மதி.

ஆக்கிரமிப்பு
ஆட்சியாளர்
ஒரு தமிழனை
கயிற்றில் தூக்கும்போது
ஒன்பது தமிழர்கள்
கையில் தூக்குவார்கள்!

- கதா -

கால்களில்லை
கையும் இல்லை என்பதை மறந்து
கனவினில் திளைத்து - ஒற்றை(க்)
கையினையூன்றி
(ஆ) பாசக்கயிற்றை
அண்ணாந்து பார்த்து
வாய்பிளந்திருக்கும்
'வாலிப' க்கிழடு(கள்)!

- சைதன்யன் -

வாழ்வியல் தத்துவத்தின்
குறியீடு இது.
வாழ நினைத்தபோது....
வாழ்க்கை எட்டாக்கனியாக.....
சாக நினைத்தபோது
மரணம் எட்டா உயரத்தில்.

- சி.ராஜ்குமார் -
வல்வெட்டி.

கட்டுண்டு போனேன் காலச்சக்கரத்தில்
விட்டென்று என்னை விடுவிக்கமுடியாமல்
தட்டுத்தடுமாறி யெல்லவோ இங்கு வாழ்கின்றேன்
மட்டற்ற மகிழ்ச்சியை அனுபவிக்க வேண்டிய மானிடன்
பட்டென்று போய்விட எண்ணும் நிலைதான் ஏனோ?

- இராம ஜெயபாலன் -
கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுர பாவங்கள்

*"நீநடக்கும் போது*
*ஏனடி*
*என் இதயம் அதிர்கின்றது?"*

இந்த வரிகளின் சொந்தக்காரன் விதூஸ். விதூஸ் எப்படி கவிதை எழுதத் தொடங்கினான்? காதலிக்கும் போது யாவரும் கவிஞர்கள்தான். சிலர் விட்டு விடுவார்கள். சிலர் தொடர்வார்கள்.

சிந்துவிற்காக விதூஸ் நிறைய கவிதை எழுதினான். இதனால்தான் அவர்களின் உறவே தொடங்கிற்று.

இப்போதும் விதூஸ் கவிதை எழுதுகின்றானா என்று மாறனுக்கு தெரியவில்லை. மாறன் விதூஸின் கல்லூரி நண்பன். விதூஸும், சிந்துவும் தொடர்ந்து படிக்க மாறன் கனடா வந்துவிட்டான். இதனால் ஆறேழு வருடங்களாக அவர்களைப் பற்றி எதுவும் தெரியவில்லை. ஒன்றாய் வாழ்ந்து கொண்டிருப்பார்களோ? குழந்தை குட்டியும் பெற்றிருப்பார்களோ? குறுகிய காலம். எனவே சாத்தியம் குறைவு.

ஊருக்கு போனதும் முதல் வேலையாய் அவர்களைப் போய்ப் பார்க்க வேண்டும் என மாறன் நினைத்துக் கொண்டான். இருவருக்கும் உடுப்பும், விதூஸிற்கு விலை உயர்ந்த பேனா ஒன்றும் வாங்க வேண்டும். அவன் எழுத்துக்குப் பரிசாக அளிக்கலாம்.

மாறனுக்கு நினைக்கும் போது சிரிப்பாய் எழுந்தது. சிந்துவுக்கு பின்னால் மாறன் அலைந்து திரிந்தது... அவள் காதலுக்காக நாயாய் அலைந்தது... யாவும் சிரிப்பாய் இருந்தது. விதூஸ் அவள் காதலுக்கு நாயாய் அலைந்த நேரம் நல்ல நாவல்கள் நாலு எழுதியிருக்கலாம். அதுதான் நடக்காத காரியமாயிற்றே. அவள் காதலுக்கு பையன் துடியாய் துடித்தான். ஆனால் சிந்து எதுவித சலனமும் இன்றி நடைபயில்வாள்.

விதூஸ் சொல்வான் "அழகான பெண்கள் ஆண்களை ரொம்பவும் தொந்தரவு செய்கிறார்கள்" இருப்பினும் சிந்து விதூஸை ரொம்பவும் தொந்தரவு செய்தாள் என்பது மிக உண்மை. ஒருவாறாக விதூஸ் தன் காதலை சிந்துவிடம் கொட்டினானா? சொன்னானா?

பதில் எதையும் சில காலமாக காணவில்லை. பாவம் பையன். ரொம்பவும் களைத்து, இழைத்துப் போனான். மாறன் கைவிடும்படி சொல்லிப் பார்த்தான். அந்த எண்ணம் விதூஸிற்கு எள்ளளவும் இல்லை. கிருஷ்ணர் வந்து சொன்னாலும் இந்த அர்ச்சுனன் இதனை செய்ய மாட்டான்.

கோகுலராகவன்

இடையினில் விதூஸின் கவிதை வரி ஒன்று மாத சஞ்சிகையில் வந்தது.

*"இறைவா,*
*எனக்காக படைக்கப்பட்டவளை*
*என்னிடம் அனுப்பிவை-ஏனெனில்*
*நான் இங்கு யாருக்காகவோ*
*படைக்கப்பட்டவர்களின்*
*பின்னால்*
*அலைந்து கொண்டுஇருக்கிறேன்"*

இது இறைவன் காதில் விழுந்ததுவோ? என்னவோ? ஆனால் சிந்துவின் கண்ணில்பட்டது. சில நாள்களில் சிந்துவிடம் இருந்து விதூஸிற்கு சாதகமான பதில்வந்தது. வானத்துக்கும் பூமிக்கும் துள்ளிக் குதித்தான் பையன்.

கல்லூரியில் பொருத்தமான ஜோடி என எல்லோராலும் இருவரும் பேசப்பட்டனர். மாறன் விதூஸின் நண்பன் எனும் முறையில் சிந்துவிடம் கதைத்ததுண்டு. சிந்துவின் கன்னக் குழிவிழும் சிரிப்பை ரசித்ததும் உண்டு. இந்தக் கன்னக் குழியில் தான் விதூஸ் விழுந்து விட்டான் போலும்.

மெல்லிய - சிவப்பாய் - சுருண்ட - கூந்தலும் எலும்மிச்சம்பழ நிறமுமாய் இருந்த சிந்து, கொஞ்சம் பருத்த - கொஞ்சம் கறுப்பு நிறமாக இருந்த விதூஸிற்கு ரொம்பவும் ஏற்றவள் தான் என்று மாறன் பெருமைப்பட்டதுண்டு.

காதலில் விழுந்ததும் எந்த பாமரனும் கவிஞனாய் மாறிவிடுவான் என்பது விதூஸைப் பார்த்து மாறன் நம்பிக் கொண்டான்.

கட்டிலில் சாய்ந்தபடி விதூஸ் பாடினான்.

*"வாருங்கள் மலர்களே*
*என்னில் மலருங்கள்*
*இனி நான்தான்*
*வசந்த காலம்"*

அவர்களை வசந்த காலத்தில் விட்டுவிட்டு மாறன் கனடா வந்து விட்டான். ஊருக்குப் போய் இருவரையும் பார்க்க வேண்டும் என்று மீண்டும் எண்ணிக் கொண்டான் மாறன்.

* * *



ஊர்க்காற்று எப்போதும் ஆனந்தம்தான். எந்த சொர்க்காபுரிக்குச் சென்றாலும் பிறந்து, வளர்ந்து, ஆடிப் பாடிய ஊர்போல வரவே வராது. அலுப்புத்தீர அள்ளிக் குளித்தபோது மாறனுக்கு இவ்வளவு நாளும் இழந்த ஊர் வாழ்க்கை கிடைத்தது போல் இருந்தது.

சாரத்தை மடித்துக் கொண்டு அக்காள் மகனையும் ஏற்றிக் கொண்டு அம்மன் கோவிலுக்கு புறப்பட்டான்.

"மாமா சென்ரி இறங்கோணும்"

மருமகன் அவசரமாக சொன்னான். இருவரும் இறங்கி மீண்டும் ஏறினர். மீண்டும் இருதடவை மருமகனின் இதேகட்டளைக்கு மாறன் பணிய வேண்டியதாயிற்று.

கோவில் பிரகாரத்தை மூன்று தரம் சுற்றி கும்பிட்டு கொண்டான். "தாயே நம்வாழ்வு மாறாதா?" பிரார்த்தனை செய்து முடித்தான்.

சற்று அருகே மருமகனுடன் கதைக்கும் பெண் யார்? சிந்துவா? இருவரையும் நெருங்கினாள்.

"மாமா இவ எங்கடை ரீச்சர்" என்ற மருமகனின் குரலையும் தாண்டி.....

"சிந்து...எப்படி இருக்கிறீங்க?"

சிந்து நிமிர்ந்து மாறனை பார்த்தாள். அவள் முகத்தினில், ஏதோ ஒரு பிரச்சினைக்கு உட்பட்ட நிலை தென்படுவதாய் மாறனுக்கு இருந்தது.

சிட்டுக்குருவி போல இருந்த இவளுக்கு என்ன கவலை வரப் போகின்றது?

"என்ன என்னை மறந்திட்டியள் போல?"

மறுத்து தலையசைத்தாள் சிந்து. அந்தப் பழைய தலையசைப்பு - விதூஸிற்கு பிடித்த அதே தலையசைப்பு. நடுக்கம் மாதிரி கழுத்தசையாத தலையசைப்பு. விதூஸ் அடிக்கடி ஆச்சரியப்படுவான்.

"எப்படி அந்த மாதிரி தலையசைக்கிறாள்?" என்று சொல்லி அசைத்துப் பார்ப்பான்.

மாறன் சொல்வான்; "டேய் கவனமடா கழுத்துக்கை பிடிக்கப் போகுது"

இருப்பினும் விதூஸ் அடிக்கடி இவ்விதம் செய்து பார்த்துவிட்டு ஆனந்தமாய் சிரிப்பான். தனக்குரியவளின் செயல்களைச் செய்து பார்த்து சிரிப்பதில் காதலர்களுக்கு மகா ஆனந்தம். காதலி மாதிரி நடப்பது, சிரிப்பது, பேசிப் பார்ப்பது போன்றவை ஒரு பொழுது போக்கு. காதல் கொண்டவர்கள் பைத்தியம் என்பது எவ்வளவு உண்மை? கோவில் மணி அடித்தது. திடுக்கிட்டு நிலமைக்கு வந்தான் மாறன்.

"அப்புறம் எப்படிச் சுகம்? விதூஸ் எங்கே என்ன செய்கிறான்? படிக்கிறானா? வேலை செய்கிறானா? இப்பவும் எழுதுவானா? புத்தகமாய் ஏதும் போட்டிருக்கின்றானா?"

மாறன் கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனான். சிந்துவிடம் இருந்து பதில் எதுவும் வரவில்லை. அவள் மௌனமாகவே நின்றாள். கண்களில் இருந்து கண்ணீர் கசியத் தொடங்கியது. பூசை ஆரம்பமாகியதால் எல்லோரும் பூசைக்கு போனார்கள்.

பூசையில் நிற்கும் போது, மாறனுக்கு சிந்து எதுவும் பேசாது நின்றது ஆச்சரியமாய்ப்பட்டது. ஏன் மௌனமாக நின்றாள்? மாறனுக்குப் பதில் எதுவும் கிடைக்க மறுத்தது; குழப்பமாகவும் இருந்தது.

விதூஸ் ஏதும் ஏமாற்றி விட்டானா? இருக்காது. சிந்துவை ஏமாற்ற யாருக்கும் மனம் வருமா? அப்படியாயி [illegible] சதம் சீதனம் வாங்க மாட்டேன் என்று அடிக்கடி சொல்வானே. அதிகம் முற்போக்கு சிந்தனை கொண்டவன் ஆயிற்றே? பின் என்னவாயிற்று இவளுக்கு? பழைய கலகலப்பான சிந்து இப்போது இல்லை என்பது மட்டும் மாறனுக்குத் தெளிவாக புரிந்தது.

மறுநாள் நேரே சிந்து வீட்டுக்கு வந்தான் மாறன். 'சிந்து' எனக் குரல் கொடுத்தான் மாறன்.

இளங்காலை நேரம் இதழ்விரியும் தாமரைப் பூப்போல வெளியே வந்தாள் சிந்து.

"வாங்கோ மாறன்"

இழையோடும் சோகம் ஒன்று அவள் முகத்தினில் இப்போதும் இருப்பதை மாறன் உணர்ந்து கொண்டான்.

"நேற்று என்னவாயிற்று உமக்கு? எதுவும் பேசாமல் வந்திட்டீர்"

சிந்து தலையைக் குனிந்து கொண்டாள். இவள் முகத்தினில் ஏன் இவ்வளவு சோகம் அப்பிக் கிடக்கின்றது?

"சிந்து, விதூஸ் எங்கே?" மெல்லிய குரலில் மாறன் கேட்டான். இறுகிய முகத்துடன் சிந்துவிடம் இருந்து பதில் வரவில்லை. மாறன் பொறுமையை இழக்கத் தொடங்கினான்.

"சிந்து ப்ளீஸ் விதூஸ் எங்கே? உம்மை ஏமாத்திட்டானா?"

"இல்லை இல்லை" சிந்துவின் குரல் அழுகையுடன் வெளிவரத் தொடங்கியது.

"அப்ப விதூஸ் எங்கே?" மீண்டும் மாறன் கேட்டான்.

"விதூஸ் காணாமற் போய் இரண்டு வருசமாகுது மாறன்".

மாறனுக்கு யாரோ உச்சந்தலையில் சம்மட்டியால் ஓங்கி அடித்துத் தலைபிளந்து இரண்டாகி கொதிக்க காய்ச்சிய தேங்காய் எண்ணெயில் விழுந்தது போல் ஆகியது.

'கடவுளே ஏன் இப்படிப் பண்ணினாய்? இந்த இரண்டு பூக்களையும் ஏன் பிரித்தாய்?' மாறன் நிமிர்ந்து சிந்துவை பார்த்தான்.

அவள் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. அந்த ஒவ்வொரு துளியிலும் அவள் விதூஸ் மேல் வைத்திருந்த காதல் அப்பட்டமாய் தெரிந்தது. பெண்ணே! உனக்கு இன்னும் கண்ணீர்வற்றவில்லையா?

மாறன் இப்படி ஒரு நிலை விதூஸிற்கு ஏற்பட்டிருக்குமென கனவிலும் நினைக்கவில்லை. இடிந்து போய் அமர்ந்திருந்தான். என்ன பேசுவதென்றே அவனுக்குத் தெரியவில்லை. பேச்சுவாக்கினிலும் இந்தச் செய்தி அவன் காதினில் இதுவரை விழவில்லை. ஊர் மறந்து போன செய்தியா?

"கல்யாணம் நடந்த பின்னா?"

"கல்யாணத்துக்கு பத்து நாளைக்கு முன்னம்."

மீண்டும் மாறன் அதிர்ச்சிக்குள்ளானான். இதையெல்லாம் இவள் எப்படித் தாங்கினாள்?

"தேடிப் பார்க்கவில்லையா சிந்து"

"விதூஸின்ரை அம்மா, அப்பா தேடாத இடம் இல்லை. போகாத காம்ப் இல்லை"

இப்போது சிந்து விக்கி, விக்கி அழுது கொண்டு இருந்தாள். மாறனுக்கு என்ன ஆறுதல் சொல்வதென்றே தெரியவில்லை. செடி நட்டு, கொடியாகி, பூப்பூக்கும் வேளை புயல் வந்து பூவோடு செடியைக் கொண்டு போன கதைதான் இதுவா?

கனவொன்று நிஜமாகி அரங்கேறும் வேளை இடியொன்று தலை மீது விழுந்ததுவா? ஆசையாய் சிகரங்களை அடையும் போது கருநாகம் ஏன் தீண்டியது?

மாறன் எழுந்து வீதிக்கு வந்தான். நண்பனுக்காக அழுவதா? அவன் காதலிக்காக அழுவதா? விதியை நினைத்து அழுவதா?

மறுநாள் மாலை விதூஸின் வீட்டுக்கு போனான். வயதான அப்பா, அம்மா இவனைக் கண்டதும் வாய் விட்டு அழத் தொடங்கினர்.

"தம்பி நாங்கள் போகாத இடம் இல்லை, கேட்காத ஆட்களில்லை. தேடித் தேடி அலையுறம் தம்பி. நாங்கள் செய்த பாவம் என்ன? நாங்கள் எண்டாலும் பரவாயில்லை. அந்தப் பிள்ளை என்ன பாவம் செய்தது? அதின்ரை வாழ்க்கை என்னவாகுமோ கடவுளே?"

யாருக்கு ஆறுதல் சொல்வது? விதூஸனைப் போல் நல்லவனுக்கே இக்கதியென்றால்... யார் தடுக்க முடியும்?

மாறன் ஊருக்கு வந்து இரண்டு மாதங்களாகி விட்டன. விதூஸை பற்றி எந்தத் தகவலும் இல்லை. சிந்து கதியிழந்த நிலையாக பள்ளிக்கூடம் போய் வந்தாள். அவள் கட்டிய கற்பனைக் கோட்டைக்குள் இப்பொழுது ரணங்களே வாழ்ந்து கொண்டிருந்தன.

ஒருநாள் விதூஸின் தகப்பன் மாறனைத் தேடி வீட்டுக்கு வந்தார்.

"தம்பி விதூஸ் வருவான் எண்ட நம்பிக்கை இப்ப குறைஞ்சு போட்டுது!. அவனுக்கு என்னமோ நடந்திட்டுது!

வீட்டு மூலையை வெறித்துப் பார்த்தபடி மௌனமாக சிறிது நேரம் இருந்தார். தகப்பனே நம்பிக்கை இழந்துவிட்டாரா?

"தம்பி சிந்துவை வேறொரு கல்யாணம் செய்யும்படி சொல்லுறது நல்லது போல எனக்குப் படுது"

விதூஸ் தங்கிய நெஞ்சினில் வேறொருவன் தங்க சிந்து விரும்புவாளா?

"நீர் ஒருக்கா சொல்லிப் பாருமன். வாழ்ற பிள்ளை எல்லே?" இதனை சொல்லும் போது அவர் கண்கள் அழுது கொண்டு இருந்தன. மாறனுக்கு ஆச்சரியமாய் இருந்தது. இன்னும் மனிதர்கள் மண்ணில் வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர் என்பதை அவனால் உணர முடிந்தது.

மறுநாள் மாறன் சிந்துவை பார்க்கப் போனான். வாடிய கொடியாக - வதங்கிய மலராக - சிந்து என்னும் பெண் நின்றாள்.

பெண்கள் சுபாவம் விநோதமானது. காதலின் தொடக்கத்தினில் வைரமாய் ஓடுவார்கள். காதல் மலர்ந்து விட்டால் இளகிய மனமாக ஆண்களை இடுக்கிப் பிடிபோட்டு விடுவார்கள். இதே போல சிந்து விதூஸிற்கு உயர் காதலை வழங்கி இருந்தாள். இந்த நிலையில் அவள் காதலின் தூய அன்பை யாரால் மிதிக்க முடியும்?

"நேற்று விதூஸின்ரை அப்பா வீட்டை வந்தார்"

மாறனுக்கு கதையை எப்படித் தொடங்குவது என்று தெரியவில்லை. மீண்டும் அவனே பேசினான்.

"விதூஸ் வருவான் எண்ட நம்பிக்கை அவருக்கு இப்ப இல்லைப் போல கிடக்கு"

சிந்து மௌனமாக ஒற்றைப் புறாப் படத்தை பார்த்தபடி இருந்தாள். மாறனால் அவள் மன எண்ணத்தை புரிய முடியவில்லை.

"உம்மை வேறை கல்யாணம் செய்யச் சொல்லி சொன்னார்."

இதனாலும் அவள் முகத்தினில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை. அமைதி நிலவியது. இனி பேசுவது அவள் முறை. அவள் பேசட்டும் என்று மாறன் அமைதியாகவே இருந்தான்.

"விதூஸ் வரும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு மாறன்"

அவள் அழத்தொடங்கினாள்.

"எப்படியெல்லாம் என்னுடன் வாழ வேண்டும் என்று விதூஸ் நினைச்சு வைத்திருந்தது. அந்த வாழ்க்கையை நான் வேறு ஒருத்தருக்கும் தர முடியாது மாறன்"

இதை மாறன் எதிர்பார்த்திருந்தான். விரும்பினான்.

"விதூஸ் எப்படியும் வரும். எனக்காய் வரும். என்னோடை வாழ வரும். அது வரைக்கும் நான் காத்திருப்பேன்"

இது அதீத அன்பின் வெளிப்பாடு என்று மாறனுக்குத் தோன்றியது. ஆழமான அன்பு விதூஸை இன்னும் உயிருடன் இருப்பதாக நம்ப வைக்கிறது.

அவள் குரலில இருந்த நம்பிக்கை மாறனுக்கு தெளிவாகத் தெரிந்தது. 'இதுதான் தூய காதலின் அன்பு என்பதா? இந்த நாள்களில் இப்படியொரு பெண் இருக்கமுடியுமா? விதூஸ் நீ ரொம்பக் கொடுத்து வைத்தவன். உன் வாழ்க்கையைவிட இதுதான் உயர்ந்த நிலை. காணாமற் போன ஒருத்தனுக்காய் ஒருத்தி காத்திருக்கிறாள் என்றால் அது எவ்வளவு பாக்கியம்!'

"விதூஸ் வரும் எனும் நம்பிக்கையில் என் வாழ்வு நகரும் மாறன். அது விதூஸும் நானும் சேர்ந்து வாழும் வாழ்க்கைக்கு ஒப்பாகும்."

சிந்து போன்ற பெண்களின் முடிவு இதுதான். இதுதான் உயர்ந்த நிலை. இப்படி இருப்பவர் சிலரே. அவ்விதம் இருந்தால் அவர்கள் வாழும் தெய்வப்பெண்கள் என மாறன் எண்ணிக்கொண்டான்.

மாறனுக்கு நாளை கப்பல் பயணம். சிந்துவிடம் சொல்லிக் கொள்ளப் போகிறான். விதூஸிற்காக வாங்கிய பேனாவை சிந்துவிடம் கொடுத்தான். அவளைத் தவிர அந்தப் பேனாவைக் கொடுப்பதற்கு பொருத்தமானவர்கள் யாரும் இல்லை. அதனை வாங்கிய சிந்து அழகான எழுத்தில் "விதூஸ்" என்று எழுதிப் பார்த்தாள். மாறன் சொல்லிக் கொண்டு புறப்பட்டான்.

இப்போதும் விதூஸ் வருவான் என்ற நம்பிக்கையுடனும், அவன் இனிய நினைவுகளுடனும், அவன் கவிதைகளுடனும் சிந்து வாழ்கிறாள். என்றோ ஒரு நாள் விதூஸ் அவளிடம் வருவான். அல்லது விதூஸிடம் அவள் போவாள். அதுவரைக்கும் அவன் இனிய நினைவுகளே சிந்துவின் வாழ்க்கை.!

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 16 அநாதையாகிவிட்ட சூழல்

**செங்கை ஆழியான்**

வயல்வெளியை அண்டி அமைந்திருந்த மேட்டுக்காணியில் பவளத்தின் வீடு அமைந்திருந்தது. நான்கு அறைகள் கொண்ட கல்வீடு. ஷெல்பட்டு கிழக்குப்பக்கக் கூரை சற்று சிதைந்திருந்தது. வீட்டின் பின்புறம் கண்ணுக் கெட்டிய தூரம்வரை பச்சைப்பசேலென நெற்பயிர்கள் செழித்துக் காட்சிதந்தன. மாரிக்கு விதைத்துவிட்டு குடலைப் பருவத்தில் அப்படியே விட்டுவிட்டு எல்லாரும் இடம் பெயர்ந்து ஓடி விட்டார்கள். வீட்டிற்கு முன் ஒழுங்கை வளைந்து, வளைந்து குண்டுங்குழியுமாக நீர்தேங்கிக் கிடந்தது. பிரதானவீதியை அடைய குறைந்தது இரண்டு கிலோமீற்றராவது இப்படியான கிரவல ஒழுங்கையூடாக விழுந்தெழும்பிச் செல்லவேண்டும்.

அங்கு வந்து ஒருவாரமாகின்றது. வெளியில் வராமல் வீட்டிற்குள்ளேயே கூடியவரை முடங்கிக் கிடந்தோம். எங்களின் வீட்டிற்கு ஆறாவது வீடொன்றில் நான்கு வயோதிபர்கள் இடம் பெயராமல் இருந்தனர். அவர்கள்தான் 'வெளியில் வராதீர்கள்' என எச்சரித்திருந்தனர். பொடியன்கள் வீடு வீடாக வந்து இடம்பெயராதிருப் பவர்களை லொறிகளில் ஏற்றிச்செல்கிறார்கள் என்ற வதந்தி நிலவியது.

"நாவற்குழிப்பாலம் மூடியாச்சுது. ஆமி யாழ்ப்பாணத்திற்கு வந்திட்டுது. இனி எப்படி அங்கால சாவகச்சேரிக்குப் போறது.? "என்றாள் தையல்முத்தாச்சி.

"நீ சொல்வது சரிதான். ஆனால் பெடியளுக்கு ஓராயிரம் பாதை தெரியும்...எதற்கும் இங்க நிம்மதியாய் இருப்பம். பொறுமையா கண்டபாட்டிற்கு வெளியில் திரியாமல் இருப்பம். அராலியில இருபது முப்பது குடும்பங்கள் இருக்காம். எல்லாரும் எங்களைப் போல வயோதிபர்கள்... நோயாளர்கள். அவர்களை பார்க்கவெனத் தங்கி விட்ட பிள்ளைகள்.."


யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென் மேற்குக்கரையில் அராலிக்கிராமம் அமைந்திருக்கின்றது. நெல்வயல்களும் தோட்டநிலங்களும் பனை வடலிகளும் கடற்கரையும் கொண்ட அழகான கிராமம். மாரிகால வயல்கள் கோடையில் தோட்டங்களாக மாறி இருக்கும். வீட்டிற்குவீடு மாடுகளும் ஆடுகளும் கோழிகளும் வளர்க்கப்படும். பனைபடு திரவயங்கள் முறையாகப் பேணப்பட்டுவரும். ஒடியலும் பனாட்டும் எல்லா வீடுகளிலும் எப்பொழுதும் இருக்கும். கோயில் திருவிழாக்கள் அராலிக் கிராமத்தில் இரவிரவாக நிகழ்ந்த காலமுள்ளது. இன்று மனித சஞ்சாரமற்று வெறிச்சோடிப்போய்விட்டது. ஆட்களின்றி வயல்கள் கதிர் தள்ளி நிற்கின்றன. வீடுகள் எவருமில்லாமல் மூடப்பட்டும் திறந்தும் கிடக்கின்றன. பனைமட்டைகளும் கங்குகளும் வளவெல்லாம் விழுந்து சிதறிக் கிடக்கின்றன. மாடுகளும் ஆடுகளும் நாய்களும் வளர்த்தவர்களைத் தேடி அலைகின்றன. வழக்கம் போல மாலையில் திரும்பி வந்து பட்டியிலடைக்கப்படாமையால் அவை படிப்படியாக குழுவேறி வருகின்றன. சிலமாடுகள் வயலிலேயே கன்றுகளை ஈன்று வளர்த்தெடுத்து நாய்களுக்கு எதிராகக் கன்றுகளைப் பாதுகாத்து மூசித்திரிகின்றன.

யாழ்பாணத்திலிருந்து அராலி நோக்கிய இடப்பெயர்வை ஒருகணம் நினைத்துப் பார்கிறேன்.

அதிகாலையிலே நாங்கள் அராலி நோக்கிப் புறப்பட்டோம். எனது பழம் சைக்கிளில் ஒரேயொரு சூட்சேசைப் பின்கரியரில் வைத்துக்கட்டி, ஒரு உரப்பையில் வீட்டிலிருந்த அரிசி சாமான்களில் கொஞ்சத்தைக் கொட்டிக் கொண்டு அதையும் சைக்கிளில் கட்டிக்கொண்டு புறப்பட்டோம்.

இப்பொழுது நினைத்தாலும் உடல் நடுங்குகிறது. கடற்கரை வீதியால் உருட்டிக் கொண்டு நடக்கும் போது எவரும் வீதியில் இல்லை. சந்தை மடத்தை அடைந்தபோது நாய்கள் எங்களைப் பின்தொடரப்பார்த்தன. அவற்றினைத் துரத்திவிட்டு நடந்தோம். தூரத்தில லூசியனின் வீடு தெரிந்தது. போய் பார்த்தால் என்ன என்ற ஒரு மன அவசம் ஏற்பட்டது. சென்றவன் திரும்பி வரவில்லை. என்ன நடந்ததோ?

தையல்முத்தாச்சிக்கு என் எண்ணம் புரிந்தது. கண்களால் 'வேண்டாம்' என்றாள். சற்றுவேளை சந்தியில் தயங்கிவிட்டு வடக்குப் புறமாகச் சைக்கிளை உருட்டினேன்.



மயான அமைதி எங்கும் நிலவியது. குண்டு வெடிச்சத்தங்கள் ஓய்ந்திருந்தன. பொம்மைவெளி வயல்களில் வெள்ளந்தேங்கிக் கிடந்தது. கடற்கரையோரத்தில் கொட்டிக்கிடந்த குப்பைகளுள் ஏதாவது கிடைக்குமா எனச் சில நாய்கள கிளறிக் கொண்டிருந்தன. அழகம்மாவின் குடிசையைக் கடந்து நடந்தோம்.

'செபஸ்தியான் பொறுத்த தருணத்தில் அவளுக்கும் பிள்ளைகளுக்கும் வாழ்வு கொடுத்தான்.'என நான் திருப்தியாக எண்ணிக்கொண்டேன்.

"இதுதான் அழகம்மாவின் குடிசை." என்றேன் மனைவியிடம் ஒரு பேச்சுக்கு.

என்மனைவிக்கு நடந்து பழக்கமில்லை. கால்கள் காக்கைதீவை அடைவதற்கு முன்னமே கெஞ்சத் தொடங்கிவிட்டன.

நாங்கள் வாடிமடத்தில் சற்றுத் தங்கி இளைப்பாறினோம்.

அராலிப்பாலத்தடிக்கு வந்தபோது நண்பகலாகியிருந்தது. எங்கு பார்த்தாலும பசுமையாகவிருந்தது. ஆனால் ஒரு சந்தடியையையும் காணவில்லை. வயல்களில் வயிறுநிறைய மேய்ந்த மாடுகள் மரநிழல்களில் படுத்து அசைபோட்டுக் கொண்டிருந்தன. கல்லூண்டாய் வெளியெங்கும் மாடுகளும் ஆடுகளும் நிறைந்திருந்தன. அவை வழக்கத்திலும் பார்க்க, வேலியற்ற வயல்களிலும் தோட்டங்களிலும் வீட்டு வளவுகளிலும் மேய்ந்து கொழுத்திருந்தன.

பாலத்தடியில் நாங்கள் மனைவி அமர்ந்து கொண்டோம். பூவரசமரத்தின் அருகில் பஸ்தரிப்புக்காக கட்டப்பட்ட சிறுகட்டடத்தில் நாங்கள் காலாற அமர்ந்து கொண்டோம். பிளாஸ்ரிக் போத்தலில் எடுத்துவந்த நீரைப் பருகினோம்.

"அங்க இருக்கேக்க மனசில இருந்த பயம், இங்க இல்லை. இப்ப தூரத்திலதான் குண்டு வெடிக்கிற சத்தம் கேட்கிறது... நான் நினைக்கிறன் ஆமி இந்தப் பக்கம் வராதெண்டு..." என்றாள் தையல்முத்தாச்சி.

"ஒருசனத்தையும் காணேல்லை. பவளத்தின்ர வீட்டுப்பக்கமும் இப்படித்தான் இருக்குமோ?.."

"இருக்காது... அராலியில ஆக்கள் இருக்கினம் என்று லூசியன் சொன்னான்." என்ற அவள், "லூசியனுக்கு என்ன நடந்திருக்கும்?" என்று ஏறிட்டுப் பார்த்தாள்.

நான் ஏதோ சொல்ல வாயெடுத்த போது ஓர் ஆட்டினை ஐந்தாறு நாய்கள் விடாப்பிடியாகத் துரத்துவது தெரிந்தது. வயலில் விழுந்தடித்து 'ம்மே' என்றலறியவாறு ஓடிய ஆடு பயத்துடன் வீதியில் ஏறியது. நாய்கள் பசியால் வேட்டையாடத் தொடங்கி விட்டன. தார்வீதியில் அந்த ஆடு சறுக்கி விழுந்தபோது ஒருநாய் அதன் பின் தொடையில் கவ்வியது. அது மீண்டும் எழுந்து ஓடி நாங்கள் நின்ற பக்கமாக வந்தது.

"சூய்..சூய்..அடிக்..அடிக்..."

ஆடு எங்கள் பக்கம் வந்து பரிதாபமாக நின்றது. அதன் உடல் பதறி நடுங்கியதைத் தையல்முத்தாச்சி பார்த்தாள். மனிதர்கள் இருவரைக் கண்ட நாய்கள் உறுமின. பின்னர் சற்றுக் கலைந்து போயின.

இனி என்னவென்னவெல்லாமோ நடக்கப்போகுது. நாய்கள் பசிக்கு வேட்டையாடும் நிலைக்குத் தள்ளப் பட்டுவிட்டன.

சைக்கிளை உருட்ட தையல்முத்தாச்சி பின் தொடர்ந்தாள். சைக்கிளை இடைக்கிடையே பின்னால் பற்றித் தள்ளி விட்டாள். நாங்கள் பாலத்துச் சந்தியிலிருந்து அராலிப்பாதையில் திரும்பி நடந்தோம். சற்றுத்தூரம் நடந்த பின்னர் தையல்முத்தாச்சிக்குத் தன்பின்னால் ஏதோ நடந்து வருவது போலவிருந்தது. பயத்துடன் திரும்பிப் பார்த்தாள். நாய்களினால் துரத்தப்பட்ட அந்த வெள்ளாடு அவளுக்குப் பின்னால் வந்துகொண்டிருந்தது.

"இஞ்சை பாருங்கோப்பா.. இந்த ஆட்டை.."

நானும் பார்த்தேன்.

"சரி வரட்டும்.."

அந்த ஆடு இன்று எங்கள் வீட்டு முற்றத்தில் படுத்திருக்கிறது. அது வளவை விட்டு வெளியில் போகப் பயந்து கிடந்தது. எங்களுக்கும் அந்த வெள்ளாட்டிற்கும் எதுவித வித்தியாசமும் இல்லை.

தூரத்தில வாகனம் ஒன்று விரைந்து செல்லும் சத்தம் கேட்டது. வெகுநாள்களுக்குப் பின்னர் ஒரு வாகனத்தின் சத்தம் கேட்கிறது. இராணுவமாக இருக்கமுடியாது.

வயல்கரையோரத்தில் குச்சொழுங்கைகளூடாக எங்களைத் தேடி எவரும் வரவில்லை. முற்றத்தில் போர்டிக்கோக் குந்தில் அமர்ந்திருந்து சிந்தனை வயப்பிட்டிருந்தேன். பிள்ளைகள் அங்கு என்ன செய்கின்றனவோ? இங்கு சனமில்லை. சாவகச்சேரியில் அசைவதற்கு இடமில்லாமல் சனத்திரள்.

ஒழுங்கை முகட்டில் ஒரு வயோதிபர் என்வீட்டை நோக்கி வருவது தெரிந்தது. ஐந்தாறு வீடு தள்ளி இருக்கின்ற நான்கு வயோதிபர்களில் அவர் ஒருவர். மயில்வாகனம் என்று பெயர். படலையைத் திறந்துகொண்டு வந்தார்.

"வாருங்கோ..."என்று அவரை நான் வரவேற்றேன். பேச்சுத்துணை கிடைப்பதென்பது இந்தச் சந்தர்ப்பத்தில் அற்புதமானது.

"எப்படிச் சமாளிக்கப்போறம் எண்டு தெரியேல்லை.ஏதோ கொஞ்ச நெல் கிடக்குது. குத்திக் குத்திக் காய்ச்சுறம். அது முடிஞ்சதும்... தேயிலை ஒரு சொட்டும் இல்லை. சீனி கிடையாது..."

"இதுக்குப் போய் பயப்பிடுகிறியள், மயில்வாகனத்தார். அராலியில ஏதோ ஒவ்வொரு வீட்டிலும் நெல் இருக்கும்... நாங்க இப்போ கொஞ்சப்பேர் தான் இருக்கிறம். எங்கடவீட்டில முடிஞ்சவுடன் தேடிச்சேகரிப்பம். வயல் கதிர் தள்ளி இருக்குது. அறுவடை செய்வம். தேயிலை இல்லாவிட்டால் என்ன... மாடுகளைப் பிடிச்சுப் பால் கறப்பம். மோர் தயாரிப்போம்... சாப்பாட்டிற்கு இங்க பஞ்சமா? தேங்காய் சொரிஞ்சு போய்க் கிடக்குது... வளவுகளில வாழைக்குலைகள் கிடக்குது.. வெல்லலாம்..." என்றேன்.

"அப்ப மற்றாக்களின்ர வீடுகளில இருக்கிற உணவுப் பொருட்களை எடுக்கலாம் என்கிறியள்.."

"அதிலை பிழையில்லை. உணவுப் பொருட்களை மட்டும் எடுக்கலாம்."

"ஒரேயொரு கடை வட்டுக்கோட்டையில இருக்காம்."

"அங்க காய்கறி தேங்காய்... அவ்வளவுதான்."

"எண்ணெண்டு விளக்கெரிக்கிறியள்.."

"தேங்காய் எண்ணைதான்... மூன்று தேங்காயைத் திருவிக் காச்சினம்."

"அதுசரி துரையப்பர், நெருப்புப் பெட்டிக்கு என்ன செய்யிறியள்.?"

"அதைக் கேளாதையுங்கோ.. உங்களுக்கு இப்ப தேவையெண்டால் ஐந்தாறு குச்சி தாறன்."

மயில்வாகனம் சற்று நேரம் அமைதியாவிருந்தார்.

"கடற்கரைப்பக்கம் இண்டைக்கு ஒரு கிழவி செத்துப்போச்சுதாம். காய்ச்சல்தான். மருந்தில்லை. சரி.... எங்களுக்கு அப்படி ஏதாவது வந்தால் மருந்து தண்ணியில்லாமல்..." அவர் குரல் கம்மியது.

எனக்கும் பிரச்சினை தெரிந்தது.

மயில்வாகனம் தொடர்ந்தார்.

"என்னோட இருக்கிற என்ர சகலனுக்குச் சலரோகம். ஏதோ பில்ஸ் போடுறவன். இப்ப ஒண்டுமில்லை. என்ன செய்யிறான் தெரியுமோ? வீடு வீடாகக் குறிஞ்சா இலை தேடிப் பிடுங்கி ஆடு குழை சப்புறமாதிரிச் சப்பிறான். பிரச்சினை இல்லையென்கிறான்.."

"பாருங்கோ.. மருந்து கண்டுபிடிச்சிட்டம்..." என்று நான் சிரித்தேன். என் ஆச்சிக்குத் தெரிந்திருந்த கை வைத்தியங்கள் எனக்குத் தெரிந்திருக்கவில்லை எனக் கவலையாகவிருந்தது.

இப்பொழுது அவை தெரிந்திருந்தால் எவ்வளவு நல்லாகவிருக்கும்?

"வட்டுக்கோட்டைப்பக்கம் கன ஆக்கள் இருக்கினமாம்... அங்க ஒரு யூனிவேசிற்றி டாக்குத்தர் இருக்கிறாராம்.."

"வைத்தியம் பார்க்கிற டாக்குத்தரோ?"

"ஓமோம்... அவர் மருந்து கொடுக்கிறவர். மருந்துதான் இல்லை. அராலியிலும் ஒரு டாக்குத்தர் வந்திருக்கிறார். அவரின்ர சொந்தவிடம் அராலிதான். ஆனால் அவர்வரலாற்றுக் கலாநிதி...பேராசிரியர்...மருந்து தரமாட்டார். லெக்சர் தருவார்.."

"எனக்கு அவரைத் தெரியும். கரைப்பிட்டி விநாயகர் கோயில் அவரின்ரதானே?..."

"ஓமோம்.."

வெகுநேரம் இருவரும் பேசிக் கொண்டோம். தையல்முத்தாச்சி இரு பேணிகளில் தேநீர் தந்தாள். சீனியில்லாத கயாசம். இருவரும் திருப்தியாக அருந்தினோம்.

"இன்னும் இரண்டு நாளைக்குத் தேயிலைத் தூள் இருக்குது."

"பயப்படாதை, தங்கச்சி.. நாளைக்குப் பக்கத்து வீடுகளுக்க புகுந்து குசினிகளில தடவிப் பார்ப்பம். இல்லாமலா போகப்போகுது?" என்று மயில்வாகனத்தார் சிரித்தபடி விடைபெற்று எழுந்தார்.படலைவரை சென்றவர் திரும்பிவந்தார்.

"துரையப்பர், கெதியில இங்க ஆமி வந்திடவேணும்..."

மயில்வாகனத்தார் ஏன் அப்படிச் சொன்னார் என்பதற்குரிய அர்த்தம் எனக்குப் பலநாள்கள் புரியவில்லை.

(தொடரும்)

## குறள் வெள்ளம்

வானுயர் தோற்றம் எவன் செய்யும் என்ற கேள்வியை எழுப்பியவர் வள்ளுவர்

உனது தோற்றம் வானுயர இருந்தும் எதையும் உன்னால் சாதித்துவிட முடியாது என்று விட்டார் அவர்.

தோற்றத்தைக் கண்டு மயங்கும் முட்டாள்கள் அல்லர் இவ்வுலக மக்கள். அவர்களை உனது எடுப்பால் ஏமாற்றி விடுவது இயலாத காரியம்.

பார்த்தவர் பிரமிக்கும் தோற்றமோ, பலரையும் வெட்டிச்சொல்லாடவல்ல உனது நாவன்மையோ - உனது அடங்காத் தன்மையை உலகம் பழிக்க வைக்குமேதவிர [illegible] வளர்க்குமே தவிர - உ[illegible] அடையாளம் காட்ட உதவாது.

காண்பவரையெல்லாம் இழுத்துப்பிடித்து நீ அறுத்துக் கொட்டுவது - ஏதோ அறிவுப் போதனை என்று கற்பனை பண்ணி விடுகிறாய். அவர்கள் ஒளித்து ஓடுவதை நீ உணராய்.

நீ வாழ்க்கையில் முரண்படாமல் - திரியாமல் - பண்பு பிறழாமல் வாழப்பார். அத்தோடு அடங்கியே இருந்தும்விடு. உனக்குள்ளே நிறைய ஏதோ புதைந்து கிடப்பதாக உலகம் கருதும்.

உன் அறிவும் ஆழமும் தோற்றமும் மலையிலும் மாணப் பெரிதாக - மிகப் பெரியதாக - உலகோர் கண்களில் வெளிப்படும்.

**நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்**
**மலையினும் மாணப் பெரிது.** - 0124

- அடக்கமுடைமை -

- *அம்பிகைபாகன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணவாளனே மங்கை


# பசி வந்தபோது தன் கு

## இனக்கலப்பு ஆண்களுக்கு ஓர் உயிர்ப்பிரச்சினை

சிலந்திகள் சாதாரணமாகத் தனித்து வாழும். ஒன்றையொன்று சந்தித்தவிடத்துக் கொன்று புசிக்கத் தயங்குவதில்லை. அதனால் இவற்றில் இனக்கலப்பு ஏற்படுவது பெரியதொரு பிரச்சினை. அதிலும் ஆணுக்கு அது பெரியதொரு சோதனை. ஆயினும் இனக்கலப்பு நிகழாது போனால் - முட்டைகள் கருக்கட்டப்படாது போனால் - சந்ததி அழிந்துவிடும். அதனால், இயல்பூக்கம் (INSTINCT) காரணமாக ஆண்கள் இனக்கலப்பில் ஈடுபடும். உயிர்போனாற்றான் என்ன? எச்சங்கள் தோன்றுமே! சந்ததி நிலைக்குமே!

பெண் சிலந்திகள் இனக்கலப்புக்குத் தயாராக இருப்பதை ஆண்கள் எப்படியோ அறிந்து விடுகின்றன. எப்படி அறிகின்றன என்பது இன்னமும் புரியாத புதிராக இருக்கிறது.(அது சிலந்திகளின் விடயம், நாம் ஏன் மூக்கை நுழைக்க வேண்டும்?)

எப்படியோ பெண்ணின் நிலையறிந்த ஆண் சிலந்தி பெண் சிலந்தியின் வலையருகே வரும். வலையின் ஓரமாகவே நின்று கொண்டு ஒருவித




“கபில துறவிச் சிலந்தி (Brown Recluse spider). கறுப்புக் கைம்பெண் சாதிக்குச் சேர்ந்தது. ஆயினும் இதன் விடம் அவ்வளவு கொடுமையானதல்ல.

நடனம் புரிந்து நூல்களை அசைக்கும். இந்த அசைவுகளை அறிந்து, வந்திருப்பது யார் என்பதைத் தெரிந்து, பெண் சிலந்தி வலையின் மையத்திற்குச் சென்று அசையாமல் இருக்கும்.

ஆண் பெண் சிலந்திகளுக்கிடையே வேறுபாடுகள் துலக்கமாகத் தெரியும். பெண் ஆணைக் காட்டிலும் பெரியது. ஆணின் இரண்டாவது சோடித் தூக்கங்கள் (முதலாவது கொடுக்கு) பெரியவை. விந்து வழங்குவதற்கு இவை பயன்படும். பெண்ணை நாடிவந்த ஆண், பெண்ணிடம் செல்லப்போதிய துணிச்சலின்றி, அதைச் சுற்றி ஓடியாடிக் கொண்டிருக்கும். பெண்ணோ எதுவித அசைவுமின்றி பதுங்கிக் கொண்டிருக்கும். இப்படியே சிலபொழுது சென்றபின் ஆண் மெல்ல மெல்லப் பெண்ணண்டைவரும். வந்ததும் பெண் திரும்புவதைக் கண்டு பயந்து தலை தெறிக்க ஓடும். இப்படியே இந்நிகழ்ச்சி நிகழ்ந்து கொண்டிருக்க, நேரமும் போக, ஆணுக்குத் தைரியமும் வர, அது பெண்ணை நாடி அதன் வயிற்றுப்பகுதியைத்தூக்கி சனனித்துவாரத்திற்குள்ளே ஏற்கனவே தனது தூக்கங்களில் எடுத்துத் தயாராக வைத்திருந்த விந்தைப் பாய்ச்சும். பாய்ச்சிய கையோடு திரும்பித் தலைதெறிக்க ஓடும். ஆயினும் அநேகமாக அதைத்துரத்திப் பிடித்த பெண் தனது சுயம்வர விருந்தாக அதை உட்கொள்ளும். உயிர்தப்பும் ஆண்களின் எண்ணிக்கை ஏதோ மிகமிகக் குறைவுதான்.

சிலந்திகளின் காதலாடல் நிகழ்ச்சியை உங்கள் வீட்டுச்சுவர்களிலும் காணலாம். ஆனால் முழு நிகழ்ச்சியையும் காணவேண்டுமானால் அசாத்தியப் பொறுமை வேண்டும். தமிழ்ப் படம் போல நிகழ்ச்சி நீண்டு கொண்டே போகும். காதலில் சைவம் அசைவம் என இரண்டு வகை என்கின்றார்கள். சிலந்திகளின் காதலாடல்தான் அசைவ முறையோ?



கறுப்புக் கைம்பெண் (Black Widow) சிலந்திகளிலேயே விடம் கூடியது.

## தாய்க்குப் பசி வந்தால் குஞ்சும் உணவாகும்

இனக்கலப்பின் பின் பெண் முட்டைகளை இட ஆரம்பிக்கும். முட்டைகளை நூலினால் பின்னப்பட்ட கூடுகளுக்குள் இட்டு (EGG COCOONS) அக்கூடுகளை சங்கிலிக்கோர்வை போல வலையிலே பொருந்திவைக்கும். பசியுள்ள வேளைகளில் உணவு கிடையாதுபோகின், கூடுகளைப் பிரித்துத் தனது முட்டைகளையோ அல்லது குஞ்சுகளையோ புசிப்பதற்குத் தாய் சிறிதும் தயங்குவதில்லை. சூரிய வெப்பம் காரணமாக முட்டைகள் பொரித்துக் குஞ்சுகள் வெளியேறும். இவையும் சமயம் கிடைத்தால் ஒன்றையொன்று புசிப்பதற்கோ அல்லது தாயைப் புசிப்பதற்கோ தயங்குவதில்லை. பின் இவை பரவும் நோக்கத்துடன் உயரமான மரங்களில் ஏறி, காய்ந்த நூலில் பட்டம் செய்து, அதைப் பறக்கவிட்டு, அதைப் பற்றிக் கொண்டு செல்லும். நல்ல காற்று வீசுமாயின் இவை பலமைல்கள் தொலைவுக்கும் கொண்டு போகப்படுவதுண்டு.


### விசித்திர நூல்

மனிதன் பட்டம் விடக்கற்றுக் கொள்ளும் முன்பே - ஏன் மனிதன் தோன்று முன்பே - இவை பட்டம் விடக்கற்றுக் கொண்டுவிட்டன. இப்படியே பரவிய சிலந்திகள் தகுந்த இடங்களைத் தேர்ந்தெடுத்துத் தமது வலைகளை அமைக்கும். சிலந்தி வலைகளில் பல வகையுண்டு. பொதுவாக ஒவ்வொரு வலையிலும் ஆரைப்பாடாகச் செல்லும் சில நூல்களும், மையத்திலிருந்து விளிம்பை நோக்கி வளையமாடப்பட்டிருக்கும் சில நூல்களும் காணப்படும். இயற்கையில் காணப்படும் நூல்களில் மிகவும் மெல்லியதும் ஈயுந்தன்மையுடையதும் அதிக பாரத்தைத் தாங்கக் கூடியதும் சிலந்தியின் நூல் ஒன்றுதான். இதையொத்த ஒன்றை மனிதன்

# சிலந்திகளின் வாழ்க்கை விசித்திரம்

இனிமேல்தான் கண்டு பிடிக்க வேண்டும்.

ஒரு வலையில் இரண்டு வகையான நூல்கள் காணப்படும். ஒன்று ஒட்டுந்தன்மையுள்ளது. மற்றது காய்ந்த - ஒட்டாத - தன்மையுள்ளது. வலையில் ஓடித்திரியும்போது இந்த வேறுபாட்டை அறிந்து அதற்குத்தக்கதாகச் சிலந்தி ஓடித்திரியும். சிலந்திகளுக்கு இரண்டு சோடியோ அல்லது மூன்று சோடியோ(இனங்களுக்கு ஏற்ப நாலு அல்லது ஆறு) தனிக் கண்களிலிருந்தும் கண்பார்வை மிகக்குறைவு. ஒளிக்கும் இருட்டுக்கும் வேறுபாடு தெரியும்; விம்பங்கள் துலக்கமாகத் தெரிவதில்லை.




சிலந்தியை நாம் நோக்கும் போது அது நம்மை முழித்துப் பார்ப்பது போலிருக்கும். ஆயினும் நாம் முன்னிற்பது அதற்குத்தெரியாது. ஏதோ நிழலுருவம் அசைவது போலிருக்கும். சிலந்திகளில் மண உணர்ச்சியும் தொடுகையுணர்ச்சியும் நன்றாக விருத்தியடைந்திருக்கின்றன.

### உணவாகக் கொள்வது சுவையான சாற்றை

வலையில் ஏதும் இரைகள் விழுந்ததும் ஏற்படும் அதிர்வுகளைக் கொண்டு அறிந்த சிலந்தி ஓடிச்சென்று அவற்றைப்பிடித்து விடத்தைப் பாய்ச்சி நூலாற் கட்டி வலையுடன் இணைத்துவிடும். பின் உணவு கொள்ளும் போது உணவிலிருந்து சாற்றைத்தான் உறிஞ்சி எடுக்கும். வாய் மிகச் சிறியதாக இருப்பதனால் உணவைப் புசித்து மகிழ இவற்றால் முடிவதில்லை.


### இரைதேடி வேட்டைக்குச் செல்லும் சிலந்திகள்

சிலந்திகளின் இடப்பெயர்ச்சிக்கும் அவற்றின் நூல் பெரிதும் பயன்படும். ஒரு சில சிலந்தியினங்கள் வலைகள் கட்டுவதில்லை. தமது இரையை ஓடியோ, பாய்ந்தோ பிடிக்கும். இரையை ஓடிப் பிடிக்கும் காரணத்தால் பொட்டுப் பூச்சியை ஆங்கிலத்தில் “ஓநாய்ச்சிலந்தி” (WOLF SPIDER) என்றும் “வேட்டையாடும் சிலந்தி” (HUNTING SPIDER) என்றும் அழைப்பார்கள். இது எப்பொழுதும், அதாவது முட்டை பொரித்துக் குஞ்சுகள் வெளியேறும் வரை, தனது முட்டைப் பையைக் காவித்திரியும். பெண் சிலந்திகள்தான் கொண்டு திரியும். முட்டைப்பை இருக்கும் போது பெண்ணின் வயிற்றுப்புறத்தில் வட்டமான வெண்ணிறமான பையிருப்பது துலக்கமாகத் தெரியும். பொட்டுப் போன்ற முட்டைப்பையைக் காவித்திரிவதனால் பொட்டுப்பூச்சி என்று தமிழில் அழைக்கின்றோம். (ஆனால் இது பூச்சியல்ல - சிலந்தி. பூச்சிகளுக்கிருப்பது மூன்று சோடிக் கால்கள். சிலந்திகளுக்கு நாலு சோடி) புலிமுகச் சிலந்தியும் தனது இரையை ஓடியோ பாய்ந்தோ பிடிக்கும்.

### கொடியவிடமுள்ள சிலந்திகள்

சிலந்திகள் எல்லாம் விடமுள்ளவை. ஆயினும் சில சிலந்திகள்தான் மிக விடமுள்ளவை. ஏனையவை கடித்தாலும் எமக்குத் தெரிவதில்லை. கொடிய விடமுள்ள சிலந்திகள் கடித்தால்தான் மனிதனுக்கு ஓரளவு பாதிப்பு ஏற்படும். சிலந்திகளின் விடம் நரம்புத்தொகுதியைப் பாதிக்கும். சிலந்தி கடித்ததும் - குளவி கொட்டியதும் ஏற படும் வலி போல ஏற்படும். சற்றே அதிகமாக விடம் ஏறுவதை உணரக்கூடியதாயிருக்கும். ஒரு சில நிமிடங்களில் கொட்டிய இடத்திற்கு அண்மையிலுள்ள நிணநீர்முடிச்சுக்களில் நெறியேற்படும். உதாரணமாகப் புறங்காலில் கடித்தால் விடம் ஏறுவதையும் முதலில் கணுக்காலிலும், அடுத்து முழங்காலிலும் அடுத்து கவட்டிலும் நெறி போடுவதை உணரலாம். (சொந்த அனுபவம்). கடித்த இடத்திலோ அல்லது உடல் முழுவதுமோ எரிவு ஏற்படுவதுண்டு. கடுமையான தசைவலிப்பு, வாந்தி, பொதுவான அமைதியின்மை, தோல் நீலநிறமடைதல் போன்ற குணங்குறிகளும் தோன்றலாம். கடித்த இடத்தில் சிறிதாகவோ பெரிதாகவோ வீக்கம் ஏற்படலாம். கடிவாயில் புண் ஏற்பட்டு அது ஆறுவதற்குப் பல நாள்கள் செல்லலாம். புலிமுகச் சிலந்தி கடித்தால் பெரிய அளவில் அசௌகரியம் ஏற்படுமேயொழிய மரணம் ஏற்படுவதில்லை. ஆனால் அமெரிக்க நாட்டுக்குரிய கறுப்புக்கைம்பெண் சிலந்தி கடித்தால் மரணமும் ஏற்படலாம்.

சிலந்திகளுக்குள்ளேயே கூடியவிடமுள்ளது



சிலந்தி வலை - வட்டப்பின்னல் வலை.

அமெரிக்காவில் வாழும் “கறுத்தக் கைம்பெண்” (BLACK WIDOW) என்றழைக்கப்படும் சிலந்தியாகும். புருஷனைக் கொன்று புசிக்கின்ற காரணத்தினால் இதற்கு இப்பெயர் சூட்டப்பட்டதாகக் கருதப்படுகின்றது. ஆயினும் புருஷனைப் பொறுத்தவரை ஏனைய சி
அவ்வளவு கொடுமை
எப்போதாவது இதுவும்



கொடிய விஷமுள்

இது பார்ப்பதற்குச் 
போலிருக்கும். அளவி
லியவை; நெடியவை.
வயிற்றுப்புறமாக சி
கண்ணாடி (HOUR G
குப் போன்றது என்றும்
ளம் உண்டு. இவ்வ
இச்சிலந்தியை சுலப
முற்றிலும் கபில நிறமு
(BROWN WIDOW)

நம் நாட்டிலுள்ள 
முள்ளது புலிமுகச்சி
இது ஆபிரிக்கா, இந்தி
கிழக்கு ஆசிய நாடுக
படும். பொதுவாக அ
களிலும்,வனாந்தரங்க
தானிருக்கும் நிலையி
கியும் இரண்டு மூன்
மிக விரைவாக ஓடக்
அடித்துக் கொல்ல மு
மெடுக்கவேண்டும். பு
யான நீண்ட மயிர்ப்பே
பெரியது. கால்களும்
மாகவுள்ள நாலு கண்
துலக்கமாகத்தெரியும்.
கமாகத்தெரியும். உட
மும் கலந்திருக்கும்.
பட்டைகளாக (BAND

“கபிலதுறவிச்சில
USE SPIDER) ‘கறு
ரியது. பார்வைக்கு ‘க
வேயிருக்கும். ஆனால்
ரணமாக வீடுகளிலும்
லும் பாரதூரமான வி
மரணம் ஏற்படுவ தில்

மேலைநாடுகளில்
ANTULA) என்று ஒ
அது உண்மையில் “ர
முன்னாளில் வழங்க
ரஹன்ருயூலா இன்கு
INQUILINA). இப்ெ
இலைக்கோசா நார்ே
NARBONENSIS). இ
நாடுகளுக்குரியது. இ

### கூட்டமா

ஒரு சில இனச்சில
GARIOUS) வாழுவ
ளிலும், ஓலைகளிலு
மேடுகளிலும், வயற்
சிலந்தி கூட்டமாக வா
உடல் வட்டமானது. க
வும், மிக நெடியதாயு
ஏற்பட்டாலும் இவை
லேயே தமது நெடிய
உடல்களை மேலும் கீ
மிகவும் வேடிக்கைய
வடைக்காரர்” (HARV
டைக்கால் நட்டுவனார்”
என்றழைக்கப்படும். ந
காடுகளில் மரங்களிலு
கட்டி வதியும் ஒரு வ
விருப்பதைக் கண்டிரு
பெயரும் ஆராயப்பட

### ஆட்ட

“பெண்டாட்டி பேச்
என்று எம்மவர் சில
ஆண்சிலந்தியும் பெ
கின்றதே! இதை இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...யின் சுயம்வர விருந்து!
# ...ஞ்சுகளும் கூட உணவு!!

ந்திகளைப்போல இது
பானதல்ல. இருந்தாலும்
புருஷனைப் புசிப்பதுண்டு.



...ா புலிமுகச் சிலந்தி

...தாரணச் சிலந்தியைப்
... சிறியது. கால்கள் மெல்
... கறுப்புநிறம். வயிற்றில்,
...ப்பு நிறத்தில் மணிக்
...ASS) போன்ற - உடுக்
...கொள்ளலாம் - அடையா
...டயாளத்தைக் கொண்டு
...க இனம் காணமுடியும்.
...ள "கபிலக் கைம்பெண்"
...என்ற பேதமுமுண்டு.
...லந்திகளில் கூடிய விட
...ந்தி (TARANTULA).
...பா, கிழக்கு மற்றும் தூர
... ஆகியவற்றிலும் காணப்
...ா மண்டலப்பிரதேச நாடு
...ரிலும் காணப்படும். இது
...ிருந்து எத்திசை நோக்
... தூரம் பாயக்கூடியது.
...டியது. அதனால் இதை
...லும் போது கூடிய கவன
...முகச் சிலந்தி அடர்த்தி
...வை கொண்டது. உடல்
...தடிப்பானவை. முன் புற
...களும் சாதாரணமாகவே
...பெரிய கொடுக்கும் துலக்
...ில் நரை நிறமும் கரிநிற
...ால்களில் இந்நிறங்கள்
...S) இருக்கும்.
...தி" (BROWN RECL-
...க் கைம்பெண்' சாதிக்கு
...ப்புக் கைம்பெண்' போல
...பில நிறமுடையது. சாதா
...ாணப்படும். இது கடித்தா
...ாவுகள் ஏற்படும். ஆனால்
...லை.
...ுலிமுகச்சிலந்தி (TAR-
...றை அழைக்கின்றார்கள்.
...ன்ருயூலா" அல்ல. அதற்கு
...ட்ட விஞ்ஞானப் பெயர்
...லினா (TARANTULA
...ழுது வழக்கிலுள்ள பெயர்
...னென்சிஸ் (LYCOSA-
...சிலந்தி தென் ஐரோப்பிய
... ஓரளவு விடமுள்ளது.

### ... வாழுபவை

...திகள் கூட்டமாக (GRE-
...தக் காணலாம். மரங்க
... வேலிகளிலும், குப்பை
...ங்களிலும் ஒருவகைச்
...வதைக் காணலாம். இதன்
...ல்கள் மிக மெல்லியதாக
...க்கும். ஏதாவது அதிர்ச்சி
...ட்டமாக, நின்ற இடத்தி
...ால்களால் தாங்கப்படும்
...ம் ஆட்டுவது பார்ப்பதற்கு
...பிருக்கும். இவை "அறு
...STMEN) அல்லது "நெட்
...DANDY LONG LEGS)
...ர்கோயில் சதுப்பு நிலக்
... மரப்பொந்துகளிலும் கூடு
...ச் சிலந்தியும் கூட்டமாக
...கின்றேன். இதன் இனமும்
...ண்டியதொன்றாகும்.

### ...ம் பாட்டமும்

...குத் தாளம் போடுபவன்"
...ரக் குறிப்பிடுகின்றோம்.
...ாட்டி முன் தாளம் போடு
... நாடகத்துக்கு ஓர் எடுத்

துக்காட்டாக ஏன் எடுத்துக்கொள்ளக் கூடாது?

### நாடகம் - நடிகர் திலகங்கள்

ஆண் அருகில் வரும்பொழுது, ஒன்றும் தெரியாத அப்பாவிப்பெண் போலப் பதுங்கியிருந்து இனக்கலப்பு முடிந்ததும் ஆண் மேறப்பாய்ந்து அதை மடிப்பதை நாடகத்திற்கு - சிறந்த நடிப்பிற்கு - உதாரணமாகச் சொல்லலாம். பாவம் ஒன்றும் தெரியாத ஆண் பெண்ணின் மாய வலையில், இல்லை வாயில் சிக்கிவிடுகின்றதே.

### பொறிவைக்கும் பேராளர் பொறியியல் மேதைகள்

தமது இரையைப் பெறுவதற்குப் பலவகையான பொறிகளை விரிக்கும் சிலந்தியினங்கள் பலவுண்டு. சாதாரணச் சிலந்திகளின் வலைகளைப் பற்றி ஏற்கனவே அறிந்து கொண்டோம். அவற்றில்தான் எத்தனை பொறிநுட்பம்? எத்தனை அழகு? சிலந்தி வலைகளை அடியொற்றித்தான் மனிதன் தொங்கு பாலங்களை (SUSPPENSION



பெரிய மயிர்ச் சிலந்தி (Large Hairly Spider). சிறிய பறவைகளைக் கூடப் பிடித்து உண்ணக் கூடியவை. அதனால் ஏவிகுலேறியன் (Avicularion - Bird Eating Spider) என்ற பெயர். பூப்போன்ற தோற்றத்தைக் கவனியுங்கள். இவை புலிமுகச் சிலந்திகளைப் போன்றவை, ஆனால் பெரியவை.

BRIDGES) அமைக்கக் கற்றுக்கொண்டான்.

வனவிலங்குகள், பறவைகள், மீன்கள் போன்றவற்றைப் பிடிப்பதற்கு பயன்படும் வலைகளை மனிதன் கண்டு பிடிப்பதற்கு சிலந்தி வலைகள் உதவியிருக்கலாம். இன்று துப்பாக்கி ரவைத் தடுப்பு உடைகளை (BULLET PROOF COATS) தயாரிப்பதற்குச் சிலந்திவலை நூல்களைப் பயன்படுத்த முயற்சிப்பதாக அறிகிறோம்.


இப்பொழுது சிலந்திகள் பொறிவிரிக்கும் வேறு சில முறைகளைக் கவனிப்போம்.

-குகன்-

நமது நாட்டில் நிலத்தில் வேலி நிலங்களிலும் பற்றை அடிகளிலும் புல்வெளிகளிலும் வாழும் "பொறிக்கதவுச் சிலந்தி" (TRAP DOOR SPIDER) நிலத்தில் வளை ஏற்படுத்தி, சுவரை நூலால் வேய்ந்து, வாசலில் ஒரு பொறிக்கதவை அமைத்து, (வாசலுக்கு வெளியேயும் நாலாபக்கமும் உள்ள நிலம் நூலால் மூடப்பட்டிருக்கும்). வாசலில் இருந்து கொண்டு படலையை (பொறிக் கதவை) மெதுவாகத் திறந்து பிடித்துக் கொண்டு போவோர் வருவோரைப் பார்த்துக் கொண்டிருக்கும்.

சிறிய பிராணிகள் குழியின் அருகில் வந்ததும் அவை விஷயத்தை அறியுமுன்பே ஓடிச் சென்று அவற்றைப் பிடித்து மீண்டும் ஓடிச்சென்று குழியில் மறைந்துவிடும். தனது எதிரிகள் வரும் போது கதவை மூடிக் கொண்டு உள்ளே மறைந்திருக்கும். சில சமயம் இதன் இருப்பிடத்தைக் கண்ட எதிரி (இதன் எதிரிகளில் முக்கியமானது குளவி) இதன் பொறிக்கதவை வெளியே நின்று இழுக்க, சிலந்தி உள்ளே நின்று இழுக்க இரண்டிற்குமிடையே இழுவைப் போட்டி நிகழும். இப்படி ஊரையும் ஏமாற்றி இரைபிடிப்பது சிறந்த நடிப்பில்லையா? 'பொறிக்கதவுச் சிலந்தி' இலங்கையில் மாத்திரமல்ல உலகளாவிய ரீதியில் உண்டு.

ஆபிரிக்கக் காடுகளில் வாழும் ஒருவகைச் சிலந்தி நிலத்தில் புற்றளிர்கள் நாலைத் தேர்ந்தெடுத்து அல்லது நாலு பூண்டுக்குச்சிகள் அல்லது சிலசமயங்களில் தானே நாலு சிறுகுச்சிகளை நாட்டி குச்சிகளின் மேல் மெல்லிய பட்டுப் பேன்றவொரு வலைவிரிப்பை விரித்துக் கீழே காவலிருக்கும். வலையின் அழகால் கவரப்பட்டோ (சூரிய ஒளிபடும் போது அதிலும் பனித்துளிகளும் இருந்தால் சிலந்திகளின் வலைகள் மிகக் கவர்ச்சியுள்ளவையாயிருக்கும்) அல்லது "தலைவிதி" காரணமாகவோ வலையில் வந்து விழும் பூச்சிகளைச் சிலந்தி கீழிருந்தபடியே பிடித்து உணவாகக் கொள்ளும். பின் வலையைச்



முட்டைகளில் இருந்து வரும் குஞ்சுகள்.

செப்பனிட்டு மீண்டும் காத்திருக்கும். சிலந்திகள் எல்லாம் தமது வலைகளில் கூடிய கவனம் செலுத்தும். எப்பொழுதும் ஆராய்ந்து தேவையேற்படுமிடத்து செப்பனிட்டு வலையை எப்பொழுதும் சீர் நிலையில வைத்திருக்கும். நங்கூர நூல்களில் (ANCHORING THREADS) அதாவது ஆரைக்குரிய நூல்களில் ஒன்றை அறுத்துவிட்டால் மிக விரைவாக அதனைச் செப்பனிட்டுவிடும். மீன் பிடிகாரனின் வலை போல சிலந்திக்கும் அதன் வலை முக்கியமானதொரு உபகரணமல்லவா?

மேற்படி பொறிமுறையில் நடிப்பிலும் பார்க்க முக்கியத்துவம் நாடக அரங்கு அமைப்பிற்குக் கொடுக்கப்படும். இவ்வகைச் சிலந்திகள் இலங்கையிலும் இருக்கலாம். ஆயினும் ஆதாரபூர்வ

### அங்கிகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்

மான தகவல்கள் இல்லை. புல்பூண்டுகளின் மேல் வலைபின்னும் சிலந்திகள் வலைக்கு மேலிருக்கும். ஆனால் மேற்படி சிலந்தி நிலமட்டத்திற்கு சற்று மேலாகவே வலையைப் பின்னி வலையின் கீழ் நிலத்தில் காவலிருக்கும்.

### நடிப்பியற் புலவர்கள்

புலிமுகச் சிலந்திகளும் (TARANTULAS) அதன் வகைக்குச் சேர்ந்த "பொறிமயிர் செறிந்த சிலந்திகளும்" (LARGE HAIRY SPIDER) ஏவிகியுலாறிடே (AVICULARIIDAE) என்ற குடும்பத்துக்குச் சேர்ந்தவை. ஏவிகியுலாறிடே என்பதன் கருத்து "பறவை தின்னும் சிலந்திகள்" (BIRD EATING SPIDERS) என்பதாகும்.

இவை வடஅமெரிக்கா, மத்திய மற்றும் தென்னமெரிக்க, கரீபியன் தீவுகள், ஆபிரிக்கா, ஆஸ்திரேலியா, இந்தியா, இலங்கை, மடகாஸ்கர், நியுகினி போன்ற இடங்களில் பரவலாகக் காணப்படுகின்றன. இவற்றுள் சாதாரணப் புலிமுகச்சிலந்தி பூச்சி புழுக்களைத்தான் உணவாகக்கொள்ளும். குடும்பப்பெயர் இவற்றுக்குப் பொருந்தாது. ஆயினும் மர வாழ்கைக்குரிய, பெரிய பலநிறங்களை உடைய, மிகவும் மயிர் செறிந்த, பூப் போன்ற வடிவமைப்புள்ள சிலந்திகள் உண்டு. இவை மரக்கிளை நுனிகளுக்குச் சென்று பின் கால்களால் கிளையைப் பற்றிக்கொண்டு முன் கால்களை பூவிதழ்களைப்போல முன்நீட்டிக் கொண்டு அசைவற்ற நிலையில் இருக்கும். இதைப் பூவென்று கருதிய பூச்சிகளும் தேன் குடிக்கும் சில பறவைகளும் தேன் குடிக்கும் நோக்கத்துடன் இதன் மேல் வந்தமர்ந்ததும் அவற்றைப் பற்றிச் சாற்றை உறுஞ்சிவிட்டு வயிறு நிறையாவிட்டால் மீண்டும் கால்களை நீட்டிக் கொண்டு காவலிருக்கும். இதன் எதிரிகள் தென்படும்போது ஓடிச்சென்று இலைகளுக்குள் மறைந்துவிடும். சிறந்த நடிப்பிற்கு இலக்கணமாய் அமையவில்லையா இது?



பொறிக்கதவுச் சிலந்தி (Trap Door Spider). பொறிக்கதவு திறந்த நிலையில் உள்ளது. சிலந்தி உள்ளே செல்கின்றது.

நடிப்பின் சிகரத்தையே பிடிக்கவில்லையா இது? நடிகச் சிலந்திகளில் இது நடிகர் திலகமில்லையா?


### கமக்காரர்களின் தோழர்

சிலந்திகள் சங்கோசப் பிராணிகள். அரவம் ஏற்பட்டதும் ஓடிச் சென்று மறையத்தான் பார்க்கும். எந்தவொரு சிலந்தியும், புலிமுகச் சிலந்தி உட்பட தேடிவந்து கடிப்பதில்லை. பூச்சிகள் நடமாட்டம் அதிகமுள்ள இடங்களில் சிலந்திகளும் அதிக எண்ணிக்கையில் காணப்படும். அதனால் பூச்சிகளின் நடமாட்டம் அதிகமுள்ள குளியலறை, கக்கூசு, களஞ்சியஅறை, தோட்டம் போன்ற இடங்களில் சிலந்திகள் சாதாரணமாகக் காணப்படும். நாமும் இவ்விடங்களைத் தரிசிக்க வேண்டியிருப்பதனால், தெரியாமல் நாம் அவற்றைத்தீண்ட அவையும் தற்செயலாக(ACCIDENTAL) நம்மைக் கொட்டிவிடுகின்றன. இயல்பூக்க அடிப்படையில் தற்காப்பு நடவடிக்கையை அவை மேற்கொள்ளுகின்றன. இங்கு குற்றத்தை யார் மீது சுமத்துவது? நீங்களே நீதி வழங்குங்கள்.

கற்குவியல், ஓலைக்குவியல், குப்பைக்குவியல், மரப்பொந்துகள், வாழையின் திறந்த அடிமடல்கள் போன்ற இடங்களில் நிச்சயமாக புலிமுகச்சிலந்தியை எதிர்பார்க்கலாம். நாம் அவதானமாயிருந்தால் எமக்குப் பிரச்சினையில்லை, சிலந்திக்கும் பிரச்சினையில்லை. கண்டதும் கொல்ல வேண்டும் என்ற அவசியமும் இல்லை.

பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதில் சிலந்திகள் தான் பெரும்பங்காற்றுகின்றன. சிலந்திகள் இல்லையென்றால் உலகமே பூச்சிமயமாகப் போயிருக்கும். சூழல் ஒரு சமநிலையில் இயங்கும் வண்ணமே இயற்கையின் ஒழுங்குகளிருக்கும். மனிதன் அதைக்குழப்பும் போதுதான் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இயற்கைச்சமநிலையை வேறு எந்த அங்கியும் குழப்புவதில்லை.

தோட்டங்களிலும் வயல்களிலும் ஏன் எமது வீடுகளிலும் பூச்சிகளைக் கட்டுப்டுத்துவதில் சிலந்திகள் பெரும்பங்காற்றுகின்றன. எங்காவது சிலந்தி வலையைக் கண்டால் அதில் எத்தனை பூச்சிகள், எத்தனை நுளம்புகள் அகப்பட்டிருக்கின்றன என்பதைக் கவனியுங்கள். இங்ஙனம் ஒரு கணிப்பீடு எடுப்பதற்கு முயற்சித்துப்பாருங்கள் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதில் சிலந்திகள் எவ்வளவு தூரம் உதவுகின்றன என்பது புலப்படும். நாம் வீடுகளில் படுக்கைஅறைக்கு மாத்திரம் அல்லது படுக்கைக்கு மாத்திரம் நுளம்பு வலையை விரிக்கிறோம்.



ஆண்சிலந்தி - காதலாடலில் ஈடுபட்டுள்ளது. விந்தைப் பாய்ச்ச பயன்படும் தூக்கங்கள் கொடுக்கையடுத்துப் பெரிதாகத் தெரிகின்றன. காதலாடலின் போது இவற்றைத் உயரத் தூக்கியபடியே ஆண் ஆடும். பெண் ஆணைக்காட்டிலும் மிகப் பெரியது. முன்பக்கமாக நான்கு தனிக் கண்கள் துலக்கமாகத் தெரிகின்றன.

ஆனால் சிலந்திகளோ நாடளாவியரீதியில் அல்லவா வலை விரிக்கின்றன? நெல் வயலை எடுத்துக்கொண்டால் அடிமட்டத்திலிருந்து பயிரின் உச்சிவரை பூச்சிக்காவலர்களாக சிலந்தி வகைகள் உண்டு. நீரில் வாழும் சிலந்திகள், பயிரின் அடிகளில் வாழும் சிலந்திகள், நடுமட்டங்களில் வாழும் சிலந்திகள், தளிர்களின் உச்சிகளில் வாழும் சிலந்திகள் என்று திதிகளுக்கு (NICHE) ஏற்ப சிலந்தி வகைகளுண்டு. சூரிய ஒளியில், பயிரின் மேலே தொடர்ச்சியாகச் சிலந்தி வகைகள் இருப்பது புலப்படும். வலைகள் எவ்வளவிற்கு அதிகமாக இருக்கின்றதோ அவ்வளவிற்கு பயிருக்கு பாதுகாப்பு அதிகமெனக் கொள்ளவேண்டும். மருந்தடிக்கும் போது சிலந்திகளும் ஏனைய பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் அங்கிகளும் மடிந்துவிடும். பூச்சிகள் ஓரளவிற்கு கட்டுப்படுத்தப்பட்டாலும் பிற இடங்களிலிருந்து வந்து எதிரிகளில்லாத காரணத்தினால் அதிகமாகப் பெருக்கமடைந்து, கூடிய பிரச்சினையைத்தரும். சிலந்திகள் ஆற்றும் பங்கை மனத்திற் கொண்டு அவற்றைக் கமக்காரரின் தோழரெனக் கொள்ளலாமல்லவா? கமக்காரர்களும் உயிரினக்கட்டுப்பாட்டு முறைகளை இப்பொழுது ஓரளவு உணர்ந்து கொள்ள ஆரம்பித்துள்ளார்கள்.

குறிப்பு:- **ஆபிரிக்க மக்களுக்கு சிலந்திப்பொரியல் மிகவும் பிடித்தமானதொன்று. ஆனால் இது சாதாரணமாகக் கிடைக்காது. பணக்காரர்களின் கலியாண விருந்து வைபோகங்களின் போதுதான் கிடைக்கும். உங்களுக்கும் நாக்கில் ஜலம் ஊறுகின்றதா? வீட்டிலேயே தயாரித்துச் சுவைத்துப் பாருங்களேன்! (அருவருப்புக்காரணமாகவும் நாக்கில் ஜலம் ஊறும். ஏற்படுவது எந்த வகையோ அதற்கேற்ப நடந்து கொள்ளவும்.)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்வுகள்



நீலவானம் பரந்துவிரிந்து சிவப்பைப் பூசியபடி மேற்குப்பக்கமாகச் சொருகிக்கிடந்தது. ஒன்றிரண்டு மேகக் கூட்டங்கள் சோடிசோடியாக நகர்ந்து கொண்டிருந்தன. சுழன்றடித்து வீசிய சோளகக்காற்று சொக்கிப் போயிருந்ததால் மேகங்களின் வேகங்கள் மட்டுப் படுத்தப்பட்டிருந்தன.

வசந்த காலத்தின் விளைவினை உணர்த்துவதுபோல நன்கு சடைத்துக் கிளைத்திருந்த வேப்பமரத்தினடியிலே கதிரையில் படுத்திருந்த எனக்கு, இந்த வானத்தையும் கேற்றினூடாகத் தெரியும் நீண்டவீதியையும பார்ப்பதைத்தவிர வேறென்ன பொழுதுபோக்கு?

ஒன்றையே மீண்டும்மீண்டும் பார்ப்பதனால் மனிதமனம் சலிப்படைந்து விடுவது இயற்கைதானே! எனினும், பார்க்கப்படும் பொருளை மாற்றாமல் பார்வையிலே புதுமைகளைப் புகுத்துபவர்களுக்கு எதுவும என்றைக்கும்பழகிப்போனதாகத் தோன்றாது.

பாரிசவாதம் வந்து கைகால் வழங்காமல் இந்தக்கதிரையும் அந்தக் கட்டிலும் எனக் கடந்த பத்த ஆண்டுகளாகப் படுத்துக்கிடக்கும் எனது நிலையைப் பற்றிச சொல்லத்தேவையில்லை.

ஓய்வு என்பது உடலுக்கு அவசியமானாலும், தொடர்ச்சியான ஓய்வு மனதைத் தன்பாட்டில் இயங்கவைத்து விடும். உடல் ஓய்வெடுக்கும்போது மனம் அலைபாயத் தொடங்கி, ஆனந்தத்தையும் வேதனையையும் மாறிமாறி அனுபவித்துக் கொள்கிறது. இதிலிருந்து தெளிவடைவதென்பது எவருக்கும் கைகூடாத ஒன்று.

என் கணவர் அரசசேவையிலிருந்து ஓய்வுபெற்றுச் சரியாகப் பதினைந்து ஆண்டுகள் நிறைந்துவிட்டன. நான் இயலாமல் முடங்கியது போல அவர் என்றைக்கும் தளர்ந்தது கிடையாது.

## உடுவில் அரவிந்தன்

நாற்பது வருடத் திருமணவாழ்வென்பது ஒரு சாதனையாகக் கொள்ளப்படவேண்டியது. அந்தச்சாதனையை நிகழ்த்திய பெருமை எங்கள் இருவருக்குமுண்டு. திருமணம் என்பது சந்தோஷப்படவும், சந்ததியைப் பெருக்கவும் மட்டுமே ஏற்படுத்தப்பட்டது என்ற கருத்து நிலவுகின்ற வேளையிலே அவற்றைவிடவும் எவ்வளவோ உண்டு என நிரூபித்தவர்கள் நாங்கள். மகிழ்வானசந்தர்ப்பங்களில ஒன்றாகமகிழ்ந்து, துன்பப்பட்ட போதெல்லாம் சேர்ந்தே துடித்து...ஒருவருக்குப்பிடிக்காதவற்றை மற்றவர் இயன்றவரை செய்யாதிருந்து, பிடித்தவற்றையெல்லாம் செய்ய முயற்சித்து.....!

உண்மையான நேசிப்பின் வெளிப்பாடாக இவற்றை நாங்கள் கருதுவதாலேயே அவ்வாறிருக்க முடிகின்றது. இவ்வேளைகளில் எமது தனிப்பட்ட சுயகௌரவங்களையெல்லாம் மூடைகட்டி வைத்துவிடுவோம். உள்ளங்கள் ஒன்றானவேளையில் அவையெல்லாம் எமக்கிடையில் எதற்கு என்ற பொதுவான கொள்கை இருப்பதாலேயே அவ்வாறிருக்க முடிகின்றது. ஒருவரில் ஒருவர் வைத்திருக்கின்ற பூரண நம்பிக்கைதான் எங்கள் இல்லறவெற்றியின் இரகசியம் என்பதை இன்றும் நம்புகின்றோம்.

இல்வாழ்க்கை ஒரு கலை என்று சொல்லுவார்கள். அதை ஆரம்பத்திலேயே கற்றுத்தேறியவர்களாக எவரும் இருப்பதில்லை. போகப்போகவே அது புரியத்தொடங்கும். புற அழகெல்லாம் அழிந்து தனியே உள்ளங்களை நேசிக்கின்ற காலத்திலேதான உண்மை அன்பென்றால் என்னவென்று உணர்கின்ற பக்குவம் முழுமையாக வந்தடையும். வாழ்ந்து அனுபவித்தவர்கள் விட்டுச்சென்ற தத்துவம் இது.

எங்களுக்கு விளைந்தவை இரண்டு ஆண்பிள்ளைகள். மூத்தவன் திருமணமாகி வெளிநாட்டில் இருக்கிறான். அடுத்தவன் பத்துவருடங்களுக்கு முன்பே எம்மைவிட்டுப் பிரிந்து போய் விட்டான். இப்போது அவன் வன்னியில் இருப்பதாகக் கேள்வி. அவனுடைய பிரிவினால் உண்டான தாக்கம் இந்தப் போராட்டத்தின் மீது எனக்கு ஒருவித வெறுப்புணர்ச்சியையே ஏற்படுத்தியிருந்தது.

குடாநாட்டில் எங்காவது தாக்குதல் நடந்தால் என்மனம் திடுக்கிடும். சமூகநிலையைக் குலைக்கிறார்களே என்றெண்ணி ஆத்திரப்படுவேன். என் கணவர் மட்டும் சந்தோஷப்படுவார். சிறுபிள்ளைபோலத் துள்ளிக் குதிப்பார். சம்பந்தப்பட்ட செய்தியை நாலைந்து தடவைகள் வாசித்துப் பார்ப்பது மட்டுமல்லாது வீம்புக்காக எனக்கும் காட்டுவார். அவ்வேளைகளில் இருவரும் கொஞ்சநேரம் வாக்குவாதப்படுவோம். பிறகு சமாதானமாகி விடுவோம்.

குடும்பவாழ்விலே கருத்து முரண்பாடென்பது என்றைக்குமே வரக் கூடாது. இருவரில் ஒருவர் விட்டுக் கொடுப்பதே தீர்வுகாண்பதற்கான சரியான வழியாகும். எந்தவிடயமானாலும் விட்டுக்கொடுத்துவிடும் நான் இதில் மட்டும் சற்று முரண்படுவேன்.

இன்று மதியம்கூட அப்படித்தான்.

இதமான வெந்நீரில் குளிப்பாட்டிய பின் இந்தக்கதிரையிலே என்னைப் படுக்க வைத்திருந்தார் என் கணவர். இனிமையான காற்றுவீசி என்னைச் சிலிர்க்க வைத்ததால் மனம் பொங்கி மலர்ந்திருந்தது. தலையை இலேசாகத் திருப்பி, சற்றுத்தள்ளி முன்விறாந்தையிலே அமர்ந்திருந்தவரைப் பார்த்தேன். என் உள்ளத்திலே காதல் நிரம்பியது. காதலுக்கு வயதில்லை என்றும் சொல்வார்கள். இந்த வயதிலும் எங்களால் ஒருவரையொருவர் ஆழமாக நேசிக்கமுடிகிறதே! உணர்வுகள் ஒரு போதும் அழிவதில்லை என்பது உண்மைதானோ?

வெகு மும்முரமாகப் பத்திரிகையைப் படித்துக்கொண்டிருந்தவர் தற்செயலாக என்னைத் திரும்பிப் பார்த்தார். நான் மெல்ல முறுவலித்தேன்.

"என்ன கடுமையா யோசிக்கிறீர்? தலை இன்னும் காயேல்லையே?" அவருடைய குரலிலே பரிவு நிறைந்திருந்தது.

"அது காஞ்சிட்டுது..."

"அப்ப.....?"

"சும்மா கிடந்து இழுபட்டு உங்களுக்கும் கரைச்சல் தாறன். அது தான் மனதுக்குச் சங்கடமாக கிடக்கு..."

இதைக்கேட்டதும் பத்திரிகையை வைத்துவிட்டு எழுந்து என்னை நோக்கி வந்தார். வந்தவர் எனக்கு அருகிலிருந்த கல்லில் உட்கார்ந்து கொண்டார். எனது விழிகளைக் கொஞ்சநேரம் ஊடுருவியபின் கேட்டார்.

"புனிதம். தற்செயலா நான் இப்பிடிக்கிடந்தா நீர் என்னைப் பாத்திருக்கமாட்டீரோ?"

"ஐயையோ! ஆர் சொன்னது அப்படி?" பதறிப்போய்க் கேட்டேன்.

"அப்ப உம்மைப் பராமரிக்கிறது எனக்குக் கஸ்ரம் எண்டு ஏன் சொல்லுறீர்."

அவருடைய கரம் நரைத்துப் போயிருந்த எனது தலையை நடுக்கத்துடன் கோதியது. நிமிர்ந்து உட்கார்ந்து அவரது தோளிலே மெல்லத் தலையைச் சாய்த்துக் கொண்டேன்.

"இப்பிடியே செத்துப்போனாலும் பரவாயில்லைப் போல இருக்கு. உங்களுக்குமுதல் நான் போயிடவேணும். இயக்கத்துக்குப் போனவன் என்னைப் பாக்கவரான். கனடாவிலை இருக்கிற கழுதை எட்டியும் பாராது....."

"ஏன் புனிதம் அப்பிடிச் சொல்லுறீர்? நான் நடைப்பிணமாகத் திரிய நீர் வெள்ளெணச் சாகவேணும் எண்டு விரும்பிறீரே?"

அவருடைய குரல் இடறியது. அதற்குமேல் என்னால் எதுவும் பேச இயலவில்லை. என்னுடைய தொண்டைக்குள் ஏதோ அடைத்தது. இருவருக்கிடையே நிலவிய மௌனத்திலேயே பொழுது கரைந்து கொண்டிருந்தது. சற்றுநேரம் பொறுத்துக் கேட்டேன்.

"எங்கட சின்னவன் வன்னியிலை இப்ப என்னப்பா செய்து கொண்டிருப்பான்?"

இதைக்கேட்டதும் என்கணவரின் குரலில் உற்சாகம் தொற்றியது.

"அவன் இப்ப பெரிய ஆள் எண்டு கேள்வி!"

"பெரிய ஆள்தான். இந்தப்பத்து வருசமா நான் நெஞ்சிடியிலை இருக்கிறது அவனுக்கெங்க தெரியப் போகுது?"

"அது கிடக்கட்டும். இண்டைக்குப் பேப்பரிலை பாத்தனீரே, நேற்று நீர் வேலியிலை வெடிச்சு நாலுபேர் சரி. எண்டாலும் உவங்கள் சுழியன்கள் தான்!"

விருட்டென்று நிமிர்ந்தேன்.

"நல்லா வைச்சுப்போற்றுங்கோ. நீங்களும் உங்கட ஆக்களும்...." ஆத்திரத்தில் வெடித்தேன்.

"மகன் போட்டான் எண்ட கோபத்திலை நீர் உப்பிடிப்பேசிறீர். நாங்கள் போற்றாவிட்டாலும் பரவாயில்லை. பழிக்காமலாவது இருக்கவேணும் புனிதம்."

அவர் எதைக் கூறினாலும் என் மனம் சமாதானமாகவில்லை.

'இவர் என்ன இப்படிக் கல்நெஞ்சக் காரராக இருக்கிறாரே! மகனைப் பிரிந்த துயரம் கொஞ்சம்கூட இவரிடமிருப்பதாகத் தெரியவில்லையே!'

இவ்வாறு எண்ணி வேதனைப்பட்டேன். என்மகன் தானாகப் போனாலும் அவனை இணைத்துக் கொண்டவர்கள் மீதுதான் எனது கோபம் திரும்பியது.

'அர்த்தமற்ற ஒன்றுக்காக அநியாயமாகப்போய்த் தொலைகிறார்களே! இவர்கள் ஏன் இப்படிப்பட்ட முடிவினை எடுக்கிறார்கள்?'

என்னைத் தனியே யோசிக்க விடுவதுபோல அவர் எழுந்து தன்னிடத்துக்குப் போனார்.

மதியம் நிகழ்ந்தவற்றைச் சிந்தித்துக் கொண்டிருந்த எனக்கு அவர் அருகில் இல்லை என்பது உறுத்தியது. கடைப்பக்கம் போனவரை இன்னமும் காணவில்லை. ஒவ்வொரு தேவைக்கும் அவரையே தேடும் என்னால் இந்தச் சிறுபிரிவைக்கூடச் சகித்துக் கொள்ள முடியவில்லையே! எனது விழிகள் கேற்றடியை நோக்கிச் சலித்தன.

'அரசியல் பேசுவதற்கு யாராவது அகப்பட்டிருப்பார்கள். நல்ல பிரசங்கம் வைத்துக் கொண்டிருப்பார்' என எண்ணிச் சிரித்துக்கொண்டேன்.

திடீரென்று கேட்ட பெருத்த குண்டு வெடிப்பிலே என் சிரிப்புத் தொலைந்து போனது. வேப்பமரம் ஒரு முறை அதிர்ந்து அடங்கியது. தொடர்ந்து படபடவென ஒலித்த வேட்டுக்கள் என்னைப் பொறிகலங்க வைத்தன.

'மிக அண்மையாகக் கேட்டதே! அவரும் அந்தப்பக்கம்தானே போனார். ஒருவேளை...! கடவுளே! அப்படி ஏதும் நடந்துவிடக்கூடாது.'

நான் பல்வேறுவிதமாகக் கற்பனை செய்து பயந்தேன். வெருண்டு பறக்கும் பறவைகளுக்குப்போட்டியாக வீதியில் ஆள்கள் ஓடிக்கொண்டிருந்தார்கள். எனது மனக்கலக்கம் மேலும் அதிகரித்தது.

பொழுது மிக மெதுவாக நகர்ந்து என்னைக் கொல்லத் தொடங்கியது.

சற்றுநேரம் கழித்து கேற்றைத் திறந்து கொண்டு என் கணவர் தள்ளாடியபடி வந்தார். அவரிடம் ஓடிச்செல்ல மனம் துடித்தாலும் என்னால் அவ்வாறு செய்ய இயலவில்லை. அவர் என்னை அண்மித்ததும் அவருடைய நிலையைப் பார்த்துத் திடுக்கிட்டேன். உதடு கிழிந்து கடைவாயில் இரத்தம் வடிந்துகொண்டிருந்தது. உடைகள் கிழிந்திருந்தன. முகத்தில் இலேசான வீக்கம் எட்டிப்பார்த்தது.

வந்தவர் பொத்தென்று என்னருகே அமர்ந்தார். என்னால் அழுகையைக் கட்டுப்படுத்த இயலவில்லை. அவருடைய வாயில் வழிந்த இரத்தத்தை ஒருகையால் துடைத்தபடி அழத் தொடங்கினேன்.

"என்ன நடந்தது?"

அழுகையினூடு நான் கேட்ட கேள்விக்கு விடையளிக்க அவரால் முடியவில்லை. வார்த்தைகளை வெளியே விடச் சிரமப்பட்டவர், ஒருவாறு தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு கூறினார்.

"கனகம்புளியடிச்சந்தியிலை குண்டெறிஞ்சிருக்கிறாங்கள். ரெண்டு,மூண்டு பேர் பாட்டறிய விழுந்திட்டாங்கள். ஆத்திரத்திலை அம்பிட்ட சனத்துக்கெல்லாம் நெப்பிள் அடி. வயது போனவனெண்டும் பாராமல் அந்நீதம் விழுவார் கொட்டனாலை எனக்கு வெளுத்துப் போட்டாங்கள்!"

"ஆரன் எறிஞ்சதுக்கு உங்களை ஏனப்பா அடிச்சவங்கள்?" ஆற்றாமல் கேட்டேன்.

"உதை ஆரிட்டைப் போய்ச் சொல்லுறது புனிதம்? சுப்பற்றை பெடியனை மயங்கிவிழுகிற வரைக்கும அடிச்சிருக்

(XV ஆம் பக்கம் பார்க்க)

# 20ஆம் நூற்றாண்டில் உலக இலக்கியம்

## சில குறிப்புகள்



இக்னேஷியோ ஸிலோனி

11

அல்பேட்டோ மொறாவியா, உலகப் புகழ்பெற்ற இத்தாலிய எழுத்தாளர். ஜனரஞ்சகமும், இலக்கியத்தரமும் இணைந்த பெருந்தொகையான நாவல்களை அவர் படைத்தார். அவையாவும் உடனுக்குடன் ஆங்கிலத்தில் பெயர்க்கப்பட்டு, பெரும் வரவேற்பைப் பெற்றன. 'ரோமாபுரிப் பெண்' என்ற நாவல் அவற்றுள் முதன்மையானது.

மொறாவியா அளவுக்கு அறியப்பட்டிராத எழுத்தாளர் கிரேஸியா டெலட்டா. ஆங்கிலத்தில் வெளியான 'அன்னை' என்ற அவருடைய நவீனம் மூலமே உலகவாசகர்கள் டெலட்டாவைப்பற்றி அதிகம் அறியமுடிந்தது. குடியானவர்களையும், சாதாரண சனங்களையும் பற்றி எழுதிய மேல் தட்டு வர்க்கப் பெண்மணி என்ற பெயர் டெலட்டாவுக்கு உண்டு. 'அன்னை' என்ற நவீனம் ஒரு மதகுருவைப் பற்றியது. தன் மகனை மதகுருவாகவும், ஆன்மீகத்துறைத் தலைவனாகவும் காண விழைந்த ஒரு தாய் இதில் முக்கிய பாத்திரம். மகனின் காதல் இந்த ஆசைக்குக் குறுக்கே வருகிற போது தாய், தன் உயிரையே அர்ப்பணிக்கிறாள். 1926இல் டெலட்டாவிற்கு நோபல் பரிசைப் பெற்றுக் கொடுத்தது இந்நாவல். 1955இல் தி. ஜானகிராமனின் மொழிபெயர்ப்பில் இது தமிழிலும் வெளியாயிற்று.

டெல்டாவின் மிகவும் அறியப்பட்ட சிறுகதைகளுள் ஒன்றான 'காதற் கதை', என்பதுவும் க.நா.சு.வால் மொழி பெயர்க்கப்பட்டு வெளியானது. உலகத்தரம்மிக்க பல்வேறு மொழி இலக்கியங்களைத் தமிழில் பெயர்த்து வெளியிடும் முனைப்பு ஒன்று '50களில் தமிழ்நாட்டில்நிலவியிருக்கிறது. இதற்கு இன்னொரு உதாரணமாக, க.நா.சு. மொழிபெயர்த்த நோர்வே நாவலான 'நிலவளம்' என்பதைக் குறிப்பிடலாம். நட்ஹாம்ஸன் எழுதிய இந்நாவலும் (1920 இல்) நோபல் பரிசு பெற்ற படைப்பு. 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' என்பதற்கு இலக்கியமாய்அமைந்தது இது. ஒரு விரிந்த படுதாவில், இந்நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்த நோர்வேயை, அதன் வாழ்வை இந் நவீனம் சித்திரித்துக் காட்டுகிறது. நட்ஹாம்ஸன் நோர்வேஜிய மொழியில் எழுதியவர். எனினும் அவரால் பாதிக்கப்படாத நாவலசிரியர்கள் ஐரோப்பாவிலோ அமெரிக்காவிலோ இல்லை என்று சொல்லலாம் என விமர்சகர்கள் குறிப்பிடுகிறார்கள்.

நட்ஹாம்ஸன் இவ்வளவு கணிப்புப் பெற்றிருந்தாலும் பிற்காலத்தில் சொந்த நாட்டில் அவர் புகழுக்கு ஒரு களங்க மேற்பட்டமை துரதிருஷ்ட வசமானது. இரண்டாம் உலகப்பெரும் போர்க் காலத்தில் நோர்வேயை ஆக்கிரமித்திருந்த ஜேர்மன் ஆக்கிரமிப்பாளர்களுடன் அவர் ஒத்துழைத்தார் என்பதால் தமது மக்களின் அபிமானத்தை அவர் இழக்கநேரிட்டது.

நோர்வேஜியப் பெற்றோர்க்கு மகனாய்ப் பிறந்தும் ஆங்கிலத்தில் எழுதியவர் ரோல்ட் டால். தமது சிறுகதைகளாலும் குழந்தைகளுக்கான படைப்புக்களாலும் உலகப்புகழ் பெற்றவர். டால் பிறந்து வளர்ந்தது வேல்ஸில் என்பதால் இயல்பாகவே ஆங்கிலத்தில் எழுதலானார்.

ஆனால் தமது தாய் மொழியிலேயே - அது எவ்வளவுதான் அறியப்பட்டிராத மொழியாயினும்அதிலேயே - எழுதி உலகின் கவனத்தையும் 1985 இல் நோபல்பரிசையும் வென்றவர் ஐஸக் பஷேவிஸ் சிங்கர். இவர் யிட்டிஷ் மொழியில் எழுதினார். அநேகமாக எல்லாமே ஆங்கிலத்திலும் பிற உலக மொழிகளிலும் பெயர்க்கப்பட்டதாக அறியமுடிகிறது. அவருடைய 'முட்டாள் ஜிம்பல்' என்னும் கதை அதிகம் பேசப்படுவது. சிங்கருடைய கருத்துக்களும் குறிப்புக்களும் சுவாரஸ்யமும் கனதியும் மிக்கவை. 'எதிரிகள் ஒரு காதற்கதை' என்ற தம் நாவலின் முன்னுரையில், 'இதில் வருகிற பாத்திரங்கள் நாஸிஸப் பாதிப்புக்கு மட்டுமன்றி தத்தம் ஆளுமைகளாலும், விதிகளாலும் பாதிக்கப்பட்டவர்கள்' என்றார் அவர். 'எந்த ஒரு எழுத்தாளனும் தன் தாய் மொழியையும் அதிலுள்ள வளத்தையும் இழந்து விடலாகாது. சிறுகதை என்பது எழுதுபவனுக்கு இன்றைக்குக்கூட ஒரு பெருஞ் சவாலாகத்தானிருக்கிறது. கற்பனாலபாத்திரங்களும் இலக்கியத்தில் படைக்க முடியுமெனில் அது ஒருசாதனையே என்றார் சிங்கர்.

சிங்கர் ஒரு யூதர். ஹிட்லரின் யூத சங்காரத்தில் அவர் அகப்பட்டுக் கொள்ளவில்லை. 'அதில் அகப்பட்டுத் தப்பிப் பிழைக்கும் பேறு எனக்குக் கிட்டவில்லை' என நையாண்டியாக அவர் குறிப்பிட்டார். ஹிட்லரின் நாஸிக் கொள்கையில் ஒரு முக்கிய அங்கமாக விளங்கிய 'யூத இன ஒழிப்பு' என்பது, உலகமே அதுவரை கண்டிராத ஒரு குரூரமாக அமைந்தது. ஒஷ்விட்ஸ் போன்ற பெயர்கள், இன்றைக்கும் மனித குலத்தைப் பொறுத்தளவில் ஒரு பயங்கரமாக ஒலிக்கக்கூடிய அளவிற்கு நாஸிகளின் பெருமைகள் இருந்தன. 1945இல், சோவியத்நாடு ஜேர்மனியைத் தோற்கடித்து நாஸிகளின் முதுகெலும்பை முறித்த பின்பே யூதர்கள் நிம்மதிப் பெருமூச்சு விட முடிந்தது.

### சாந்தன்

என்றாலும் அப்போதுதான் அவர்கள் ஒரு விஷயத்தை உணர்ந்தார்கள். உலககெங்கும் எல்லா நாடுகளிலும் பரவி வாழ்ந்தாலும் யூதர்களுக்கென்றொரு நாடு உலகிலே இல்லை என்பதுதான் அது! தமக்கென்றொரு நாட்டை நிறுவத் தீர்மானித்தார்கள். இஸ்ரேல் உருவானது. யூதர்களின் வரலாற்றில் இந்தக்கால கட்டடத்தைத் தம்முடைய நீண்ட பல நாவல்கள் மூலம் பதித்து வைத்தவர் உலகப் புகழ்பெற்ற நாவலாசிரியரான லியோன் யூரிஸ். அவருடைய படைப்புக்களில் பெரும்பாலானவை யூதர்களின் ஜீவமரணப் போராட்டத்தையும், விடுதலை வேட்கையையும் உள்ளத்தைத் தொடும் வகையில் சித்திரிப்பனவாகவே அமைந்தன. இதற்கு உதாரணமாக அவருடைய 'தாயகப் பயணம்' மற்றும் 'மீஷா மாமாவின் படையாட்கள்' ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

இஸ்ரேலின் உருவாக்கமானது இன்னொரு பிரச்சினையையும் புதிதாக உருவாக்கிற்று. அது - இன்னமும் தீராதிருக்கின்ற - பலஸ்தீனப் பிரச்சினை. பலஸ்தீன மண்ணை இஸ்ரேல் அபகரித்துவிட்டதாகப் பலஸ்தீனியர்கள் உணர்ந்தார்கள். முதலாவது அரபு - இஸ்ரேல் யுத்தத்தின் போது பலஸ்தீனத்தின் முக்கால்பங்கு நிலப்பரப்பை இஸ்ரேல் கைப்பற்றியது. திட்டமிட்ட யூதக்குடியேற்றங்களாலும் வன்செயல்களினாலும் பலஸ்தீன அரபு மக்கள் தமது சொந்தமண்ணிலிருந்து விரட்டப்பட்டனர். பலஸ்தீன விடுதலைப்போராட்டம் உத்வேகம் பெற்ற வேளையில் இலக்கியமும் ஆயுதமாக மாறிற்று. பாரம்பரியம் வாய்ந்த அரபுக் கவிதை மரபு, பலஸ்தீனர்களின் - இழந்த தாயகத்தைப் பெறும் - போராட்டத்தில் வீரிமிக்கதோர் ஆயுதமானது.

1974 இல் வெளியான 'பாலஸ்தீனப் போராட்டம்' என்ற வெளியீடு பலஸ்தீனத்தின் நவீன கவிதை பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டது:- 'மஹ்மூட் தர்விஷ், சமி அல் காசிம், தை·பீக் சையத் போன்ற கவிஞர்களின் வரவுடன் போராட்டக் கவிதை மறுபிறப்பெடுத்தது. முந்திய தலைமுறைக் கவிதையில் காணப்பட்ட துன்பியலானது, விதியையே வெற்றி கொள்ளும் வீரமாக இப்போது வெளிப்பட்டது. இந்தக் கவிஞர்களின் படைப்புகள், அகதிவாழ்வு, அபகரிக்கப்பட்ட நிலம், தாய்நாட்டின் மீதான பக்தி - இவற்றைப் பற்றிப் பேசுகின்றன. அதே வேளை போராடத்தயாரான துணிச்சல், இன அழிப்பை எதிர்த்து முகங்கொடுத்தல், அராஜகமிக்க அந்நிய ஆட்சியைப் புறக்கணித்தல் என்பவற்றைப் பற்றியும் அவை பேசுகின்றன!

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணமகன் தேவை

பின் தூங்கி முன் எழும் முந்தையர் பழக்கங்கள்
முற்றாக ஒதுக்குதல் வேண்டும்.
என்னோடு உறங்கியே என்னோடு எழுந்திட
ஏற்றவர் தான் வர வேண்டும்.

காலை வேண்டிய கடமைகள் செய்யவே
கரம் அவர் கொடுத்திட வேண்டும்
மாலை திரும்பியதும் மல்லாந்து உறங்காமல்
மனையோடு உழைத்திட வேண்டும்.

கூட்டிப் பெருக்கினால் கூடவே நின்றவர்
குப்பை அகற்றிட வேண்டும்
வேட்டி உடுப்பென வேர்வை அழுக்குகள்
வாராந்தம் கழுவுதல் வேண்டும்.

சட்டி பானைகள் சார்ந்த வேலைகளும்
சளைக்காது செய்திடல் வேண்டும்
புட்டியில் பாலையும் பிள்ளை பருகிட
பிசகாது கொடுத்திடல் வேண்டும்.

வாரம் ஒரு சினிமா வலம் வரும் காட்சிகள்
வெறுக்காமல் காண்பிக்க வேண்டும்
சேரும் வருமானம் செலவினைக் காட்டாமல்
சேர்த்து முழுவதும் வேண்டும்.

ஆடை ஆபரணம் ஆடம்பரப் பொருள்களென
அன்பாக வாங்கி வர வேண்டும்
நாடும் சொந்தங்கள் நட்புறு விழா எல்லாம்
நாடியே சென்றிட வேண்டும்.

வண்ணத் தொலைக்காட்சி வடிவான குளிர்ப் பெட்டி
வாங்கித் தந்துவிட வேண்டும்
தின்னக் கன்டோசும் தீஞ்சுவைப் பழங்களும்
தினமும் வாங்கி வர வேண்டும்.

வீணான நட்புகள் விசர்க் குடி வகை யாவும்
காணாத ஆணாக வேண்டும்
நானும் படித்தவள், நாலுபணம் உழைப்பதை
நாயகன் உணர்ந்திட வேண்டும்.

எண்ணத்தில்இனிதான எனக்கிந்த மணமகனை
எடுத்துவர முடியுமா தரகா?
சொன்னபடி தந்தாலே சோக்கான புறோக்கர் பீஸ்
சுளையாகத் தருவேனே உனக்கு.

இத்தனையும் அமைந்த இனிதான மாப்பிளையை
இப்போதே கொண்டு நீ வந்தால்
பத்தென்ன கூடவும் பல லட்சம் தந்து அவரை
பட்டென எடுத்திடுவேன் பார்!

- மானியூர் ரட்ணேஸ் -

# இரைக்குப் பணம் தேடி....!

நேரம் போச்சுப் போச்சென்று
நேராய் ஓட்டம் ஓடிவந்து
கடலோரம் போகும் வண்டியிலே
கந்தோர் செல்லப் புறப்படுவோம்.

வண்டி நிறைந்த பயணிகளில்
வளையல் அணிந்தோர் அதிகமுண்டு
எண்ணும் எழுத்தும் கற்பிப்போர்
எண்ணில் அதிகம் இருப்பதுண்டு.


இடையிடையே தடைகள் உண்டு
இறங்கி நடக்க இடங்களுண்டு
நடைமுறைப் பயணம் இதுவென்று
நாளாந்தம் சென்று வருவதுண்டு

பரவைக் கடல் நடுவே
பறவையினம் இரை தேடும்
இரைக்குப் பணம் தேடி
இக்கடல் நடுவே நாம் செல்வோம்

சொந்தம் பந்தம் பணமிருந்தால்
சாந்தமுடன் சுகங்கள் வரும்
இந்த ஒன்றும் இல்லை யென்றால்
இன்னலுடன் இணைய வரும்

தளர்வறியா மன மிருந்தால்
தங்காது துயர் ஏதும்
வளர்பிறை போல் வாழ்வமைய
வாட்டத்தை ஓட்ட வைப்போம்!

- க.அருமைநாயகம் -




# ஆசைக்கடல்

ஆசைகளின் மேடைகளில்
ஆடுகிற ஆட்டம்மட்டும்
நாசமாகப் போவதாக இல்லை ~ மனம்
நரித்தனத்தை விடுவதாக இல்லை.

வேளைக்கொரு கொப்பிலேறி
மோக விளையாட்டில் ஊறி
நாளுக்குநாள் அலையும் மனமந்தி ~ அதன்
நாய்க்குணத்தால் சிரிக்குமடா சந்தி.

வாழ்க்கையெனும் மாலை..... மன
மந்தி கையில் சிக்கிச் சிக்கிப்
பாழ்படுதே பிய்ந்து! இதனை மாற்ற ~ யாரும்
பழகவில்லை; உள்ளச் சேற்றை ஊற்ற.

அடையுமட்டும் ஒன்றைத்தேடி
அதை அடைந்தால்... வேறைநாடி
உடையும்மனம்.....கவர்ச்சிகளில் கூடி ~ இந்த
உணர்ச்சி தானா வற்றிடாத ஆழி?

மாற்றானது மல்லிகையின்
மயக்குகிற வாசனையில்
மயங்கிக்கூட மனம்திரியும் என்றால் ~ ஆசை
மர்மக்கடல்... அலை விழுமா தன்னால்?

பெண்ணிலாசை பொன்னிலாசை
மண்ணிலாசை விண்ணிலாசை
என்று ஆசைத் தீயில் உடல்வேகும் ~ இது
எதுவரையும் தொடர்கதையாய் நீளும்?

நெஞ்சுளே கொதிக்கும் ஓர்
நெருப்புத்தான் உசாரைமூட்ட
தஞ்சம் போகும் தீமையிடம்... வாழ்வு ~ பாதை
தவறி அலைபாயும் 'எல்லாம்'! தீர்வு?

'வீழ்ந்தபோதும் ஆசைகளின்
மீசையில் மண் ஒட்டவில்லை
பாரு' எனப் பாடுதிந்தப் பாரு ~ அதன்
பளபளப்புள் எத்தனைதான் சீரு?

பழக்கம்மாற்றி ஒழுக்கம்மாற்றி
'பார்க்கும் பார்வை' ப்பொருளை மாற்றி
கலக்குகிற நனவு என்று தெளியும்? ~ அன்றே
கறுமங்களின் முகம் சரியாய்த் தெரியும்!

போடுகிற வேடமெல்லாம்
போட்டு கைகள் கால் களைத்து
சோருகையில் போயிடலாம் ஈனம் ~ எல்லாம்
சொத்தையான பின் வருமா ஞானம்?

- சுயனொளிபவன் -

# தமிழிற்காய்ச் சாக வேண்டும்!

தூய்மையும் அன்புசெய் அறங்களும் நிறைந்ததெம்
தமிழென தரணியில் காட்ட வேண்டும்
வாய்மையே வாழ்வென கொண்டெம(து) மூத்தவர்
வாழ்ந்ததை நாளெலாம் போற்ற வேண்டும்
பொய்மையை அகற்றிடும் புதுமைசேர் மொழியென
வையகம் வாழ்த்திட வாழியும் வேண்டும் - இதை
பார்தொரு கோடியாம் ஆண்டுகள் மகிழ்வொடு
வாழ்ந்திடும் வண்ணமாய் வரமும் வேண்டும்.

தத்தித் திரிகின்ற சித்திரப் பூங்குருவி
செந்தமிழில் பேச வேண்டும்
முந்தி உருவான முதல்மந்தி யினமுமிங்கு
எம்தமிழைப் பழக வேண்டும்
நீந்தி விளையாடுஞ் சின்னஞ் சிறுமீன்கள்
செழுந்தமிழில் பாடவேண்டும் - இதை
கண்டுமே பரவசத் தோடுபல் நூறாண்டுகள்
தமிழ்ப் பண்புடன் வாழவேண்டும்.

என் இனம் என்மொழி எனப்பல சண்டைகள்
போட்டுநீர் மாண்டிடும் நிலைமை வேண்டாம்
குண்டுகள் போட்டும் சோதரர் அழிவதைப்
பார்த்துநீர் இருக்கின்ற இழிவு வேண்டாம்
பண்புகள் அற்றுநீர் மண்ணிதில் மனிதரை
மாய்க்கின்ற இழிவான குணமும் வேண்டாம்
மண் மாண்பினை அழித்தொரு மாராட்சியம் அமைப்பதை
மனதிலும் ஒருநாளும் எண்ண வேண்டாம்.

எல்லோரும் ஓர் இனம் என்பதை நாட்டிட
கரம்கோர்த்து உலகமே ஆட வேண்டும்
எல்லோரும் ஓர்மொழி தமிழ்மொழி என்றொரு
புதுப்பள்ளு பார்மீது பாட வேண்டும்
எல்லாரும் தமிழராய் எல்லாமும் தமிழுமாய்
எங்கெங்கும் பரந்துநாம் வாழ வேண்டும்
என்றொரு நிலைவர எதற்கும்நாம் துணிவுடன்
தன்மானத் தமிழிற்காய்ச் சாக வேண்டும்.

- உமா செல்லத்துரை -

# அவளேதான்...!

கள்ளாய் மயக்கும் கனிச்சாறல்
காணும் மலர்த்தேன் சுவைகசக்கும்;
காய்கின்ற நிலவொளியில் காதல் பொங்க
கவிபாடும் புள்ளிசைதான் கசக்கும்;
கார்த்திகை மாதம் உலாப் போகும்
கார்காலம் கூட மனம் கசக்கும்;
கொள்ளை அழகு சுமந்திருக்கும்
கோதையிருக்கையிலே பிறகசப்பே!

உள்ளக் கமலத்துயிர் வாழும்
உலகின் சுந்தரக் கன்னியவள்
துள்ளிவந்தென் உளம் புகுந்தாள்
துளிர்க்கும் நினைவுள் தளிரானாள்!
பல்லவன் வடித்த பாவையடா!
பத்தரை மாற்றுத் தங்கமடா!
அள்ள அள்ள குறையா வான்
அமுதக் கலசம் அவள்தானோ!

கொல்லிமலைத்தேன் பிறப்பிடமோ
கோடி அழகின் உறைவிடமோ
மாயை நிறைந்த வாழ்கையினை
மறக்க வைக்கும் மதுக்குடமோ
நிலைத்த பொருளேதுமில்லை
நிறைந்த இன்பம் அதுவே தான்
ஏட்டில் என்ன எழுதிடினும்
எந்தன் வாழ்வு அவளேதான்!

- பா.நந்தன் -

# பிலாக்கொட்டை

மலிவாகக் கிடைக்குதென்று
வாங்கிவந்த காயொன்றை
அரிவாளில் போட்டெடுக்க -
அதுவளையும் - பாலொட்டும்,
அட போனால் போகுதென்று
அதைப் பிளந் தவித்தெடுத்த
பிடியொன்றைக் கறியிலே பிடிபிடிக்க
-'பிலாக்காய்', பிரமாதச் சுவைகள் தரும்!

அவித்தெடுத்த பிலாக்கொட்டை
அதையெடுத்து உரலிடித்து
பவித்திரமாய்ச் சர்க்கரையை
பக்குவமாய்ச் சேர்த்தெடுத்த
துவையலினை, நாலரைக்கு
துடிப்பாக வாயிலிட
அவையத்தில் கிடைக்காத
அறுசுவையின் வகை கிடைக்கும்!

இரவு புட்டவிக்க - நன்கு
இனிக்கின்ற பலாப்பழத்தை
சுளைகள் பிடுங்கியபின்
தும்பெடுத்து விதைநீக்கி
அருமை அருமையென
அதன் சுவைக்குத் தலையாட்டி
வெறுமை இடமின்றி
விரவ, வயிறாறும்!

உள்ளே வயிற்றுள்ளே
உணவைத் தாக்குகின்ற
வள்ளல் நொதியங்கள்
வாய்க்காது போனதுவோ?
நல்ல தலைச்சுற்று - உடல்
நமைச்சலுடன் வயிற்றுவலி
சொல்ல முடியாத பெருஞ்
சோகங்கள் ஆனதடா!

குத்து குடலிறங்கிக்
குமைச்சலுடன் முறுக்கிவிட
சத்தமிடும் குடலுள்ளே
சடபுடடென் றொலியெழும்பும்
'அப்பு, வீரட்டான அம்மானே - இவ்வலியை
தப்பாமல் மாற்றுடனே,
தாழ்பணிந்து வேண்டுகிறேன்!'

'குளிரான வாய்வுச் சாமான்
குடுங்கோ நல்ல உள்ளிரசம்'
என அப்பு சொன்னபடி - ரசம்
ஏற்றருந்த, வயிறிருந்த
புளிச்சல் வாய்வெல்லாம்
புறப்பட்டு வெளியேறி
கழிச்சல் வழியூடு வந்து
காணாமற் போயினவே!

அடடா, ஒன்று சொல்வேன்
அன்போடு கேட்க வேணும் - எதுவும்
வாய்த்து விட்டதென - இறுக்கி
வயிற்றுள்ளே அடையாமல்
வாய்த்த அளவோடு - உண்டு
வாழ்வாங்கு வாழுவீரே!

- கி.குருபரன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| | வி சனி | | புத |
| | இராசிச் சக்கரம் | | சூ ராகு |
| கே | | | வெ |
| | சந் | செவ் | |

மாற்றம்:- அனுஷம் 4ஆம் பாதம - விருச்சிகம் இராசியில் சந்திரன் நிற்கும்.

அரசியலில திசைமாற்றங்கள் நடக்கும். சோழியன்குடுமி சும்மா ஆடுமா? ஆடுவதும், பாடுவதும், பேசுவதும் மக்களை, மாணவர்களை, தொழிலாளர்களைத் திசைமாற்றுவதற்கேயாகும். இந்தியா வடதிசை இமயம் தொட்டு - தென்திசை குமரி ஈறாக படைவிஸ்தரிப்பைச் செய்யத் திட்டமிடும்; அமெரிக்கா, சீனா, ஜப்பான் போன்ற நாடுகள் யோசிக்கும்படி பல உருப்படியான பொருளாதார செயலாக்கங்களை படிப்படியாக செயற்படுத்தும். அமெரிக்க - நேட்டோ நாடுகள் வடமுனை, மத்திய நாடுகளில் ஆதிக்கச் செயற்பாடுகளைச் செய்யும்; பொருளாதார அழுத்தங்களை மத்திய - கிழக்கு நாடுகளில் செயற்படுத்தும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.

# இந்த வார இராசி பலன்

## 24-07-1999 இலிருந்து 30-07-1999 வரை

## மேடம்

சுயநலத்தால் எத்தனை பாவகாரியங்கள் மலிகின்றன? நாம் அவமாணங்களை ஜீரணிக்கவும், பாவிகளிடமிருந்து விலகியும் நடக்க முயலவேண்டும். அல்லது மனத்துன்பத்தால் வேதனைதான் மிஞ்சும். தொழில் விஷயத்தில் ஊக்கத்தைப் பொறுத்து வருமானம் அதிகரிக்கும். துணிச்சலுடன் செயற்பட்டு இலாபங்கள் அடைவீர்கள். அடிக்கடி கோபப்பட்டு, அதட்டிப் பேசி பிறிரின் பகைமையைச் சம்பாதித்துக் கொள்வீர்கள். இருதயவலி, நெஞ்சுநோ, கண்பார்வையில் கலக்கம் எனக் கலங்குவீர்கள். செல்வமும் செல்வாக்கும் தேடிவரும் என பேசாமலிருக்க மாட்டீர்கள். சகோதரம் - மாமன் வழியினர் டறுபுறுப்பர். மருந்துத்துறை, ரீவித்துறை, செய்தித்துறை, போக்குவரத்துத்துறை, கடல்துறை, விவசாயம், வியாபாரத்துறை, புடைவை வேலை, நிர்வாகத்துறை ஆகியவற்றினால் அதிக இலாபம் அடைவீர்கள். வாகனச் செலவுகள் அதிகரித்தபடி இருக்கும்.

*அதிர்ஷ்டநாள்:- புதன், வியாழன்.*

## இடபம்

நாம் அமைதியாக இருந்து செயற்பட வேண்டும். இடம், காலம், வயது வித்தியாசங்களால் எமது செயற்பாடுகளும் மாற்றமடைகின்றன. யுத்தத்தால் நன்மையா, தீமையா மிஞ்சும் என்பது எல்லோருக்கும் தெரியாதா? ஆனால் உங்களைப் பொறுத்தமட்டில் தொழில் ஸ்தானத்தில் ஒரு யுத்தமே நடக்கும்படி மாற்றிவிடுவீர்கள். பிடிவாதத்தால் நன்மைகள் உங்களுக்கும் சமூகத்திற்கும் ஏற்படப் பாடுபடுவீர்கள். அட்டமத்திலிருந்து செவ்வாய் கோபப்பார்வை பார்ப்பதனால் பலவித சஞ்சலங்கள், தப்பபிப்பிராயங்கள் எதிர்பாலரால் ஏற்பட இடம்உண்டு. நரம்புச்சோர்வு, நெஞ்சுவலி, நாரிநோ, ஈரல் வருத்தங்கள் சிலரை வருத்தலாம். நகைத்துறை, சட்டத்துறை, வியாபார, விவசாயத்துறை, குருத்துறை என்பனவற்றில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அதிக இலாபங்கள் கிடைக்கும்.

*அதிர்ஷ்டநாள்:- புதன், வியாழன்.*

## மிதுனம்

என்ன அவசரம்? இயற்கைக்கு மாறாக எவர் செயற்படுகிறார்களோ அது தர்மத்திற்கு மாறானது. உங்கள் செயற்பாடுகளில் மாற்றம் காண அடிக்கடி முனைகிறீர்களே. அது நன்மையாகவும், தர்மசிந்தனையாகவும் இருந்தால் நல்லதுதான். அல்லது தொழில் ஸ்தானத்தில் அடிக்கடி பூகம்பந்தான் எழும்பும். எதிர்பாலருடன் கொஞ்சம் அனுசரித்துப் போங்கள். உதயத்தில் மின்னலான் கண்ணன் போல புதன் இருக்கும் பொழுது எண்ணற்ற குறும்புகள் நெஞ்சில் வட்டமிடும் காலமாகும். பித்தக்கலக்கம், கைகால் வீக்கம், தலைவலி, வாதநோய், வாய்வுக் கலக்கம் என்பன ஏற்படும். அடிக்கடி போட்டி ஏற்பட்டபடி இருக்கும். இரும்புத்துறை, எண்ணெய்த்துறை, போக்குவரத்துத்துறை, செய்தித்துறை, என்பனவற்றில் தொடர்புடையவர்களுக்கு நல்ல இலாபங்கள் கிடைக்கும்.

*அதிர்ஷ்டநாள்:- புதன், வியாழன்.*

## கடகம்

ஒருவனுக்கு பழிவாங்கும் எண்ணம் - இறைவழிபாட்டால் பலம் குன்ற - அவன் அமைதியாகி பாவத்திலிருந்து விடுபட்டுவிடுகின்றான். இதற்காகத்தான் அடிக்கடி கோவிலுக்குப் போங்கள் எனப் பெரியவர்கள் நம்மை விரட்டுகிறார்கள். இதில் உண்மையில்லாமல இல்லை. என்ன அணைப்பதுவும், அடிப்பதுவும் உங்கள் கைகள்தான்! தொழில்ஸ்தானத்தில் எதனையும் பெரிதாக எண்ணிவிடாது இலாபத்தில் கண்ணாக இருங்கள். சக்தியெல்லாம் ஆஸ்பத்திரியில் மருந்தெடுக்க கியூவில் நிற்கும் பொழுது போவது போன்று இருக்கிறதா? சளி, சலவருத்தம், நெஞ்சுவலி, நாரிநோ, வாத உளைவு என்பன கொடுக்கும். பத்திரிகைத்துறை, போக்குவரத்துத் துறை, குருத்துறை, செய்தித்துறை, அரசியல்துறைகளில் ஈடுபடுபவர்களுக்கு நன்மைகள் ஏற்பட்டபடி இருக்கும்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, புதன், வியாழன்.*

## சிங்கம்

ஒருவர் கடமையைச் சரிவரச்செய்யும்பொழுது - சமுதாயத்தில் மதிப்புள்ளவர்கள் இடையூறாக இருந்து செயற்படுவதனால் தடைப்பட்டு இடையில் திசைமாறி விடுகிறார்கள். இதனால் வேதனையுடன் தடுமாறி பாவத்தை விருத்தி செய்ய உதவுபவர்களாக இருந்து விடுகிறார்கள். இதை அறிந்ததும் கொதித்து எழுவீர்கள். நேர்மையற்றவர்கள் எத்தனை பாவங்களை விதைக்கின்றார்கள்? தொழில் ஸ்தானத்தில் எவருக்கும் தலை வணங்காது செயற்படும் உங்களுக்கு சோதனைகள் காத்திருக்கும் காலமாகும். நண்பர்கள், சக உதவியாளர்களுடன் அவதானமாக இருங்கள். நெஞ்சுவலி, நாரிநோ, உடல் அசதி, வாய்வுத்தொல்லை என்பன தேடிவரும். வியாபாரத்துறை, ஆடை, ஆபரணத்துறை, இரும்புத்துறை, சட்டத்துறை, கோயில்துறை என்பவற்றில் தொடர்புள்ளவர்கள் அதிக இலாபம் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, புதன், வியாழன்.*

## கன்னி

பாம்பின் வாயில் சிக்கித் தப்பிய தவளைகள் போல் சிலர் இருக்கின்றார்கள். துன்பம் வரும் எனத் தெரிந்தும் தவிர்க்க முடியாத சில செயற்பாடுகளால் வேதனைகள் வருவது உங்களுக்கு இயல்பாகும். தொழில் ஸ்தானத்தில் எதிர்பாராத திடீர் தாக்கங்கள் கொடுக்கும். செலவுகள் அதிகரிக்கும். நண்பர்களை நம்பமுடியாது. பெரியவர்கள், படித்தவர்கள், பதவிகளில் உள்ளவர்களின் உதவிகளால் நன்மைகள் ஏற்பட்டபடி இருக்கும். வலியச் சண்டைகள் வந்தாலும் விலகி நடக்க முயலுங்கள். சகோதர, உறவினருக்கு எதிர்பாராத இழப்புக்கள் ஏற்படும். முட்டு, சளி, வாத, வாய்வு ரோகங்கள் கொடுக்கும். குருத்தொழில், எண்ணெய்த்துறை, சட்டத்துறை, சமயத்துறை, வியாபாரத் துறையினர்கள் நற்பலன்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, புதன், வியாழன்.*

# மகாதேவா ஜோதிடம்

## துலாம்

தெரிந்த உண்மைகளை பயத்தாலோ, பாசத்தாலோ வெளிப்படுத்தாமல் இருப்பவர் தீமைகள் வளர்வதற்கு வித்திடுபவர்கள் ஆகிறார்கள். ஆயினும் காலமறிந்து செயற்படாமல் இருக்கமுடியாதது இன்றியமையாததாக இருக்கின்றது. அல்லது தடியைக் கொடுத்து அடிவாங்குகின்றவன் கதையாக அல்லவா மாறிவிடுகின்றது. தொழில்ஸ்தானத்தில் கவனமாக இருக்கவும். பொருள் இழப்புக்கள் சிலருக்கு ஏற்படலாம். இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். அடிக்கடி கோபம்வந்து யாரையாவது ஏசவேண்டும் போலிருக்கும். உஷ்ண பீடைகள். தலைவலி, வயிற்று வலி என்பன கொடுக்கும். சட்டம், நீதி, நிர்வாகம், மருந்து, நகை, வாகனம் போன்ற துறைகளில் ஈடுபாடுள்ளவர்கள் இலாபங்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, புதன், வியாழன்.*

## விருட்சிகம்

தவறு செய்வது மனித இயல்பு அதை உணர்ந்து ஒத்துக்கொள்வது தான் பெருந்தன்மை. அது எல்லோருக்கும் வருகின்றதா? தொழில் ஸ்தானத்தில் விட்டுக் கொடுக்க மாட்டீர்கள். தீவிரசிந்தனை, பொருளால் யோசனை, பிரயாணம் என்பன கொடுக்கலாம். கிருமித்தாக்கம், நெஞ்சுநோ, வயிற்றில் பொருமல், அடிவயிற்றுநோ, படபடப்பு என்பன கொடுக்கும். மனஞ்சஞ்சலம், பயம் வரும். பிரயாணத்துறை, செய்தித் துறை, சமயத்துறை, காணிபூமி கமிஷன்துறை, கடல்துறை, இரும்புத் துறைகளுடன் சம்பந்தப்பட்டவர்கள் அதிக இலாபங்கள் அடைவார்கள். பொருள் இழப்பைத் தவிர்க்க இடமாற்றங்களைத் தவிர்த்து நடவுங்கள்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, புதன்.*

## தனுசு

என்ன பதற்றம்? எவர் பகைத்தாலும், பிள்ளைகள் வெறுத்தாலும், தான் குடியிருந்த வீடு வெறுக்காது.

இதனாலேதான் பெரியவர்கள் 'மனையைப் போல் மக்களும் உதவமாட்டார்கள்' என்றார்கள். தொழில் ஸ்தானத்தில் எதிர்பாலருடன் அனுசரித்துப் போகவும். அல்லது கலகங்கள் - அவமானங்கள் ஏற்படப் பலன்கள் உண்டு. இடுப்புப்பகுதி, குடல் பகுதி பாதிப்பு, கைகால் உளைவு, களைப்பு என்பன அடிக்கடி கொடுக்கும். குரு பீடம், பிரயாணத்துறை, இரும்புத்துறை, கடல்துறை, வியாபாரம், விவசாயம் போன்ற துறைகளில் ஈடுபடுபவர்கள் அதிக இலாபங்களை அடைகிறார்கள். பிரயாணங்களாலும், புதிய மனிதர்களுடன் தொடர்பு கொண்டு நாலு விஷயங்களைப் பேசி வருவதனாலும் மனச்சஞ்சலம் தீரும். அடிக்கடி ஆலயங்கள் சென்றுவாருங்கள். மனஅமைதி காசு கொடுத்து வாங்க முடியாதது அல்லவா?

*அதிர்ஷ்டநாள்:- சனி, புதன், ஞாயிறு.*

## மகரம்

மனிதர்களுக்குத் தாங்க முடியாத உடல், மனத்துன்பங்கள் மேலிடும் பொழுது சாபங்கள் வெளிப்படுகின்றன. இதனால் சம்பந்தப்பட்டவர்கள் நிச்சயம் நியாயமாக இருந்தால் துன்பங்களை காலம் கடந்தாலும் அனுபவிக்காமல் விடமாட்டார்கள். தொழில் ஸ்தானத்தில் எதிர்ப்பாலாருக்கு உதவிகள் செய்யப்போய் வீண் சிக்கல்களில் மாட்டிக்கொள்ளுவீர்கள். என்ன? ஆட்டத்தின் முடிவிலே பார்ப்போம். இப்ப என்ன அவசரம் போல இருக்கின்றீர்களோ? தூரத்து உறவினர் செய்திகளால் வேதனைகள் வரலாம். வயிற்றுக்குழப்பம், மனக்கொந்தளிப்பு, நரம்புச் சோர்வு, வலிகள், விறைப்புக்கள், கைகால்களில் வரலாம். சட்டத்துறை, வியாபாரத் துறை, குருத்துறைகளில் நன்மை அடைவீர்கள். அரச அதிகாரிகள் உதவிகள் கிடைக்கும்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, வியாழன்.*

## கும்பம்

தன்பிள்ளைகளுக்கு பெரிய பள்ளிக்கூடப்படிப்பு, உத்தியோகம், திருமணம் வேண்டுமெனப் பெற்றோர்கள் சிந்திப்பதில் நியாயம் இல்லாமல் இல்லை. ஆனால் அதற்கு கிரகங்களின் வலுவான திசாபுத்தி அக்காலங்களில் வந்து சேர்ந்திருக்க வேண்டும். தெய்வ அனுக்கிரகமும் வேண்டும். இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். சளித்தொல்லை, நரம்புப் பிடிப்பு, களைப்பு, நாரிநோ, கிருமித் தாக்கம் என்பன கொடுக்கும். நகைத் துறை, வியாபாரத்துறை, கோயில் துறை, கமிஷன்துறை, புடைவைத் துறையினருக்கு அதிக மாற்றங்களும் இலாபங்களும் கொடுக்கும். இடமாற்றங்களைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, வியாழன்.*

## மீனம்

சிலர் காணிகளை வாங்குவது போலவும் - சிலர் விற்பது போலவும் பாசாங்கு செய்வது இந்தச் சமுதாயத்தை ஏமாற்றவாகும். உலகை ஏமாற்றுவதனால் - அவர்கள் தம்மைத் தாமே ஏமாற்றுகிறார்கள். இது நீங்கள் அறியாததல்ல. தொழில்ஸ்தானத்தில் கொடுக்கல் வாங்கலில் பிரச்சினைகள் வரலாம். நண்பர்கள், எதிர்ப்பாலார்கள் புறுபுறுப்பார்கள். வாய்வு, வாதம், சளி, பிடிப்பு, வயிற்றுநோ, நெஞ்சுநோ, படபடப்பு என்பனகொடுக்கும். தூரதேசப் பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். கடல்துறை, விவசாயத்துறை, போக்குவரத்துத் துறை, இரும்புத்துறை, மருந்துத் துறையினருக்கு நன்மை,தீமை கலந்து நடந்தாலும் இலாபங்கள் அதிகரிக்கும். தூரதேசத்துச் செய்திகளால் நன்மை, மகிழ்ச்சிகள் கொடுக்கும். இனஜனக் கொண்டாட்டங்கள் சர்வ சாதாரணமாகும்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, வியாழன்.*

# கேள்வி உடையார் செயல்

## தேன்கூடு

கேள்வி உடையார் என்பது, நூல் பலவற்றையும் கற்றுணர்ந்து கேட்டறிந்த பெரியோர் என்னும் பொருளை உடையது. திருஞான சம்பந்தப் பெருமான் 'கற்றல், கேட்டல் உடையார் பெரியார்' என்பர்.பெரியார் தேவரை ஒப்பர்.அவர் தஞ் செயல் என்றும் அறத்தொடு பட்டதாகவே அமையும்.

பெரியோர், நல்லதன் நலனும் தீயதன் தீமையும் இனிதின் உணர்ந்தவர். யாராயினும் ஒருவருக்குக் கல்வி, செல்வம், புகழ் என்பன பெருகுவதாக வைத்துக்கொள்ளுவோம். அவற்றைக் கண்டு ஆற்றாத மற்றும் ஒருவர், பொறாமை கொண்டு புழுங்குகின்றார்! பிறரை நிந்திக்கத்தொடங்குகின்றார். சான்றோர் அத்தகையர் அல்லர். 'சீ என்று பேயென்று நாயென்று பிறர் தம்மைப் *பழித்துரையார்*.'

நாளும் நாளும் நாம் பலருடன் பழகுகின்றோம். சாதரணமாக உலகோர் ஒருவர் தம்மினும் பார்க்க சற்றுக் கல்வி செல்வம் முதலியவற்றுள் உயர்ந்து விட்டால், அவர் யார்? அவருக்கு ஏது தெரியும்? எப்போ வந்தவர்? என்றெல்லாம் இழிந்துரைக்கின்றனர். குலத்தாழ்ச்சி, இகழ்ச்சி கூறுகின்றனர். மேன்மக்கள் ஒருவரை பல்லோருள் *இழித்துரையார்*.

உறக்கம் நமக்கு மிகமிக இன்றியமையாதது. நமது உடலில் உள்ள கருவி, கரணங்கள் எல்லாம் கேவலம் உதவி வேண்டாது நாள் முழுவ்தும் ஓயாது உழைக்கின்றன. உறக்கத்தின்போது அவை ஓய்வெடுக்கின்றன. உறங்குதற்குக் கால எல்லை விதித்துள்ளார்கள். குழந்தை முதல் முதியோர் வரை அனைவருக்குமே காலஎல்லை உண்டு. சிலர் கால எல்லையை இகந்து நெடுந்துயில கொள்கின்றனர். கும்பகர்ணனை ஏவலாளர் 'உறங்குகின்ற கும்பகர்ண! உங்கள் மாய வாழ்வெல்லாம் இறங்குகின்றது. எழுந்து காண!' என்று எழுப்பியதாகக் கதை உண்டு. 'தூங்காதே தம்பி தூங்காதே' என்ற பாட்டினைக் கேட்டிருப்பீர்கள். தூங்கியவர்கள் தம்மைக் கெடுத்ததுடன் நாட்டையும் கெடுத்து விடுகிறார்களாம்.சோம்பல் காரணமாகவும் சிலர் பகற்பொழுதில் துயில்கின்றனர்தானே! திருவள்ளுவ தேவர், சோம்பல், தாமதம், மறதி, தூக்கம் என்பனஅழிந்து போகத் துடிப்போர் ஏறும் தோணி என்கிறார். முந்தை யோர் கருமம் இழந்து *தூங்கினார் இல்லை*.

**சிந்திப்போம் செயற்படுவோம்**

எம்முட்சிலர், சிலசமயங்களில் செய்ய இயலாத ஒன்றைச் செய்துதருகிறோம் என்று கூறிவிடுகின்றனர். ஆனால் அதனைச் செய்துதராது மறைந்து விடுகின்றனர். வேறு சிலர் தம்மால் இயலக்கூடியதையும் இயலாது என்கிறார்கள். புறநானூறு எனும் பழைய தமிழ் நூலில் ஆவூர் மூலங்கிழார் மன்னன் நன்மாறனுக்குக் கூறிய பாடலில் இருந்து சில வரிகளை நினைவு கூருவது நலம்.

"--- ஒல்லா தொல்லும் என்றலும் ஒல்லுவது
இல்லென மறுத்தலும் இரண்டும் வல்லே
இரப்போர் வாட்டல் அன்றியும் புரப்போர்
புகழ்குறை படூஉம் வாயில் ---"

என்பது அது.

(ஒல்லுவது - இயலும் பொருள். ஒல்லாதது - இயலாதது) சான்றோர் தமக்கு பொருந்தாத செயல்களைச் செய்கின்றோம் என்று கூறார். *கூறியதைச் செய்யாது கரக்கவும்மாட்டார்.* (கரத்தல் - மறைத்தல்)

வறியராயினாரை 'அந்தப் பிச்சைக்காரனைப் பார்' என்று சிலர் இகழ்வதனைக் காண்கிறோம். வள்ளுவப் பெருந்தகை ஒரு வினாவினை எழுப்புகின்றார். விடையும் தருகின்றார். பலர் வறியோராய் இருக்கக் காரணம் என்ன? ஆம் தவம் செய்யாமையாம். தவம் செய்தோர் சிலராம். அவர் செல்வாராம். பொருள் நிரம்பியவன் வறியாரது பசியினைத் தீர்க்கவேண்டும். அஃதவனது தலையாய கடனாம். சந்திரமதியார் தாம் இல்லோரைச் சிறியர் என்று இகழாத பான்மையினராம். அவ்வாறிருப்பவும் தமது அருமைப்புதல்வன் ஏன் பாம்பின் வாய்ப்பட்டு இறந்து படவேண்டும்? என்று அலறித் துடிக்கின்றார். சான்றோர் எந்தநிலையிலும் *இல்லோரை இகழார்.* இனி ஆசாரக் கோவை பாடலைப்பார்ப்போம்.

பழியார் இழியார் பலருள்; உறங்கார்;
இசையாத நேர்ந்து கரவார்; இசைவின்றி
இல்லாரை எள்ளி இகழ்ந்து உரையார் தள்ளியும்
தாங்கரும் கேள்வி யவர்.

(ஆசாரக்கோவை–50)

(தாங்க அரு - பிறரால் தாங்குதற்கு அரிய: எள்ளித் தள்ளியும் என்று கூட்டுக.)

மேலே கண்ட அறங்களை எமக்காக்கி ஒழுகுவோம்.

-தொடரும்-

–சிகண்டியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகத்தை விழிப்பாக வைத்திருக்க வேண்டிய சமூகக் கடப்பாடு உதயன் - சஞ்சீவிக்கு உண்டு

வாரம் தவறாமல் வெளிவந்து, வாசகர் உள்ளங்களை வருடிச் செல்லும் சஞ்சீவியே!

உன்னுடைய பல்லாயிரக்கணக்கான அபிமான வாசக,வாசகியர்களில் நானும் ஒருத்தி. காலத்தின் தேவை உணர்ந்து சமூகக்கடப்பாட்டுடன் நற்றமிழ் தொண்டாற்றிவரும் உந்தன் பணி போற்றுதற்குரியது. எதிர்காலத்தில் சஞ்சீவியின் பணி மேலும் சிறப்புற வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

சஞ்சீவியில் வெளிவரும் அனைத்துப் படைப்புகளுமே தரமானவையாக இருக்கின்றன (வித்துவான் பதில்களைத் தவிர).

மௌனமொழி, கவிதைமுற்றம், சிறுகதைகள் போன்ற படைப்புக்கள் யதார்த்தத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளன. மறுபக்கம் - வாரவிபர்சனம், உள்ளும்புறமும், உலகஉலா போன்றன இன்று தமிழ் மொழியில் எமக்கு வாசிக்கக் கிடைக்கும் முதல் தரமான அரசியல், இராணுவக் கட்டுரைகள் ஆகும்.

எமது மக்களின் அன்றாட அவல நிலையையும் பேரினவாதிகளினதும் அவர்களின் அடிவருடிகளினதும் அரசியல் நாடகங்களையும், சமூகச் சீர்கேடுகளையும் படம் பிடித்துக் காட்டும் மின்னலின் 'அதிரடி அரங்கு' எல்லோருக்கும் அதிரடியாக அமைகிறது. வெளிச்சத்திற்கு வராத சங்கதிகளை அம்பலப்படுத்தும் மின்னலின் பணி பாராட்டுக்குரியது.

மேலும் உள்ளத்தைக் குளிர்விக்கும் 'குறள் வெள்ளம்', தித்திக்கும் கருத்துக்கள் தரும் 'தேன்கூடு' மூளைக்கு வேலைதரும் 'சொற்சிலம்பம்' விளையாட்டுப் பிரியர்களை மகிழ்விக்கும் கோபியின் 'துடுப்பாட்டம் - அன்றும் இன்றும்', போரின் கொடூரங்களை விளக்கும் மு. சிவநேசனின் 'யுத்தம் எதுவரைக்கும்?', செங்கை ஆழியான் அவர்களின் 'போரே நீ போ', சாந்தனின் '20ஆம் நூற்றாண்டில் உலக இலக்கியம்' போன்ற படைப்புகள் காலத்தின் தேவையுணர்ந்து சஞ்சீவி செய்யும் இன்றியமையாப் பணிக்கு அரிய சான்றுகளாகும்.

"அங்கிகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒரு விதம்" என்ற தலைப்பில் பிராணிகள், பறவைகள் பற்றிய விவரங்களை விலாவாரியாக எடுத்தியம்புகிறார் குகன். அவருக்கு எமது பாராட்டுக்கள் உரித்தாகுக. அவரதுபணி மேலும் தொடரட்டும்.

சஞ்சீவியின் ஏனைய பக்கங்கள் எல்லாம் சமூகப் பொறுப்போடு வெளிவரும் போது வித்துவானுக்கு மட்டும் ஏன் இந்த மட்டரக சிந்தனை? சிரிக்க, சிந்திக்க அறிவு பூர்வமான சமூக சிந்தனையுள்ள விஷயங்களிருக்க வித்துவான் தன் சுயபுராணம் பாடுவதை நிறுத்த மாட்டாரா? வித்துவான் பதில்கள் பகுதியில் கேள்வி கேட்போரும் சரி, பதில்கூறும் வித்துவானும் சரி விரசப் போக்கை வீம்புக்காகப் பற்றி நிற்பது கண்கூடாகத் தெரிகிறது. பெருமளவு வாசகர்கள் வித்துவானின் விரசக் கேள்வி - பதில் பகுதியைக் கண்டித்திருந்தும்கூட கேட்பதற்கு ஆளில்லை என்பது போல் வித்துவானின் ஆபாச இரட்டை அர்த்தப் பதில்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

ஐ(ே)யா வித்துவானே! அரைத்த மாவை திரும்பத் திரும்ப அரைப்பதனால் தான் மாப் பதப்படும் என்பதை உங்கள் வித்துவாட்டியிடம் கேட்டுப் பாருங்களேன். மாவை ஏனையா போட்டுப் புளிக்க வைக்கின்றீர்கள்? வாசகர்கள் கேட்பதற்கெல்லாம் பதிலளிப்பதை விடுத்து நல்ல கேள்விகளைத் தேர்தெடுத்துப் பதிலளியுங்கள். வாசகர்கள் சிலருக்கு கிளுகிளுப்பு தேவையாயிருப்பின் தென்னிந்திய சஞ்சிகைகளில் அவர்கள் கவனத்தைத் திருப்பட்டும். உமது பதில்களுக்கு "வித்துவான் பதில்கள்" என்ற தலைப்பிடுவது அடியோடு பொருத்தமற்றது என்பதே எனது கருத்து; அபிப்பிராயம். "காமன் கணைகள்" என்று போட்டாலே போதும். தலைப்புக்குரிய விதத்தில் சரியாகத்தான் பதில்கள் அளிக்கின்றார்கள் என்ற திருப்தியோடு வாசகர்கள் போசாமல் இருப்பார்கள். அத்தோடு உம்மை முடித்த 'ரதியைப்' பற்றியும் நீர் தொடர்ந்து ஒப்பாரி வைக்கலாம். யாரும் அது குறித்து அலட்டிக் கொள்ளமாட்டார்கள்.

எமது சமூகத்தினை நல்வழிப்படுத்துகின்ற- எமது சமூகத்தினை விழிப்பாக வைத்திருக்க வேண்டிய - ஒரு தார்மீகக்கடமை இன்று உதயன் - சஞ்சீவியின் கைகளில் ஒப்படைக்கப்பட்டிருப்பதை உதயன், சஞ்சீவியும் மறந்து விடக்கூடாது என்பதுதான் எனது ஆதங்கம். வித்துவான் கேள்வி - பதில் என்ற அம்சத்தின் ஊடாக உதயன், சஞ்சீவி அந்தத் தார்மீகக் கடமையிலிருந்து சற்றுத்தூர விலகுவது வேதனைக்குரியது. எமது சந்ததி வெளிச்சத்துக்கு வர, அறிவியலும், நாகரீகமும்தான் பிரதானம். வித்துவான் பதில்கள் அல்ல. இலக்குகளை எட்ட முடியாது விட்டாலும் அவற்றை இழிவுபடுத்தாதிருப்போமாக!

**மாதகல். ந.சத்தியா.**

## உங்கள் உள்ளத்திலிருந்து

### நல்லதோர் கதை

கடந்த 10-07-1999 சஞ்சீவி சிறப்பாக இருந்தது. அதிலும் தாட்சாயிணி எழுதிய 'ரிக்கெற் ஷோ' என்னும் சிறுகதை மிகவும் சிறந்ததாக அமைந்துள்ளது.

சாரணர்களான நாம் அண்மையில் நடைபெற்ற "சாரணர் வேலைவாரத்தின்" போது பட்ட அனுபவத்திற்கு எடுத்துக்காட்டாக இச்சிறுகதை அமைந்திருந்தது. தாட்சாயிணிக்கு என்போன்ற சாரணர் சார்பில் மனமார்ந்த நன்றிகள்.

**யாழ்ப்பாணம். சாரணன்.**

### உதயனுக்குள் அரசசார்பு ஊடுருவலா?

உதயன் ஆசிரியர் பீடத்தினரே! வாசகர்களே!!

தமிழ்க்கட்சிகள் தாம் ஜனநாயகப் பாதைக்கு வந்துவிட்டோம் எனக்கூறி மக்களை ஏமாற்றுவதை போலவே, யாழ்ப்பாணத்தின் சில முக்கிய பிரமுகர்களும் மக்களை ஏமாற்றுகின்றனர். உதயனும் மக்களைத் தவறான பாதையில் திசை திருப்புகின்றான். உதயன் தற்போதைய நிலையில் இராணுவத்தினதும் தமிழ்க்கட்சிகளினதும் ஊடுருவல் கொண்ட ஓர் அரச சார்பு பத்திரிகை போலவே செயற்படுகின்றது. செய்தித்தணிக்கை என்ற போர்வையில் உதயன் சிலசெய்திகளை இருட்டடிப்பு செய்கிறது. யாழ்ப்பாணத்து பத்திரிகை பாரிய சிக்கல்களுக்கு இடையில் வெளிவருகிறது என்ற ஒரு நொண்டிச்சாட்டை கூறிக்கொண்டு அரச சார்போடு - தீவிரவாத போக்கில் இருந்து எதிர்கால சந்ததியினரை திசைதிருப்பும் நோக்கில் - உதயனில் செய்திகள் வெளிவருகின்றன. செம்மணிப் புதைகுழியின் தொடர்ச்சியாக அரியாலை, கொட்டடி புதைகுழிகள் பற்றிய செய்திகள் வெளிவந்தும் அவற்றைப் பற்றிய சிறு அறிக்கைகூட வெளியிடாத தமிழ்க் கட்சிகள் போலவே, உதயனும் - சராசரிப் பத்திரிகை போன்று - உரிய கண்டனக் குரல் கூட வெளியிடவில்லை. அரச இராணுவ நிர்வாக சீர்குலைப்பை புலிகள் மேற்கொண்டபோது உதயன் சிவில் நிர்வாகம் என்ற சொல்லையே உபயோகித்தது! யாழ்ப்பாணத்தில் நடப்பது அரச இராணுவ நிர்வாகம் என்பது உதயனுக்கு தெரியாததா?

தனிக்காட்டு இராசாவாக யாழில் இருக்கிறபோது ஏன் தமிழ்க்கட்சிகளையோ, இராணுவத்தையோ பகைப்பான், பேசாமல் மக்களை மந்தைகள் போலவே வழிநடத்துவோம் என்ற எண்ணமோ உதயனுக்கு? தற்போதைய செய்தித் தணிக்கை என்பது அரச இராணுவ நடவடிக்கைகளையும் அதனுடன் தொடர்புடைய தகவல்களையும் பிரசாரப்படுத்த மட்டுமே. ஆனால் உதயன் எல்லாவற்றிற்கும் செய்தித்தணிக்கை போலவே இராணுவத் தலைமைப்பீடம் கொடுக்கும் அத்தனை செய்திகளையும் வரிக்குவரி விடாமல் ஒப்பித்து விடுகின்றது.

தமிழ் மக்கள்தானே சித்திரவதைக்குள்ளாகின்றனர். கொல்லப்படுகின்றனர். நாமும் பேசாமல் இருந்து அரசு சொல்வதை ஆமோதிப்போம் என தமிழ்க்கட்சிகள் செய்வதையே உதயனும் பின்பற்றுகின்றதா?

வன்னியில் தலைமை சாய்ந்தால் இலங்கையில் எந்தப்பகுதியிலும் இருக்கின்ற அத்தனை தமிழனும் இருந்த இடம் தெரியாமல் மறைக்கப்படுவான் என்பது தமிழர்களுக்குத் தெரியும்.

தமிழ்க்கட்சிகள்கூட எப்போது நிலைமை மீண்டும் மாறும் தங்கள் கொலைப்படலத்தையும் கழுத்து நெரித்தலையும் வெட்டிச்சாக்குகளில் போடுதலையும் கடத்தலையும் கொடூர சித்திரவதைகளையும் செய்யலாம் என்றே காத்திருக்கின்றன.

அதுபோலவே அரசபடைகளும் கொலை வேட்கைக்கு காத்திருப்பதை ஒரு சில புல்லுருவிகளினால்தான் உணரமுடியாது உள்ளது. என்றோ ஒருநாள் மீண்டும் செம்மணி போல சகல வீட்டு முற்றத்திலும் தமிழர்கள் வெட்டிப் புதைக்கப்படும் நிலைவரும். அப்போது மட்டும் இந்தத் தமிழ்க்கட்சிகளையோ அரசசார்பு உடையவர்களையோ உதயனையோ இராணுவம் விட்டுவைக்கப் போவதில்லை.

தமிழர்களுக்கு என இருக்கும் தலைமை எப்போது சாயும் என்று பேரினவாதம் காத்து நிற்கிறது. அப்போது தமிழ்க்கட்சிகளும் இருந்த இடம்தெரியாமல் மறைந்து போகும்.

தற்போதைய நிலையில் தமிழ்க்கட்சிகள் அரச கிளிகூட்டுக்குள் வாழ்பவர்கள். தேவை முடிந்துவிட்டால் அரசு அவர்களை அப்படியே கிளிக்கூட்டோடு அமுக்கிவிடும். எத்தனை பேர் இருந்தனர் என்ற தகவல் கூட மக்களுக்கு தெரியாமல் நாளை இவர்கள் மறையலாம். இவர்கள் மறையும்போது இவர்களுக்காக கண்ணீர் விட எந்தத் தமிழனுமே இருக்கமாட்டான்.

அது போல தன்கடமை உணர்ந்து செயற்படாத எந்தத்தமிழனும், மற்றவரை ஏமாற்றுகிறேன் என நினைத்து தானும் ஏமாந்து தன் சமூகமும் இல்லாது ஒழியக் காரணமாகி விடுவான்.

**இருபாலை. கார்த்திகா.**

### தேர்ந்த படைப்பாளியின் சிறந்த கைவண்ணம்

புத்தம்புது அம்சங்களை தாங்கி புது மெருகுடன் வெளிவரும் சஞ்சிகை பகுதியில் விளையாட்டுத்துறைக்கும், களம் அமைத்து சிறப்பிக்கும் சஞ்சீவியே! உன்நற்பணி தொடரட்டும்.

10-07-1999 சஞ்சீவியில் அந்த வாரத்தோடு "துடுப்பாட்டம் - அன்றும் இன்றும்" தொடரை நிறுத்திக் கொள்வதாக கோபி அறிவித்திருந்தார். அதனை கண்ணுற்றதும் எனது இதயமே நின்று விடும் போல் இருந்தது. நீண்ட நாள்கள் என்னுடன் உறவாடிய ஒரு நண்பனை விட்டுப் பிரிவது போன்ற ஓர் இனம் புரியாத வேதனை என் இதயத்தைத் தாக்கியது. 24 பகுதிகளாக துடுப்பாட்டத்தின் தோற்றம், வளர்ச்சி, அதன் விதிமுறைகள், உபகரணங்கள், ஆடுகளம் ஆகியவற்றின் விவரங்கள், துடுப்பாட்டத்தில் சாதனை படைத்த வீரர்களின் பட்டியல், சாதனை விவரங்கள் போன்றவற்றை - கட்டுரை தொய்யாத வகையில் - விளக்கியுள்ளார் கோபி.

அன்று நிகழ்ந்த சம்பவங்களையும், நிலைப்பாட்டையும் இன்று நிகழும் சம்பவங்களின் நிலைப்பாடுகளையும் ஊடும்பாவுமாக நெய்து தந்துள்ள திறமை பாராட்டத்தக்கது.

இறுதிப்பகுதியில் அவர் எழுதிய ஒரு சில வார்த்தைப் பிரயோகம் அவர் ஒரு சிறந்த இலக்கிய படைப்பாளியும் கூட என்பதை இனங்காட்டுகின்றது.

கிரிக்கெட் ரசிகர்களின் உள்ளத்திலே மேடையிட்டு அமர்ந்துவிட்ட தம்பி கோபி உமது பணி மேலும் தொடரட்டும்.

**நல்லூர். இந்திரன்.**

# பாவினால் பாவலர்கள் சமர் புரிந்ததாகக் கூறுவது தகுமா?



தமிழ்ப் பாவலர்கள் - புலவர்கள் - சான்றோர்கள் என அழைக்கப்பட்டனர். அதற்குக் காரணம் அவர்களது கல்வி மட்டுமல்ல; கற்றபடி வாழ்ந்த வாழ்வுமாகும். 'கற்றபின் நிற்க அதற்குத்தக' என்ற தொடருக்கு ஏற்ப வாழ்ந்தவர்கள் அவர்கள். அத்தகைய சான்றோர்களை - மனித தெய்வங்களை - பாட்டினால் சண்டை பிடித்தார்கள் என வரலாறு எழுதுவதும் அதற்கு ஆதாரமாகத் தாங்களே வெண்பாக்களை இயற்றி வைப்பதும் கொடுமையான செயல்கள்.

## ஔவையாரும் கம்பரும்

ஔவையாரும் கம்பரும் பாட்டினால் சண்டை பிடித்ததாகவும் வரலாறு எழுதி வைத்திருக்கிறார்கள். அதற்கு ஏற்ப அவர்கள் பாடியதாக வரலாறு எழுதியவர்களே பாடலும் எழுதி வைத்திருக்கிறார்கள். 'எடி பிடி' என்றும் 'எடா புடா' என்றும் இக்காலத்தில் சந்தைகளில்தான் சண்டை பிடிப்பார்கள். சந்தையில சண்டை பிடிப்போர் தரத்துக்குத் சான்றோராகிய ஔவையாரையும் கம்பரையும் கொண்டு வரலாமா?

## ஏன்சண்டை ஏற்பட்டது?

சண்டை ஏற்பட்டதற்காகக் கூறப்பட்ட காரணமே ஆச்சரியமானது. சேர, சோழ, பாண்டியராகிய மூவேந்தரையும் பாடிய கம்பர் - கல்வியிற் பெரியன் கம்பன் என்று போற்றப்பட்ட கம்பர் - கவிச்சக்கரவர்த்தி என்று ஏனைய புலவர்களாலும் அரசர்களாலும் மதிக்கப்பட்ட கம்பர் - ஒருநாள் வீதிவழியாகப் போய்க்கொண்டிருந்தார். அவர் போவதைச் சிலம்பி என்ற தாசி கண்டுவிட்டாள். கம்பரைக் கொண்டு தன் பேரில் பாட்டு ஒன்று பாடுவிக்க வேண்டுமென்பது அவளது நீண்டகால ஆசை.


"கவிச்சக்கரவர்த்தியே நில்லுங்கள்! நில்லுங்கள்!" என்றபடி அந்தத் தாசி ஓடிவந்தாள். கம்பர் நின்று விட்டார். என்ன வேண்டும் என்று கேட்பது போலப் பார்த்தார்!

"ஐயா! எனது பேரில் தாங்கள் பாட்டு ஒன்று பாடவேண்டும்" என்று அவள் கேட்டாள்.

அதற்குக் கம்பர் "பாட்டு நினைத்ததும் பாடமுடியும். ஆனால் ஒருபாட்டுக்கு ஆயிரம் பொன் வேண்டும்" என்றார்.

தாசி தன்னிடம் அப்போது ஐந்நூறு பொன் மட்டும்தான் இருப்பதாகக் கூறினாள்.

அதற்குக் கம்பர் சற்றும் மனம் நெகிழவில்லை. "ஐந்நூறு பொன் மட்டும் இருந்தால் பாதிப்பாட்டை இப்பொழுது பாடுகிறேன். மீதிப் பாட்டை மீதி ஐந்நூறு பொன்னையும் நீ தந்ததும் பாடுகிறேன்" என்றார்.



கம்பர் கூறியதைத் தாசி ஏற்றுக் கொண்டாள். கம்பரும் -

*"தண்ணீரும் காவிரியே தார் வேந்தன்*
*சோழனே*
*மண்ணாவதுஞ் சோழமண்டலமே"*

என்று பாதி வெண்பாவைப் பாடி விட்டு ஐந்நூறு பொன்னையும் பெற்றுக் கொண்டு சென்றுவிட்டார்.

இது நடந்து சில காலத்துக்குப் பின்னர் ஔவையார் அந்த வழியாக வந்தார். அப்பொழுது தாசி வீட்டு வாசலில் சற்று நேரம் ஆறியிருந்தார். ஔவையாரின பசிக்களையை அறிந்த தாசி தான் குடிப்பதற்கு வைத்திருந்த கூழை ஔவையாருக்குக் கொடுத்தாள். உண்டு களை ஆறிய ஔவையாருக்கு உச்சி குளிர்ந்து விட்டது. தாசியுடன் சிறிது நேரம் உரையாடினார்.

உரையாடலின் போது தாசி புலவர்களால் பாடப்பட வேண்டும் என்ற தனது ஆவலையும் கம்பர் பாதிப் பாட்டுப்பாடிய வரலாற்றையும் அந்தப் பாதிப்பாட்டில் தனது பெயர் இடம் பெறவில்லை என்பதையும் கூறினாள்.

இதைக் கேட்ட ஔவையாருக்கு கம்பரிற் பொல்லாத கோபம் ஏற்பட்டு விட்டது. ஒரு தாசி பாடலில் ஆசைப்பட்டு விட்டாள் என்பதற்காகப் பாதி வெண்பாவிற்கு ஐந்நூறு பொன் வாங்குவதா என்று ஆத்திரப்பட்டார். சுவரில் எழுதப்பட்டிருந்த பாடலைப் பார்த்தார். பாட்டில் சோழனைப் பற்றிய குறிப்பு இருந்ததே அல்லாமல் தாசி பற்றி ஒரு வார்த்தைதானும் இருக்கவில்லை. காவிரியையும் சோழனையும் சோழமண்டலத்தையும் புகழ்ந்து பாடியதற்கு தாசி ஐந்நூறு பொன் கொடுக்க வேண்டுமா?

கோபம் கொண்ட ஔவையார் மீதிப் பாட்டைப் பாடினார்.

*தண்ணீரும் காவிரியே தார் வேந்தன்*
*சோழனே*
*மண்ணாவதும் சோழ மண்டலமே -*
*பெண்ணாவாள்*
*அம்பொற் சிலம்பி அரவிந்தத்*
*தாளணியும்*
*செம்பொற்சிலம்பே சிலம்பு.*

(XVஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# சந்தர்ப்பவாதத்துக்கு உதாரணம் தாருங்கள்!

**அத்தியடி. என்.குலன்.**
எனது நண்பனின் காதலி, அவனை ஏமாற்றி விட்டாள். எனது காதலி மட்டும் என்னை ஏமாற்ற மாட்டாள் என்று நண்பனுடன் பந்தயம் பிடித்திருக்கின்றேன். வெல்லுவேனா?
**☺'கூர் அம்பாயினும் வீரியம் பேசேல்!'**

**கைதடி. எஸ்.அரசு.**
சந்தர்ப்பவாதம் என்றால் என்ன? அதற்கு ஓர் உதாரணம் கூறுங்களேன்!
**☺'மாமியார் உடைத்தால் மண்குடம்; மருமகள் உடைத்தால் பொன்குடம' என்பது இதைத்தான்!**

**குருநகர். டி.ஜோகின்.**
பெண்களை 'மையல்' கொள்ள என்ன செய்ய வேண்டும்?
**☺அதற்கு முதலில் ச'மையல்' தெரிந்திருக்க வேண்டும்.**

**அல்வாய். ம.ஞானம்.**
காலில் விழும் கணவர்மார் குறித்து......?



**☺காரியம் சாதிக்கத் தெரிந்தவர்கள்!**

**மானிப்பாய். வி.வரதன்.**
சினிமா நடனங்களில் நவரசம் இருக்கின்றதா?
**☺நவரசம் இருக்கின்றதோ தெரியவில்லை. ஆனால் பத்தாவது ரசமாகிய விரசம் மட்டும் நிறையவே இருக்கின்றது.**

**அராலி. என்.பார்த்திபன்.**
நடிகைகளின் பலம் எது? பலவீனம் எது?
**☺ஆடை குறைத்தல். நடிப்பிலும் ஆடை நீக்குகின்றார்கள். நடிப்பதற்காகவும் ஆடை நீக்குகின்றார்களே!**

**அரியாலை. விஜய்.**
எனது நண்பி ஒருத்தி, 'பெட்' (Bet) கட்டி ஒருத்தனைக் காதலித்து. 'பெட்' (Bed) வரை போய் விட்டு, இன்று வெட்டி விட்டு வெளிநாடு செல்ல இருக்கின்றாளே....?
**☺அந்த ஒருவன் தப்பிப் பிழைத்தான். விடுங்கள்.**

**மானிப்பாய். பி.மாலா.**
ஒரு நாள் கண்டு புன்னகைத்த பெண்ணுக்கு உடன் கடிதம் அனுப்பும் ஆண்களைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?
**☺அதுதான் 'பொம்பிளை சிரிச்சா போச்சு' என்று கூறி வைத்திருக்கின்றார்களே. ஏன் சிரிப்பான்? ஏன் கடிதங்கள் வர வழி வைப்பான்?**

**மானிப்பாய். சுஜி.**
சில ஆசிரியர்கள் தம்பிள்ளைகளை 'ரியூசனுக்கு' அனுப்பிக் கொண்டு பாடசாலையில் தமது மாணவர்களை ரியூசனுக்குப் போக வேண்டாம் எனப் போதனை செய்கின்றார்களே?
**☺'உனக்கில்லையடி உபதேசம் ஊருக்கடி' என்ற தத்துவம்தான்!**

**சுதுமலை. சுஜி.**
'பெண் புத்தி பின் புத்தி' என்றால் 'ஆண் புத்தி முன் புத்தி' என்று கூறலாமா?
**☺கூறலாமே! திருமணத்துக்கு முன்னர் பெரும்பாலான ஆண்கள் புத்திசாலிகளாகத்தான் இருப்பர். எல்லாம் திருமணத்தோடு 'அவுட்'டாகி விடும்!**

**வடலியடைப்பு. இ.உதயன்.**
வித்துவான் ஸார்! கவிஞர், புலவர், பண்டிதர், வித்துவான்...... இப்படிப் பல பட்டங்கள். கருத்துகள் என்னவோ?
**☺கவித்துவம் உடையவர் கவிஞர்; புலமை மிக்கவர் புலவர்; பாண்டித்தியம் உள்ளவர் பண்டிதர்; வித்துவம் மிக்கவர் வித்துவான்.**

# சினிமா நடனங்களில் நவரசம் உள்ளதா?

**சங்கானை. ஆர்.டயானா.**
காதல் வலையில் சிக்கலாமா?
**☺சிலருக்கு அது பாசவலை; பலருக்கு அது மோசவலையாக இருக்கின்றதே!**

**நெல்லியடி. தாரிணி.**
காதலி, திருமணத்திற்கு முன் எப்படி இருப்பாள்? திருமணத்திற்குப் பின் எப்படி இருப்பாள்?
**☺முன்னர் - குயில்; பின்னர் -அனேகமாகச் [illegible]ாட்டான்.**

**வரணி. மு.நந்தன்.**
திருமணமாகும் மணமகனுக்கு நீங்கள் கூற விரும்புவது?
**☺எனது ஆழ்ந்த அனுதாபங்கள்!**

**யாழ். ப.முகுந்தன்.**
ஐந்து வருடங்களாக ஒரு பெண்ணைக் காதலித்தேன். வெளிநாட்டில் தொழில் பார்க்கும் மணமகன், குறுக்காக வந்து தட்டிக் கொண்டு போய்விட்டானே!
**☺சரியான ஏமாளியய்யா நீர். ஐந்து வருடங்களாக என்ன செய்தீர்?கடைசியில் 'இல(வ்)வு (Love) காத்த கிளி' ஆகி விட்டதே!**

**சங்குவேலி. க.சந்திரன்.**
எனது நண்பன் ஒருவன் அடிக்கடி என் வீட்டுக்கு வருகிறான். அதுவும் குறிப்பாக நான் இல்லாத சமயங்களைப் பார்த்துவருகின்றானே?
**☺எதற்கும் ஜோசியரிடம் உமது சாதகத்தை கொடுத்துப் பாரும். உமக்கு 'புத்திர பாக்கியம் நண்பரால்!' என்று சொன்னாலும் சொல்லுவார்.**

**வண்ணை. க.பிரசாந்தன்.**
'திருவிளையாடல்' பார்த்துள்ளீரா? எப்படியிருக்கும்?
**☺இப்போது வீடியோக் கடைகளில் 'திருவிளையாடல்' என்று கேட்டால் நீலப் பிரிண்டில் அல்லவா போட்டுக் கொடுக்கின்றார்கள்?**

**நல்லூர். சங்கரன்.**
தங்களுக்கு மதுரைக்குப் போக விருப்பமா? சிதம்பரத்துக்குப் போக விருப்பமா?
**☺மதுரையைத்தான் இங்கு வீட்டில் அனுபவித்து சலித்து விட்டதே. சிதம்பரத்தைப் பார்க்க - பின்பற்றத்தான் ஆசை!**

**ஆறுகால்மடம். ம.சிவன்.**
பொறுப்புணர்ச்சி உடைய காதலர்கள் எப்படிச் செயற்படுவார்கள்?
**☺பொறுப்புணர்ச்சியில் 'பொறு' இருப்பதால் மிகுதிக்குப் பொறுத்து இருப்பார்கள்.**

**பளை. அனுசா.**
உடைந்த மனதை எவ்வாறு ஒட்டலாம்?
**☺'அன்பு' என்ற பசை கொண்டு ஒட்ட முயற்சித்துப் பாருங்கள்!**

**அரியாலை. நகுலன்.**
இரண்டு மனைவிக்காரர் எப்படிக் குடும்பம் நடத்துவார்?



**☺இதில் என்ன சந்தேகம்? 'நாடாறு மாதம், காடாறு மாதம்'!**

**சங்கானை. க.ஜீவன்.**
எல்லை இல்லாதது எதுவோ?
**☺ஆசை.**

**நல்லூர். [illegible]**
கிரிக்கெட், உதைபந்தாட்டம் - இரண்டிலும் எந்த ஸ்தானத்தில் விளையாட விரும்புவீர்?
**☺அடிப்பதும் பிடிப்பதும்தானே விளையாட்டு? அதனால் கிரிக்கெட்டில் (துடுப்பால்) அடிப்பதையும், உதைப்பந்தாட்டத்தில் கோல் காப்பாளராகி (பந்துகளைப்) பிடிப்பதிலும் விரும்பி ஈடுபடுவேன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நல்லூர். மயூரன்.**
வித்துவானே! ஆண்களுக்குத் தெரியாமல் ஆண்களைப் பார்க்கும் பெண்கள், அவர்கள் (ஆண்கள்) பார்த்ததும் வேறு எங்கோ பார்க்கின்ற மாதிரி தலையைத் திருப்பிக் கொண்டு செல்கின்றார்களே?
**☺இதைத்தான் திருவள்ளுவர் 'யான் நோக்குங்கால் நிலம் நோக்கும் - நோக்காக்கால் தான் நோக்கி மெல்லநகும்' - என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கூறிவிட்டார். அன்றுதொட்டு மாறாத பெண்மைத்துவ பண்புகளுள் ஒன்றுதான் இது!**

**கந்தர்மடம். கு.சுவாமி.**
பிரம்மச்சாரியாக இருந்த என் நண்பன் வித்துவான் பதிலைப் படித்ததும் தரகரைத் தேடுகின்றானே?
**☺ஏன் விடயம் விளங்கி விட்டதா? அதுதான் தனக்கு ஆரம்பித்த கலியாணப் பேச்சைத் தடுத்து நிறுத்துவதற்குகாகத் தரகரைத் தேடுகிறார் போலும்.**

**இணுவில். கே.நாதன்.**
எனக்குத் தொந்தி பெருத்து விட்டதே. என்ன செய்யலாம்?



**☺பந்திக்கு முந்தினால தொந்தி பெருக்கத்தான் செய்யும். முந்தி மாதிரிச் செயற்பட முடியாமல் நந்தி போன்று தொந்தி, முந்திக் கொண்டு முன்னே நிற்கின்றதா? இனி மற்றவனைப் பார்த்து பெருமூச்சு விடுவதுதான் உமக்குள்ள ஒரே வழி!**

**நல்லூர். வி.விஜயன்.**
இருபதில் இனிக்கும் மனைவி, பலருக்கு நாற்பதில் கசந்து விடுகின்றாளே! ஏன்?
**☺பழகப் பழக பாலும் புளிக்கும் என்பது போலத்தான்!**

**ஊரெழு. மதனராஜன்.**
பட்டியல் மூலம் பதவிக்கு வந்த பலர் 'துண்டைக் காணோம்: துணியைக் காணோம்' என்று ஓடித் தப்புகின்றார்களே?
**☺'புலி பிடித்ததோ, கிலி பிடித்ததோ?'**

**மல்லாகம். சந்துரு.**
வித்துவான் சொற்படி வித்துவாட்டி நடப்பதாகக் கனவு கண்டேனே! நடக்குமா?
**☺ஊமை பிரசங்கம் பண்ண செவிடன் ரசித்துக் கேட்பது போலவும் கனவு காண்பீர். நனவில் நடந்தால்தானே!**

# வித்துவான் பதில்கள்

**நீர்வேலி. கரன்.**
எத்தனை வயது வரை வாலிப வயது எனலாம்?
**☺எண்பது வயதிலும் பலர் தம்மைக் குமரர்கள் என்று கருதும் இந்தக் காலத்தில் இக்கேள்விக்கு பதிலளித்தால் பலர் அடிக்க வருவார்களே?**

**நவாலி. க.பிரதீபன்.**
வித்துவான் ஸார்! 'பெண்ணாசை', 'மண்ணாசை', 'பொன்னாசை' - இவற்றில் எதில் போதை அதிகம்?
**☺பேதையுடன் தொடர்புடையது எதுவோ அதில் போதை அதிகம்.**

**கோப்பாய். தேடுவோன்.**
காதலை வெறும் சதை உணர்வுக்கு ஒப்பிடுவது சரியா?
**☺அனேகமான காதல்கள், அந்த உணர்வில்தானே ஆரம்பமாகின்றன?**

**மீசாலை. தர்சினி.**
வித்துவான் ஸார்! உங்கள் கடைசி ஆசை என்ன?
**☺முழு சுதந்திரத்துடன் ஒரு தடவையேனும் மூச்சுவிட வேண்டும்.**

**அளவெட்டி. இந்திரன்.**
எனது மாமியார் நோய் வாய்ப்பட்டிருக் கின்றார். எந்த மருத்துவமனையில் சேர்க்கலாம்?
**☺தனியார் மருத்துவமனையில் சேர்த்தால் உ'மக்குச் சாதகமாக அமையும்.**

**யாழ். எம்.விமல்.**
அறுபது வயதில் பந்து விளையாடலாமா?
**☺ஏன் அறுபது வயதில் துடுப்பாடும் இரும்பன்களும் நம்மூரில் இருக்கின்றார்களே?**

**கோப்பாய். விமல்.**
சில ஆடவர் மினிஸ்கேட்டையும், சில ஆடவர் சேலையையும் விரும்புகின்றார்களே?
**☺சில ஆடவர் திறந்திருக்கும் லட்டையும் சில ஆடவர் காகிதத்தில் சுற்றி வரும் பணிஸையும் விரும்புவதில்லையா?**

**வடலியடைப்பு. கோபி.**
பெண்களை மின்சாரத்தோடு ஒப்பிடுகின்றார்களே. பெண்கள் அவ்வளவு ஆபத்தானவர்களா?
**☺தொடாத வரை மின்சாரத்தால் ஆபத்து ஏதுமில்லையே!**

**கோண்டவில். குஞ்சு.**
சில ஆசிரியர்கள் மாணவியை மனைவியாக்கி விடுகின்றார்களே?
**☺மாணவியை மனைவியாகப் 'புரொமோஷன்' (வகுப்பேற்றம்) செய்வதையாவது ஏற்கலாம். பல ஆசிரியர்கள் மாதவியாக அல்லவா மாற்றி விடுகின்றார்கள்.**

## இவ்வார ஜோக்

இது அண்மையில் யாழ்ப்பாணத் தேநீர்க் கடை ஒன்றில் நடந்த உண்மையான சம்பவம். கடைக்கு வந்த இளைஞன் ஒருவனுக்கு கடையில் இருந்த சாத்திரியார் ஒருவர் கைரேகை சாத்திரம் பார்த்துக் கொண்டிருந்தார். கடைக்காரர் அதை அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

சாத்திரியார் இளைஞனின் கையைப் பிடித்துப் பார்த்தவாறே "தம்பி! உனக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர்" - என்றார்.

கடைக்காரருக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது. "சாத்திரியார் என்ன இது? பெடியன் இன்னும் கலியாணமே கட்டேல்லை. அதுக்குள் நீர் பிள்ளைகளைப் பற்றிக் கதைக்கிறீர்?" என்று சீறினார்.

"ஓம். நான் கலியாணத்தைப் பற்றிக் கதைக்கவில்லையே! பிள்ளைகளைப் பற்றித்தானே கதைத்தேன்" - என்றார் சாத்திரியார் சாவதானமாக!

---

மலைப் பகுதியைச் சேர்ந்த கிராமங்களில் குடிசனமதிப்பு அதிகாரி மதிப்பீடுகளை மேற்கொண்டிருந்தார். அப்போது குறிப்பிட்ட ஒரு கிராமத்தில் மாத்திரம் குழந்தைகள் பிறக்கும் வீதம் மிகவும் அதிகமாயிருந்ததை அவர் அவதானித்தார். அது குறித்து அந்தக் கிராமத் தலைவரிடம் அந்த அதிகாரி விசாரித்தார்.

"எமது கிராமத்தின் எல்லையிலுள்ள மலையை ஊடறுத்து ரயில் பாதை அமைக்கப்பட்டுள்ளது. குகை ஊடாக ரயில் வரும்போது பலத்த சத்தத்துடன் ஹோர்ண் அடித்த வண்ணம் செல்வது வழக்கம். முதலாவது ரயில் அதிகாலை 4.30க்கு வரும். அந்த ரயில் அடிக்கும் ஹோர்ண் சத்தத்திற்கு கிராமத்தவர்கள் விழித்துவிடுவர். அந்த நேரத்தில் மீண்டும் நித்திரைக்குச் செல்வது கஷ்டம். அதேபோல் அந்த அதிகாலையில் நாளாந்தக் கடமைகளையும் ஆரம்பிப்பதும் கடினம். இதுதான் இந்தக் கிராமத்தில் குழந்தைகள் பிறப்பு வீதம் அதிகரிக்கக் காரணம்" என்றார் கிராமத் தலைவர்.

# சினிமா நடிகைகளின் பலம் எது? பலவீனம் எது?

# அகிம்சை தோற்றதால்.....

கடந்த ஞாயிற்றுக் கிழமை (18-07-1999) திகதியிட்டு தமிழகத்தில் வெளியான 'இதயம் பேசு கிறது' இதழில் இடம் பெற்ற பேட்டி இது.



'இந்தியாவுக்கும் - புலிகளுக் கும் இடையில் நல்ல நட்புறவை ஏற்படுத்துவதே என் நோக்கம்' என்று சொல்லும் வ.ஐ.ச.ஜெயபா லன் சிறந்த கவிஞர். அவர் எழு திய 'ஈழத்து மண்ணும் எங்கள் முகங்களும்' என்னுங் குறுங்காவி யத்தை சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் இலக்கியத்துறை - 12ஆண்டுகளாகத் தொடர்ந்து பாட நூலாக வைத்துள்ளது.

*'போரின் உள்ளும் மரணத்துள் ளும்*
*ஆயிர துன்பச் சுமைகளி னுள்ளும்*
*வாழ்வுதான எத்தனை இனிமை யானது?'*

என்ற வரிகள் மூலம் இலங் கைத் தமிழர்களின் நிகழ்காலத் தையும், மனிதவாழ்வியல் எதார்த் தத்தையும் அழகாகச் சித்திரித் துள்ளார். அவர் இலங்கை உணர் வுகளை நம்மோடு பரிர்ந்து கொள் கிறார்.

☼கடந்த சில நாள்களாக ஈழத் தில் விடுதலைப்புலிகள் சாவு அதிக ரித்துள்ளதே?

**போர் அதிக விலை கோரும் கட்டத்துக்குள் நுழைந்துள்ளது. போராட்டத்தில் தற்போது முதன் மைப்பட்டுள்ள நேரடி இராணுவத் தலைமையைக் கீழ்மைப்படுத்தி, கொரில்லா தாக்குதல் முறையை முன்னிலைப்படுத்த வேண்டும். இலங்கை இராணுவம், விடுத லைப்புலிகள் இரண்டு தரப்பிலுமே சாவு அதிகரித்துள்ளது. இந்த நிலைமையை இலங்கை அரசு மாற்ற விரும்பினால், விடுதலைப் புலிகளுடன் கனேடிய - கியூபெக் அரசமைப்பு அடிப்படையில் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும். இந்த நிலைமையை மாற்ற புலி கள் விரும்பினால், இந்தியாவுட னான உறவை என்ன விலை கொடுத்தாவது செம்மைப்படுத் திடவேண்டும்.**

☼இந்தியாவுக்கும் புலிகளுக்கும் இடையேயான உறவு பழுதான தற்கு என்ன காரணம்?

**இலங்கைக்கு அமைதிப்படை அனுப்பப்பட்டதன் காலகட்டத் தின் பின்பகுதியிலும், 90-களின் ஆரம்பத்திலும் சில தடுமாற்றங் கள் இருந்திருக்கலாம். எனினும், இந்திய விரோதப் பதையை இது வரை விடுதலைப்புலிகள் நிராக ரித்தே வந்துள்ளனர்.**

☼இந்தக் காலகட்டத்தில் சிங் கள அரசின் மனநிலை என்னவாக இருந்தது?

**சிங்கள அரசின் அரசியல் இரா ணுவ உத்திகள், நடவடிக்கை கள் யாவும் இனிஒருபோதும், இந் தியாவுக்கும், விடுதலைப்புலிக ளுக்குமிடையே நல்லுறவு ஏற்ப டாது, தமிழக மக்களும், கட்சிக ளும் ஈழத்தமிழர்களை ஆதரிக்க மாட்டார்கள் என்கிற அடிப்படை யிலேயே திட்டமிட்டுக் கட்டமைக் கப்பட்டுள்ளது. அவர்கள மாறாது என்று கருதும் நிலைமை மாறி னால், அவர்களது முழுமையான இராணுவ வெற்றிகளும், மிகப் பெரிய இராணுவத் தவறுகளாகி விடும்.**

☼இந்தியாவுக்கும் புலிகளுக்கும் இடையேயான உறவு எவ்வாறு செம்மைப்படும் என்று கருதுகிறீர் கள்?

**இந்தியாவின் நலன்களும், ஈழத்தமிழர்களின் நலன்களும் பிரிக்க முடியாதவை. இந்தியா - புலிகள் உறவுப் பிரச்சினை, கார் கில் நெருக்கடிக்குப் பின் புதிய தொரு பரிமாணத்தைப் பெற்றுள் ளது. இந்திய, தமிழக நலன்க ளும், ஈழத் தமிழர்களது நலன்க ளுமே நீண்டகால வரலாற்றைத் தீர்மானிப்பவை. இரு தரப்பையும் சார்ந்த தனி மனிதர்களைவிட, இரு தரப்பினருடைய நீண்டகால நலன்கள் பலமானவை. இந்த அடிப்படையில் பிளவு ஒருபோதும் நிரந்தரமானதல்ல. கடந்த எட்டு வருட வரலாற்றுப் போக்குகூட இதனையே புலப்படுத்துகிறது.**

**இந்தியாவின் முன்னாள் பிரத மர் ராஜீவ்காந்தி அவர்களது படு கொலை மூலம், ஈழத் தமிழர்க ளது வாழ்வையும் வரலாற்றையும் விடுதலைப்புலிகள் பத்தாண்டு கள் பின்தள்ளிவிட்டார்கள். அமை திப்படையை ராஜீவ்காந்தி அவர் கள் இலங்கைத் தமிழர்களுக்கு எதிராகப் பாதகமாக ஏவி கொடுமை செய்தமையும் இந்தி யாவைப் பாதித்துள்ளது.**

**ராஜீவ்காந்தி கொலை வழக் குத் தொடர்பாக இந்திய அர சுக்கு விடுதலைப்புலிகள் உத விட வேண்டும். அமைதிப்படை நடவடிக்கைகளால் ஈழத் தமிழர் களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு இலங்கை அரசு இழப்பீடு வழங் கிட வேண்டும். இதுவே உண்மை யான உறவுக்கு மார்க்கமாகும்.**

☼இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றைப் பார்த்தால் – அகிம் சைதான் அந்நியரை வென்றிருக்கி றது. தனி ஈழப் போராட்டத்துக்கும் அகிம்சை முறையையே கடைப் பிடிக்கலாமே...?

**மகாத்மாகாந்தி தலைமையில் இந்தியத் துணைக்கண்ட மக்கள் அஹிம்சை வழியைப் பின்பற்றி போராடியதற்குப்பிறகு உலக வர லாற்றிலேயே நீண்டகாலம பொலீஸ், இராணுவ அடக்கு முறைகளுக்கு எதிராக அகிம்சைப் போராட்டம் நடத்திய பெருமை ஈழத்தமிழர் களையே சாரும். செல்வநாயகம், வன்னிய சிங்கம் போன்றவர்கள் தலைமையில் ஆரம்பித்த இந்தப் போராட்டம் - நான்கு சகாப் தங்களுக்கு மேல் (1950 - 83) தொடர்ந்து நடந்தது. சிங்கள அரசுப் படைகளும், இனவாதிக ளும், 1958, 1977, 1983இல் பாரிய இனக் கொலைகளைக் கட்ட விழ்த்து விட்டிருக்கிறார்கள். அகிம்சை தோற்ற நிலையில் இருந்துதான் ஆயுதம் தாங்கிய இளைஞர்கள் உருவானார்கள்.**

☼போராட்டத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி மலைய கப் பகுதிகளில் கிறிஸ்தவ மிஷி னரிகள் இந்துக்களைச் சந்தித்து – மதமாற்றம் நடைபெற்றுவருவது குறித்து?

**இந்தியக் கண்ணோட்டத்தில் இலங்கையின் மத உறவுகளைப் புரிந்துகொள்ளக்கூடாது. இலங் கைத் தமிழர்கள் மத்தியிலும் சரி, இந்திய வம்சாவழியினரான மலை யகத் தமிழர்கள் மத்தியிலும் சரி - மதப்பகை இல்லை. ஒரு சிலர் மதம் மாறுவது; சிலர் மீண்டும் தாய் மதத்துக்குத் திரும்புவது எல்லாம் சிறிய அளவில் எப்போ தும் நடக்கும் விஷயங்கள்தான்!**

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல.112

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | 5 | ■ | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| | ■ | 9 | 10 | | | ■ | |
| ■ | 11 | | | | ■ | 12 | |
| 13 | | ■ | | ■ | 14 | | ■ |
| 15 | | 16 | ■ | 17 | | | 18 |
| 19 | | | 20 | | ■ | 21 | |
| | ■ | 22 | | | | ■ | |

**சொற்சிலம்பம் இல. 112**

சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................................................

விலாசம்: ..............................................................

..............................................................

.............................இங்கே வெட்டுக.................................

முடிவுத் திகதி:- 30-07-1999

### இடமிருந்து வலம்

1. தென்மராட்சியில் ஓர் ஊர். 7. விடை. 8. முகம். 9. இரத்தல். 11. புருஷன். 12. தலையில் எழுதப்பட்டது. 13. நபர். 14. காட்டு மிருகம் ஒன்று. 15. அடுப்படி உபகரணம். 17. சிரிப்பு. 19. குறைதல். 21. பட்சி. 22. வயதுபோன கிழவன் அல்லது கிழவிக்கு சேர்க்கும் அடைமொழி.

### மேலிருந்து கீழ்

1. தவத்தோர் கோபத்தில் தருவது. 2. வாழ். 3. திருமண. 4. ஏவலாள். 5. ஒழுங்குமுறையால் வருவது. 6. கணவன் - மனைவி. 10. சடலம். 11. திருடன்.12. மேசைக்குமேல் போடப்படுவது. 13. நாற்க வியில் ஒன்று. 14. ஆபரணம். 16. சுருங்கு. 17. அளி. 18. குற்று. 20.மறி.

**சொற்சிலம்பம் 110 இன் விடைகள**

### இடமிருந்து வலம்

1.அசகாயசூரன். 6. வட்டு. 7. தக. 9. மடி. 10. அடம்பன். 12. காலல். 13. கனி. 14. யாசி. 16. தோல்வி. 17. தைப்பொங்கல். 20.பங்குனி. 21. மால். 22. நல்கு. 23. யமன்.

### மேலிருந்து கீழ்

1. அவமரியாதை. 2. சட்டி. 3. காடு. 4. சூதாடல். 5. ரகம். 8. சின்னி விரல். 10. அலவாங்கு. 11. பகல். 12. கா. 15. சிப்பல். 16.தோல். 18. பெங்கு. 19. கனிய. 21. மான்.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்ட சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகள் வருமாறு:-

**முதலாம் பரிசு** :- க.ஜெயானந்தன்,
நகரசபை,
சாவகச்சேரி.

**இரண்டாம் பரிசு** :- சி.பரணீதரன்,
249பீ, டச்சு வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

**மூன்றாம் பரிசு** :- சிவகுமாரன் சயந்தன்,
9பி, யாழ்ப்பாணக் கல்லூரி,
வட்டுக்கோட்டை.

புதிர்ப்போட்டிக்கு விடைகள் அனுப்பும்போது கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தை தவறாது குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் - சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்துகொள்ள முடியாது.

முதற் பரிசு: ரூபா 150.00
இரண்டாம் பரிசு: ரூபா 100.00
மூன்றாம் பரிசு: ரூபா 50.00

புதிர்ப்போட்டி இலக்கம் 111 இன் முடிவுகள் அடுத்தவார சஞ்சீவியில் வெளிவரும்.

# உணர்வு....

(X ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிறாங்கள். அவன் பாவம். சாதுவான பெடி. ரியூசனுக்குப் போட்டு வந்த வழியிலை மாட்டுப்பட்டிட்டுது."

அடித்தவர்கள் மேல் எனக்கு எழுந்த அளவிடமுடியாத ஆத்தி ரத்தை வெளிக்காட்டாமல், நொந்து போய் வந்திருக்கும் அவரைத் தேற் றத் தொடங்கினேன்.

என்றாலும் என் மனம் எரிந்து கொண்டிருந்தது.

'போராட்டங்களால் வன்முறைகள் உருவாகின்றனவா? அல்லது வன் முறைகள் போராட்டங்களை உரு வாக்குகின்றனவா? இதை முடிவு செய்பவர்கள் யார்? இன்றைக்கு அடி வாங்கிய அத்தனைபேரின் உள்ளங் களும் அடித்தவர்களுக்கெதிராகத் திரும்பியிராது என்பது என்ன நிச்ச யம்? அணுகுமுறைகளின் வடிவங்கள் தாம் வெற்றிகளைத் தீர்மானிப்பவை. மிதமான போக்கு விரைவான வெற்றி யைப் பெற்றுத்தந்தாலும் அது நீண்ட காலம் நிலைப்பதில்லை என்பதே வரலாறு.'

இவ்வளவு காலமும் பிழையான ஒரு கருத்தை வைத்துக்கொண்டு வீணாக அவருடன் வாக்குவாதப்பட்டி ருக்கிறேன் என்பதை எண்ணி வேத னைப்படத் தொடங்கினேன்.

குண்டுச் சத்தத்தின் பின்னிருந்த அமைதியைக் குலைப்பதுபோலக் காற்று இன்னும் 'வேகம் பிடித்தது. வேப்பமரம் பேயாட்டமாடியது. அங்கு மிங்கும் அலைப்புற்ற கொப்புக்கள் ஒன்றுடனொன்று மோதியதால் பழுத்த இலைகளுடன் பச்சை இலைகளும் உதிர்ந்தன.

எத்தனை எதிர்ப்புக்கள் வந்தா லும் தனது வளர்ச்சியைமட்டும் நிறுத் திக் கொள்ளாத வேப்பமரம் என் விழி களுக்கு வித்தியாசமாகத் தோன்றி யது.

நிறைந்த கண்ணீரோடு நிமிர்ந்து பார்த்தேன்.

உறங்கிக்கிடந்த என் உள்ளத்து உணர்வுகள் மெல்ல மெல்ல உருப் பெறத் தொடங்கின.

(யாவும் கற்பனை)

# பாவினால்......

(XIII ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாட்டுத் தாசிக்கு நன்றாகப் பிடித்து விட்டது. தாசியின் பெயர் பாட்டில் வந்தது அவளுக்கு பெரு மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. கம்பர் பாதிப்பாட்டுக்கு ஐந்நூறு பொன் வாங்கினார். ஆனால் தாசியின் பெயர் பாட்டில் வரவில்லை ஔவையார் கூழைக் குடித்துவிட்டுப் பாடினார். பாட்டில் தாசியின் பெயரும் வந்தது.

ஔவையார் மீதிப்பாடலை பணம் எதுவுமின்றிப் பாடியது கம்பருக்குப் பெரும் கோபத்தை ஏற்படுத்தியது. இந்தக் கோபத்தோடு இருந்தபோது கம்பரும் ஔவையாரும் சந்திக்க நேர்ந்தது.

கம்பர் ஔவையாரை "அடி" என்று ஏச நினைத்தார். ஆரைக் கீரைக்கும் ஔவையாருக்கும் சிலே டையாக....

"ஒரு காலடி! நாலிலைப் பந்த லடி" என்று கூறி இதற்குப் பொருள் கேட்டார்.

ஔவையாருக்கு கோபம் உண் டானது "அடி" என்று சொன்ன கம்ப ருக்கு "அடா" என்று பதில் தந்தார்.

*"எட்டேகால் லட்சணமே எமனேறும்- பரியே*
*மட்டில் பெரியம்மை வாகனமே - முட்ட மேற்*
*கூரையில்லா வீடே குலராமன் - தூதுவனே*
*ஆரையடா சொன்னாயடா."*

- என்று பதில் கொடுத்தாராம்.

ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி ஆகிய நீதி நூல் களை பாடி எவ்வாறு இன்சொல் பேச வேண்டும், எவ்வாறு நாவையடக்க வேண்டும், எவ்வாறு பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று நீதி போதித்த ஔவையார், தமிழ் மொழிக்கு தனி அழகு சேர்க்கும் இரா மாயணம் பாடிய கவிச்சக்கரவர்த்தி கம்பரைப் பார்த்து "அவலட்சணம் உடையவனே! எருமையே! கழு தையே! குட்டிச்சுவரே! அனுமனே!" என்றெல்லாம் வைவாரா?

ஔவையார், கம்பர் ஆகிய சான் றோர் இருவர் இவ்வாறு சண்டை பிடித்தனர் என்று வரலாறு எழுதி னால் இதனை வாசிக்கும் பிறநாட்டு அறிஞர்கள் தமிழ்ப் புலவர்கள் பற்றி என்ன நினைப்பார்கள்?

கம்பர் - ஔவையார் மட்டும் பாவி னால் சண்டை பிடித்தார்களோ என் றால் இவர்கள் மட்டுமல்ல இன்னும் பல புலவர்கள் சண்டை பிடித்தார்கள் என்று வரலாறும் எழுதி அதற்குப் பாடலும் பாடி வைத்திருக் கிறார்கள். இத்தகைய வரலாறுகளும் வரலாற் றுக்கு ஆதாரமெனக் காட்டப்படும் பாடல்களும் புலவர்களுக்கும் சான் றோர்களுக்கும் சிறுமை சேர்க்குமே அல்லாமல் பெருமை சேர்க்கா.

# விடைகள்

IV ஆம் பக்கத்தில் 'சிறுவர்சுடர்' பகுதியில் பிரசுரமாகியுள்ள புதிர்க ளுக்கான விடைகள் வருமாறு:-

**துண்டு போடுங்கள்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| W | X | X | Z | W | Y | Y | X |
| Y | W | Z | W | W | Y | X | Z |
| Z | Y | X | X | Y | Z | Z | W |

**பங்கு பிரியுங்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது கோபமும் ஒரு குணமே! அதைப் புரிந்து கொள்வோமே!!

பெண் எப்படி இருக்க வேண்டும்? அடக்கமாக இருக்க வேண்டும். அனுசரித்துப் போகவேண்டும். அதிர்ந்து பேசக்கூடாது. தன் விருப்பு வெறுப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் பிறரைத் திருப்திப் படுத்த வேண்டும். பெண்ணுக்கு கோபம் ஆகவே ஆகாது. என்ன ஆனாலும் கோபித்துக் கொண்டு 'தாம், தூம்' என்று குதிப்பது பெண்ணுக்கு அழகேயில்லை.

ஆனால் என்ன செய்வது? பெண் மனித இனம். அவளுக்கு கோபம் என்ற ஒரு குணம், ஓர் உணர்ச்சி இருக்கிறது.


கோபம் வந்தால் பத்து வரை எண்ணு; தியானம்செய்; தோசைக்கு அரை; தோட்டத்தில் போய் கொத்து; பல்லைக் கடித்துக்கொண்டு பொறுத்துக்கொள்; ஆறப்போடு... என்றெல்லாம் சொல்லி கோபத்தை வெளியிடாமல் அடக்கப் பழக்குகிறார்கள்.

பெண் குழந்தைகள் கோபித்துக் கொண்டு அடம் பிடித்து, தனக்குத் தேவையானதைச் சாதித்துக் கொள்வதைக்கூட நாம் ஏற்றுக்கொள்வதில்லை.

**வி.ஜெயா**

குடும்பவழக்கம், சமூக வழிமுறைகள், பெண் தனியாக தன்விருப்பு வெறுப்புகளை வெளியிடுவதை, அதற்குத்தகுந்தபடி நடந்துகொள்வதை ஏற்றுக் கொள்வதில்லை. பெண் மற்றவர்களின அபிலாஷைகளுக்குள் அடங்கி, மற்றவர்கள் அதிருப்தி அடையாமல் பார்த்துக் கொள்ளவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

ஊட்டி உரமேற்றி வளர்த்த இந்த எண்ணங்களினால், பெண்களுக்கு கோப உணர்வையே புரிந்து கொள்ள முடிவதில்லை. நமக்கே நம் கோபத்தைக் கண்டு பயமாக இருக்கிறது. 'எனக்கு இப்படிக் கோபித்துக கொள்ள உரிமை உண்டா? நான் என் கோபத்தை வெளியிடுவதனால் என்ன பயன்?' என்று நாமே நம் கோபத்தை அடக்கப் பழகிக்கொள்கிறோம்.



கோபம் என்பது ஒரு 'சிக்னல்'. ஒரு வெளிப்பாட்டுச் செய்கை. நம்மை ஏதோ ஒரு விஷயம் பாதிக்கின்றது என்பதைச் சொல்லும் முறை. நாம் புண்பட்டிருக்கறோம். நம்உரிமைகள் பூர்த்தியாகவில்லை அல்லது என்னவோ திருப்தியாக இல்லை, நம்மால் முடிந்த அளவுக்கும் மேல் நாம் விட்டுக் கொடுக்க வேண்டியிருக்கிறது அல்லது மற்றவர்கள் தேவைக்கும் அதிகமாக நம்மைப் பாதுகாத்து, சுயமாக வளரவே சந்தர்ப்பம் கொடுக்கவில்லை என்பதை வெளிப்படுத்தும் வடிகாலே, கோபம். நீ நினைப்பது போல நானில்லை என்பதைச் சொல்லவும் நான் யார் என்பதை வெளிப்படுத்தவும் கோபமே கைகொடுக்கிறது.

எல்லோரும் அனுசரித்துப் போய், சண்டைகளைத் தவிர்த்து எதிலுமே தலையிடாமல் எல்லாவற்றிலிருந்தும் ஒதுங்கி, நிறைய விட்டுக்கொடுத்து, நல்ல பெண்ணாக இருக்கலாம்.

அல்லது அவசியமான பொழுது மௌனமாக கண்ணீர் சிந்தி, தன்னையே நொந்து கொண்டு நடைப்பிணமாக ஆகலாம்.

ஆனால் இதில் 'நான்' என்பதை எல்லோராலும் இழக்க முடியாது. உறவுகளைக் கட்டிக்காப்பதுதான் முக்கியம், என் உணர்ச்சி முக்கியமில்லை என்று இருக்கமுடியாது. அதைக் கட்டாயமாகத் திணிக்க முயன்றால், ஒரு நாள் எப்படியாவது, தலைவழியாக, மனம் வழியாக, உடல் வழியாக கோபம் எரிமலையாக வெடிக்கும்.

### கோப வெளிப்பாட்டில் கூடாதவை

1) பிரச்சினை என்ன, என்று தெளிவாகத் தீர்மானிக்காமல் கோபப் படக்கூடாது.

2) 'உங்க வீட்டில் எல்லோருமே அப்படித்தான்!' என்றோ, 'என்னிக்குமே என்னை இப்படித்தான் நடத்தினீர்கள்' என்றோ, 'ஒரு நாளுமே உங்களால் எனக்குச் சந்தோஷம் கிடையாது' என்றோ ஒட்டுமொத்தமாகக் குறை சொல்லக் கூடாது.

3) உங்கள் பாதிப்பை மட்டும் சொல்லுங்கள். 'உங்களைப்பற்றி இந்தத் தெருவே பேசுகிறது; எங்க வீட்டிலேயும், எல்லோரும் அப்படித் தான் நினைக்கிறார்கள். யாரோ சொன்னா காதுல பட்டது' என்று பெயரில்லாத - உருவம் இல்லாதவர்களை - எல்லாம், உங்களின் பக்கம் சேர்த்துக் கொள்ளாதீர்கள். இது நிச்சயமாக உங்களுக்குப் பலம் சேர்க்காது.

4) கோபம் என்பது நம்மைப் புரிந்து கொள்ள உதவும் ஒரு கருவி. அதை மற்றவர்களின் குறைய்ய எடுத்துக்காட்ட உபயோகப் படுத்தக் கூடாது.

5) மற்றவர்களே நம் பிரச்சினைக்குக் காரணம், நம்மை சந்தோசமாக வைத்திருக்க வேண்டியது மற்றவரின் கடமை என்று எண்ணக் கூடாது.

6) உறவு முறை நிலைக்க - அதில் நெருக்கம் உண்டாக - ஒரே மாதிரி சிந்திக்க வேண்டும், செயல் பட வேண்டும் என்று நினைப்பதும், நம் குடும்பத்தில் இது தான் வழக்கம் எனப் புதியவை புகாமல் தடுப்பதும், தனிமனித வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக அமையும்.

7) ஒருவரின் நடத்தைக்கு இன்னொருவரைக் காரணமாக்கி, அவரிடம் -கோபத்தை வெளியிடாதீர்கள்.

8) நமக்கு நம் தீர்மானங்கள், நடத்தைகள், வழிமுறைகளை நிர்ணயிக்க மட்டுமே உரிமையுண்டு; மற்றவர்கள் அப்படிச் சொல்லக் கூடாது, நடந்துகொள்ளக்கூடாது, பாதிக்கப் படக்கூடாது என்று எதிர்பார்ப்பது தவறு.

### உன்னையே நீ அறிவாய், நீயே உன்னை அறிவாய்

கோபம் வரும் பொழுது மற்றவர்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள், அவர்களின் செய்கை நம்மை எப்படி பாதிக்கின்றது என்பதைக் கவனிக்கிறோமே தவிர, இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் எப்படி நடந்து கொள்கிறோம், எப்படி - எதைப்பற்றி பேசுகிறோம் என்பதைக் கவனிப்பதில்லை. மற்றவர்கள் நம்மிடம் நடந்து கொள்ளும் முறை, நாம் அவர்களுடன் நடந்து கொள்ளும் முறையினால் தீர்மானிக்கப்படுகிறது.

நாமே நம்மை, நம் நடத்தையைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். மற்றவர்கள் நம் சொல்லுக்கு மதிப்புக் கொடுக்காததில் நம் பங்கு என்ன, நாம் வெளியிட்ட விதத்தில் என்ன தவறு என்று ஆராய வேண்டும். நாம் சொல்வதையே சொல்லிக்கொண்டிருந்தால், மற்றவர் செய்வதையேதான் செய்து கொண்டிருப்பார்கள். இந்தப் பயனில்லாத செய்கையில் மாற்றம் வேண்டுமானால் நாம் சொல்லும் விதத்தில் மாற்றம் வேண்டும்.

மற்றவர்களுடன் பழகும் பொழுது, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், நம்மைப் பற்றின தெளிவான அபிப்பிராயத்தை வெளியிட்டு, நம் உணர்ச்சிகளை நாமே புரிந்துகொண்டு, மற்றவர்களுக்கும் தெரியப்படுத்துவது, இரு தரப்பிலும் உறவைப் பலப்படுத்தும். இதை நம்மைத்தவிர வேறு யாராலும் செய்ய முடியாது.

நம் குடும்பத்தில், நம் பாட்டி, அம்மா, அக்கா என்று மற்றப் பெண்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள், அதனால் அவர்கள் எப்படி பாதிக்கப் படுகிறார்கள் என்பதைக் கவனித்துப் பாடம் கற்பது அவசியம்.


நீங்கள் கோபத்தைக் கையாளும் முறையைக் கவனிக்கவும். கோபம் அழுகையாக மாறுகிறதா? தன்னம்பிக்கையை இழக்கச் செய்கிறதா? சில சமயம் விட்டுக்கொடுத்தும் சில சமயம் எதிர்த்து நின்றும், மாறி மாறி நிச்சயமில்லாத நிலையில் நடந்து கொள்கிறீர்களா?

உங்கள் வழக்கப்படி இல்லாமல் ஒரு சின்ன விசயத்தை வித்தியாசமாகச் செய்துபாருங்கள். செய்து வந்த ஒரு சின்ன காரியத்தை செய்ய முடியவில்லை என்று சொல்லுங்கள். மற்றவர்கள் அதற்கு எப்படி எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள், அந்த எதிர்ப்பை எதிர்த்து நின்று, உங்கள் குறிக் கோளில் திடமாக நிற்கும் வலிமை உங்களுக்கு உள்ளதா, அதனால் உறவு எப்படி பாதிக்கப்படுகிறது என்று கவனியுங்கள்.

ஒன்றிரண்டு விஷயங்களில் உங்கள் உணர்ச்சியைத் திட்டவட்டமாக வெளியிட ஆரம்பியுங்கள். 'இந்தச் சொல் என்னைப் புண்படுத்தியது', 'அந்தச்செய்கை என் ஆத்திரத்தை கிளப்பியது', 'இப்படி நடந்தது ரொம்ப சந்தோசமாக இருந்தது' என்று யாரையும் குற்றம் சொல்லாமல், காரணம் காட்டாமல், உங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பை மட்டும் வெளியிடக் கற்றுக் கொள்ளுங்கள். உங்கள் அபிப்பிராயத்தை, அது அசட்டுத்தனமாகத் தோன்றினாலும், தெரியப் படுத்துங்கள்.

### பல சமயங்களில் நியாயமில்லாமல் நடந்து கொள்கிறோம்

காரணமில்லாமல், அவலை நினைத்து உரலை இடித்த கதையாக கோபம் கொள்கிறோம். மாமியார் செய்ததை இன்று மாட்டுப் பெண்ணிடம் கோபித்துக் கொள்வது, வேலை வெட்டி இல்லாமல் சுற்றும் தம்பியை நினைத்து, பிள்ளையைப் 'படி,படி' என்று அடிப்பது போன்றவை பெண்கள் செய்யும் தவறுகளே.



கணவன் - மனைவி உறவில், ஒருவர் உணர்ச்சிகளை வெளியே கொட்டி, தன் எண்ணங்களை, கவலைகளை, வெயியிட்டுக் கொண்டிருப்பார். மற்றவர் மனதிலேயே சிந்தித்து மனதுக்குள்ளேயே கவலைப் பட்டு பிரச்சினைக்குத் தானே தீர்வு காண்பவராகவே இருப்பார். சாதாரண நாள்களில் இவர்கள் இருவரும் நல்ல ஜோடியாகத் தோன்றும். ஆனால் பிரச்சினை என்று வரும் பொழுது, ஒருவரின் குணம் மற்றவரை எரிச்சலடையச் செய்யும்.

"கல் மாதிரி உட்காந்திருக்கிறார். உணர்ச்சியே கிடையாது" என்று அவளும், "ஓடஓட விரட்டாதே", "குற்றம் சொல்லாதே", "ஹிஸ்டரிக்கலாக ஆகாதே", "ரொம்பப் பெரிது படுத்தாதே" என்று அவரும் மற்றவரை ஏசுவார்கள்.

சில பெண்கள் தேவைக்கு அதிகமான பொறுப்பைத் தானே ஏற்றுக் கொண்டு விட்டு, தான் செய்யாவிட்டால் எதுவுமே நடக்காதது போல நினைத்துக்கொண்டு, அந்த வேலைப் பளுவால் குறைப்பட்டுக் கொண்டேயிருப்பார்கள். யார், எதைச் செய்ய வேண்டும் என்று மற்றவர்களுடன் வேலையைப் பங்கு போட்டுக்கொள்ள மாட்டார்கள். மற்றவர்கள் வேலை செய்ய முன்வந்தாலும், சந்தோசப் படாமல், 'இப்படிச் செய்யவில்லை', 'இந்த நேரத்தில் செய்யவில்லை' என்று சொல்லி அதிருப்தியை வெளியிடுவார்கள். 'கையைத் திருகி, காரியம் செய்யலாம் போலிருக்கிறது' என்றால், 'செய்து கொள்ளேன்', என்று பிறரும் விட்டு விடுவார்கள். நம் வழியும், பிறர் வழியும் ஒன்றாக இருக்காது, எனக்கு உதவவும் வேண்டும், என் வழியிலேயும் செய்யவேண்டும், என்று எதிர்பார்ப்பது இருதரப்பிலும் ஆத்திரத்தையே உண்டாக்கும்.

'வீட்டில் யாராவது ஏதாவது வேலை செய்தால் என்ன?' என்று தெளிவில்லாமல் உங்கள் தேவையை வெளியிடாதீர்கள். இன்னின்ன வேலை எனக்கு அதிகப்படியாக இருக்கிறது, என்னால் செய்ய முடியவில்லை என்றும், யாரிடமிருந்து எந்த உதவியை எதிர்பார்க்கிறீர்கள் என்றும், குறிப்பிட்டுச் சொல்லுங்கள். உங்களுக்கு ரொம்ப நெருங்கியவர்களானால் கூட உங்கள் எண்ணத்தைப் புரிந்து கொண்டு, ஊகித்துத் தானாகவே செய்வார்கள், என்று எதிர்பார்க்காதீர்கள்.

நாம் எல்லோரும் நம் குழந்தைகளை, அவர்களின் நடத்தையை, அதிக அளவில் கட்டுப்படுத்த முயலுகிறோம், 'நான் எவ்வளவு நல்ல தாய்', என்று நம் உறவினரும், ஊராரும் மெச்சும்படி, அவர்களின் வளர்ச்சி, மேம்பாடு எல்லாமே இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். என்னதான் பெற்ற தாயானாலும், குழந்தைகளின் உணர்ச்சிகளையும், எண்ணங்களையும், ஓரளவுக்கு மேல் நம்மால் நிர்ணயிக்க முடியாது. நம்மைப் பொறுத்தவரை, நம் வீட்டில் எந்த மாதிரி நடத்தை ஏற்றுக்கொள்ளக் கூடியதானது,எது ஏற்றுக்கொள்ள முடியாதது என்று மட்டும் தீர்மானமாகச் சொல்லலாம். அதைப் பின்பற்ற முடியாவிட்டால் பலன் எதுவாக இருக்கும் என்றும் தெளிவுபடுத்தலாம்.

ஓர் உறவில் ஏற்படும் கோபத்தை, பாதிப்பை, நாம் மற்றொரு உறவில், மற்றொரு சந்தர்ப்பத்தில், நம்மை அறியாமலேயே வெளியிடுகிறோம். யார் மேலோ உள்ள கோபத்தை, வேறுயார் மேலோ, ஏதோ ஒரு காரணத்திற்கு வெளியிடும் பொழுது, நாம் உண்மையில் எதற்காகக் கோபம் அடைந்தோம் என்பதே தெரியாமல் போய்விடுகிறது. இப்பொழுது இவர்களிடம் கோபமடைந்ததற்கு என்ன மூலகாரணம்? எந்த வெளிப்படுத்தாத, வெளிப்படுத்த முடியாத ஆத்திரம், இப்பொழுது வெளிப்பட்டது என்று யோசிப்பதேயில்லை.

மற்ற பெண்களுடன் உங்கள் பிரச்சினையைப் பகிர்ந்து கொள்ளுங்கள். அவர்கள் எப்படிச் சமாளிக்கிறார்கள் என்பதைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். நாம் ஒவ்வொருவரும், நம் வீட்டில், நம் குடும்பத்தில் எப்படி நடத்தப்படுகிறோம் என்பதற்கும், சமூகத்தில் பெண் எப்படி மதிக்கப்படுகிறாள் என்பதற்கும், நெருங்கிய தொடர்பு உண்டு.

நம் 'கோபத்தைச் சரியானபடி வெளியிடுவதினால் நம்மை மற்றவர்கள் புரிந்து கொள்ள முடிகிறது. நம்மை எது கோபப்படுத்தியது என்று உணரும் பொழுது நம்மையே நாம் புரிந்து கொள்கிறோம். அந்தப் புரிந்துணர்வு ஏற்படும்போது பெண்மையையும் இழக்காமல், நம் பண்பாடு கலாசாரத்தையும் மறக்காமல், புதுப் பெண்ணாக உருவாகலாம்.

---

# புதைகுழிப் பெட்டிகள்

"நாங்கள் எப்போதும் கர்த்தருக்கு விசுவாசமாக இருக்க வேண்டும் பிள்ளைகளே; உயிர்களிடத்தில் அன்பாக இருக்கவேண்டும் குழந்தைகளே; எந்த ஓர் உயிருக்கும் மனதினாலும் தீங்கு இழைத்துவிடக்கூடாது. அதைத்தான் தேவனாகிய யேசுபிரான் வேண்டுகிறார்" போதகரம்மா செர்ல்லிக்கொண்டிருந்தார்.

**சிந்தனைக்கதை**

கிறிஸ்தவக் குழந்தைகள் சுற்றியிருந்து கேட்க அந்த உரை தொடர்ந்து கொண்டிருந்தது. அன்ரன் டானியல் ஆழமாய் அந்த உரையில் ஒன்றிப்போயிருந்தான். வயது எட்டு; சிந்தனை செறிந்த முகம்; பிரகாசமான விழிகள். போதகரம்மாவின் வார்த்தைகள் அவனை மிகவும் குழப்பின. காலை உரையில் மனங்குழம்பிப் போயிற்று. "மனதினாலும்.... தீங்கு இழைத்து விடக்கூடாது" கேட்கப்பட்ட வார்த்தைகள் மீட்டப்பட, மீட்டப்பட மனம் பாரமாய்க் கிடந்தது.

மஞ்சள் நிறமான அலங்கார வளைவுகள் நிறைந்த அந்தப் பெட்டியை நேற்றே முடித்திருந்தும் மூடியைக் கலைநயமிகுந்ததாய் ஆக்குவதற்கு ஒரு நாள் செலவழிக்க வேண்டியிருந்தது. மண்ணுள் போகும் பெட்டிக்கு ஏன் இத்தனை அலங்காரங்கள்? இருப்பவர்களது பணப் பெருமை இறந்தவர்கள் மூலமாக வெளிப்படுத்தப்படுகிறதா? படித்த சிந்தனைகளை ஒதுக்கி, ஒரு சிற்பம் செதுக்குவது போன்ற அவதானத்துடன் கடைசி ஆணியை அறைந்து முடித்தவன் அருகில் நிழலாட நிமிர்ந்தான். அன்பு மகன் டானியல் நின்றிருந்தான்.

'என்ன?' கேள்வியை விழிகளில் விரித்தான்.

**ச.சாரங்கா**

"அப்பா? நாங்கள் மனதினாலும் தீங்கு நினைக்கக்கூடாதா?" மகனிடமிருந்து கேள்வி எழுந்தது.

"நிச்சயமாக அது உண்மை மகனே."

"அப்படியானால் பிறரின் இறப்புக்காக உங்கள் பிரார்த்தனை இருந்தால் அது சரியா?" மீண்டும் தந்தையைக் குழப்பவைக்கும் மகனது கேள்வி.

"நான் ஏன் அப்படி பிரார்த்திக்க வேண்டும்?" கேட்ட தந்தைக்கு மகனது கேள்வியே பதிலாய் இருந்தது.

"தத்தம் விற்பனைப் பொருளின் அதிகமான விற்பனையை விரும்புவது மனித இயல்புதானே அப்பா? நீங்கள் சவப்பெட்டிகளின் விற்பனைக்காக...."

வயதுக்கு மீறிய பிரச்சினை.

"இல்லை மகனே. ஒருபோதுமில்லை." சொன்னவன் சடுதியாய் எழுந்தான்.

மகனை அழைத்துக் கொண்டு கிராமத்துச் சந்தையை அடைந்தவன் சுட்டிக்காட்டிய இடத்தில் ஒரு செருப்புத்தைக்கும் கடை. சிறுவன் ஒருவன் வேலையற்று ஏதோ கொறித்துக் கொண்டிருந்தான். இருவரும் நடந்தார்கள். ஒரு சைக்கிள்கடை. உள்ளே ஒருவன் கருத்தொன்றி வேலையில் ஈடுபட்டிருந்தான்,டானியலுக்கு பாஷைகள் இல்லாமல் விஷயம் புரிந்து போயிற்று. ஒரு தனியார் வைத்திய சாலை, புடைவைக்கடை, இயந்திர உதிரிப்பாகங்களுக்கான கடை..... ஏற்படக்கூடிய ஒவ்வொரு பாதிப்புக்கும் நிவர்த்தியாய்.... ஒவ்வொரு தொழில்.

"இதுதான் வாழ்க்கை மகனே. பற்றற்றுச் செயலைத் தொடர்ந்து கொண்டு நாம் இருக்கவேண்டும். பாதிப்புக்களை நிவர்த்திப்பதிலும் தேவைகளை ஈடுகட்டுவதிலுமாக தொழில்கள் பெருகும். எமக்கு வழங்கப்பட்ட தொழிலை செவ்வனே செய்ய வேண்டியது நம்கடமை. நம் வாழ்வை ஆண்டவன் ஆசீர்வதிப்பாராக" தந்தையின் தெளிவு மகனின் முகத்திற்குப் பரவிற்று.

சிந்தனைக்கரு:- 'பற்றற்றுச் செயல்புரிக!'

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org